வீரமாமுனிவரின்
உரைநடை நூல்கள் - ஓர் ஆய்வு

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible] — 1999

முனைவர் **வெ. சு. அழகப்பன்**, பிஎச். டி.,
இணைப்பேராசிரியர் (ஓய்வு),
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 3.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆய்வாளராகிய இ. மேரி, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., அவர்கள் **"வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் - ஓர் ஆய்வு"** எனும் தலைப்பில் ஆராய்ந்து படைத்துள்ள இந்த ஆய்வேடு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்கென அவர்தம் சொந்த முயற்சியில் எழுதியது எனவும் வேறு எந்தப் பட்டத்திற்கும் இதற்கு முன் அளிக்கப்பெறவில்லை எனவும் சான்று அளிக்கிறேன்.

வெ.சு. அழகப்பன்
(வெ. சு. அழகப்பன்)
நெறியாளர்

இடம் : காரைக்குடி
நாள் : 7.7.99

இ. மேரி, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி – 3.

ஆய்வாளர் உறுதிமொழி

“வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் - ஓர் ஆய்வு” எனும் பொருளில் முனைவர் (பிஎச். டி.) பட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இவ் ஆய்வேடு அளிக்கப்பெறவில்லை என உறுதி அளிக்கிறேன்.

இ.மேரி.
(இ. மேரி)
ஆய்வாளர்

(வெ. சு. அழகப்பன்)
நெறியாளர்

PROFESSOR AND HEAD,
DEPARTMENT OF TAMIL,
ALAGAPPA UNIVERSITY,
KARAIKUDI - 630 003.

இடம் : காரைக்குடி
நாள் 7. 7. 99.

நன்றியுரை

ஆய்வு மாணவியாக அழகப்பா பல்கலைக்கழகத்தில் அடியெடுத்து வைத்தபோது எனக்கு ஆய்வுத் தலைப்பைப் பற்றி ஒன்றுமே தெரியாதுதான். பல்வேறு தலைப்புகள் நெஞ்சில் நிழலாடின. மேல்நிலைப்பள்ளி ஒன்றில் முதுகலைத் தமிழாசிரியையாகவும் பணியாற்றும் என் போன்றோர்க்கு ஆய்வில் இருக்கும் ஆர்வத்தைப் போலவே செயற்பாட்டில் இடர்ப்பாடுகளும் மிகுதி. இந்த நிலையில் ஆர்வத்தை மட்டும் மூலதனமாகக் கொண்ட நான் ஆய்வுலகில் எப்படி நுழைவது? இந்தத் தயக்கம் வேறு குழம்பிய நெஞ்சில் மேலும் குழப்பத்தை வளர்த்தது.

இந்த நிலையில் திசை தெரியாது நின்ற எனக்கு வழிகாட்டியாய்க் கைகாட்டியவர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தே. சொக்கலிங்கமும், இணைப்பேராசிரியர் முனைவர் இரா. பாலசுப்பிரமணியனும் ஆவர். தளர்வு ஏற்படும்போது ஊக்கமூட்டியவர்கள் இவர்கள். இவர்கள் காட்டிய அன்பும் வழங்கிய அறிவுரையும் மூத்தோர் சொல்லாய் நெஞ்சில் நிலைத்தன. நினைத்தால் இனிப்பன.

தமிழாசிரியராகப் பணிபுரிந்த என்னை ஆய்வுப் பாதையில் அடியெடுக்க வைத்தவர் அருட்தந்தை இ. ஆரோக்கியசாமி அடிகளார் ஆவர். வேங்கிடக்குளம் தூய வளனார் மேல்நிலைப்பள்ளியின் மேனாள் தாளாளரும் தலைமையாசிரியருமான அவர், தளர்நடை பயிலும் குழந்தையின் கைகளைப் பற்றி நடை கற்பிக்கும் தாயாய் அன்பு காட்டிய அருளாளர்.

என் ஆய்வுக்கு வழிபாட்டியாய் அமைந்தும் அறிவுரை கூறியும் தடையில்லாது நெறிகாட்டிய என் ஆய்வு வழிகாட்டி பேராசிரியர் முனைவர் வெ. சு. அழகப்பன் அல்லும் பகலும் அயர்வினை மறந்து வேண்டியபோதெல்லாம் வேண்டிய அனைத்தும் தந்து

உதவியவர் என் மாமா பேராசிரியர் பி. எம். அருள். தமக்கையார் திருமதி லூர்துமேரி மற்றும் எனக்குப் புகலிடமாய் அமைந்த அன்பின் ஊற்றான அக்குடும்பம்......

முன்பின் அறியாத நிலையில் என்னை அன்போடு வரவேற்று ஆய்வில் அருந்துணையாய் நின்றவர் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பெரியார் ஆய்வு மய்யத்தின் பேராசிரியர் முனைவர் இரா. சக்குபாய். . . ., ஆய்வுக்கடலில் மூழ்கிவிடாது கரை சேர்த்து உதவிய புதுகை மன்னர் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் க. முத்துச்சாமி. . . . . ,

தமிழ்ப் பல்கலைக்கழகம் இலக்கியத்துறை ஆய்வு உதவியாளர்கள் முனைவர் பெ. இராமலிங்கம், முனைவர் திருமதி ச. திலகவதி, இளவல் அ. புவியரசு, சு. மாதவன். . . . . .,

என்னோடு பணிபுரியும் ஆசிரியத் தோழர் – தோழியர் . . . .

இந்த ஆய்வேட்டைக் கணினியில் வடிவமைத்துக் கொடுத்த கிரிஜா ஒளியச்சு மையத்தார் இப்படி நான் நன்றிக்கடன் பட்டோரின் பட்டியலை விரிப்பின் பெருகும் தொகுப்பின் எஞ்சும். ஆயினும் நன்றி கூறல் மனிதப்பண்பின் அடையாளமாயிற்றே. அனைவரும் என் நன்றிக்குரியவர்கள்.

(இ. மேரி)

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அப்.	அப்போஸ்தலர் நடபடி
அரு.	அருளப்பர்
ஆ. இ.	ஆண்டு இல்லை
இரா.	இராயப்பர்
உரோ.	உரோமையர்
எபி.	எபிரேயர்
கொரி.	கொரிந்தியர்
சின்.	சின்னப்பர்
தமி.	தமிழாக்கம்
திமோ.	திமோத்தேயு
ப.	பக்கம்
ப. ஆ.	பதிப்பாசிரியர்
ப. ஆர்.	பதிப்பாசிரியர்கள்
பக்.	பக்கங்கள்
மத்.	மத்தேயு
மேலது.	மேலே காட்டிய நூல்
லூக்.	லூக்காஸ்
Ibid.	Ibidem
p.	page
pp.	pages
Vol.	Volume

பொருளடக்கம்

முன்னுரை

முன்னுரை

ஐரோப்பிய வணிகக் குழுக்களுடன் கிறித்தவ சமயமும் இந்தியாவிற்கு வந்தது. ஆனால் வணிகக் குழுக்களைப் போல் அல்லாமல் கிறித்தவம், திருச்சபைகளின் வாயிலாக இந்திய மக்களின் பண்பாட்டிலும் வாழ்க்கை முறையிலும் சமய நம்பிக்கைகளிலும் பெருத்த மாற்றம் ஏற்படக் காரணமாயிற்று. இம்மாற்றங்களைச் செய்தவர்கள் திருச்சபைத் துறவிகளாவர். இத்துறவிகளின் சமயப் பணியோடு தமிழ்ப் பணியையும் இரண்டறக் கலந்ததால் தமிழ் இலக்கிய வரலாற்றில் 'கிறித்தவத் தமிழ் இலக்கியங்கள்' என்னும் புதியதொரு இலக்கியத்துறை தோன்றலாயிற்று. அந்த வகையில் வீரமாமுனிவரின் பங்களிப்பு மகத்தானது.

ஆய்வு நோக்கம்

வீரமாமுனிவரைப் போலவே சமயப் பரப்பலை மேற்கொண்டு இந்தியா வந்த சில திருச்சபைத் துறவிகளைப்போல் இந்து சமயத்தைத் தாக்கியும், அதன் சாதிக் கொடுமைகளைக் கண்டித்தும் வீரமாமுனிவர் நூல்கள் எழுதவில்லை. திருச்சபைப் பணிக்கு வந்த துறவிகளில் இவரைப் போலத் தமிழ்ப் புலமை உடையவர் வேறு எவரும் இலர். எனவே இவரின் உரைநடை நூல்களை ஆராய்வது இவ் ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு மூலங்கள்

இந்த ஆய்வின் மூலங்களாக வீரமாமுனிவரின் உரைநடை நூல்களான

திருக்கடவூர்த் திருச்சபைக்கு எழுதின தனி நிருபம்

திருச்சபைக்குப் பொது நிருபம்

வேதியர் ஒழுக்கம்

வேத விளக்கம்

பேதகமறுத்தல்

லூத்தேரினத்தியல்பு

வாமன் சரித்திரம்

பரமார்த்தகுருவின் கதை

முதலானவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வு முன்னோடிகள்

வீரமாமுனிவரின் வரலாறு எழுதியவர்களான பெரூ அடிகளார், ரம்போலா மாரூ கரேனரூ, முத்தசாமி, கா. மீனாட்சி சுந்தரம், இராஜமாணிக்கம் அடிகளார், அமுதன் அடிகளார் முதலானோரின் வரலாற்று நூல்களும்,

வி. மி. ஞானப்பிரகாசம் அடிகளார் "வீரமாமுனிவர் தமிழுக்குச் செய்த தொண்டு" எனும் அச்சேறாத முனைவர் பட்ட ஆய்வேடு, பா. வளனரசு "தேம்பாவணித் திறன்" எனும் முனைவர் பட்ட ஆய்வேடு, சூ. இன்னாசி "சதுரகராதி ஆராய்ச்சி" எனும் முனைவர் பட்ட ஆய்வேடு, சுந்தர்ராஜ் "பரமார்த்தகுருவின் கதை" எனும் எம்.ஃபில். பட்ட ஆய்வேடு ஆகியனவும்,

வீரமாமுனிவரின் முந்நூறாவது ஆண்டுவிழா மலர்க் கட்டுரைகள், கத்தோலிக்க மாத இதழ்களான தோழன், ஞானத்தூதன் முதலானவற்றில் இடம்பெற்ற கட்டுரைகள், ஆய்வுக்கோவைகளில் இடம்பெற்ற கட்டுரைகள் முதலானவையும்,

இயேசு சபையின் இதழ், ஒப்பாய்வுக் கட்டுரைகள், இராஜமாணிக்கம் அடிகள் எழுதிய மதுரையும் தரங்கம்பாடியும் எனும் கட்டுரை, கத்தோலிக்க லுத்தரன் திருச்சபை வரலாற்று நூல்களில் வீரமாமுனிவர் குறித்த வரலாற்றுப் பகுதிகள் போன்றவையும் இந்த ஆய்விற்கு முன்னோடிகளாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வேடு பெரும்பான்மை விளக்கவியல் முறையில் அமைந்துள்ளது. முதல் இரண்டு இயல்கள் வரலாற்று முறையிலும் பிற இயல்கள் விளக்கவியல் முறையிலும் அமைந்துள்ளன. எனினும் கருத்துத் தெளிவு கருதித்

திறனாய்வுமுறை உட்பட மேற்குறித்த ஆய்வு அணுகுமுறைகள் யாவும் அனைத்து இயல்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் அமைப்பு

முன்னுரை, முடிவுரை நீங்கலாக இந்த ஆய்வு ஐந்து இயல்களைக் கொண்டுள்ளதாக அமைகிறது. அவை :

1. தமிழகத்திற்குத் திருச்சபைகளின் வரவு
2. திருச்சபைகளுக்கிடையேயான முரண்பாடுகள்
3. வீரமாமுனிவர் நூல்களுக்கான பின்புலங்களும் நூல்களும்
4. தமிழ் உரைநடை வரலாற்றில் விரமாமுனிவர்
5. நூல்களின் அமைப்பும் நடை நலனும்

என்பன.

முதல் இயல் : தமிழகத்திற்குத் திருச்சபைகளின் வரவு

இவ்வியல் திருச்சபைகள் இந்தியாவிற்கு வந்ததன் நோக்கம் பற்றி ஆராய்கிறது. மேலும் திருச்சபைகளின் இரு பிரிவுகள் : [ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை, திருத்தமுறைத் திருச்சபை (லுத்தரன் சபை)] Protestant கத்தோலிக்கத் திருச்சபையும் போர்த்துக்கீசியரும், கத்தோலிக்கத் திருச்சபையின் சமயத் தொண்டர்கள், திருத்தமுறைத் திருச்சபையும் டென்மார்க் அரசரும், திருத்தமுறைத் திருச்சபையின் தொண்டர்கள், திருத்தமுறைத் திருச்சபைக்கும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஆகியவை பற்றியும் இவ்வியல் விரிவாக ஆராய்கிறது.

இரண்டாம் இயல் : திருச்சபைகளுக்கிடையேயான முரண்பாடுகள்

கத்தோலிக்கத் திருச்சபையில் இறைத்தொண்டராகப் பணியாற்றிய மார்ட்டின் லூதரால் உருவாக்கப்பட்ட சமயச் சீர்திருத்தங்கள் கிறித்தவச் சமய வரலாற்றில் ‘திருத்தமுறைத் திருச்சபை’ என்னும் புதிய அமைப்பு முறை உருவாகக் காரணமாயின. இத் திருத்தமுறைத் திருச்சபை உருவான சிறிது

காலத்திற்குள்ளேயே ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள் அது பெரும் செல்வாக்கைப் பெற்றது. அதன் விளைவு இந்தியாவில் சமயப்பணி ஆற்றியவர்களையும் பாதித்தது. உரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்த மதுரைத் திருச்சபைக்கு இணையாகத் தரங்கம்பாடியில் புதிதாக உருவாக்கப்பட்ட திருத்தமுறைத் திருச்சபையின் பணிகளும் அமைந்தன. தமிழ் நாட்டில் அரசுகளுக்கிடையே நடந்த இடைவிடாத போர்களாலும், போரையொட்டித் தமிழகத்தைப் பாதித்த பெரிய பஞ்சத்தாலும் தமிழ்ச் சமூகத்தில் அமைதியற்ற தன்மை உருவாயிற்று. இச்சூழலில் திருத்தமுறைத் திருச்சபையினுடைய சமயப்பணி மனித நேயமிக்க மக்கள் பணியாக மாறியது. இதனால் பலர் கிறித்தவ சமயத்தைத் தழுவியதோடு உரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்தவர்களும் தரங்கம்பாடியாரின் திருத்தமுறைத் திருச்சபையைத் தழுவத் தொடங்கினர். இச் சமய மாற்றம் சமயப் பூசலுக்கு அடிகோலியது. தமிழ் நாட்டில் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்கத் தரங்கம்பாடியாருக்கு டென்மார்க் அரசர் அளித்த நிதியுதவி துணையாக அமைந்த அதேவேளையில் உரோமன் கத்தோலிக்கப் பிரிவினர் பொருளாதாரச் சிக்கலுக்கு உள்ளாகி இடர்ப்பட்டதால் இவர்களின் ஆற்றாமையே, திருத்தமுறைத் திருச்சபையினரோடு கொண்ட பகைமை வளரவும் சமயப் பூசல் விரிவடையவும் காரணமாயிற்று. இவ்வாறு மேற்காட்டிய சமூக - சமயப் பின்புலங்களை - சமய மோதல்களை - இவ்வியல் ஆராய்கின்றது.

மூன்றாம் இயல் : வீரமாமுனிவர் நூல்களுக்கான பின்புலங்களும் நூல்களும்

தமிழ் மக்களோடு நெருங்கிய உறவு கொள்ளக்கூடியதன் வாயிலாகத் திருத்தமுறைச் சபையினர் தம் சமயக் கோட்பாடுகளைத் தமிழிலும் அச்சிட்டு வெளியிடலாயினர். அவ்வெளியீடுகளிலிருந்த ஒருசில குறைகளைச் சுட்டிக் காட்டத் தொடங்கிய வீரமாமுனிவர் அதன் தொடர்ச்சியாகத் திருத்தமுறைத் திருச்சபையினருக்கு எழுதிய மறுப்புகள் புதிய உரைநடை நூல்களாக வெளிவந்தன. இவ்வாறு இவர் நூல் எழுதுவதற்குத் துணையாக இருந்த திருச்சபைத் தலைவர்கள் தந்த ஊக்கம் பற்றியும் அதற்கான பின்புலம் பற்றியும் இவ்வியல் விரிவாக ஆராய்கிறது. அத்துடன் தம் சமயப்பணி குறித்தும், தம்மோடு இருந்தவர்கள் திருத்தமுறைத் திருச்சபைக்கு மாறியது தொடர்பாகவும்

வீரமாமுனிவர் எழுதிய கடிதங்கள், கடித இலக்கிய வரலாற்றில் அவை பெற்றுள்ள இடம் குறித்தும் இவ்வியல் ஆராய்கிறது.

நான்காம் இயல் : தமிழ் உரைநடை வரலாற்றில் வீரமாமுனிவர்

தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழ் உரைநடை வரலாற்றிலும் வீரமாமுனிவருக்குரிய இடம் குறித்து இவ்வியல் ஆராய்கின்றது. தமிழில் வழங்கும் அனைத்து இலக்கிய வகைகளிலும் அஃதாவது காப்பியம், சிற்றிலக்கியம் முதலான இலக்கிய வடிவங்களிலும் தனி முத்திரை பதித்தவர் வீரமாமுனிவர். கால மாறுதலுக்கேற்பச் சதுரகராதியைத் தந்ததுடன் தமிழ் வரிவடிவத்திலும் புதுமுறைகளைப் புகுத்திய இவரின் உரைநடை நூல்கள் மரபு வழியான தமிழ் உரையாசிரியர்களின் உரைநடை இயல்புகளைத் தழுவியுள்ளன என்பதையும் இவ்வியல் ஆராய்கிறது.

இவருடைய உரைநடை நூல்கள் சமயப் பரப்பல், சமயப் பாதுகாப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் அவற்றை வெளிப்படுத்திய பாங்கில் தமிழ் மரபின் வீச்சைக் காணமுடிகிறது.

வேத விளக்கம்	-	தருக்கம்
பேதக மறுத்தல்	-	கண்டனம்
லுத்தேரினத்தார் இயல்பு	-	முற்றுருவகம்
வேதியர் ஒழுக்கம்	-	எளிய நடை
வாமன் சரித்திரம்	-	செந்தமிழ் இலக்கிய நடை
பரமார்த்தகுருவின் கதை	-	நகைச்சுவை கொடுந்தமிழ் நடை

எனத் தமிழ் உரைநடைத் தன்மைகளை அமைத்துக் கொண்ட விதம் குறித்தும் இவ்வியல் ஆராய்கிறது.

ஐந்தாம் இயல் : நூல்களின் அமைப்பும் நடை நலனும்

தமிழ் உரைநடைக்கும் ஒரு வரலாறு உண்டு. இலக்கியங்களுக்கு விளக்கவுரையாக - தெளிவுரையாக, இலக்கண நூல்களுக்கு உரையாக -

இவ்வாறுதான் தமிழ் உரைநடையின் வரலாறு தொடங்குகிறது. இவ்வரலாற்றில் இறையனார் களவியல் உரைக்கெனத் தனியிடம் உண்டு. நூற்பாக்களுக்கு எழுதிய உரையில் செய்யுளின் ஓசை ஒழுங்கைப் போலவே உவமை அழகும் செறிந்த நடையைக் களவியல் உரை தந்தது, அதன் அழகும் எளிமையும் வீரமாமுனிவரின் உரைநடை நூல்களில் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதை இவ்வியல் ஆராய்கின்றது.

மேலை நாட்டுக் கல்வியும் மெய்யியலும் தமிழ் மரபிற்கேற்பப் புதுவடிவம் கொள்ளும் பாங்கையும் இவ்வியல் விளக்குகின்றது. பிற்காலத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வீரமாமுனிவரின் நடைநலன் வகிக்கும் பங்களிப்புக் குறித்தும் இவ்வியல் ஆராய்கின்றது.

ஆய்வின் பயன்

பதினெட்டாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் சமய சமூக அரசியல் நிலைகளை வெளிப்படுத்துவதும் தற்காலத் தமிழ் உரைநடை இலக்கியங்களின் மூலவேர்களைக் கண்டறிவதும் இவ் ஆய்வின் பயனாகும்.

இயல் ஒன்று
தமிழகத்திற்குத் திருச்சபைகளின் வரவு

இயல் ஒன்று
தமிழகத்திற்குத் திருச்சபைகளின் வரவு

திருப்புதல்வர், மீட்பர் ஆகிய பொருள்களைத் தரும் இயேசு கிறித்துவினால் உருவாக்கப்பெற்ற சமயமே கிறித்தவம் ஆகும். பாலத்தீன நாட்டில் (தற்காலத்திய இசுரேல்) பிறந்து பழமைக் கோட்பாடுகளை மறுத்துப் புதிய நெறியினை உருவாக்கியவர் இவரே. அக்காரணத்தாலேயே அவர் சிலுவையைச் சுமந்து தண்டனை பெற்று இறந்து உயிர்த்தார். இயேசுவின் மறைவிற்குப் பின்னர் அவரின் கோட்பாடுகளை உலகின் பல பகுதிகளுக்கும் சென்று பரப்பியவர்கள் அவருடன் கூட இருந்த அவர்தம் சீடர்கள் ஆவர்.

இயேசு உயிருடன் இருக்கும்போதே அவர்தம் சீடர்களில் ஒருவராகிய இராயப்பரை (பீட்டர், பேதுரு) நோக்கி,

> *"நீ பாறையாய் இருக்கிறாய். உன்மீது என் திருச்சபையைக் கட்டுவேன்*
> *நரகத்தின் வாயில்கள் அதனை மேற்கொள்ளா"*[1]

எனக் கூறித் திருச்சபையையும் அத்திருச்சபைக்குத் தலைவரையும் ஏற்படுத்தினார் என பைபிள் குறிப்பிடுகிறது. இதனால் இயேசுவின் காலத்திலேயே திருச்சபை தோற்றம் கொண்டது புலனாகும். அத்துடன்,

> *"உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்"*[2]

என்று இயேசு அறிவுறுத்தியதற்கேற்பவே அவரின் கோட்பாடுகள் உலகெங்கும் எடுத்துச் செல்லப் பெற்றன என்பதும் தெளிவாகிறது.

---

1. **விவிலியம்**, *புதிய ஏற்பாடு, மத். 16 : 18.*
2. **மேலது**, *மத். 28 : 19.*

திருச்சபையும் அதன் உறுப்பினர்களும்

இயேசுவின் கருத்துக்கள் மக்களின் துன்ப நீக்கத்திற்கு வடிகால்களாக அமைந்து அவர்தம் மனநிறைவிற்கும் நல்வாழ்விற்கும் அடித்தளமாக அமைந்தன எனும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அக்கோட்பாடுகள் 'நற்செய்தி' களாகப் புகழப்பெற்றன. இந்த நற்செய்தியை உலகுக்கு அறிவிக்கச் செய்த இயேசுநாதர் தன் வாரிசாக இராயப்பரை ஏற்படுத்தினார். இராயப்பரே மற்ற சீடர்களுடன் இருந்து கொண்டு நற்செய்தியை மக்களுக்கு அறிவித்து வந்தார். மக்களும் சீடர்களும் சேர்ந்தே வாழ்ந்தனர். இராயப்பரின் மறைவிற்குப் பிறகு நற்செய்திப் பணிக்கு அவருடைய பிரதிநிதியாக மக்கள் தங்களுக்குள் ஒருவரை நியமித்து அவரைத் திருத்தந்தை (போப்) என்று அழைத்தனர். அந்தப் போப்பும் மக்களும் ஓர் அமைப்பாகச் சேர்ந்து நிலையான இறைவாழ்வு நடத்தத் தொடங்கும்பொழுது இந்த அமைப்பு பிறர் நலப்பணிக்குச் சிறப்பிடம் அளித்தது; அவ் அமைப்பே திருச்சபையாக உருப்பெற்றது. இக்காலகட்டத்திலேயே (நான்காம் நூற்றாண்டு) துறவறச் சபைகள் திருச்சபையில் தோன்றலாயின.[3] இந்தச் சபையிலுள்ள துறவிகளும் அவர்களால் இறைநெறியில் பாதுகாக்கப்படும் மக்களும், இவர்களுக்கெல்லாம் ஞானத்தந்தையாக விளங்கும் போப்புவும் சேர்ந்து ஒரு கூட்டமைப்பாக இறைநெறியில் வாழ்ந்தனர். இந்த இறைநெறிக் கூட்டமைப்பே பிற்காலத்தில் திருச்சபையாக முழுமை பெற்றது.[4]

கிறித்தவம்

திருச்சபையின் தலைவர் இயேசு. இவர் மக்கள் மீட்புப்பெறக் காரணமாக இருந்தவர் என்று கருதப்பெறுகிறார். அதனால் அவரை மீட்பர் என்ற பொருளில் 'மெசியா' என்றழைத்தனர். 'மெசியா' என்பது எபிரேயச் சொல். இது கிரேக்க மொழியில் 'கிறிஸ்டாஸ்' எனவும் ஐரோப்பிய மொழிகளில் 'கிறைஸ்ட்' எனவும் திரிந்தது. மேலும் அது தமிழில் 'கிறிஸ்து' எனவும் வழங்கிற்று. கிறிஸ்துவின் நெறிகளே கிறித்தவம். அவற்றைப் பின்பற்றுவோர் கிறித்தவர் என்றாயினர்.[5]

---

3. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 116.
4. **இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்**, ப. 11.
5. மு. தெய்வநாயகம், **விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு**, ப. 17.

உரோமன் திருச்சபை

இயேசுவின் திருத்தொண்டர் சின்னப்பரும் (பவுல்) அவர்தம் தோழர்களும் சின்ன ஆசியாவிலும் மக்கதோனியா (மாசிடோனியா) முதலான கிரேக்க நாடுகளிலும் கிறித்துவின் போதனைகளை எடுத்துரைத்தனர்.[6] பின்னர் அந்தியோகியா, அலெக்சாந்திரியா, உரோமாபுரி ஆகிய நாடுகளுக்குச் சென்று உண்மைகளை உரைத்தனர்.[7] அப்போது அரசாலும், மக்களாலும் ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கி உயிர் துறந்து, கிறித்தவ உண்மைக்குச் சான்று பகர்ந்தனர்.[8] அதன்பலனாக உரோமைப் பேரரசர் நான்காம் நூற்றாண்டில் கிறித்தவ உண்மையைத் தழுவிக் கிறித்தவரானார். அது முதல் கிறித்தவம் உரோமைப் பேரரசின் உரிமைச் சமயமாயிற்று. 'உரோமன் கிறித்தவம்' என்றும் வழங்கலாயிற்று.[9]

கத்தோலிக்க உரோமன் திருச்சபை

உரோமன் திருச்சபை 'கத்தோலிக்' எனப்படுகிறது. 'கத்தோலிக்' என்பது கிரேக்கச் சொல். இதற்குப் 'பொதுவாய் நிற்கும்' என்பது பொருள்.[10] உலகிலுள்ள எல்லா நாட்டாருக்கும் இனத்தாருக்கும் பொதுவாக இருந்து கிறித்தவ உண்மைகளைப் போதிப்பதால் இது 'கத்தோலிக்க உரோமன் திருச்சபை' என்றழைக்கப்படுகிறது.

உலகின் பிற்பகுதிகளில் திருச்சபை வேரூன்றல்

இத்திருச்சபை உரோம் நகரில் வேரூன்றிய காலத்தில் இனம், மொழி, அரசியல், இறையியல் முதலிய காரணங்களால் கருத்து வேற்றுமைகள் உருவாகி உரோமைப் பேரரசின் மேற்குச் சபை, கிழக்குச் சபை எனப் பிரிந்தது. மேற்குச் சபையார் உரோமைப் பேரரசின் மேற்குப் பகுதியில் இலத்தீன் மொழி பேசியவர்கள். இவர்கள் தமக்கெனத் தனிச்சபை நிறுவி உரோமாபுரியைச் சிறப்புக்குரிய நகர் என்றும், திருத்தந்தையைச் சிறப்புக்குரிய தலைவர் என்றும்

6. **விவிலியம் புதிய ஏற்பாடு**, அப். பணி. 13 : 4.
7. **மேலது**, 11 : 9.
8. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 35.
9. **மேலது**, ப. 31.
10. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 66.

கருதி வாழ்ந்தனர்.[11] உரோமைப் பேரரசின் கிழக்குப் பக்கம் உள்ள கிரேக்கக் கிறித்தவர்கள் அந்தியோக்கியா அலெக்சாந்திரியா முதலிய நகர்களைச் சிறப்புக்குரிய இடங்களாகவும் கான்ஸ்டாண்டி நோபிளைத் தலைமை இடமாகவும் கொண்டு வாழ்ந்தனர். இச்சபையும் உரோமை அரசாலும், அந்நகரச் சமய முதல்வராலும் ஆளப்பட்டு வந்தது. இச்சபையைக் கிரேக்கச் சபை அல்லது வைதிக சபை (orthodox) என்றழைத்தனர்.[12]

நற்செய்தியாளர்களின் சபைகள்

வைதிக சபையினர் பின்பற்றிய இறையியல் உண்மைகளில் சிலர் கருத்து வேறுபாடு கொண்டதால் வெவ்வேறு சபைகளாகப் பிரிந்து தென் கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா, எகிப்து, அலெக்சாந்திரியா ஆகிய பகுதிகளில் அவரவரும் ஏற்றுக்கொண்ட கிறித்துவ இறைக் கொள்கைகளைப் பரப்பினர். அவர்களுள் 'நெஸ்தோரிய சபை'யாரும் ஒரு பிரிவினர்.[13] இச்சபையார் அலெக்சாந்திரியாவி லிருந்து ஆப்பிரிக்காவிலுள்ள எத்தியோப்பியாவிற்கும் அந்தியோகியா, மேலைச் சிரியா வழியாகக் கீழைச்சிரியா நாட்டிற்கும் திருச்சபையைப் பரப்பினர். அது, யூப்ரட்டீஸ், டைக்ரிஸ் ஆறுகளுக்கு இடையிலுள்ளதும் தற்பொழுது ஈராக் என வழங்கப்பெறுவதுமான மொசபொத்தோமியாவில் வேரூன்றலாயிற்று.

நெஸ்தோரிய சபையினர் பாரசிகப் பகுதிகளிலும், சீன நாடுவரை ஆசியாக் கண்டம் முழுவதிலும் நற்செய்தியைப் பரப்புவதிலேயே முழுமையாக ஈடுபட்டனர். காலப்போக்கில் அந்நியர் படையெடுப்பால் இச்சபை அழிந்தது. உரோமையிலிருந்த கிறித்தவம் பல சபைகளாகப் பிரிந்து கீழ்த்திசைப் பக்கமாகச் செயல்பட்டபோது ஏதாவது ஒரு சபையின் வழியாகக் கிறித்தவம் இந்தியாவில் பரவியது என்றும், இயேசுவின் திருத்தூதர் தோமாவின் (தாமசு) மூலம் கிறித்தவம் இந்தியாவில் பரவியது என்றும் கூறுவர். இவ்வாறு, இந்தியாவில் புகுந்த இந்தியக் கிறித்தவத் திருச்சபை வரலாறு கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரையில் தெளிவாகக் கிடைக்கப் பெறவில்லை. எனினும் போர்த்துக்கீசியர்கள் கடல்வழியாக இந்தியாவிற்கு வந்தது முதல் (15ஆம் நூற்றாண்டு) கிறித்தவத்

---

11. சிரில் புரூஸ்பெர்த், **திருச்சபை வரலாறு, இந்தியத் திருச்சபை தொகுதி** 5, ப. 3.
12. **மேலது**, ப. 2.
13. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை தொகுதி** 5, ப. 3.

திருச்சபைகள் இந்தியாவில் பரவின. போர்த்துக்கீசியர்களைப் போலவே ஐரோப்பாவின் பல்வேறு நாட்டினரும் இந்தியாவைக் குறி வைத்தனர். பல்வேறு நாடுகளிலிருந்தும் கிறித்துவத் துறவிகள் இந்தியாவை நோக்கித் தம் பயணத்தைத் தொடங்கினர். இதனால் கிறித்துவச் சமயப்பரவலும் தழுவலும் இம்மண்ணில் வேகம் பிடித்தன.

போர்த்துக்கீசியரும் திருச்சபையும்

பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி உலக வரலாற்றில் சிறப்புற்று விளங்கிய காலகட்டம். மேற்கு ஐரோப்பியர் கடல் கடந்து சென்று, புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் போட்டியில் ஈடுபட்டனர். இதன் விளைவாக அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில் ஐரோப்பியர் குடியேறிப் பல பகுதிகளைத் தமக்குச் சொந்தமாக்கினர். இப்போட்டியில் குறிப்பாக ஈடுபட்டவர்கள் போர்த்துக்கீசியரும் ஸ்பெயின் நாட்டினரும் ஆவர். போட்டியின் காரணமாக இவர்கள் இருவருக்கும் பூசல் ஏற்பட்டது. இப்பூசலைத் தீர்ப்பதற்காகத் திருத்தந்தை ஆறாம் அலெக்சாந்தர் (1493) ஒரு தீர்வை வெளியிட்டார். அத்தீர்வாவது,

> "அட்லாண்டிக் கடலிலுள்ள 'அசோரஸ்' தீவிற்குத் தெற்கே உள்ள பகுதியிலிருந்து கிழக்கே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதும் இன்னும் கண்டுபிடிக்கப்படாததும், கிறித்தவ மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதும் ஏற்றுக்கொள்ளாததுமாகிய எல்லா நாடுகளையும் போர்த்துக்கல் நாட்டிற்கும், அதைப் போலவே 'அசோரஸ்' தீவிற்கு மேற்கே உள்ள நாடுகளை ஸ்பெயின் நாட்டிற்கும் அளித்தார்".[14]

என்பதாகும்.

அத்துடன், அவரவர் ஆட்சிக்கு உட்பட்ட இடங்களில் கத்தோலிக்கக் கிறித்துவ உண்மைகளை விரித்துரைக்க அந்தந்த நாடுகளிலிருந்து தகுதியுள்ள ஆட்களை அனுப்பலாம் என்றும் தெரிவித்தார்.[15]

---

14. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை, வரலாற்றில் கிறித்தவம் தொகுதி** 5, ப. 61.
15. மேலது, ப. 61.

இந்தியாவில் போர்த்துக்கீசியர்

போர்த்துக்கீசியரான வாஸ்கோடகாமா அட்லாண்டிக் கடல் வழியாக 'அசோரஸ்' தீவிற்குத் தெற்கேயுள்ள இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக்கோட்டையை (1498) அடைந்தார்.[16] அடைந்ததும் அந்நாட்டு (கள்ளிக்கோட்டை) மன்னருடன் வணிக ஒப்பந்தம் செய்து கொண்டார்.[17] இவர்களுக்கு (போர்த்துக்கீசியர்கள்) முன்பிருந்தே இந்தியாவுடன் வணிகம் செய்த அராபிய இசுலாமியர்கள் போர்த்துக்கீசியர்களைத் தங்களுக்குப் போட்டியாகக் கருதியதால் இருவருக்கும் பகைமை ஏற்பட்டது. போர்த்துக்கீசியர்களும் இந்து மக்களும் நல்லுறவுடன் வாழ்ந்ததும் பகைமை வளர ஏதுவாயிற்று.

இந்தியத் திருச்சபை (உறுப்பினர்கள்)

போர்த்துக்கீசியர்களின் இரண்டாவது ஆளுநரான ஆல்புகார்க் (Albuquerque) என்பவர் (1509-1515) பிஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவா நகரைக் கைப்பற்றினார் (1510).[18] போர்த்துக்கீசியரும் இந்தியரும் கலப்பு மணம் செய்வதை ஆதரித்தார்.[19] இதன்பொருட்டு இந்தியப் பெண்கள் திருமுழுக்குப் பெற்றுக் கிறித்தவராயினர். பின்னர் இவர்களைப் போர்த்துக்கீசியருக்கு மணம் செய்து கொடுத்தனர்/ இதனால் இந்துக்களும் போர்த்துக்கீசியர்களும் கலந்து கிறித்தவத்தைத் தழுவி வாழ்ந்தனர். இப்படிக் கிறித்தவத்தைத் தழுவிய இவர்கள்தாம் போர்த்துக்கீசிய இந்தியத் திருச்சபையின் முதல் உறுப்பினர்களாவர். போர்த்துக்கீசிய அரசர் இவர்களுக்குக் கிறித்தவ உண்மைகளைக் கற்றுக் கொடுக்கவும் திருச்சபையில் இன்னும் உறுப்பினர்களைச் சேர்க்கவும் விரும்பி, போப்பின் ஆணையைச் செயல்படுத்தினார். தம் நாட்டு வணிக மரக்கலங்களில் மாலுமிகள், போர் வீரர்கள், வணிகர்கள் ஆகிய இவர்களுடன் சமயப்பணி ஆற்றக்கூடிய துறவிகளையும் அனுப்பி வைத்தார்.[20] வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு வந்த மறு வருடமாகிய 1500ஆம் ஆண்டில்

16. மயிலை சீனி. வேங்கடசாமி, கிறித்தவமும் தமிழும், ப. 7.
17. மேலது, ப. 8.
18. ஜேசுதாஸ் தங்கசாமி, திருச்சபை வரலாறு, ப. 468.
    சிரில் புரூஸ்பெர்த், இந்தியத் திருச்சபை தொகுதி 5, ப. 65.
19. மேலது, ப. 65.
20. மேலது, ப. 67.

'கப்ரால்' என்பவர் தலைமையில் இந்தியாவிற்கு எட்டு 'பிரான்சிஸ் சபை'த் துறவிகள் வந்துள்ளனர்.[21] போர்த்துக்கல் அரசர் கிறித்தவத்தைப் பரப்புவதில் ஆர்வமுடன் ஈடுபட்டதைக் கண்ட திருத்தந்தை அவருக்கு உதவ முன்வந்தார். அதனால் கிறித்தவச் சமயம் இந்தியாவில் பரவக் கனிவான சூழல் ஏற்படலாயிற்று.

ஞான அதிகாரச் சலுகை (Padroado)

திருத்தந்தை லியோ 1514ஆம் ஆண்டு, (இனிவரும் பகுதிகளில் திருத்தந்தை என்ற சொல் 'போப்' எனும் பெயரால் சுட்டப்பெறும்.)

> "போர்த்துக்கல் அரசரும் அவருடைய சந்ததியாரும் புதிதாகக் கண்டுபிடித்த பகுதிகளில் (ஆசியா ஆப்பிரிக்காக் கண்டங்கள்) சமய நிறுவனங்களை உருவாக்கலாம். அந்த நிறுவனங்களின் மேல் ஆதிக்கமும் செலுத்தலாம்"[22]

என்ற உரிமையை அளித்தார். இந்த அதிகார உரிமை போர்த்துக்கீசிய மொழியில் 'பத்றோவாதோ' என்றழைக்கப்படுகிறது. இந்த உரிமையின் அடிப்படையில்தான் போர்த்துக்கீசியர், தமிழ் நாட்டில் கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையை வேர் கொள்ளச் செய்தனர். பத்றோவாதோ மூலம் துறவறச் சபைகளை நிர்வகித்தல், அச்சபையின் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் பிற சமயத்தவர் மத்தியில் நடத்தப்படும் சமயப் பணியை ஆதரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளல் ஆகிய உரிமைகளைப் போர்த்துக்கீசியர்கள் பெற்றனர்.

போர்த்துக்கீசியரின் பணி

போர்த்துக்கீசியர் கோவாவை இசுலாமியரிடமிருந்து கைப்பற்றியது முதல் (கி. பி. 1510) கி. பி. 1542ஆம் ஆண்டு வரையிலும் இந்தியாவில் சமயம் பரப்பும் பணியைப் பிரான்சிஸ் சபையாரும் தொமினிக்கன் சபையாரும் செய்தனர்.[23] துறவறச் சபைகள் ஆர்வங்காட்டிச் சமயத்தைப் பரப்பியது போலவே இந்தியப் போர்த்துக்கல் அரசும் ஆர்வம் காட்டியது. அந்த ஆர்வத்தின் காரணமாகக் கிறித்தவர்களாக மாறியவர்கள் பொதுப்பணி நிறுவனங்களில் பணிபுரியலாம்

21. **மேலது**, ப. 67.
22. அமுதன் அடிகளார், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 15.
23. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 468.

என்பது போன்ற சில சலுகைககளைக் கொடுத்தது.[24] அதனால் இந்துக்கள் ஒருசிலர் போர்த்துக்கீசிய அரசால் தமக்குக் கிடைக்கும் உரிமையின் காரணமாகக் கிறித்தவராயினர். இதே காலகட்டத்தில் தென்தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையோரத்தில் முத்துக் குளிக்கும் பரவர்கள் மத்தியில் ஏற்பட்ட சமய மாற்றம் பெரும் பரபரப்புக்குக் காரணமாயிற்று.

சமய மாற்றத்திற்கான காரணம்

மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட இருபிரிவினர்களுக்கிடையே முரண்பாடு ஏற்பட்டால் ஒருபிரிவினர் மற்றொரு பிரிவினரின் உடலுறுப்புக்களை, அரிந்து குறைத்து அவமானப்படுத்துவது என்பது உலகில் சிலபோது நடப்பதுண்டு. இயேசுவின் சீடர் இராயப்பர் ஒருவரின் காதை அரிந்ததும் இராமாயணத்தில் ~~இராமன்~~ லெட்சுமணன் சூர்ப்பநகையின் மூக்கை அரிந்ததும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும். முத்துக்குளித் துறையாகிய தூத்துக்குடியில் அராபியர்களுக்கும் பரவர்களுக்கும் முத்து வணிகத்தில் அவ்வப்போது முரண்பாடுகள் தோன்றும். அவ்வாறு ஒருமுறை முரண்பாடு ஏற்பட்டபோது அராபியன் ஒருவன் பரவனின் காதைக் கடித்து அவனை அவமானப்படுத்திவிட்டான்.[25] இந்த அவமானச் செயலை நினைத்து வேதனையுற்றிருந்த பரவர்கள் அதிலிருந்து மீள்வதற்கு வழி தேடிக் கொண்டிருந்தனர்.

தமிழகத்தில் திருச்சபை

கன்னியாகுமரிக்கு அருகில் வாழ்ந்த கிறித்தவர் ஒருவர் (ஜான்-டி-குரூஸ் - போர்த்துக்கீசியரால் கிறித்தவரானாவர்) சமயப் பரப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் இசுலாமியரால் துன்புற்ற பரவர்களை அணுகி, போர்த்துக்கீசியரை அண்டினால் பாதுகாப்புக் கிடைக்கும் என எடுத்துரைத்தார். அக்கிறித்தவர் கூறியதை ஏற்றுக்கொண்ட பரவர்கள் அவருடன் கொச்சிக்குச் சென்று இசுலாமியருக்கும் தங்களுக்கும் இடையே நடந்த போராட்டங்களை எடுத்துக் கூறினர். போர்த்துக்கீசியரும் இசுலாமியர்களின் ஆதிக்கத்தை

---

24. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை**, தொகுதி 5, ப. 68.
25. பி. ஜே. தாஸ், **பார் புகழும் புனித சவேரியார்**, ப. 22.

அகற்றுவதாகக் கூறி அங்கு வந்த 85 பரவர்களைக் கிறித்தவச் சமயத்தில் சேர்த்தனர்.[26] பிறகு சில துறவிகள் கொச்சியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்து (1535 - 1537) அங்கு வாழ்ந்த பரவ வகுப்பைச் சேர்ந்த இருபதாயிரம் மக்களைக் கிறித்தவ சமயத்தைத் தழுவும்படிச் செய்தனர்.[27] இவ்வாறுதான் போர்த்துக்கீசியர்கள் தமிழகத்தில் திருச்சபையைத் தொடங்கினர். திருச்சபை தொடங்கிய பிறகு பல ஆண்டுகள் வரை தூத்துக்குடியிலுள்ள கிறித்தவப் பரவர்களுக்குக் கிறித்தவ ஒழுக்கங்களையும் முறைகளையும் கற்றுக் கொடுக்க எவரும் அங்குச் சென்றிலர். அதனால் சமயக் கட்டுக்கோப்பு சீர் பெறாமல் இருந்தது. 1540ஆம் ஆண்டிற்குள் போர்த்துக்கீசியர் இந்தியாவின் மேற்குக் கரையோரம் தங்களை நிலைநாட்டிக் கொண்டனர். கோவாவைத் தலைமை இடமாகவும், கொச்சியை முக்கிய வணிகத் தலமாகவும் மாற்றி வணிகத்தைச் சிறப்படையச் செய்து தம் அதிகாரத்துக்கு உட்பட்ட இடங்களைப் பெருக்கினர்.[28]

போர்த்துக்கீசியரும் இயேசு சபையும்

வணிகத்தில் சிறந்தும் அதிகாரத்தில் விரிவடைந்தும் வருகின்ற நிலையைக் கண்டு மகிழ்ந்த போர்த்துக்கல் அரசர், தம் அதிகாரத்திற்குள் உட்பட்ட நாடுகளில் கிறித்தவ சமயத்தைப் பரப்ப ஆர்வம் கொண்டு அப்போது திருச்சபைத் தலைவராக இருந்த திருத்தந்தையிடம் புதிதாக நிறுவப்பெற்ற இயேசு சபையிலிருந்து துறவிகளை இந்தியாவிற்கு அனுப்புமாறு வேண்டினார்.[29] திருத்தந்தையும் பிரான்சிஸ் சேவியர் என்னும் துறவியை அனுப்பினார்.

இயேசு சபைத் துறவிகள் தமிழகத்திற்கு வருதல் பிரான்சிஸ் சேவியர் (சவேரியார்)

ஸ்பெயின் நாட்டில் பிறந்த சவேரியார் இந்தியாவிற்கும் மற்றும் கிழக்கு ஆசியா முழுவதற்கும் திருத்தொண்டராகத் திருத்தந்தை கொடுத்த கடிதங்களுடன் அரசின் பாதுகாப்பில் இந்தியாவிலுள்ள கோவாவிற்கு வந்தார் (மே 1542).[30] அங்கு ஐந்து மாதங்கள் வரை மருத்துவமனை, சிறைச்சாலை, பள்ளிக்கூடம் ஆகிய

---

26. பி. ஜே. தாஸ், **பார் புகழும் புனித சவேரியார்**, ப. 23.
27. **மேலது**, ப. 23.
28. மயிலை சீனி. வேங்கடசாமி, **கிறித்தவமும் தமிழும்**, ப. 28.
29. 1534 ஆம் ஆண்டு இஞ்ஞாசியார் தலைமையில் தொடங்கப்பெற்ற துறவியார் மடம்.
30. சிரில் புருஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை**, **தொகுதி** 5, ப. 76.

நிறுவனங்களில் தொண்டு செய்தார்.[31] இந்நிலையில் கோவா ஆளுநரின் விருப்பத்திற்கிணங்கத் தூத்துக்குடியில் வாழ்ந்த பரவ மக்களுக்குப் பணியாற்றச் சென்றார். இவர் தூத்துக்குடிக்கு வந்து சமயப்பணியைத் தொடங்கிய பிறகே, அங்கு வாழ்ந்த கிறித்துவ மக்கள் கிறித்துவ நெறிமுறைகளையும் சமய விதிகளையும் பின்பற்றி ஒழுகத் தொடங்கினர்.

பணியின் தொடக்கம்

சவேரியார், பரவர் வீடுகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்துத் திருமுழுக்குப் பெறாத குழந்தைகளுக்குத் திருமுழுக்கு அளித்தார். தூத்துக்குடியில் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு தம் பணியின் முதற்படியாகத் தம் பேச்சு மொழியைத் தமிழாக மாற்றிக் கொண்டார்.

கிராமங்கள்தோறும் சென்று அங்கு திறமைமிக்க ஒருவரை உபதேசியாகத் தேர்ந்தெடுத்துத் தாம் கூறிய போதனைகளைத் தொடர்ந்து போதிக்கச் செய்தார். தூத்துக்குடியிலிருந்த போர்த்துக்கீசியப் பிரதிநிதி, அரசு நல்கையில் இருந்து அவர்களுக்கு ஊதியம் கொடுத்தார்.[32] கிராம மக்களைச் சந்தித்தல், சமய உண்மைகளைப் புகட்டுதல், திருமுழுக்கு அளித்தல், நோயாளிகளைச் சந்தித்தல், குற்றவாளிகளைத் திருத்துதல், ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்தல் முதலான பணிகளைச் சவேரியார் மேற்கொண்டார். மண்ணால் சுவரெடுத்து ஓலையால் கூரை வேயப்பெற்ற பல கோயில்களைக் கட்டி, மக்களைக் கூட்டி இறைவேண்டல் நடத்திப் போதனை செய்து வந்தார். மக்கள் பாவ அறிக்கையிட்டுப் பற்றுறுதி அறிக்கையை (விசுவாசப்பிரமானத்தை)ச் சொல்லிய பிறகு அதிலுள்ள ஒவ்வொரு பகுதியையும் உறுதியாக நம்புகிறாயா என்று வினவினார். அவர்கள் நம்புவதாக விடையளித்தபின் கிறித்துவின் கொள்கைகளை விளக்கிக் காட்டிப் பின்னர் அவர்களுக்குத் திருமுழுக்கு அளித்தார்.[33] இவ்வாறு அவர் செய்த பணிகளை அவர் எழுதிய கடிதத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

> "தான் பேசிய போர்த்துக்கீசிய மொழியையும் தமிழையும் அறிந்தவர்களைத் தேடிக் கண்டு பிடித்தேன். பல நாள் முயன்று

31. சிரில் புரூஸ்பெர்த், இந்தியத் திருச்சபை, தொகுதி 5, ப. 77.
32. மேலது, ப. 80.
33. மேலது, ப. 81.

> இறைவேண்டல்களைத் தமிழில் எழுதினோம். . . . . . பற்றுறுதி அறிக்கை, பத்துக் கற்பனைகள், கர்த்தருடைய இறைவேண்டல், பாவ அறிக்கை இவைகளையும் தமிழில் மொழி பெயர்த்தோம். மொழி பெயர்க்கப்பட்டவைகளை நான் மனப்பாடம் செய்தேன். பின் மணியடித்துக் கொண்டு, பிள்ளைகளையும் பெரியோரையும் கூட்டும்படிப் பட்டினம் முழுவதும் சுற்றினேன். அவர்களை ஓரிடத்தில் சேர்த்து நாள்தோறும் இருமுறை நான் போதித்து வந்ததன் பயனாக, ஒரு மாதத்திற்குள் அவர்கள் இறைவேண்டலைக் கற்றுக் கொண்டார்கள். . . . . ஞாயிற்றுக்கிழமைகளில் ஆண், பெண், முதியோர், இளைஞர், யாவரையும் சேர்த்துத் தங்கள் தாய் மொழியிலேயே இறை மன்றாட்டைத் திரும்பத் திரும்பச் சொல்லச் செய்தேன். . . . . . எல்லோரையும் குறிப்பாகத் திருமுழுக்குப் பெறவிருக்கிறவர்களையும், பாவ அறிக்கை செய்யச் சொல்வேன். அதன்பின் பற்றுறுதி அறிக்கையைச் சொல்லுவோம். பற்றுறுதி அறிக்கையில் ஒவ்வொரு பகுதியையும் உறுதியாக நம்புகிறாயா? என்று ஒவ்வொருவரையும் கேட்பேன். அவர்கள் நம்புவதாக விடையளித்தால் ஒருவர்தம் ஆத்தும மீட்புக்காகப் பின்பற்ற வேண்டிய கிறிஸ்துவின் பிரமாணங்களை விளக்கிக் காட்டிய பின்னர், அவர்களுக்குத் திருமுழுக்களிப்பேன்"[34]

என்பது அக்கடிதமாகும். அவர் திருத்தந்தையின் தூதுவராகக் கிழக்கு ஆசியா முழுவதற்கும் தொண்டு செய்ய வந்திருப்பதை மறக்காமல் சீனாவில் சமயப்பணி ஆற்றப் புறப்பட்டார். அங்குச் செல்லும் வழியில் உயிர் துறந்தார். கோவாவில் இன்றும் அவர் உடல் அழியாமல் இருக்கிறது. இவரைத் தொடர்ந்து 1548க்குள் 22 இயேசு சபைத் துறவிகள் தமிழகத்திற்கு வந்தனர். அவர்களுள் கொன்சாலோ பெர்னாண்டசு என்பவரும் ஒருவர்.

மதுரைப் பணித்தலம் (Madurai Mission)

கொன்சாலோ பெர்னாண்டசு என்னும் அருள்தொண்டர் தமிழ்நாட்டின் உட்புறமாகிய மதுரைப் பகுதிக்குப் பணியாற்ற வந்தார் (1595). இங்குக் கடலோரப்

---

34. பிலிப் புருன்பெர்த், இந்தியத் திருச்சபை, தொகுதி 5, ப. 81.

பகுதியிலிருந்து குடி பெயர்ந்து வந்த பரவ இனத்தாருக்கும், போர்த்துக்கீசிய வணிகர்களுக்கும் சமயப்பணியாற்றினார். மதுரையை ஆண்ட வீரப்ப நாயக்கருக்கும் போர்த்துக்கீசிய வணிகர்களுக்கும் நடுவராக இருந்து செயல்பட்டார். இம்முறையில் வீரப்பநாயக்கருடன் உறவு ஏற்பட்டது.[35] இந்த உறவின் அடிப்படையில் பெர்னாண்டசு பாதிரியார் 1599ஆம் ஆண்டு இயேசு சபையினர் மதுரையில் பணித்தலம் அமைத்துச் சமயத் தொண்டாற்ற அனுமதி பெற்றார்.[36] மேலும் ஓர் இந்து ஆசிரியரைக் கொண்டு தொடக்கப்பள்ளி ஒன்றையும் ஒரு சிறு மருந்தகத்தையும் நடத்தி வந்தார்.[37] இவரைத் தொடர்ந்து இராபர்ட் - டி - நொபிலி அப்பணித்தலத்திற்கு வந்தார்.

இராபர்ட் - டி - நொபிலி (தத்துவப் போதகர்)

தத்துவப் போதகர் மதுரைப் பணித்தலத்திற்கு 1606இல் வந்தார். இவருக்கு முன் சமயத் தொண்டாற்றிய அருட்பணியாளர்கள் எல்லோரும் கருப்பங்கி அணிந்திருந்தனர். இவரும் அம்முறையையே பின்பற்றினார். இதுவரை பரவ(ர்) இனத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமே கிறித்தவர்களாக மாறியிருந்தனர். இவர்களைப் பரங்கியர் மதத்தைச் சார்ந்தவர்கள் என்று இகழ்ந்தனர்; பரங்கி எனும் சொல், குறிப்பாகப் போர்த்துக்கீசியரையும் ஐரோப்பியரையும் குறிக்கப் பயன்பட்டது. பொதுவாக இறைச்சி உண்பவர்கள், மது அருந்துபவர்கள், ஒழுக்கநெறி தவறுகிறவர்கள், அடம் பிடிப்பவர்கள், இந்தியப் பண்பாட்டு முறைக்கு உதவாத நடத்தையாளர்கள், சமுதாயத்தில் தொடர்பு கொள்ளத் தகுதியற்றவர்கள் முதலியவர்களைக் குறித்தது. இவர்களை இறந்தவர்களாகக் கருதினர்; சாதியிலிருந்தும் குடும்பத்திலிருந்தும் விலக்கி வைத்தனர்; சொத்துரிமை மறுக்கப்பட்டது.[38]

தமிழ் நாட்டில் பெரும்பான்மைச் சாதியிலிருந்தும் கிறித்துவச் சமயத்தைத் தழுவ முன்வந்தனர். ஆனால் பார்ப்பன இனத்திலிருந்து ஒருவரும் முன்வரவில்லை. பார்ப்பனர்கள் யாரும் கிறித்தவர்களாக மாற முன்வராத இச்சூழ்நிலையை நன்குச் சிந்தித்தார். சீனாவில் மத்தேயா ரிக்கி என்னும் இயேசு

35. அ. கி. பரந்தாமனார், **மதுரை நாயக்கர் வரலாறு**, ப. 351.
36. R. Sathyanatha Aiyer and Krishnaswami Aiyengar, **History of the Nayaks of Madura**, p. 82.
37. R. Sathyanatha Aiyer, **A Political and Cultural History of India**, Volume I, II, III, p. 372.
38. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை தொகுதி** 5, ப.

சபைத் தொண்டர் அந்நாட்டு மரபுக்கு ஏற்பக் கிறித்தவத்தைப் போதித்து வந்ததை அறிந்து பார்ப்பனர்களையும் கிறித்தவ சமயத்தில் சேர்க்க முயற்சித்தார்.[39] அம்முயற்சிக்காக நான்கு முறைகளைக் கையாண்டார். அம்முறைகள்

தமிழ் நாட்டு மண்ணின் மரபிற்கேற்பத் தன்னை மாற்றுதல்; கிறித்தவத்தை இணைத்தல்.

சமுதாய உறவை வளர்க்க மொழிகளைக் கற்றல்.

மக்களோடு நெருங்கி உறவாடுதல்.

சமயக் கொள்கைகளை விளக்கி நூல் எழுதுதல்.

என்பன.

தமிழ் மண்ணின் மரபிற்கேற்பத் தன்னை மாற்றுதல்

இராபர்ட் - டி - நொபிலி என்ற தம் பெயரைத் 'தத்துவப் போதகர்' என்று தமிழ்ப்படுத்திக் கொண்டார்.[40] கருப்புநிற அங்கிக்குப் பதிலாகக் காவி அங்கியும், தோல் செருப்புக்குப் பதிலாகக் கட்டைச் செருப்பும் அணிந்தார். பார்ப்பனர்களைப் போலவே குடுமி வளர்த்து, பூணூல் அணிந்து, சந்தனப் பொட்டு வைத்துக் கொண்டார்.[41] மண் சுவராலான ஒரு சிறிய வீட்டையும் ஒரு சிறு கோயிலையும் கட்டி அதைத் தம் அறநிலையமாகக் கொண்டு தமிழகத் துறவி போல வாழ்ந்தார். புலால், மது, மீன், முட்டை இவற்றை நீக்கிப் பார்ப்பனச் சமையல்காரர் சமைத்த உணவை நாள் முழுவதும் பட்டினி கிடந்து மாலை நான்கு மணிக்கு உண்டார். பார்ப்பனிய மரபிற்கேற்ப வாழத் தொடங்கிய இவர் திருமலை நாயக்கரின் செல்வாக்கைப் பெற்றார்.[42] தம்மைக் காண வந்த மக்களோடு சமயம் தத்துவம் பற்றியே பெரும்பாலும் உரையாடினார். இளைஞர் பலர் அவரின் சீடராக விரும்பினர்.[43]

சீடராகித் திருமுழுக்குப் பெற்ற பார்ப்பனர்கள் தங்கள் இனக் கட்டுப்பாடுகளைத் தவிர்க்கவோ உணவு, உடை இவற்றில் மாற்றம் செய்யவோ

---

39. Sathiyanatha Iyer, **17th Century**, p. 213.
40. *தத்துவப் போதகர்*, **ஞானோபதேசக் காண்டம்**, *முன்னுரை.*
41. T. V. Mahalingam, **Administration and Social Life under Vijayanagar, Part II, Social Life**, p. 209.
42. *சிரில் புரூஸ்பெர்த்*, **இந்தியத் திருச்சபை**, *ப. 147.*
43. **மேலது**, *ப. 147.*

தூண்டப் பெற்றிலர். இவர்களைப் பரவ இன மக்களோடு சேரவேண்டுமென்று கட்டாயப்படுத்திலர். கிறித்துவ நெறியைத் தழுவிய பார்ப்பனர்களும் பூணூல் அணிந்து, குடுமி வைத்துக் கொள்ளலாம் என்றார். பொங்கல் முதலான தமிழர் விழாக்களைச் சிலுவை அடையாளத்துடனும், கிறித்தவ மந்திரங்களுடனும் கொண்டாட அனுமதித்தார். ஆதலால் கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்கள் தொடர்ந்து தங்கள் குடும்பங்களோடும் இனத்தாரோடும் சேர்ந்து வாழ்ந்தனர்.[44]

சமுதாய உறவை வளர்க்க மொழியைக் கற்றல்

போதகரின் சீடராக விரும்பிய இளைஞர்களில் சிவதர்மா என்ற தெலுங்குப் பார்ப்பனரும் ஒருவர்.[45] தத்துவப் போதகர் இவரோடு பழகிச் சமற்கிருதம் கற்றார். அக்காலத்தில் பார்ப்பனர்கள் மட்டுமே வேதத்தைக் கற்கலாம் என்றிருந்ததால் சிவதர்மா வேதசூத்திரங்களை எழுதி இரகசியமாய்த் தத்துவப் போதகருக்குக் கொடுத்தார். தானும் திருமுழுக்குப் பெற்றார் (1609).[46]

மக்களோடு நெருங்கி உறவாடுதல்

மக்களுடன் உறவாட மொழி தடையாக இருந்த காரணத்தால் முதலில் தமிழ் மொழியைக் கற்றார். பிறகு பார்ப்பனர்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ளச் சமற்கிருதத்தையும் கற்றார். இதனால் கற்றறிந்தோரிடம் கலந்துரையாடவும் சமயக் கொள்கைகளைப் பகிர்ந்து கொள்ளவும் இவருக்கு எளிதாயிற்று. இதன் பயனை,

> "கி.பி. 1607 பெப்ரவரித் திங்களில் ஓர் இளைஞர் குழுவிற்குக் கிறித்தவ அறிவுரை கூற ஆரம்பித்தார். அக்குழுவிற்குப் பள்ளிகளில் பணியாற்றிய இந்து ஆசிரியர்களும் வருவார்கள். இவர்களிடம் இந்து கிறித்தவ சமயப் போதனைகளைப் பற்றி விவாதம் செய்ய ஆரம்பித்தார். நாள் ஒன்றுக்கு நான்கு ஐந்து மணி நேரமாக இருபது நாட்கள் விவாதம் நடத்தினார். இறுதியில் இந்து ஆசிரியர் கிறித்தவ சமய உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து தத்துவப் போதகரைத் தமது குருவாக ஏற்று திருமுழுக்குப்

44. S. Rajamanickam, **Robert De Nobili on Indian Customs**, p. xviii.
45. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை தொகுதி** 5, ப.148.
46. மேலது, ப.149.

பெற்றார். நாயக்கர்களில் மூன்று பேரும் மொத்தத்தில் பத்துப் பேர்களும் திருமுழுக்குப் பெற்றார்கள்"[47]

எனும் கூற்றுத் தெளிவாக்கும்.

சமயக் கொள்கைகளை விளக்கி நூல் எழுதுதல்

தமிழ் மண்ணிற்கேற்ப வாழ்ந்து போதித்ததோடு நூல்களும் எழுதினார். அவை : ஞானோபதேச காண்டம், ஆத்தும நிர்ணயம், புனர் ஜென்ம ஆஷேபம், தூஷணத் திக்காரம், ஞான தீபிகை, பேதகப் பரிட்சை, ஞான சங்ஷேபம், விசுவாச சல்லாபம், சிலுவையில் விஷேச சல்லாபம் முதலான உரைநடை நூல்களை எழுதினார். இந்நூல்கள் வடசொற்கள் கலந்து கரடுமுரடான தன்மை வாய்ந்தவை.[48] இவற்றுள் ஞானோபதேச காண்டம், ஆத்தும நிர்ணம், புனர் ஜென்ம ஆஷேபம், தூஷணத் திக்காரம் முதலிய நூல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றன.[49]

சாதி மோதல்கள்

மதுரையில் பார்ப்பனக் கிறித்தவர்களோடு பரவஇனக் கிறித்தவர்களையும் சேர்த்துச் சமயத் தொண்டாற்றுவதில் இடையூறு ஏற்பட்டது. இதனால் பகற்காலத்தில் பார்ப்பனக் கிறித்தவர்களுக்கும் இராவு நேரங்களில் மற்ற இனத்தைச் சேர்ந்த கிறித்தவர்களுக்கும் என்று பணியாற்றி வந்தனர். இம்முறையிலும் துன்பம் இருந்ததால் இருவருக்கும் தனித்தனிச் சமயத் தொண்டர் அமைத்துப் பணி செய்ய முன்வந்தனர். பார்ப்பனர் அல்லாத மக்களுக்குச் சமயத் தொண்டு செய்பவர் 'பண்டார சுவாமி' எனப்பட்டார்.[50] பல்தசார் - ட - கஸ்டா என்ற போர்த்துக்கீசிய அருள்தந்தைதான் முதன்முதல் பண்டார சுவாமியாக மதுரையில் பொறுப்பேற்றார் (1640). பல்தசார் ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல் திருச்சி வட்டாரத்தில் பல்வேறு இடங்களுக்கும் சென்று சமயப்பணியாற்றினார். இதனால் பார்ப்பனரல்லாத மக்கள் பெரும்

---

47. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை, தொகுதி** 5, ப.147.
48. கே. கே. பிள்ளை, **தென்னிந்திய வரலாறு**, ப.144.
49. இராஜமாணிக்கம், **ஞானோபதேச காண்டம்**, முன்னுரை (தத்துவப் போதகர், ஞானோபதேச காண்டம் - முன்னுரை).
50. சி. கே. சாமி, **ஓரியூர் ஒளிவிளக்கு**, ப. 93.

பான்மையினர் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். திருச்சபை தன் பணியை விரிவுபடுத்தியது.

போர்த்துக்கீசியருக்கும் திருமலை நாயக்கருக்கும் பகை ஏற்பட்டதால் (1635-1639) மதுரை அரசு அதிகாரிகள் கிறித்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினர். கிறித்தவ மக்கள் இந்து மக்களோடு ஒத்துப் போனாலும் அவ்வப்போது துன்புறுத்தலுக்கும் ஆளாயினர். இவர்கள் மத்தியில் அருள் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள் ஒருசில வேளைகளில் துன்பத்தை அனுபவித்தனர். அவர்களுள் பெருந் துன்பப்பட்டு உயிர்த்தியாகம் செய்தவர் ஜான் - டி - பிரிட்டோ என்பராவார்.

அரசியல் சூழலில் ஜான் - டி - பிரிட்டோ (அருளானந்தர்)

போர்த்துக்கீசிய இயேசு சபைத் துறவியான ஜான் - டி - பிரிட்டோ எனும் அருளானந்தர் 1674இம் மதுரைப் பணித்தலத்தை அடைந்தார். தஞ்சாவூர், செஞ்சிப் பகுதிகளில் பணியாற்றி மறவர் நாட்டுக்குச் (இராமநாதபுரம்) சென்றார் (1686). கடந்த ஏழாண்டுகளாகக் கிறித்தவர்கள் துன்புறுத்தப்பட்டதால் அருள் தந்தையர்கள் எவரும் அங்குப் பணியாற்றப் போகவில்லை. இவர் அங்குச் சென்று பணி செய்தவுடன் இராமநாதபுர மன்னர் சேதுபதி இவரையும் இவருடன் பணியாற்றியவர்களையும் கைது செய்து காவலில் வைத்து இனிமேல் தன் நாட்டு எல்லைக்குள் நுழையக் கூடாது என்று எச்சரித்து விடுதலை செய்தார்.[51]

விடுதலை பெற்ற இவர் போர்த்துக்கல் சென்று திரும்பி வந்து மறுபடியும் மறவர் நாட்டிற்கே சென்றார் (1691). இராமநாதபுரத்திற்கும் மதுரைக்கும் போர் நடந்து கொண்டிருந்ததால் காடுகளில் சுற்றித் திரிந்து தம்மைத் தேடி வருபவர்களுக்குச் சமயப்பணி செய்தார். இவரின் உதவியை நாடியவர்களுள் தடியத்தேவர் என்பவரும் ஒருவர். இவர் திருமுழுக்குப் பெற்றுக் கிறித்தவரானதால் அருளானந்தருக்கு மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. அருளானந்தரின் கூற்றுப்படி இவருக்கு இருந்த ஐந்து மனைவியரில் ஒருத்தியை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற நால்வரையும் விலக்கி விட்டார். விலக்கப்பட்டவர்களுள் ஒருத்தி சேதுபதியின் உறவினள்.[52] இவள்

---

51. சி. கே. சாமி. **ஓரியூர் ஒளிவிளக்கு**, ப. 24.
52. கே. கே. பிள்ளை, **தமிழக வரலாறும் பண்பாடும்**, ப. 63.

முறையீட்டைக் கேட்ட சேதுபதி அருளானந்தரைச் சிரச்சேதம் செய்து விட்டார் (4-2-1693). அத்துடன் மார்ட்டின் என்ற தொண்டரையும் சிறை வைத்துத் துன்புறுத்தினார்.

மதுரைத் திருச்சபை விரிவடைதல்

இக்கொடுமையான சூழலில்தான் மறவர் நாட்டில் (இராமநாதபுரம்) திருச்சபை கால் கொண்டது. ஆலயங்கள் இடிக்கப்பட்டுக் கிறித்தவர்கள் துன்புறுத்தப்பட்ட நிலையில்தான் புதுக்கோட்டைப் பகுதியிலும் திருச்சபை உருவானது (1686).[53] மதுரைத் திருச்சபையைச் சார்ந்த இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் கிறித்தவர்கள் துன்புற்றதைப் போலவே அத்திருச்சபையைச் சார்ந்த தஞ்சைப் பகுதியிலும் துன்புற்றனர். தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர் ஷாஜி கிறித்தவர்களைத் துன்புறுத்தியதோடு அவர்களுக்குச் சமயப்பணி செய்த சமயத்தொண்டர்களான ஜோசப் கர்வாலோ, சார்லஸ் மிக்கேல் பெர்த்தோல்தி ஆகிய அடியார்களையும் சிறையில் அடைத்தார்.[54] கர்வாலோ அடிகள் சிறையிலேயே உயிர் துறந்தார் (14-11-1701).[55] பெர்த்தோல்தி அடிகள் பல மாதங்கள் சிறையில் துன்புறுத்தப்பட்டபின் விடுதலையானார்.[56] இவ்வாறு கிறித்தவர்களும் சமயத் தொண்டர்களும் கொடுமைப்படுத்தப்பட்ட மதுரைத் திருச்சபையில்தான் பெஸ்கி எனும் வீரமாமுனிவர் பொறுப்பேற்றார் (8-5-1711).[57] இவர் மதுரைத் திருச்சபையில் பொறுப்பேற்றபோது (1711) தஞ்சைத் தரங்கம்பாடியில் லூத்தரன் சபையார் திருச்சபை அமைத்துப் (1706) பணி செய்து வந்தனர். ஆதலால் லூத்தரன் திருச்சபையின் வருகையையும் அவர்களின் சமயத்தொண்டு முறைகளையும் காண்பது வீரமாமுனிவரின் சமயத் தொண்டை அறியத் துணையாகும்.

53. அ. மு. பரமசிவானந்தம், **தமிழக வரலாறு**, ப. 42.
54. L. Besse, **op. cit.**, p. 72.
55. **Ibid.**, p. 75.
56. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 24.
57. **மேலது**, ப. 24.

தமிழகத்தில் லுத்தரன் திருச்சபையின் வருகை

பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் வணிகத்திற்காகக் கடல் வழியாக இந்தியாவிற்கு வந்தனர். அவர்களுள் முதன் முதல் வந்தவர்கள் போர்த்துக்கீசியர்களாவர். அவர்களைத் தொடர்ந்து

டச்சுக்காரர்	பழவேற்காடு	(Pulicat)	1609
	சதுரங்கப்பட்டினம்	(Saras)	1647
	நாகப்பட்டினம்	(Nagapatnam)	1660

ஆகிய இடங்களிலும்[58]

ஆங்கிலேயர்	மசூலிப்பட்டினம்	(Masulipatnam)	சுமார் 1622
	சென்னை	(Madras)	1639
	கடலூர்	(Cuddalore)	1683
	கல்கத்தா	(Calcutta)	1689

ஆகிய இடங்களிலும்[59]

பிரான்ஸ் நாட்டார்	காரைக்கால்	(Karaikal)	
	புதுச்சேரி	(Pondichery)	1624

ஆகிய இடங்களிலும்[60]

டென்மார்க் நாட்டவர்கள் சோழ மண்டலக் கடற்கரை தஞ்சைப் பகுதியிலுள்ள
தரங்கம்பாடிக் கிராமம் 1620
வங்காளத்தில் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள செராம்பூர் (சுமார் 1676)

ஆகிய இடங்களிலும்[61] குடியமர்ந்து வணிகம் செய்தனர். இவர்களில் போர்ச்சுக்கல் நாட்டாரும் பிரான்சு நாட்டாரும் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். ஏனைய டச்சுக்காரர்கள், ஆங்கிலேய நாட்டார்கள், டென்மார்க் நாட்டார்கள் ஆகிய இவர்கள் லுத்தரன் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் (Protestant).

---

58. சிறில் புரூஸ்பொர்த், இந்தியத் திருச்சபை வரலாற்றில் கிறித்தவம் தொகுதி 5, ப.170.
59. மேலது, ப.170.
60. மேலது, ப.170.
61. மேலது, ப.170.

ஐரோப்பாவில் லூத்தரன் திருச்சபையின் நிலைமை

பதினாறாம் நூற்றாண்டில் மார்ட்டின் லூதர் திருச்சபைக்கு எதிராகப் புரட்சிக்குப்பின் புதிதாக உருவாக லூத்தரன் திருச்சபையின் பணியில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது. ஏறத்தாழ ஒன்றறை நூற்றாண்டுகள் சமயக் கொள்கைகளைப் பற்றி விவாதிப்பதிலும், அரசியல் சச்சரவுகளிலிருந்து ஒதுங்குவதிலும், கத்தோலிக்கத் திருச்சபைக்கும் அதை ஆதரித்த அரசுகளுக்கும் எதிராக நிலைத்து நிற்பதிலுமே புதிய திருச்சபையினர் கவனத்தைத் செலுத்தினர். மேலும் தங்களுக்குள்ளேயே கொள்கை வேறுபாட்டால் பல பிரிவுகளை உண்டாக்கிக் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.[62] இவ்வாறு தங்களை நிலைநிறுத்திக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வந்தனர். அதனால் உலகின் பிற நாடுகளில் தம் சமயத்தைப் பரப்பும் எண்ணம் இல்லாமல் இருந்து விட்டனர். கி. பி. 1700க்குப் பிறகுதான் பிற நாடுகளில் சமயத்தைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணம் கொண்டனர். அவர்களுள் இங்கிலாந்து நாட்டவர் முதன்மையானவர்களாக இருந்தனர்.

ஆங்கிலேயர்

ஆங்கிலேய நாட்டு மக்களில் சிலர் தங்கள் சமயக் கருத்துக்களை உலகின் பிற பகுதிகளுக்கும் எடுத்துச் செல்ல நினைத்து அதனடிப்படையில் "கிறித்தவ அறிவு வளர்ச்சிக் கழகம் 1698" (Society for promoting Christian knowledge) என்றதொரு அமைப்பை நிறுவினர்.[63] இப்படித் தனிப்பட்ட ஆட்கள் சமய வளர்ச்சிக்கு உதவ முன் வருவதைப் பார்த்த ஆங்கிலேயத் திருச்சபையினர் தம் அரசு ஆதரவுடன் 1701இல் "நற்செய்தியை அந்நிய நாடுகளில் பரப்பும் சங்கம்" (Society for the Propagation of the Gospel) ஒன்றை நிறுவினர்.[64] இவர்களைப் போலவே ஜெர்மனி நாட்டவர்களும் சமயம் பரப்ப முயற்சித்தனர்.

---

62. விமலா மனுவேல், **இந்தியத் திருச்சபைத் தொண்டர் முதல் பாகம்**, ப. 68.
63. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை வரலாற்றில் கிறித்தவம் தொகுதி** 5, ப. 171.
64. **மேலது**, ப. 171.

ஜெர்மனி நாட்டவர்

ஜெர்மனி நாட்டவர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் 'பயடிசம்' (Pietism) என்னும் பக்தி இயக்கத்தைத் தொடங்கினர். இவ்வியக்கத்தில் தனியாள் பக்தி முயற்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஹல்லே (Halle) பல்கலைக்கழகப் பேராசிரியரான ஏ. ஹெச். ஃபிராங்கே (A. H. Franske) இவ்வியக்கத்தின் தலைவராக இருந்தார்.[65] இப்பல்கலைக்கழகத்தில் இறையியல் பயின்ற ஜெர்மன் நாட்டுக்காரர்களான பர்த்தலோமியு சீகன்பால்க் (Bartholomeu Ziegnbalg), ஹென்றி புளுச்சாவ் (Henry Pluetschau) ஆகிய இருவர் இப்பக்தி இயக்கத்தில் சேர்ந்து உழைத்தனர்.[66] ஜெர்மனின் முயற்சியைக் கண்டு டென்மார்க் நாடும் இப்பணிக்கு முன்வந்தது.

டென்மார்க் மன்னரின் முயற்சி

டென்மார்க் மன்னர் நான்காம் பிரட்ரின் (King Frederickn) ஆங்கிலேயர்கள் சமயம் பரப்பச் செய்த முயற்சியைக் கண்டார். லுத்தரன் சபையைச் சேர்ந்த இவர் தாமும் தம் திருச்சபையை வெளிநாடுகளில் வளர்க்க விருப்பங் கொண்டார். தமிழகத்துடன் தம் நாடு (1620இல் தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கரின் காலத்திலேயே) வணிகம் செய்து வந்ததை நினைவில் நிறுத்தி அங்கேயே தம் சமயத்தைப் பரப்ப விருப்பங் கொண்டார்.[67] ஜெர்மன் நாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறையியல் பயின்ற சீகன்பால்குவும் புளுச்சாவும் இப்பணிக்கு முன் வந்தனர். இவர்கள் பக்தி இயக்கத்தை அஃதாவது பயட்டிசம் அமைப்பைச் சேர்ந்தவர்கள். டென்மார்க் நாட்டுத் திருச்சபைத் தலைவர்கள் பக்தி இயக்கத்தை எதிர்ப்பவர்கள். ஆதலால் டென்மார்க் நாட்டுத் திருச்சபைத் தலைவர்கள் இவர்களை ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். எனவே அரசவை மறைத்தொண்டர்கள் (Royal Missionaries) என்னும் தனி உரிமையோடு இவர்களைத் தரங்கம்பாடிக்கு மன்னர் அனுப்பி வைத்தார். அவர்களின் செலவுப் பொறுப்பு முழுமையும் தாமே ஏற்றுக் கொண்டார்.[68] இவ்வாறு முதன்முதல்

---

65. **மேலது**, ப. 172.
66. விமலா மனுவேல், **இந்தியத் திருச்சபைத் தொண்டர் முதல் பாகம்**, ப. 69.
67. ஆ. ஞானசேகரன், **தமிழகமும் ஜெர்மானியரும்** 280 **ஆண்டுக்கால இலக்கிய உறவுகள்**, ப. 1.
68. Arno Lehmann, **It began at Tranquebar**, p. 15.

தரங்கம்பாடிக்கு வந்த மறைத்தொண்டர்கள் டென்மார்க் அரசால் அனுப்பப்பட்டவர்களும், ஜெர்மனி நாட்டுப் பக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர்களுமான சீகன்பால்குவும், ஹென்றி புளுச்சாவுமாவார்கள்.

தரங்கம்பாடியில் சீகன்பால்குவும், ஹென்றி புளுச்சாவும்

சீகன்பால்குவும், புளுச்சாவும் 1706ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஒன்பதாம் நாள் தரங்கம்பாடி வந்து சேர்ந்தனர்.[69] இவர்களின் வருகையை இரகசியமாய் அறிந்த ஆளுநர் கசியசும் தாமும் தம்முடன் பணியாற்றும் உயர் பணியாளர்களும் முன்மாதிரியான கிறித்தவ வாழ்க்கை வாழாததால் டென்மார்க்கிலிருந்து வரும் மறைத்தொண்டர்களின் வருகையைப் பற்றி அச்சம் கொண்டனர். இவர்களைப் போலவே தரங்கம்பாடியில் தங்கியிருக்கும் வணிகக் குழுவினரும் தம் நாட்டினர் சமயப் பணியில் ஈடுபட்டால் தம் வணிக முன்னேற்றத்தில் தடை ஏற்படும் என்று அச்சம் கொண்டனர். இதனால் ஒருவரையொருவர் சந்திக்கும் முன்னரே எதிர்ப்புத் தொடங்கிவிட்டது.[70] 1706ஆம் ஆண்டு இருவரும் தரங்கம்பாடி வந்து சேர்ந்தனர். தங்களைச் சமயப் பணிக்குத் தயார் செய்து கொண்டனர்.

பணிக்குத் தயார் செய்தல்

தமிழகத்திலுள்ள ஐரோப்பிய வணிகத் தலங்களில் ஐரோப்பியர்களுக்கும், இந்தியர்களுக்கும் பிறந்த கலப்புச் சாதியினர் அதிகமாக இருந்ததால் பேசப்பட்ட பொது மொழி போர்த்துக்கீசியமாக இருந்தது.[71] தரங்கம்பாடி மக்கள் பேசுவதோ தமிழ் மொழி. மறைத்தொண்டர்கள் அறிந்ததோ ஜெர்மானிய மொழி. அதனால் ஐரோப்பியர்களுடனும் தமிழர்களுடனும் உறவாட மொழி பெரிய தடையாக இருந்தது. எனவே இருவரும் முதலில் போர்த்துக்கீசியம், தமிழ் ஆகிய மொழிகளைக் கற்கத் தொடங்கினர். புளுச்சா போர்த்துக்கீசியமும், சீகன்பால்க் தமிழும் கற்றனர். சீகன்பால்குவிற்குச் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லக்கூடிய சாதாரண படிப்புள்ள எல்லப்ப நாவலர் எனும் ஆசிரியர் தமிழ் கற்றுக் கொடுத்தார்.[72] சீகன்பால்கு பெரும்புலவர்களைப் போலப் பாண்டித்தியம்

---

69. ஆர். ஹெச். எஸ். பாய்ட், **இந்தியக் கிறித்தவ இறையியல்**, (தமிழாக்கம் : ஜி. வில்சன்), ப. 22.
70. விமலா மனுவேல், **இந்தியத் திருச்சபைத் தொண்டர் முதல் பாகம்**, ப. 71.
71. மயிலை சீனி. வேங்கடசாமி, **கிறித்தவமும் தமிழும்**, ப. 98.
72. **மேலது**, ப. 98.

பெறவில்லையாயினும் தமிழை நன்கு படிக்க, எழுதக் கற்றுக் கொண்டு பணியைத் தொடங்கினார்.

சமயப்பணியும் சமயப்பரப்பலும்

சீகன்பால்கு, தரங்கம்பாடியில் மக்கள் அமர்ந்து வழிபடுவதற்காகக் கி. பி. 1710க்குப் பிறகு புதிய எருசலேம் ஆலயம் என்னும் கோயில் ஒன்று கட்டினார்.[73] அவர்களைக் கிறித்தவ வழிமுறையில் பேணி வளர்க்க நல்ல ஆசிரியர்களையும் உருவாக்க வேண்டும் என்பதை அறிந்து கிறித்தவ ஆசிரியர்களுக்கும் வேதியர்களுக்கும் தனிப்பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார்.[74] தரங்கம்பாடியில் டென்மார்க் நாட்டின் கிழக்கிந்திய வணிகக் குழுவின் படை ஒன்றிருந்தது. அப்படைக்குழுவில் ஜெர்மானியர்களும் இருந்தனர். ஆதலால் அவர்களுக்காக ஜெர்மானிய மொழியில் கடவுள் வழிபாடு நடத்தினார்.[75] ஐரோப்பியர்களுக்கும், அவர்களின் பணியாளர்களுக்கும் படைத்தலைவரின் உதவியோடு நாளொன்றுக்கு இரண்டு மணி நேரமாகச் சமயப் போதனை செய்து வந்தார். இப்போதனையின் பயனால், ஐந்து பேர், கிறித்தவராக வேண்டும் என்ற நோக்கில் தனிப்படிப்புப் படிக்க முன்வந்தனர்.[76] அவர்களுக்குப் போர்த்துக்கீசிய மொழியில் போதனை செய்தார் புளுச்சாவ். இவர்களுக்குச் சீகன்பால்கு 1706ஆம் ஆண்டு நவம்பரில் திருமுழுக்கு அளித்தார்.[77] திருமுழுக்குப் பெற்ற ஐந்து பேர்களும்தான் தரங்கம்பாடித் திருச்சபையின் முதல் திருச்சபை உறுப்பினர்கள் என்பது குறிக்கத்தக்கது. இப்பணியுடன் ஏதிலிப் பிள்ளைக்கும் இல்லம் தொடங்கி நடத்தினர்.

ஏதிலிகள்

தாய் தந்தை இல்லாத பிள்ளைகளைக் காவலர்களிடம் விலைக்கு வாங்கி அவர்களுக்காக அனாதைப் பிள்ளைகள் பள்ளிக்கூடம் ஒன்று தொடங்கி நடத்தினர்.[78] அப்பிள்ளைகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்து அவர்களைக்

---

73. விமலா மனுவேல், **இந்தியத் திருச்சபைத் தொண்டர் முதல் பாகம்**, பக். 78-79.
74. **மேலது**, ப. 79.
75. **மேலது**, ப. 80.
76. விமலா மனுவேல், **இந்தியத் திருச்சபைத் தொண்டர் முதல் பாகம்**, ப. 80.
77. **மேலது**, ப. 81.
78. **வரலாற்றில் கிறித்தவம் தொகுதி** 5, ப. 174.

கிறித்தவ நெறியில் வளர்த்தனர். அவர்களுக்கு ஜெர்மானிய மொழியையும் கற்றுக் கொடுத்தனர். மேலும் இரண்டு பள்ளிக்கூடங்களை நிறுவி அவற்றில் தமிழும் போர்த்துக்கீசியமும் கற்றுக் கொடுத்தனர். அங்குச் சமயப் போதனையும் செய்தனர்.

சமயப் போதனை

சீகன்பால்கு ஓரளவு தமிழ் பேசக் கற்றவுடன் சமயக் கருத்துகள் பற்றி மற்றவர்களிடம் பேசவும் போதிக்கவும் தொடங்கினார். அக்காலத்தில் ஐரோப்பியர் ஒருவர் பள்ளிக்கூடங்கள் நடத்தியும், தமிழில் பேசியும் தம் மதம் பரப்புவதைக் கேள்விப்பட்ட மக்கள் இவரைக் காணவந்தனர். இவருடன் பேசினர். இவரின் பணிமுறைகளைக் கண்டனர்.

பணிமுறைகள்

சீகன்பால்கு தமிழ் கற்கத் தொடங்கிய ஓராண்டுக் காலத்திற்குள் தமிழை நன்கு பேசவும், எழுதவும் தேர்ச்சி பெற்றார். மார்ட்டின் லூத்தர் எழுதிய திருமறை அறவுரையை மொழிபெயர்த்து 'வேதோபதேச வினாவிடை' என்று வெளியிட்டார். இது சிறுபிள்ளைகளுக்கு ஞான அறிவுரை வழங்கப் பயன்பட்டது. பிரசங்கங்கள் கைப்பிரதிகள் பள்ளிப் புத்தகங்கள் என்று எழுதினார். புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தார் (1708). பழைய ஏற்பாட்டில் ரூத் ஆகமம் முடிய மொழி பெயர்த்தார். மொழி பெயர்ப்புப் பகுதிகளை அச்சடித்து மக்களுக்கு வழங்கினார். (இதன் விளக்கம் 'நூல்களுக்கான பின்புலங்கள்' என்னும் இயலில் கூறப்பட்டுள்ளது.)

அச்சின் அறிமுகம்

இங்கிலாந்து நாட்டுக் 'கிறித்தவ அறிவு வளர்ச்சிக் கழகத்தார்' (Society for Promoting Christian knowledge) தரங்கம்பாடித் திருச்சபைக்கு அச்சியந்திரம் ஒன்றை (1713) இலவசமாக வழங்கினர்.[79] இதற்கு முன்பு 1577ஆம் ஆண்டிலும் அதற்கடுத்த சில ஆண்டுகளிலும் மலையாள தேசத்தில் தமிழ் நூல்கள் அச்சிடப்

79. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை**, ப. 171.

பெற்றன.[80] அந்நூல்களை இயேசு சபைக் குருக்கள் மட்டுமே பயன்படுத்தினர். பொது மக்கள் அந்நூல்களால் பயன்பெற்றிலர். ஆனால் லூத்தரன் சபையார் அச்சுப்பொறியின் உதவியால் சமயக் கொள்கை விளக்கச் சிறு நூல்களை அச்சிட்டு மக்களுக்கு இலவசமாகக் கொடுத்தனர்.[81] பனையோலைகளில் படித்துத் துன்பப்பட்ட மக்கள் அச்சு எழுத்துப் புத்தகங்களை விருப்பமுடன் வாங்கிப் படித்தனர். இதனால் லூத்தரன் திருச்சபை தரங்கம்பாடியில் வேரூன்றி வளரத் தொடங்கியது.

திருச்சபை வளர்ச்சி

சீகன் பால்கு தரங்கம்பாடித் திருச்சபையின் வளர்ச்சி பற்றித் தம் தாய்நாடான ஜெர்மனிக்குக் கடிதங்கள் எழுதினார். தரங்கம்பாடித் திருச்சபையின் வளர்ச்சி நிலையை அக்கடிதங்கள் காட்டின. அதனால் 1709ஆம் ஆண்டு,

கிரண்ட்லர்	(Gruendler)
ஜார்டான்	(Jordan)
போவிஸ்	(Boevingh)

என்னும் மூன்று மறைத் தொண்டர்களை ஜெர்மனி நாட்டார் தரங்கம்பாடிக்கு அனுப்பி வைத்தனர்.[82] இவர்கள் தரங்கம்பாடிக்கு வரும்போதே போதுமான அளவில் பொருளும் பணமும் மறைத்தொண்டர்களைப் பாதுகாக்கப் படைத் தலைவருக்கு அதிகாரப் பத்திரமும் கொண்டு வந்தனர். கொண்டு வந்த பணத்தின் உதவியால் தரங்கம்பாடியில் மறைத்தொண்டர்கள் தங்குவதற்கு வீடும், பொறையாறில் ஒரு தோட்டமும் வாங்கினர். ஜெர்மனியிலிருந்து வந்த மறைத்தொண்டர்கள் மூவரும் தரங்கம்பாடிச் சமயப்பணியைக் கவனித்துக் கொண்டதால் சீகன்பால்கு வடக்கே சென்னை வரைக்கும் சென்று பணியாற்றினார்.[83]

80. சூ. இன்னாசி, **கிறிஸ்தவ இலக்கியச் சிந்தனைகள்**, ப. 6.
81. தயானந்தன் பிரான்சிஸ், **யாமறிந்த நூல்களிலே**, ப. 93.
82. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை**, ப. 178.
83. **மேலது**, ப. 178.

தரங்கம்பாடித் திருச்சபைக்குப் பல வழிகளில் உதவி கிடைத்தது. (இதன் விளக்கம் 'நூல்களுக்கான பின்புலங்கள்' என்னும் இயலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.) இப்பணத்தின் உதவியால் செய்த பணிகள் வளர்ச்சியடைந்த வண்ணம் இருந்தன. ஜெர்மனி நாடு மறைத்தொண்டர்களை அனுப்பியும், இங்கிலாந்து பொருள் உதவி செய்தும், டென்மார்க் நிர்வாகத்தைக் கவனித்தும் வந்த காரணத்தால் திருச்சபை நிலையான அமைப்புடன் மேலும் வளர்ந்தது. இந்நிலையில் சீகன்பால்கு இறந்தார் (1719). அப்போது தரங்கம்பாடித் திருச்சபையில் 355 பேர்கள் திருமுழுக்குப் பெற்ற கிறித்தவர்களாக இருந்தனர். இவருக்குப் பிறகு பெஞ்சமின் ஸ்கல்ட்ஸ் தலைமைப் பொறுப்பேற்றார் (1719).[84]

பெஞ்சமின் ஸ்கல்ட்ஸ்

சீகன்பால்கு மொழி பெயர்க்காது விட்டுச் சென்ற பழைய ஏற்பாட்டுப் பகுதியை மொழி பெயர்த்தவர் பெஞ்சமின் ஸ்கல்ட்ஸ் ஆவார். பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுடன் கிராமப்புறம் சென்றார். அங்கு முதலில் பாட்டுப்பாடிக் கூட்டம் கூட்டினார். கூடிய மக்களுடன் உரையாடினார். தரங்கம்பாடி மறைத்தொண்டர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். சீகன்பால்கு புதிய எருசலேம் ஆலயம் (1707) கட்டிச் சென்றார். பெஞ்சமின் மக்களைக் கிறித்தவ நெறியில் பேணி வளர்க்கக் கோயில் மட்டும் போதாது நல்ல ஆசிரியர்களும் வேண்டும் என்று கிறித்தவ ஆசிரியர்களுக்கும் வேதியர்களுக்கும் தனிப்பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். பெஞ்சமின் சென்னைக்குச் சென்ற பிறகு (1725) தரங்கம்பாடியின் பொறுப்பை வால்த்தர் ஏற்றார்.

வால்த்தர்

இவர் காலத்தில்தான் தஞ்சைப் பகுதியில் பஞ்சம் ஏற்பட்டது. இப்பஞ்சத்தில் உணவின்றித் தவித்த மக்களுக்கு லுத்தரன் சபையார் உணவு, பணம், பொருள் முதலானவற்றைக் கொடுத்து உதவினர். (இப்பணியின் விளக்கம் திருச்சபைகளுக்கிடையேயான முரண்பாடுகள் என்னும் இயலில் விளக்கப்பட்டுள்ளது.) இக்காலகட்டத்தில் வறுமையால் வாடிய கிறித்தவ மக்களில் பலரும் வேதியர்களில் சிலரும் லுத்தரன் சபையில் சேர்ந்தனர்.

---

84. விமலா மனுவேல், **இந்தியத் திருச்சபைத் தொண்டர் முதல் பாகம்**, ப. 85.

அப்போது தஞ்சைப் பகுதியில் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் ஆற்றிய தமிழ் கலந்த சமயப்பணி சிறந்தபணி. உன்னதப்பணி. இந்த உன்னதப்பணிதான் தமிழ் உரைநடையை உலகிற்கு அறிமுகப்படுத்தியது. அந்த உரைநடையைத் தந்தவர் பெஸ்கி.

கொஸ்தான்ஸோ ஜொஜேஃபோ எவுசேபியோ பெஸ்கி (வீரமாமுனிவர்)

பிறப்பு

பெஸ்கி, வட இத்தாலியின் வெனிஸ் மாநிலத்தில் மாந்துவா (Montova) மாவட்டத்தில் 'காஸ்தில்யோனே தெல்ல ஸ்திவ்யேரே' (Costigllone delle stiviere) என்னும் ஊரில் பிறந்தார் (8-11-1680).[85] அவருக்கு 'கொஸ்தான்ஸோ ஜொஜேஃபோ எவுசேபியோ பெஸ்தி' (Castanzo Gioseffo Eusebio Beschi) என்று பெயரிட்டனர் (13-11-1680).[86] பிற்காலத்தில் இப்பெயரே கான்தான்சியுஸ் ஜோசப் பெஸ்கி என்று வழங்கப்பட்டது. ஜொஜேஃபோ என்ற பெயர் திருமுழுக்குப் பதிவேட்டில் மட்டுமே உள்ளது.[87] இந்த பெஸ்கி பள்ளிக் கல்வியை முடித்து இயேசு ஏசைக் குருமடத்தில் சேர்ந்து சமயக்கல்வி கற்றார்.

இளமைக் காலம்

"21-10-1698	-	அன்று நொவெல்லாராவிலுள்ள இயேசு சபைப் புதுமுகத் துறவு இல்லத்தில் சேர்ந்தார் (வயது 18)
1700 செப்டம்பர் முதல்		
1701 வரை	-	ரவென்னா நகரில் தொடக்கநிலை ஆசிரியராகப் பணி புரிந்தார்.
1701 - 1703	-	பொலோஞா நகரில் மெய்யியல் பயின்றார்.
1703 - 1706	-	நடுநிலை, உயர்நிலை வகுப்புகளுக்கு இலக்கண இலக்கியம் கற்பித்து வந்தார்.

85. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 4.
86. **மேலது**, ப. 6.
87. **மேலது**, ப. 6.

1706 - 1710 - சமயக் கல்வி பயின்றார்.

1709 - குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்"[88]

பெஸ்கி குரு மடத்தில் படிக்கும்போது மதுரைத் திருச்சபையில் பணியாற்றிய இயேசு சபைத் தொண்டர் 'பிரான்சிஸ் லய்னெய்' என்பவர் குருமடத்திற்கு வந்து (1706) இறையியல் மாணவர்களான இளைஞர்களைத் தாம் பணியாற்றும் மதுரைத் திருச்சபையில் பணி செய்ய வருமாறு அழைப்பு விடுத்தார்.[89] அப்போதே பெஸ்கி மதுரைத் திருச்சபையில் பணியாற்ற விருப்பங் கொண்டார். இந்த விருப்பத்தைக் குருவானவுடன் தம் சபைத் தலைவரிடம் தெரிவித்தார். தலைவரும் அனுமதியளித்துப் பெஸ்கியை மதுரைத் திருச்சபைக்கு அனுப்பி வைத்தார் (1710).[90] அங்குப் பொறுப்பேற்ற பெஸ்கி (8-5-1711) உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவராகிய 'மிக்கேல் ஆஞ்சலோ தாம்புரீனி' அடிகளாருக்குத் திருச்சி அருகிலுள்ள ஆவூரிலிருந்து மடல் எழுதினார். அக்கடிதம் வருமாறு :

"இயேசு கிறிஸ்துவில் வணக்கத்துக்குரிய தந்தை அவர்களே!

நான் விரும்பி எதிர்பார்த்திருந்த மறைப்பணிக் களத்திற்கு வந்து சேர்ந்துவிட்ட நிலையில் தங்களுக்கு அளப்பரிய நன்றி கூறுதல் என் கடமையென உணர்கிறேன்.

இம்மறை மாநிலத்தை அடைந்தபோது சபைத் தலைவர்களிடம் மறைப்பணிக் களத்தில் நான் சேர்வதற்காகத் தாங்கள் கொடுத்தனுப்பிய கடிதத்தைக் காட்டியதும் அம்மறைப்பணிக் களத்துக்காக என்னை ஆயத்தம் செய்து கொள்ளுமாறு அவர்கள் ஆணை பிறப்பித்தனர். மே திங்கள் 8ஆம் நாள் மாட்சிமிக்க புனித மெக்கேலின் திருவிழாவன்று நான் மறைப்பணிக்களத்தை அடைந்தேன். இந்நாட்டுக்கு வந்துற்றதைப் பற்றி நான் அடையும் மகிழ்ச்சியைக் கடவுள் ஒருவரே அறிவார். ஐரோப்பிய வாழ்க்கை முறையைவிட மிகவும் வேறுபட்டுள்ள இவ்வாழ்க்கை முறையை என் உடல் எளிதில் ஏற்றுக் கொண்டு விட்டது. இம்

88. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப.10.
89. **மேலது**, ப.11.
90. **மேலது**, ப.12.

மறைப்பணிக் களத்தில் கடந்த ஆறு மாதங்களாக வாழ்ந்து வரும் என் உடல் நலம் நன்றாகவே உள்ளது. என் பாவங்கள் காரணமாக நான் இங்கு வாழத் தகுதி அற்றவனாகிவிடாமல் கடவுள் அருள் புரிய வேண்டும். ஒரு தந்தையைப் போல என்மீது அன்பு பொழிந்து வரும் தங்கள் ஆசியை நாடுகின்றேன். அதனால் நான் இறக்கும் வரையில் சபையின் உண்மையான மகனாக வாழவும், எப்போதும் எதிலும் கடவுளின் காட்சியையும் மனிதரின் மீட்பையும் மனதில் கொண்டு உழைக்கவும் தகுதி பெறுவேனாக.

ஆவூர் 4-11-1711"[91]

இவ்வாறு தலைவருக்கு நன்றி கூறிய பின்னர்த் தமிழ் மரபுக்கு ஏற்பத் தன்னை மாற்றி வாழத் தொடங்கினார்.

தமிழராக மாற்றம்

சமயத் தொண்டராகிய பெஸ்கிக்கு முன்னர்த் தமிழகத்தில் பணியாற்றிய சமயத் தொண்டர்கள்

புட்டாரி	(Buttari)	-	பெரிய பரஞ்சோதிநாதர்
பவுக்கட்டு	(Bouchet)	-	பெரிய சஞ்சீவிநாதர்
தேநொபிலி	(De Nobili)	-	தத்துவ போதகர்
டி பிரிட்டோ	(De Britto)	-	அருளானந்தர்

என்று தங்கள் பெயர்களைத் தமிழ்ப்படுத்திக் கொண்டனர். அவர்களைப் போலவே பெஸ்கியும் 'கான்ஸ்தாந்தியுஸ்' என்ற பெயரைத் 'தைரியநாதர்' எனத் தமிழ்ப் படுத்திக் கொண்டார்.[92] இப்பெயரே பிற்காலத்தில் வீரமாமுனிவர் என்று வழங்கியது. பெயரை மாற்றம் செய்தது போலவே வாழ்க்கை முறையிலும் தமிழ் நாட்டுச் சமயவாதிகளைப் போல மாற்றம் செய்து கொண்டார்.

"ஒருநாளைக்கு ஒருவேளை உணவு

---

91. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப.13.
92. **மேலது**, ப.17.

இருக்கைகள் ஏதுமின்றித் தரையில் அமர்தல்

காவி உடை - இடுப்பில் வேட்டியும் மேலே அங்கி போன்ற உடையும் தலைப்பாகையும் அதன் மேலே துண்டும் அணிந்திருத்தல்

பயணத்தின் போது பித்தளைப் பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துச் செல்லுதல்

காலில் மரத்தால் செய்யப்பட்ட பாதக்குறடு"[93]

இவ்வாறு தமிழராகத் தன்னை மாற்றிக் கொண்ட வீரமாமுனிவர் விருத்தாச்சலம் அருகிலுள்ள கோனான் குப்பம் என்ற ஊரில் இருக்கும் தேவ அன்னையின் உருவத்தைத் தமிழ்நாட்டுப் பெண் போலச் சித்திரித்து வைத்தார். தேவ அன்னைக்குப் 'பெரியநாயகி' என்ற தமிழ்ப் பெயரையும் சூட்டி மகிழ்ந்தார்.[94] இவ்வாறு தன்னையும் தன்னால் வணங்கத்தக்க தேவ அன்னையின் உருவத்தையும் தமிழ் மரபுக்கேற்ப மாற்றிய முனிவர் மதுரைத் திருச்சபைக்குச் செய்த பணிகளைச்

செயல்முறைப் பணி

எழுத்துப் பணி

என இருவகைப்படுத்தி அறியலாம்.

செயல்முறைப் பணி

உயிர் கொடுக்கத் துணிதல்

கோயிலில் திருவிழாக் கொண்டாடுதல்

அரசு உயர் அலுவலரின் ஆதரவைப் பெறுதல்

வேதியர்களை உருவாக்கல்

என நான்கு வகைப்படுத்திக் காணலாம்.

---

93. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 17.
94. ப. ச. ஏசுதாசன், **தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் சைவ வைணவ இலக்கியத் தாக்கம்**, ப. 14.

உயிர் கொடுக்கத் துணிதல்

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குருக்கள்பட்டியில் (இன்று அந்த ஊர் அழிந்துவிட்டது) முனிவர் பணியாற்றிய காலத்தில் (1713-1715) ஒருவன் கிறித்துவர்களிடம் கிறித்தவனைப் போலவும், இசுலாமியர்களிடம் இசுலாமியனைப் போலவும் நடித்து அவர்களை ஏமாற்றிப் பிழைத்து வந்தான். வீரமாமுனிவரின் உபதேசி அவனைப் பற்றிய உண்மையை அறிந்தபோது, அவனைக் கட்டி வைத்து அடிக்க, அவன் வீரமாமுனிவரிடம் முறையிட அவரும் குருக்கள்பட்டிக் கிறித்தவ மக்களும் வழக்கை விசாரித்து அவனுக்கு ஆறுதல் கூறி நன்கொடையும் கொடுத்து அவனை விடுவித்தனர்.

ஆனால் அவன் குருக்கள்பட்டிக்கு அருகில் மதுரைப் படையினர் பாசறை அமைத்துத் தங்கியிருந்த ஆலங்குலத்திற்குச் சென்று அங்குள்ள இசுலாமிய வீரர்களிடம் தான் ஒரு இசுலாமியன் என்றும் என்னைக் குருக்கள்பட்டி முனிவரும் வேதியர்களும் துன்புறுத்தினர் என்றும் கூறினான்.[95] படைவீரர்கள் அவனுக்கு ஆறுதலாகப் படைத்தலைவரிடம் கிறித்தவர்களுக்குத் தண்டனை வழங்குமாறு வற்புறுத்தினர். படைத்தலைவன் பேராசை பிடித்தவன் என்பதை அறிந்த அடிபட்டவன் முனிவர் பொற்குவியலைப் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறினான். அதனால் படைத்தலைவன் தீர விசாரியாமல் முனிவர்களையும் வேதியர்களையும் கைது செய்து, பொற்குவியலைக் கொள்ளையிடுமாறு ஆணையிட்டான். ஆணையைக் கேட்ட வீரர்கள் கிறித்தவர்களைத் தாக்கி முனிவரையும் வேதியர்களையும் (சவுரியடியான், ஞானேந்திரன்) கைது செய்தனர்.[96] அப்போது முனிவர் வீரர்களை நோக்கி,

> "உலகிலிருந்து ஒதுங்கி வாழும் என்னைச் சிறைப்பிடிக்க இத்தனை பேர் வரவேண்டியதில்லையே. படைத்தலைவர் சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே"[97]

என்று பதில் கூறினார்.

---

95. பா. வளனரசு, **தேம்பாவணித் திறன்**, ப. 5.
96. **மேலது**, ப. 5.
97. சிரில் ப்ரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை**, ப.

படைவீரர்கள் கொள்ளையடித்த பொற்குவியலையும் (தங்கமுலாம் பூசப்பட்ட சுருபங்கள்) கைது செய்தவர்களையும், படைத்தலைவரிடம் ஒப்படைத்தனர். பொற்குவியல் கிடைக்காமையாலும் முனிவர் தம் சமயம் பற்றிப் பேசியமையாலும் வெகுண்ட படைத்தலைவர் கைதானவர்களைக் கொல்லுமாறு ஆணையிட்டார். முனிவருக்குக் கிடைத்த தண்டனையை அறிந்த கிறித்தவ மக்கள் அவ்வூரில் செல்வாக்குடன் வாழ்ந்த கிறித்தவப் பெரியவர்களிடம் தெரிவித்தனர்.

மறுநாள் காலையில் முனிவரின் அங்கியைக் களைந்து, அரையாடையுடன் நிறுத்திய வீரர்கள், அவரைக் கயிற்றால் அடிக்கவும், சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்லவும் தயாராயினர். அப்போது அவ்வூர் கிறித்தவப் பெரியவர்களின் தலையீட்டால் எல்லோரும் விடுதலையானார்கள். ஆனால் வீரமாமுனிவரோ தம் திருச்சபைக்காக உயிரைக் கொடுக்கும் வாய்ப்பு நழுவியமைக்காக வருந்தினார்.[98]

திருச்சபைக்காகத் தன உயிரைக் கொடுக்கத் துணிந்த இந்த நிகழ்ச்சியோடு ஏலாக்குறிச்சிக் கோயிலில் திருவிழா நடத்தி மக்களைக் கூட்டித் திருச்சபையை வளர்த்தார்.

திருவிழாக் கொண்டாடுதல்

தென் தமிழகத்தில் கத்தோலிக்கத் திருச்சபையார் ஏலாக்குறிச்சியிலும் லுத்தரன் சபையார் தரங்கம்பாடியிலுமாகத் திருச்சபை அமைத்துப் பணி செய்தனர். லுத்தரன் சபையாரின் பணிமுறைகளால் ஈர்க்கப்பட்ட கத்தோலிக்கர் சிலர் அவர்களின் திருச்சபையில் சேர்ந்தனர்.[99] இதனால் மனம் வருந்திய வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சிக் கோயிலில் குடிகொண்டுள்ள மரியன்னை (அடைக்கல அன்னை)யின் அருள் துணையை வேண்டினார்.[100] அத்துடன் தம் தமிழ் நாட்டுத் திருச்சபைத் தலைவராகிய மைலாப்பூர் ஆயருக்கும் மடல் எழுதினார்.

---

98. வீரமாமுனிவர் 12-1-1715இல் உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவருக்கு எழுதிய மடல். அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, பக். 34-36.
ஜோசப் சராய்வா அடிகள் 28-8-1715இல் எழுதிய 1714ஆம் ஆண்டு மடல்.
நோயல் லூயிஸ் தெ பூர்ஸே அடிகளார் பிரான்சு நாட்டுப் பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்த தெ சூதே அம்மையாருக்கு 28-1-1715இல் எழுதிய மடல்.
99. Fr. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 7.
100. இராஜமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 281.

ஆயர் அவர்களும் முனிவரின் வேண்டுதல்படி ஏலாக்குறிச்சித் திருச்சபை மக்களை, அடைக்கல அன்னையின் திருவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடும்படி மடல் எழுதினார். அம்மக்களும் அவ்வாறே கொண்டாடினர். அதன்பின்னர்க் கத்தோலிக்கர்கள் பெருந்திரளாகக் கோயிலுக்கு வந்தனர். கூட்டம் அதிகமாகவே அருகிலுள்ள கோயில்களில் பணியாற்றிய குருக்கள்களும் வந்து உதவி செய்தனர். திருவிழாக் கொண்டாடியதன் பலனாகக் கத்தோலிக்க மக்கள் தங்கள் திருச்சபையில் நிலைத்து நின்றனர்.[101] அரசு உயரலுவலர்களும் ஏலாக்குறிச்சிக்கு வந்து சென்றனர்.

அரசு உயரலுவலரின் ஆதரவு

ஏலாக்குறிச்சி மழவராயரின் (அரியலூர் குமார ரெங்கப்ப ஒப்பில்லாத மழவராயர் 1715-1750) ஆட்சிக்குட்பட்ட பகுதியில் இருந்தது. அவ்வூராரின் பசு ஒன்று வீரமாமுனிவர் கோயில் தோட்டத்தில் மேய்ந்தது தொடர்பான பிரச்சினையில் முனிவருக்கும் மழவராயருக்கும் உறவு ஏற்பட்டது (1731). அந்த உறவால் மழவராயர் ஏலாக்குறிச்சியில் வீரமாமுனிவரைச் சந்தித்து (1735) இரவு நெடுநேரம் உரையாடினார். அப்போது இருவரும் பெரும்பாலும் கத்தோலிக்கச் சமயத்தைப் பற்றியே பேசினர். பேச்சின் முடிவில் மழவராயர் வீரமாமுனிவருக்குப் பல அன்பளிப்புகளை வழங்கினார். அத்துடன் கோயிலும் குருக்கள் இல்லமும் அமைந்திருந்த இடத்தையும், அதனைச் சுற்றியுள்ள இடத்தையும் அங்குள்ள அடைக்கல அன்னை கோயிலுக்கு நன்கொடையாக வழங்கினார்[102] இதனைக் குறிக்கும் கல்வெட்டு இன்றும் கல்வெட்டு கோயிலில் உள்ளது. மழவராயரின் தொடர்பு வீரமாமுனிவருக்கு ஏற்பட்டதாலும் அவரின் உதவி கிடைத்ததாலும் ஏலாக்குறிச்சி திருச்சபை உறுதியானது. மேலும் அக்காலகட்டத்தில்தான் படைத்தலைவராக இருந்து திருச்சியை ஆட்சி புரிந்து வந்த சந்தாசாகிபின் நட்பும் கிடைத்தது.

சந்தாசாகிப் நட்பு

வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சியில் பணியாற்றியபோது திருச்சியை அடுத்த ஆவூர்த் திருச்சபையில் 'பெர்த்தோல்தி' அடிகள் பணியாற்றினார். அப்போது

101. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 65.
102. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 65.

திருச்சி, தஞ்சைப் பகுதியில் போர் நடைபெற்றது. மதுரை, மைசூர், தஞ்சை, ஆற்காட்டுப் படைவீரர்கள் ஆவூர்ப் பகுதியில் பாசறை அமைத்துத் தங்கியிருந்தனர்.[103] வீரமாமுனிவர் ஆவூரிலுள்ள பெர்த்தோல்தி சமயத் தொண்டரைக் காண வரும்போதெல்லாம் படைவீரர்களையும் சந்தித்துச் சென்றார்.

ஒருமுறை ஆற்காட்டுப் படைவீரர்களின் பாசறையிலுள்ள பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அவ்வூர் மக்கள்தான் இக்கொள்ளையை நடத்தியிருப்பார்கள் என்று நினைத்த அப் படைவீரர்கள் பெருந்திரளாக ஆவூருக்குள் புகுந்தனர். அப்போது அங்கிருந்த வீரமாமுனிவர் அவ்வீரர்களை அமைதிப்படுத்த முயன்றார். முயற்சியில் தோல்வியே ஏற்பட்டது. அதனால் அவ்வீரர்கள் வீரமாமுனிவரைத் தங்களுடன் அழைத்துச் சென்று வழக்கைப் படைத்தலைவராகிய சந்தாசாகிப்பிடம் ஒப்படைத்தனர். தலைவரின் தீர்ப்பு நியாயமாக இருந்தது. அதனால் வீரமாமுனிவர் சந்தாசாகிப்பைச் சந்தித்து நன்றி கூறினார் (1732). அன்றிலிருந்து சந்தாசாகிப்பும் வீரமாமுனிவரும் நட்புறவுடன் வாழ்ந்தனர்.[104] இந்த நட்பின் அடிப்படையில் இயேசு சபையினருக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது அவர்களின் திருச்சபைக்குச் சந்தாசாகிபு 350 பொற்காசுகளை நன்கொடையாக வழங்கினார். சந்தா சாகிபு திருச்சியை ஆட்சி செய்த வரையிலும் (1742) முனிவரும் அவர்தம் திருச்சபை மக்களும் பாதுகாப்பாக இருந்து வாழ்ந்தனர்.[105] திருச்சபையும் வளர்ந்தது. திருச்சபையை மென்மேலும் வளர்க்க வேதியர்களை உருவாக்கினார்.

வேதியர்களை உருவாக்கல்

ஐரோப்பிய நாட்டுத் துறவிகள் தமிழகத்தில் சமயத் தொண்டாற்றித் தங்கள் திருச்சபையைப் பரப்பினர். இவர்கள் எல்லோரும் தமிழ் மொழியை நன்கறியாததால் மக்களுடன் இரண்டறக் கலந்து தம் பணியைச் செய்ய இயலாமல் வருந்தினர். அதனால் தமிழ் மக்களுக்குச் சமயக் கொள்கைகளை எடுத்துக்கூற, தமிழ் மொழி தெரிந்த இல்லறத்தார்களைத் தமக்கு

103. K. R. Venkatarama Iyyar, **A Manual of the Pudukkottai State**, p. 97.
104. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 87.
105. **மேலது**, ப. 81.

உதவியாளர்களாக வைத்துக் கொண்டனர். தமிழ்நாட்டில் சமற்கிருத வேதங்களை ஓதும் பார்ப்பனர்கள் வேதியர் எனப்பட்டனர். அவர்களைப் பின்பற்றியே வீரமாமுனிவரும் குருக்களுக்கு வேதகாரியங்களில் உதவி செய்பவர்களை வேதியர் எனப் பெயரிட்டு அழைத்தார். இவ் வேதியர்கள் முன்னர் உபதேசிகள் என அழைக்கப் பெற்றவர்கள் ஆவர்.[106]

தமக்கு முன் வாழ்ந்த சமயத் தொண்டர்கள் வேதியர்களுக்கென்று தனியாகப் பயிற்சி அளிக்கவில்லை என்பதை அறிந்த வீரமாமுனிவர் ஓரளவு கல்வியறிவு உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளித்தார்.[107] அந்தப் பயிற்சிப் பள்ளிக்குத் தாமே ஆசிரியராகவும் முதல்வராகவும் இருந்து அதனை ஏலாக்குறிச்சியில் நடத்தினார் (1731). பயிற்சி பெற்ற வேதியர்களின் உதவியால் திருச்சபைப் பணிகளைச் செம்மையாகச் செய்தார். அவர்களுக்காக 'வேதியர் ஒழுக்கம்' என்ற நூலையும் எழுதினார்.[108] அது மாற்றார் போற்றும் சிறப்பைப் பெற்றது. இவ்வாறு தமிழ் மக்களுக்குச் சமயக் கொள்கைகளைத் தமிழ் மொழியில் தெளிவாக எடுத்துக்கூற வீரமாமுனிவர் எடுத்துக் கொண்ட அம்முயற்சி திருச்சபையை வளர்ப்பதற்கும், உறுதிப்படுத்துவதற்குமான முயற்சியேயாகும். இவ்வாறு செயல் முறைகளில் செய்த பணிகளைப் போல் எழுத்து வகையிலும் ஒப்பற்ற பணிகளைச் செய்தார்.

எழுத்துப் பணி

. தமிழ் மொழி வரலாற்றில் வீரமாமுனிவரின் எழுத்துப் பணி போற்றுதற்குரிய ஒன்றாகும். ஐரோப்பிய நாட்டிலிருந்து தமிழகம் வந்து தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத இவர் தமிழ் மொழியைப் பயின்று அம்மொழியில் நூல்கள் இயற்றுமளவுக்குச் சிறந்து விளங்கினார் என்பது மலைப்புக்குரிய செய்தி. அதுவும் சமயப் பணி ஆற்றுவதற்காகக் குறித்த இடத்தில் தங்காமல், அங்குமிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்த இவர் தமிழைப் பயிலவும், தமிழில் நூல்கள் இயற்றவும், எவ்வாறு நேரம் கிடைத்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள இயலவில்லை. தாம் பழகியிருந்த தட்பவெட்பநிலைக்கு மாறாகச்

---

106. வி. மி. ஞானப்பிரகாசம் 27-04-94இல் கொடைக்கானலில் நடந்த கருத்தரங்கில் கூறியது.
107. வீரமாமுனிவர், **வேதியர் ஒழுக்கம்**, ப. 30.
108. வீரமாமுனிவர், **வேதியர் ஒழுக்கம்**, முகவுரை.

சுட்டெரிக்கும் வெயில் - முற்றிலும் மாறுபட்ட உணவுப்பழக்கம் - அதிலும் மேலை நாட்டவரின் புலாலுணவுப் பழக்கத்தை விட்டொழித்த மரக்கறி உணவு - சைவத் துறவி போல உடையணிந்து வாழும் வழக்கம் - இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, எப்படித்தான் இவரால் தமிழகத்தில் வாழமுடிந்தது? பல்வேறு பணிகளுக்கிடையில் நேரமில்லாமல் தவித்த நிலையிலும் தமிழைப் பயின்று நூல்களை எவ்வாறு இயற்ற முடிந்தது? என்னும் வினாக்கள் எழுகின்றன. இவ்வினாக்களுக்கு விடை காண்பது எளிதல்ல. ஆனால் இவர் தமிழைக் கற்றார் என்பதும், தமிழ் நூல்கள் இயற்றி இறவாப் புகழ் பெற்றார் என்பதும் வரலாறு காட்டும் உண்மை. தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப் பயின்றவர் வீரமாமுனிவர். இதை,

> "அகத்தியம் தொல்காப்பியம் நன்னூல் இருபொருள் காரிகை அலங்காரம் மற்ற இலக்கணங்களும் உட்சமயம் புறச்சமயம் பதினெண் புராணங்கள் தலபுராணங்கள் - அறுபத்துநாலு கலைக்கியான தத்துவங்கள் - தொண்ணூற்றாறு - ஈரடிப்பயனே நாலடிப்பயனே சிந்தாமணி சிலப்பதிகாரம் பாரதம் இராமாயணம் மற்ற இலக்கியங்களும் தரங்கம்பாடியார் வாசித்து ஆராய்ந்து பார்த்திருப்பார்களோ"[109]

என்ற அவருடைய எழுத்தே மெய்ப்பிக்கிறது. லுத்தரன் சபையார் விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது தவறுகள் ஏற்பட்டதால் இந்நூல்களை எல்லாம் அவர்கள் படித்து அறிந்திருக்கிறார்களா என்று வீரமாமுனிவர் கேட்கிறார். இவர் கூற்றில் காணப்படும் அகத்தியம் என்ற (இலக்கண) நூல் இன்று இல்லை. ஆயின் அவர் வாழ்ந்த காலத்தில் இந்நூல் இருந்ததா என்பது ஆய்வுக்குரியது.

வீரமாமுனிவர் தொல்காப்பியம் படித்துள்ளார். இவருக்குப் பின்வந்த ஜி. யூ. போப், கால்டுவெல் முதலானோர் தொல்காப்பியம் படித்ததாகத் தெரியவில்லை.[110] வீரமாமுனிவர் மேலே கூறிய நூல்களை எல்லாம் நன்கு கற்றதால்தான்

---

109. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 238.
110. க. ப. அறவாணன் 05-01-1994இல் தூய வளனார் கல்லூரி (திருச்சி) வீரமாமுனிவர் கருத்தரங்கில் கூறியது.

செய்யுள்

உரைநடை

அகராதி

இலக்கணம்

உரைகள்

பஞ்சாங்கம்

மொழிபெயர்ப்பு

முதலான துறைகளில் நூல்கள் எழுத முடிந்தது எனலாம். அவற்றுள் அவர் எழுதிய காப்பியமாகிய (செய்யுள்) தேம்பாவணியே அவரை உலகப் புகழ் பெறச் செய்தது. காப்பிய நூலைப் போலவே மற்றச் செய்யுள் நூல்களும் போற்றப்படுகின்றன.

செய்யுள்

தேம்பாவணி

அன்னை அழுங்கல் அந்தாதி

திருக்காவலூர்க் கலம்பகம்

கித்தேரியம்மாள் அம்மானை

அடைக்கலமாலை

வெண்கலிப்பா

கருணாம்பரப் பதிகம்

வண்ணம்

தனிப்பாடல்கள்

முதலான செய்யுள் நூல்களோடு அகராதிகளையும் தொகுத்துள்ளார்.[111]

அகராதி

சதுரகராதி

தமிழ் - இலத்தின் அகராதி

போர்த்துக்கீசியம் - இலத்தின் - தமிழ் அகராதி

தமிழ் - பிரெஞ்சு அகராதி

பிரெஞ்சு - தமிழ் அகராதி

---

111. இராஜமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 66.

முதலானவற்றோடு இலக்கண நூல்களையும் எழுதினார்.

இலக்கண நூல்கள்

கொடுந்தமிழ்	-	இலத்தின் மொழி
செந்தமிழ்	-	இலத்தின் மொழி
கிளாவிஸ்	-	இலத்தின் மொழி
தொன்னூல்	-	தமிழ் மொழி[112]

முதலான இலக்கண நூல்களோடு தாம் எழுதிய நூல்களுக்கு உரையும் எழுதினார்.

உரைகள்

நம் நாட்டில் பழங்காலத்தில் செந்தமிழில் எழுதிய காவியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் பிற்காலத்தில் அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், சேனாவரையர், மணக்குடவர், பரிமேலழகர் முதலியோர் உரை எழுதி மூலநூலின் கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கின்றனர். ஆனால் கவிதை இயற்றிய புலவரே பழங்காலத்தில் உரை எழுதியதாகத் தெரியவில்லை. வீரமாமுனிவர் தாம் இயற்றிய தேம்பாவணிக்கும், தொன்னூல் விளக்கத்துக்கும் தாமே உரை எழுதியிருக்கிறார்.[113]

திருக்குறளை மேலை நாட்டார் உணருமாறு, அதை முழுவதும் மேல் நாட்டு எழுத்தில் (இலத்தீனில்) எழுதி, அதை மொழி பெயர்த்து விளக்கம் தந்ததோடு, பதவுரையும் இலக்கணமும் தந்திருக்கிறார். அவர் துறவறத்தைக் கடைப்பிடித்ததால், காமத்துப்பாலை மொழி பெயர்ப்பதில் சிக்கல் இருப்பது கண்டு, அதை மட்டும் விட்டுவிட்டார். இதோடு மனநிறைவு கொள்ளாது தமிழ் நாட்டுப் பொது மக்களும் திருக்குறளைப் படித்துப் பயனடையுமாறு தாம் விரும்பிய 208 குறள்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு விளக்கம் கூறியிருக்கிறார்.[114] சென்னைப் பல்கலைக்கழகக் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை அண்மையில் இந்நூலை வெளியிட்டுள்ளது. உரை எழுதியதோடு பஞ்சாங்க நூல்களும் எழுதியுள்ளார்.

112. சூ. இன்னாசி, **சதுரகராதி ஆராய்ச்சி**, ப. 22.
113. இராஜமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 319.
114. **மேலது**, ப. 319.

பஞ்சாங்கம்

தமிழ் நாட்டுக்கு வருவதற்கு முன்பே வீரமாமுனிவருக்கு வானநூல் மீது ஈடுபாடு இருந்ததாகத் தெரிகிறது. இந்தியாவிற்கு வந்த பின்னர், தொட்டதற்கெல்லாம் இந்திய மக்கள் நாளும் நட்சத்திரமும் பார்ப்பதுமன்றிப் பஞ்சாங்கத்தை நோக்காது எந்தச் செயலையும் செய்வதில்லை என்பதைக் கண்டார். ஆகவே மக்களோடு உறவாடவும் அவர்கள் போக்கைக் கண்டுபிடிக்கவும் பஞ்சாங்கத்தை நன்கு கற்க வேண்டும் என்றுணர்ந்தார். பஞ்சாங்கம் கணிப்போரை அணுகினார். அவர்கள் நடைமுறைக் குறிப்புகளைக் கூறினரேயன்றி அதற்குரிய உண்மைக் காரணத்தை அவர்களால் விளக்கத் தெரியவில்லை. ஆகவே அவற்றைத் தாம் ஆய்ந்து தெளிந்து கொண்டதை வைத்து 'இந்திய ஆண்டுகளும் மாதங்களும்' என்ற தலைப்பில் சிறிய நூலை இலத்தினில் எழுதினார்.[115] இன்றுவரை அது கிடைக்கப் பெறவில்லை. அதைத் திருத்திச் செப்பனிட்டுத் 'தமிழர் ஆண்டுகளும் மாதங்களும்' என்ற தலைப்பில் தாம் தொகுத்த தமிழ் - இலத்தின் அகராதியின் மூன்றாம் இணைப்பாக 1744இல் வெளியிட்டார்.[116] பஞ்சாங்கம் இயற்றியதோடு நில்லாமல் மொழிபெயர்ப்புப் பணியையும் செய்தார்.

மொழிபெயர்ப்பு

தமிழ் - இலத்தின் : வீரமாமுனிவருக்குத் திருக்குறள்மீது தனிப்பட்ட ஈடுபாடிருந்தது. தாம் துறவு பூண்டமையால் காமத்துப்பாலை விட்டுவிட்டு, அறம் பொருள் என்ற மீதி இரண்டு பாகங்களையும் இலத்தினில் மொழி பெயர்த்திருக்கிறார். பரமார்த்த குருவின் கதையை இலத்தினில் மொழி பெயர்த்து ஒருபுறம் தமிழும் மறுபுறம் இலத்தீனுமாக வெளியிட்டதோடு இலத்தினில் ஒரு முன்னுரையும் எழுதினார்.[117] இத்துடன் 'வாமன் சரித்திரம்', இலக்கணங்களில் வரும் மேற்கோள் முதலானவற்றையும் இலத்தினில் மொழி பெயர்த்திருக்கிறார்.

புதிய ஏற்பாடு காட்சியாகமத்தில் உள்ள ஒருபகுதியை (9.1:2) மொழி பெயர்த்து 'லுத்தேர் இனத்தார் இயல்பு' என்னும் நூலுக்குப்

115. **மேலது**, ப. 335.
116. இராஜமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 335.
117. வீரமாமுனிவர், **பரமார்த்த குரு கதை**, முன்னுரை.

பயன்படுத்தியுள்ளார். அதை அந்நூலின் தொடக்கத்தில அகவல்பாவாகவும் எழுதியுள்ளார்.

"மீத்திசை நின்றுகீழ் வீழ்ந்த வொளிமீன்
றீத்திசை வாயிற் றிறக்குங் கோல்வாங்கி
யத்திசைத் திறந்துளி யாதவன் முகமுத
லெத்திசை வெளியெலா மிருபடப் புகையெழீஇ
யெழீஇயின புகையினின் றெண்ணற முளைத்துக்
குழீஇயின பதங்கள் குழாங்கொடு மொய்ப்பன
மானிடர் முகத்தொடு மாதர் குழலொடுங்
கானிடை வளரரிக் கடையெயிற் றூர்வுளீஇத்
தேளுடை நஞ்சிற் றீயன கணையொடு
வாளுடை முனையின் வாய்ப்பன வாலுறீஇக்
கரும்பொற் சுரிகை கடிய மார்பணிய
வரும்பொற் சுடிகை யணியொடு தோன்றிக்
காய்மா பகைமுதிர் கடும்படை முகத்துப்
பாய்மாப் பரப்பெனப் பகைத்து நிற்பன
போர்முகத் துயர்கெடப் புகைந்தெதிர் திரிதருந்
தேர்முகத் தொலியொடு சிறகர் புடைப்பன
வெப்படை சிதைத்தோன் வெந்திசை யரச
னிப்படை மிசையாங் கிறைவனென் றெழுமெனத்
தந்நுத லணியெனத் தற்பரன் குறியிலார்
துன்னுத லொழியச் சூழ்பகம் புன்முதற்
றீண்டா தெனப்பணி செய்த திறையோன்
றாண்டா நீதித் தகுதி யிதுவென"[118]

என்றெழுதிப் பிறகு ஒவ்வொன்றாக நூலில் விளக்குகிறார்.

திறேந்து விசுவாசப் பிரமாணம் : லுத்தர் கூறிய பேதகங்களுக்கு விடையாகத் திறேந்து நகரில் கூடிய கூட்டத்தில் விசுவாசப் பிரமாணம் எழுதி உறுதி

---

118. வீரமாமுனிவர், **லுத்தேரினத்தியல்பு**, பக். 7-8.

செய்யப்பட்டது. அந்த விசுவாசப் பிரமாணம் இலத்தீனில் இருந்தது. அதைத் தமிழாக்கி வேத விளக்கம் என்னும் நூலின் இறுதியில் தருகிறார். அதில் ஒரு பகுதி :

> "யேசு கிறிஸ்துவையும் எப்போதும் பரிசுத்த கன்னியாய் இருக்கிற தேவமாதா வையும் மற்ற புனிதர்களையும் காட்டுகிற சுருபங்களை வைத்துக் கொள்ளவும் அதற்கு உரியமுறையோடே அதுகளை வணங்கவும் நியாயமென்றுஞ் சந்தேகப்படாமல் உறுதியாய்ச் சொல்லுகிறேன். பலவகைப் பூரண பலன்களை உண்டாக்க யேசுநாதர் திருச்சபைக்கு வல்லமை தந்தார் என்றும் அப்படி உண்டாக்கப்பட்ட பலன்களாலே திருச்சபை [illegible] யாவர்க்கும் மிகவும் இலாபமாகும் என்று நிச்சயமாய்ச் சொல்கிறேன். பொதுவாய் நிற்கும் - அப்போஸ்தொலிக்கு உரோமான் திருச்சபை உலகமெங்கும் பரம்பின மற்ற திருச்சபைக்கெல்லாம் 'தாய்ச்சபை' என்றும் மற்ற யாவையும் படிப்பிக்குந் தலைச்சபையென்று நிச்சயித்து உறுதியாகச் சொல்கிறேன்"[119]

என்பதாகும். வீரமாமுனிவர் பல்வேறு துறைகளில் நூல்கள் எழுதியிருந்தாலும் உரைநடையில் அவர் இயற்றிய நூல்கள் எல்லாம் தமிழ் இலக்கிய உலகிற்குப் பெரும் கொடையாக இருக்கின்றன.


உரைநடை நூல்கள்

திருக்கடையூர் நிருபம்
பொது நிருபம்
வேதியர் ஒழுக்கம்
வேத விளக்கம்
பேதக மறுத்தல்
லுத்தேரினத்தியல்பு
வாமன் சரித்திரம்
பரமார்த்த குரு கதை

---

119. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 268.

இந்த உரைநடை நூல்களே ஆய்வுக்கு மேற்கொள்ளப்படுகின்றன. வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சியிலுள்ள கத்தோலிக்கத் திருச்சபையில் பணியாற்றியபோது அவரின் திருச்சபைக்கு உட்பட்ட பகுதிக்கு அருகிலுள்ள தரங்கம்பாடியில் லுத்தரன் சபையார் திருச்சபை அமைத்துப் பணி செய்தனர். அவர்களின் சமயத் தொண்டுகளினால் ஈர்க்கப்பட்ட மூர், வடுகர், நியோஃபட்ஸ் முதலான இனமக்கள் அவர்களின் சபையில் சேர்ந்தனர். அவர்களுள் கத்தோலிக்கரும் உள்ளடங்குவர். கத்தோலிக்கர்கள் லுத்தரன் சபையில் சேர்ந்ததால் இரு திருச்சபையார்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அந்த முரண்பாட்டின் விளைவால் நூல்கள் எழுதப்பட்டன. அந்நூல்களே உரைநடை இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. ஆதலால் அந்நூல்கள் எழுவதற்குரிய அடிப்படைக் காரணமாக இருக்கும் இரு திருச்சபையாளர் களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் அடுத்த இயலில் ஆராயப்படுகின்றன.



இயல் இரண்டு
திருச்சபைகளுக்கிடையேயான முரண்பாடுகள்

இயல் இரண்டு
திருச்சபைகளுக்கிடையேயான முரண்பாடுகள்

திருச்சபை

உலகின் பல பகுதிகளில் பல்வேறு சமயங்கள் தோன்றின. அவை தத்தம் கோட்பாடுகளுடன் உலகின் பல பகுதிகளிலும் பரவின. அவ்வாறு பரவிய சமயங்கள் பல, அந்தந்த நாடுகளில் பின்பற்றப்பட்டு வந்த மரபு வழியான கடவுள் நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றுடன் இரண்டறக் கலந்தன. அதனால் மண்ணுக்குரிய சமயங்கள் சொந்த மண்ணிலேயே தம் அடையாளங்களை இழந்தன. அதே வேளையில் கிறித்தவ சமயமோ அந்தந்த நாட்டு மக்களின் பண்பாட்டுக் கூறுகளாகவும் அடையாள வெளிப்பாடுகளாகவும் அமைந்து நிலைத்து நின்றது. ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவம் பெற்ற செல்வாக்கு இதனை உணர்த்தும். இவ்வாறு நாடு, இனம், மொழி ஆகிய எல்லைகளைக் கடந்து கிறித்தவம் பரவிய நிலையிலும் இதனுடைய தலைமையிடம் ரோம் நகரமாகவும், தலைமைப் பொறுப்பு போப்பிடமும் இருத்தல் மரபாக வந்திருக்கிறது. அந்தக் கிறித்தவம், எழுதப்பட்ட வேத வாக்கியமாகிய விவிலியத்தையும், எழுதப்படாத வேத வாக்கியமாகிய மரபுரிமைகளையும் அடிப்படைக் கோட்பாடுகளாகக் கொண்டு வளர்ந்தது.

இயேசுவின் சீடர்கள் (திருத்தூதர்கள்) பன்னிருவரும், பன்னிருவரின் சீடர்களும் இயேசு காட்டிய வழியைப் பின்பற்றி வாய்மொழியாக நற்செய்தியைப் போதித்தார்கள். ஆயினும் அவர்களில் மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர், சின்னப்பர் மற்றும் இராயப்பர் முதலானவர்கள் தேவ ஏவுதலால் தூண்டப்பட்டுச் சில நூல்களை எழுதினர்.[1] அவர்களால் எழுதப்பட்டுத் திருச்சபையால் ஒன்றுசேர்க்கப்பட்ட அந்த நூல்களின் தொகுதிதான் ‘புதிய ஏற்பாடு’ என்று

---

1. **விவிலியம், புதிய ஏற்பாடு**, *சின். 2 திமோ. 3 : 6.*

வழங்கப்படுகிறது. இந்தப் புதிய ஏற்பாடும் இயேசு பிறப்பதற்கு முன்னரே எழுதப்பட்ட 'பழைய ஏற்பாடு'ம் சேர்ந்த பெரிய தொகுதிதான் எழுதப்பட்ட வேதவாக்கியமாகிய 'விவிலியம்' என்று திருச்சபை ஏற்றுக்கொண்டது. திருத்தூதர்களால் வாய்மொழியாகப் போதிக்கப்பட்டவை களையும் திருச்சபை ஆதரித்து அவற்றையும் போற்றி வருகிறது. இதுவே எழுதப்படாத வேத வாக்கிய மரபுரிமையாகும்.[2]

எழுதப்படாத வேதவாக்கிய மரபுரிமைகளில் சில

1. திருச்சபை - காணப்படும் வரலாற்று நிறுவனம்
2. திருச்சபையின் காணப்படாத தலைவர் கிறிஸ்து. காணப்படும் தலைவர் போப்பு.
3. திருவருட்சாதனங்கள் வழியாகக் கடவுளை இம்மைப் பொருள்களில் சந்திக்கலாம். அதன் வழியாக இறையருளைப் பெறலாம்.
4. ஒருவர் நல்லவர் ஆவதற்கு விசுவாசமும் நற்செயலும் தேவை.
5. கிறிஸ்து கடவுளுக்கும், மக்களுக்கும் நடுவர். இவ்வுலகில் நல்லவர்களாக வாழ்ந்து இறந்து இயேசுவோடு இருக்கும் புனிதர்களால் மக்களுக்காக (நமக்காக)ப் பரிந்து பேசவியலும்.
6. கிறிஸ்துவின் தாய் கன்னி மரியாளுக்குச் சிறப்பு வணக்கம் செலுத்தலாம்.
7. உருவமற்ற கடவுள் கிறிஸ்துவாக உருவமெடுத்துப் பிறந்ததால் கடவுளுக்கு உருவம் வைத்து வழிபாடு செய்யலாம். புனிதர்களுக்கும், கன்னி மரியாளுக்கும் உருவங்கள் வைத்து வணக்கம் செலுத்தலாம்.
8. ஒருவர் இறந்ததும் முழு நல்லவராக இருந்தால் வான்வீடு செல்வார். முழுத்தீயவராக இருந்தால் நரகம் செல்வார். தன் பாவங்களுக்காகக் கழுவாய் செய்து முடிக்காதிருந்தால் உத்தரிக்கும் தலம் செல்வார்.[3]

---

2. ஜெகநாதர் சுவாமிகள், **திருச்சபை வரலாறு**, ப. 28.
3. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 380.

என்பனவாகும். இவ்வாறு எழுதப்படாத மரபுரிமைகளையும் விசுவாசக் கோட்பாடுகளாகக் கொண்டு திருச்சபை இயங்கி வருகின்றது. இவ்வியக்கம் சமய இறையாண்மை உருவாகி நிலைபெறவும் காரணமாயிற்று.

மேலே சுட்டியவாறு விவிலியத்தையும் மரபுரிமையையும் அடிப்படையாகக் கொண்ட கிறித்தவம் ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் பரவி நிலைபெற்றது. ஒவ்வொரு நாடும் தமக்குரிய இறையாண்மையோடு விளங்கினாலும் அந்நாடுகளில் பரவியிருந்த கிறித்துவத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அந்நாட்டு அரசுகளுக்கில்லை. அந்நாடுகளுக்கு அரசியல் இறையாண்மை (Political Sovereignty) இருந்ததே தவிரச் சமய இறையாண்மை (Religious Sovereignty) உரோமாபுரியிலுள்ள போப்பிடமே நிலைபெற்றது. இந்தச் சமய வாழ்க்கை, சமூக வாழ்க்கையாகத் தொடங்கிய ஆதி,

> "யேசுவை விசுவசித்த அத்தனை பேரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாயிருந்தார்கள். தங்கள் உடைமைகளை விற்று அவற்றைத் திருத்தூதர்களிடம் கொடுத்தார்கள். அந்த உடைமைகள்மீது ஒருவரும் உரிமை பாராட்டவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தன"[4]

அவற்றைத் திருத்தூதர்கள் விசுவாசிகளின் தேவைக்கு ஏற்றவாறு பகிர்ந்து கொடுத்தார்கள். இவ்வாறான பொது வாழ்க்கையில் திருத்தூதர்கள் தங்களுக்கு உதவியாளர்களாக எழுவரைச் சேர்த்திருந்தார்கள். அவர்களுள் முடியப்பர் என்பவரும் ஒருவர். இவர் அற்புதங்கள் நிகழ்த்திப் பலரைக் கிறித்தவராக்கினார். இவரின் செயல்முறைகளை விரும்பாத யூதர்கள் இவரை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று கல்லால் எறிந்து கொன்று போட்டார்கள் (கி. பி. 34).[5]

ஓரிடத்திலிருந்து போதனை செய்த திருத்தூதர்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டவுடன் உலகின் பல நாடுகளுக்கும் பிரிந்து சென்று ஆங்காங்கே போதித்தார்கள். இப்போதனையை விரும்பாத சிலர் திருத்தூதர்களான இராயப்பரைச் சிலுவையில் தலைகீழாக அறைந்தும்[6] (கி. பி. 54) சின்ன

---

4. **விவிலியம், புதிய ஏற்பாடு**, *அப். 2-44, 45.*
5. *ஜெகநாத சுவாமிகள்*, **திருச்சபை வரலாறு**, *ப. 14.*
6. **மேலது**, *ப. 14.*

யாகப்பரைக் கல்லால் எறிந்தும் கொன்றார்கள் (கி. பி. 62).[7] இவ்வாறே மற்ற திருத்தூதர்களும் கொல்லப்பட்டனர். திருச்சபை இவர்களை 'மறைசாட்சி' என்றழைக்கின்றது. இந்த மறைசாட்சிகளின் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட தொடக்கத் திருச்சபையில் (முதல் மூன்று நூற்றாண்டுகள்) திருச்சபையின் கோட்பாடுகளுக்கு எதிரான பேதகங்களும் (Heresy) வளரத் தொடங்கின.

இயேசுவின் தெய்வீகத் தன்மையை ஆரியுசும்[8], (3 நூற்றாண்டு) பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தை மசதோனியுசும்[9] மறுக்கத் திருச்சங்கங்கள் கூடி இப்பேதகங்களைக் கண்டனம் செய்தன. மறைவல்லுநர்கள் திருச்சபையின் பேதகங்களைப் போக்கி விசுவாசத்தைப் பாதுகாப்பதில் ஈடுபட்டனர். திருச்சபை மக்களில் சிலர் செப, தப, தியானத்தில் தங்கள் வாழ்நாட்களைச் செலவழித்துத் துறவற சபைகளை உருவாக்கினர். அவற்றில் கர்த்தூசியின் சபை, சிஸ்டெர்இயன் சபை, கார்மெல் சபை, அகஸ்தீனியன் சபை, பிரான்சிஸ்கன் சபை, தோமினிக்கன் சபை முதலானவை முக்கியமானவையாகும்.[10] இதே சமயத்தில் பூர்வீகத் துறவறச் சபைகளும் திருத்தம் பெறலாயின. இந்தத் துறவறச் சபைகள் திருச்சபை வளர்வதற்குப் பெரிதும் துணைநின்றன. திருச்சபை வளர்ந்த பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் திருச்சபை நிர்வாகம், வழிபாட்டு முறைகள், இறையியல் கோட்பாடுகள் ஆகியவற்றில் சீர்கேடுகள் இடம் பெறலாயின.

திருச்சபை நிர்வாகம்

திருச்சபை நிர்வாகப் பொருளியலில் சீர்கேடுகள் மலிந்தன. இதனை,

"நான்காவது சிக்ஸ்டஸ் (Sixtus 1483) என்னும் போப்பு அடகு வைத்திருந்த தமது மணிமுடியையும் நகைகளையும் (10,000 பொற்காசுகள் கடனிலிருந்து) மீட்க அவரது செயலர்கள் ஒவ்வொருவரும் 2600 பொற்காசுகள் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்"[11]

---

7. **மேலது**, ப. 20.
8. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 91.
9. **மேலது**, ப. 91.
10. ஜெகநாத சுவாமிகள், **திருச்சபை வரலாறு**, ப. 109.
11. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம் வரலாற்றில் கிறிஸ்தவம் தொகுதி 3**, ப. 77.

என்னும் வேதநாயகம் கூற்றால் அறியமுடிகிறது. மேலும் திருச்சபையில் <u>ஒரே ஆள், ஒரே நேரத்தில் பல பதவிகளை</u> ஏற்றுப் பணியாற்றினர் என்பதையும்,

> *"பிரான்ஸ் நாட்டவரான பெற்றூவில் என்னும் தலைமைப் பேராயர் ஒரே நேரத்தில் ஓர் இத்தாலிய மாநிலத்தின் பேராயராகவும் மற்றொரு மாநிலத்தின் தலைமைப் பேராயராகவும், பிரான்ஸ் நாட்டில் நான்கு துறவி மடங்களின் தலைவராகவும் பணியாற்றினார்"*[12]

என்ற கூற்று உறுதிப்படுத்துகின்றது. இம்முறையில் பதவிகள் ஒரே இடத்தில் குவிந்திருந்ததால் நிர்வாகத்தில் சீர்கேடுகள் மலிந்தன என்றும், தகுதியுள்ளவர்களுக்குப் பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை என்றும் கருதப்பட்டன. இத்துடன் <u>திருச்சபையின் செலவிற்கும் அடிக்கடி மக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டது</u> இதனை,

> *"திருச்சபை வருமானத்தில் பத்தில் ஒருபகுதி போப்புவின் ஊழியத்திற்காகச் செலவிடப்பட்டது. திருச்சபையின் தேவை, போர் போன்ற செலவுகளுக்காக எப்போதாவது சிறப்பு சேகரிப்பு நடக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே எப்போதாவது என்ற நிலைமாறித் தொடர்ந்து சேகரிப்பு நடந்து கொண்டே இருந்தது"*[13]

என்னும் கூற்றால் அறியமுடிகிறது. இவ்வாறு நிர்வாகத்தில் சீர்கேடுகள் நடந்ததோடு அவை வழிபாட்டு முறைகளிலும் இடம்பெறத் தொடங்கின.

வழிபாட்டு முறை

இறைவனின் ஏவுதலாய் எழுதப்பட்ட விவிலியத்தைப் படிக்க மக்கள் ஆர்வம் கொண்டனர். ஆனால்,

> "போப்புகளும் பேராயர்களும் ஆயர்களும் மட்டுமே விவிலிய மறையைப் படிக்கவும் போதிக்கவும் உரிமை பெற்றிருந்தார்கள்"[14]

---

12. **மேலது**, ப. 82.
13. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 78.
14. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 28.

அதனால் மக்களுக்கு விவிலியத்தைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் தடைப்பட்டது. மேலும்,

> "மக்கள் அறியாத லத்தீன் மொழியில் வழிபாடுகள் நடைபெற்றன"[15]

ஆதலால் மக்கள் வழிபாடுகளின் பொருள் புரியாமலேயே அவற்றில் கலந்து கொண்டனர். கிறித்தவக் கோட்பாடுகள் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டன. ஆயினும் விவிலியம் அந்தந்த நாட்டு மக்களின் தாய் மொழியில் மொழியாக்கம் செய்யப் பெறாமல் இலத்தீன் மொழியில் மட்டுமே இருந்ததால் ஆலயங்களின் வழிபாட்டு மொழியாகவும் இலத்தீன் மொழியே தவிர்க்க இயலாததாயிற்று. இதனால் இலத்தீன் மொழியை அறியாதவர்களால் விவிலியத்தைப் புரிந்து கொள்ள இயலாது போய்விட்டது. விவிலியத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பில்லாத சூழலில் விவிலியத்தின்மீது விசுவாசம் வைப்பது என்பதும் கேள்விக்குறியானது. இதனால் மரபுவழிப்பட்ட விசுவாசக் கோட்பாடுகளிலும் மாற்றம் செய்ய அதாவது சீர்திருத்தம் செய்ய வேண்டிய சூழல் தவிர்க்க இயலாததாயிற்று.

விசுவாசக் கோட்பாடுகளில் கருத்து வேற்றுமைகள்

கிறித்தவக் கோட்பாடுகளைப் பரப்பத் தம்மை முழுமையாக ஒப்படைத்த துறவிகள் - தூய தொண்டர்கள் - அவர்களின் தியாகங்களுக்கேற்பப் புனிதர்களாகக் கருதும் மரபு திருச்சபை நடைமுறைகளில் உருவாக்கப்பட்டது. அப்புனிதர்களைத் திருச்சபையின் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் புரவலர்களாகக் கருதும் மரபும் உருவானது.

> "உரோமுக்குச் சின்னப்பரும் இராயப்பரும், மிலானுக்கு அம்புரோசும் பிரான்சுக்கு மார்ட்டின், டென்டிசு ஆகியோரும் அயர்லாந்திற்கு பேட்ரிக்கும் ஜெர்மனிக்கு பானிபேசும் புரவலர்களாகக் கருதப்பட்டனர்"[16]

இதனடிப்படையில் புனிதர்களின் பல், முடி, எலும்பு ஆகிய உறுப்புகளும், அவர்கள் பயன்படுத்திய உடை, பொருள்கள் ஆகியவையும் புனிதச் சின்னங்களாக

---

15. வீரமாமுனிவர், **வேதவிளக்கம்**, ப. 84.
16. தேவகடாட்சம், **இடைக்காலத் திருச்சபை**, ப. 111.

மதிக்கப்பட்டன. அத்துடன் அவற்றை வணங்கி வழிபாடு செய்வதன் வாயிலாகவும் அப்புனிதர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதன் வாயிலாகவும் வான்வீட்டிற்குச் செல்ல முடியும் என்றும் திருச்சபை விளக்கியும் பரப்பியும் வந்தது.[17] இக்கருத்தை உறுதி செய்யும் அறிவிப்பு வருமாறு :

> "கி. பி. 787இல் திருச்சபையில் நடத்தப்பெற்ற பொதுக்கூட்டத்திற்குப் பிறகு திருச்சின்னங்கள் இல்லாமல் திருச்சபையில் மங்கலப் படைப்புகள் செய்யக்கூடாது, மீறிச் செய்தால் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படுவர்"[18]

என்ற இவ்வறிவிப்பு திருச்சின்னங்களைத் தேடிச் சேகரிக்கும் ஆர்வத்தை மக்களிடையே உண்டாக்கிவிட்டது.

> "லூத்தரின் நண்பரும் லூத்தரை ஆதரித்தவருமான பிரடெரிக் (Frederick the Wise) மட்டும் 5000 திருச்சின்னங்கள் சேர்த்து வைத்திருந்தார்"[19]

என்கிறார் (ஸ்டீபன் சாமுவேல்) வேதநாயகம். இவ்வாறு மக்களும் அரசருமாக எல்லோரும் திருச்சின்னங்களைச் சேகரித்து அவற்றில் நம்பிக்கை வைக்கத் தொடங்கி விட்டனர். அத்துடன் திருத்தூதர்களுக்கு எழுப்பப்பட்டுள்ள கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதன் வாயிலாகப் பாவமன்னிப்பும் பெறலாம் என்றும் அதாவது எவ்வளவு பெரிய குற்றங்கள் - பாவங்கள் செய்திருந்த போதிலும், திருத்தூதர்களின் திருத்தலங்களை வழிபட்டுப் பாவங்களுக்காக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அப்பாவங்கள் மன்னிப்புப் பெறும் என்று போப்பு அறிவித்திருந்தார். இதை

> "உரோமாபுரியிலுள்ள திருத்தூதுவர்களின் திருச்சபைகளை வழிபடு கிறவர்களுக்குப் போப்பு பாவமன்னிப்பை வாக்குப்பண்ணியிருந்தார்"[20]

என்ற வேதநாயகம் கூற்று உறுதிப்படுத்துகிறது. அதனால் உரோமாபுரியிலுள்ள திருச்சபைத் திருத்தலங்களை வழிபட்டு, பாவங்களுக்காக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் மன்னிப்புக் கிடைக்கும் என்று மக்கள் கருதியதால் நாளுக்கு நாள் உரோமாபுரித் திருத்தலங்களை வழிபடும் பழக்கம்

---

17. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 68.
18. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 23.
19. **மேலது**, ப. 23.
20. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 24.

வளர்ந்தது. இத்தலங்களை வழிபட்டால் பாவமன்னிப்பும், புண்ணியமும் ஒருசேரக் கிட்டும் என்று நம்பியோர் எண்ணிக்கை பெருகியது. இதனை,

> *"1450இல் ஒருவாரத்தில் ஏறத்தாழப் பத்து இலட்சம் பயணிகள் உரோமையைத் தரிசித்தனர்"*[21]

என்று வேதநாயகம் தம் நூலில் குறிப்பிடுகின்றார். அதனால் திருச்சபைக்கு வருமானம் பெருகியது. இவ்வருமானப் பெருக்கம் துறவிகள் சுகபோக வாழ்வையும் ஆடம்பர வாழ்வையும் மேற்கொள்ளக் காரணமாயிற்று. மேலும் 'உத்தரிக்கும் தலம்' பற்றிய விசுவாசக் கோட்பாட்டிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாயின.

உத்தரிக்கும் தலம்

இவ்வுலகில் பிறந்த மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து கடவுளின் அருளைப் பெற்றால் இறந்தபின் வான்வீடு சேர்வர். பாவம் செய்து தீயவாழ்வு வாழ்ந்து கடவுளின் அருளைப் பெறாது இறந்தால் நரகத்திற்குச் செல்வர். சிறுசிறு தவறுகள் செய்தபோதிலும் கடவுளின் அருளைப் பெற்றவர்கள் தவறுகளுக்கான தண்டனையை ஓரிடத்தில் அனுபவிப்பர். தண்டனையை அனுபவிக்கும் இடமே உத்தரிக்கும் தலமாகும்.[22] இங்கு தண்டனையை அனுபவித்துத் தூயரானோர் வான்வீடு சேர்வர். இந்த உத்தரிக்கிற தலத்தில் இருக்கும் ஆன்மாக்கள் தாங்களாகவே தங்களுக்குரிய தண்டனையைக் குறைத்துக் கொள்ள இயலாது. இவ்வுலகில் வாழும் மக்கள் அந்த ஆன்மாக்களுக்காகத் திருப்பலியில் பங்கு கொள்ளுதல் ஜெபம் செய்தல் முதலான செயல்களைச் செய்வதன் வாயிலாகவே ஆன்மாக்களின் தண்டனைக் காலத்தைக் குறைத்து வான்வீடு சேரலாம் என்பது கிறித்தவத்தின் 'விசுவாசக் கோட்பாடு' ஆகும்.

இந்தக் கோட்பாடுகளுக்கு மாறாகத் திருச்சபையாளர்கள் பாவமன்னிப்புச் சீட்டுப் பெறுவதாலும் திருச்சின்னங்களை முத்தி செய்வதாலும் உத்தரிக்கும் தலத்திலுள்ள ஆன்மாக்கள் தண்டனை குறைந்து உடனே வான்வீடு சேரும் என்று கூறினர். இவ்வாறு கூறியது பழைய மரபுவழியான நம்பிக்கைகளுக்கு முரணாக

---

21. **மேலது**, ப. 24.
22. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 111.

அமைந்தது. இதனால் மக்களிடையே தடுமாற்றம் ஏற்பட்டது. உத்தரிக்கும் தலத்தில் இருந்த ஆன்மாக்கள் தண்டனைகளை அனுபவித்துத் தாமாகவே வான்வீடு செல்லும் எனும் கருத்தை ஏற்பதா? அல்லது இறந்தோரின் உறவினர் பாவமன்னிப்புச் சீட்டு வாங்குவதன் வழியாக உத்தரிக்கும் தலத்திலுள்ள ஆன்மாக்கள் தண்டனைகளை அனுபவியாதே வான்வீடு செல்லும் என்னும் கருத்தை ஏற்பதா என்பதில் குழப்பமும் கருத்து மாறுபாடுகளும் தோன்றின.

திருச்சபையில் இவ்வாறான போக்குகள் உருவாகி வளர்ந்து வந்ததாகக் கருதப்பெற்ற பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுகளில் நாகரிகத்தின் மறுமலர்ச்சி பற்றிய பல புதிய கருத்துகளும் சிந்தனைகளும் தோன்றின. அத்துடன் பிறர் சொல்வதை அப்படியே நம்பாமல் உண்மையினை அறிந்து தீர்வு காணவேண்டும் என்ற கருத்தும் பரவியது. இதனால் அதுவரை நம்பி ஏற்றுக் கொண்டிருந்த திருச்சபை நிர்வாகத்தில் ஏற்பட்ட தவறுகளும், சமய வழிபாட்டு முறைகளும், சமயக் கோட்பாடுகளும் விவாதத்திற்குரிய பொருள்களாயின. இவ்வாறான சூழலில் (திருச்சபையில்) ஜான் விக்ளிப், ஜான் ஹஸ், ஜான் காலெட், எராஸ்மஸ் முதலானவர்கள் தோன்றி மேற்சொன்ன கருத்துகளைப் பற்றிப் பேசவும் எழுதவும் துணிந்தனர்.

ஜான் விக்ளிப் (John Wycliffe 1324-1384)

ஜான் விக்ளிப் திருச்சபையின் சட்ட திட்டங்களையும் செயல் முறைகளையும் நன்கறிந்திருந்தார். அதனால் திருச்சபைத் தலைவர்கள் தம் ஆட்சிக்குட்படாத நாடுகளில் வரி வசூலித்து ஆடம்பரமாக வாழ்வதைக் கண்டு அது தவறு என்று கண்டித்தார்.[23] திருச்சபையின் விசுவாசக் கோட்பாடாகிய திருவருட்சாதனங்கள், மக்கள் தாம் செய்த குற்றங்களைக் குருவின் காதருகில் சொல்லி மனம் வருந்தும் மன்னிப்பு முறை முதலானவை 'விவிலிய ஆதாரமற்ற' மரபுரிமைச் செயல்முறைகள் என்று குறை கூறினார்.[24] திருச்சபையின் செயல்பாடுகளாகிய இவற்றைத் தவறு என்று முதன்முதலில் எடுத்துக் கூறியவர் ஜான் விக்ளிப்பே ஆவார். அதனால் 'சீர்திருத்தத்தின் விடிவெள்ளி' என்று அவர்

23. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 25.
24. **மேலது**, ப. 26.

அழைக்கப்பட்டார். இவரையடுத்துத் திருச்சபையின் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக் கூறியும் எழுதியும் வந்தவர் ஜான் ஹஸ் என்பவர் ஆவார்.

ஜான் ஹஸ் (1369-1415)

மக்கள் தாம் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டால் இறைவன் பாவங்களை மன்னிப்பார் என்பதை மறந்து திருச்சபையாரால் விற்கப்படும் பாவமன்னிப்புச் சீட்டை வாங்கினால் பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற கருத்து பரப்பப்பட்டது. இதனை மறுத்த ஜான் ஹஸ்,

> "இந்தச் சீட்டை மக்கள் வாங்குவதன் மூலம் பாவத்தின் சாபத்தை - தண்டனையைப் போக்கவோ குறைக்கவோ போப்புவுக்கும் போதகர்களுக்கும் அதிகாரம் இல்லை"

எனத் திருமுகங்களிலும் நூல்களிலும் தம் கருத்தை வலியுறுத்தித் தெரிவித்தார்.[25] இவருக்குப் பின்வந்த ஜான் காலெட் இலத்தீனில் நடக்கும் திருவழிபாட்டு முறைகளையும் இறை வேண்டுதல்களையும் தாய் மொழியில் நிகழ்த்த வேண்டுமென்றார். இவருக்குப் பின்வந்த எராஸ்மஸ் என்பவர் இவருக்குமுன் தோன்றியவர்கள் கூறிய சீர்திருத்தக் கருத்துகளோடு மற்றக் கருத்துகளையும் அங்கதமாகவும் நகைச்சுவையாகவும் எடுத்துக் கூறியும் எழுதியும் வந்தார்.

டேசிடேரியஸ் இராஸ்மஸ் (1466-1536)

இவரின் நயமான எழுத்துக்கு,

> "கிறிஸ்துவின் இடத்தை வகிப்பவராகிய ஏகாதிபத்திய போப்புகள் கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பின்பற்றிக் காண்பித்தால் எத்துணைச் சிறப்பாக இருக்கும். கிறிஸ்துவின் எளிமை, உழைப்பு, போதனை, சிலுவை, உலகப்பற்றை வெறுத்தல் ஆகிய இவற்றைக் கைக்கொண்டால் எத்தனை மேன்மையாயிருக்கும். ஆனால் நடைமுறையோ மிகவும் நடுக்கம் விளைவிக்கின்றனவே. உரோமை ஆதீனத்தில் ஈக்களைப் போன்று மொய்த்திருக்கும் எழுத்தாளர், செயலாளர், பணியாளர்,

25. மேலது, ப. 36.

காசுக்கடைக்காரர், பரிகாசக்காரர், நடிகர், பேடிகள் போன்றோரை வெளியேற்றிப் பட்டினி போட வேண்டாமா?"[26]

என வினவும் இப்பகுதி தக்க சான்றாக அமைகிறது. புனிதப் பயணங்கள் (உரோமாபுரியிலுள்ள திருத்தலங்களை வழிபடுவதற்காகச் செல்லும் பயணம்) திருச்சின்னங்களை வழிபடுதல் (புனிதர்கள் தொடர்பான பொருள்களை வணங்குதல்), உருவ வழிபாடு (புனிதர்களின் உருவங்களை வணங்குதல்) முதலான பழக்க வழக்கங்களைக் கண்டித்தார். அத்துடன் விவிலியம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார். இவரின் இந்தச் சீர்திருத்தக் கருத்துகள் லூத்தரின் சீர்திருத்தத்திற்கு முன்னோடியாக இருந்ததால் இவரைச் 'சீர்திருத்தத்தின் முன்னோடி' என்று வரலாற்று ஆசிரியர்கள் அழைக்கின்றனர்.

மேலே கூறியவர்கள் அனைவரும் திருச்சபை நிர்வாகம், வழிபாட்டு முறை, இறையியல் கோட்பாடுகள் முதலான துறைகளில் ஒருசில துறைகளில் மட்டும் சிறந்தவர்களாக இருந்ததால் ஒருசில கருத்துக்களையே எடுத்துச் சொன்னார்கள். அக்கருத்துக்களைக் கூறியதால் அவர்கள் திருச்சபையாளர்களால் தண்டிக்கப்பட்டனர். ஜான் ஹஸ் என்பவர் 6-6-1415இல் உயிரோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டார்.[27] திருச்சபையின் எல்லாத் துறைகளிலும் சிறந்தவராகவும், சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக் கூறவும் எழுதவும் துணிவுள்ளவராகவும் விளங்கும் ஒருவர் தோன்றித் திருச்சபையில் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற எதிர்பார்ப்பு மக்களிடம் பரவலாக உருவாகியிருந்தது. எதிர்பார்ப்பின்படியே மார்ட்டின் லூத்தர் தோன்றினார்.

மார்ட்டின் லூத்தர் (1483 - 1546)

ஜெர்மனியில் சாக்ஸனி (Saxony) நாட்டில் ஐஸ்லேபன் (Eisleben) என்னும் சிற்றூரில் சுரங்கத் தொழிலாளியான ஹான்ஸ் லூத்தர், மார்கிரெட் என்னும் தம்பதிகளுக்கு மார்ட்டின் லூத்தர் மகனாய்ப் பிறந்தார் (10-11-1483).[28]

---

26. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 72.
27. மேலது, ப. 40.
28. எச். சி. லெபீவர், **திருச்சபைச் சீர்திருத்த வரலாறு**, ப. 75.

வளர்ப்பு : லுத்தரின் பெற்றோர் அவரின் இளமைப் பருவத்திலேயே இறைவேண்டல் செய்யும் முறையினையும் (பத்துக் கட்டளை, விசுவாச அறிக்கை) எழுதப்பட்ட விவிலியக் கருத்துக்களையும், எழுதப்படாத மரபுரிமைக் கொள்கைகளையும் (தேவ அன்னை, புனிதர், வணக்கம், நற்செயல், ஒருசந்தி முதலான பல) கற்றுக் கொடுத்து வளர்த்தனர்.[29]

கல்வி : லுத்தர் ஐஸ்லேபனில் பிரான்சிஸ்கன் பள்ளியில் இலத்தீன் மொழியில் கல்வி பயின்றார். எல்லாத் திருத்தலங்களிலும் விவிலியம் இலத்தீன் மொழியில் வாசிக்கப்பட்டபோது ஐஸலேபனில் உள்ள திருத்தலத்தில் மட்டும் விவிலியம் தாய் மொழியில் வாசிக்கப்பட்டது. இம்முறையை லுத்தர் விரும்பினார்.[30]

மனவெழுச்சி : பள்ளிக் கல்வியை முடித்தவுடன் எர்பர்ட் (Erfurt) பல்கலைக்கழகத்தில் சேர்ந்து (1501) இளங்கலைப் பட்டமும் (1502) மெய்யியல் முதுகலைப் பட்டமும் (1505) பெற்றார்.[31] இந்தப் பல்கலைக்கழகப் படிப்பானது ஒரே நேரத்தில் மாணவர்களை நீதிமன்றச் சேவைக்கும் திருச்சபைச் சேவைக்கும் பயிற்றுவிப்பதாக இருந்தது. லுத்தர் திருச்சபைச் சேவையையே தேர்ந்தெடுத்தார்.

திருச்சபைச் சேவை : லுத்தர் எர்பர்ட் நகரிலிருந்த அகஸ்தினார் கொள்கைப்படி அமைந்திருந்த எர்மித்தியர் துறவற சபையில் சேர்ந்து (16-6-1505) துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். 2-5-1507இல் தன் முதல் வழிபாட்டை நடத்தி ஆசிரியப் பணியை மேற்கொண்டார்.[32]

ஆசிரியப்பணி : வித்தன்பர்க் நகரில் புதிதாக நிறுவப்பெற்ற (1502) பல்கலைக்கழகத்திற்கு ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களுள் (1508) மார்ட்டின் லுத்தரும் ஒருவர். இங்குப் பணியாற்றும்போது பதினேழு துறவு நிலையங்களை மேற்பார்வை இடும் பொறுப்பும் வேதாகம (விவிலிய) ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தன.[33] அப்போது

29. **மேலது**, ப. 86.
30. **மேலது**, ப. 90.
31. **மேலது**, ப. 90.
32. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 95.
33. எச். சி. லெபீவர், **திருச்சபைச் சீர்திருத்த வரலாறு**, ப. 86.

தம் துறவறச் சபைகளின் பணி காரணமாக உரோமைக்குச் செல்லும் வாய்ப்பும் கிட்டியது. உரோமையில் தாம் முன்பே கேள்விப்பட்டிருந்த புனிதப்படிகளை நேரில் காண வாய்ப்பேற்பட்டது.

புனிதப்படிகளும் லூத்தரும் : இயேசு வாழ்ந்த காலத்தில் அவர் ஏறியதாக நம்பப்பட்ட படிக்கட்டு 'சாங்டாஸ் கேலா' அல்லது 'புனிதப்படி' என்றழைக்கப்பட்டது.[34] இது எருசலேமிலுள்ள பிலாத்துவின் அரண்மனையி லிருந்து உரோமிற்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்தப் படிக்கட்டுகளில் ஏறுபவர்கள் ஒவ்வொரு படியிலும் 'எங்கள் தந்தையே' என்று கூறி ஏறினால் உத்தரிக்கும் தலத்திலுள்ள ஆன்மாக்களின் தண்டனைக் காலத்தைக் குறைத்து, அங்கிருந்து விடுவித்து வான்வீட்டில் சேரலாம் என்று நம்பப்பட்டது. லூத்தரும் இதை நம்பியதாகத் தெரிகிறது. இந்த நம்பிக்கையுடன் லூத்தர் உரோமிற்குச் சென்றபோது புனிதப்படியில் ஏறினார்.

ஒவ்வொரு படியிலும் முழங்கால் ஊன்றி முத்தமிட்டு 'எங்கள் தந்தையே' என்று கூறி ஏறி வந்தார். பாதிப் படிகளில் ஏறியபோது 'விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பார்' (1 உரோ. 1 : 17) என்ற விவிலிய வாக்கு நினைவுக்கு வரவே பாதியிலிருந்தே கீழே இறங்கிவிட்டார். (இந்த விவிலிய வாக்கிற்கு இறைவனின் மேல் மட்டும் நம்பிக்கை வைத்தால் போதுமானது.) அப்போது அவர் உள்ளத்தில் இறையருளைப் பெற்று ஈடேற்றம் அடைவதற்குப் புனிதச் சின்னங்கள் உதவுகின்றனவா இறைவன்பால் கொண்ட விசுவாசம் உதவுகிறதா? என்ற கேள்விகள் எழத் தொடங்கின என்று கருதப்படுகிறது. இக்கேள்விகளுடனே லூத்தர் உரோமாபுரியிலிருந்து வித்தன்பர்க் நகருக்குத் திரும்பியதாகத் தெரிகிறது.

வித்தன்பர்க்கில் லூத்தர் : வித்தன்பர்க்கிற்குத் திரும்பிய லூத்தர் இறையியல் அறிவர் பட்டம் பெற்று (1512) அப்பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பொறுப்போடு, தலைவராகவும் நியமனம் பெற்றார்.[35] மேலும் பதினோரு மடங்களின் தலைவராகவும் விளங்கினார். போப்பு, பேராயர், ஆயர் ஆகியோரின் முறையதிகாரத்தை ஏற்றுக்கொண்டவராக வாழ்ந்த நிலையில் பாவமன்னிப்புச்

---

34. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 98.
35. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 100.

சீட்டு விற்பனை நடந்து கொண்டிருந்தது. அதனால் அதைப் பற்றியும் சிந்திக்கலானார்.

பாவமன்னிப்புச் சீட்டு

போப் இரண்டாம் ஜீலியஸ் சீசர் உரோமையில் புனித இராயப்பரின் பேராலயம் கட்டுவதற்காகப் பண உதவி செய்கிறவர்கள் நல்ல பாவ அறிக்கை செய்து, நற்கருணை உட்கொண்டு பணஉதவி செய்தால் ஒரு பரிபூரணப் பலனை அடையலாம் என்று அறிவிப்புச் செய்தார் (1513). அதன்படி இரண்டாம் ஜீலியஸ் சீசருக்குப் பின்வந்த போப் பத்தாம் சிங்கராயர் இந்த அறிவிப்பை மக்களிடம் கொண்டு செல்லவும் பரப்பவும் ஒவ்வொரு நாட்டிற்கும் துறவிகளை அனுப்பினார். அவ்வாறு அவரால் அனுப்பப்பட்டவர்களுள் ஜெர்மனிக்குச் சென்றவர் தொமினிக்கன் சபைக்குருவான தெட்சல் என்பவராவார்.[36]

பாவமன்னிப்புச் சீட்டு வழங்குதல் என்பது மரபுவழிப்பட்ட கிறித்தவ சமயத்தில் புதிதாக அறிமுகமான ஒன்றாகும். பாவம் செய்தவர்களுக்கு இறைத்தண்டனை உண்டு என்பது கிறித்தவத்தின் அடிப்படை. இதனை,

> "பாவமன்னிப்புச் சீட்டைப் பெற்றவர்கள் தங்கள் பாவங்களுக்கு இறைத்தண்டனை இருக்கிறது என்பதை மறந்து, தங்கள் பாவங்களின் மேல் திருச்சபைக்கு அதிகாரம் இருப்பதாக நினைத்தார்கள்"[37]

எனும் கூற்று உறுதிப்படுத்தும். இந்நிலையில் போப் அறிமுகப்படுத்திய பாவமன்னிப்புச் சீட்டைப் பெற்றவர்கள் திருச்சபை கொடுக்கும் தண்டனையையே (பாவமன்னிப்புச் சீட்டுப் பெறுவது) பாவப் பரிகாரமாகத் தமக்குப் பாவமன்னிப்பைக் கொடுத்துவிடும் என்று நம்பினர். அதனால் அப்பாவமன்னிப்புச் சீட்டு அதிகமாக விற்பனையாயிற்று. அச்சீட்டின் தொடர்கள் வருமாறு :

> "கிறிஸ்துவின் அதிகாரத்தினால் இன்னாராகிய நான் இன்னாராகிய உன்னுடைய எல்லாப் பாவங்களினின்றும், எல்லா மீறுதல்களினின்றும், எல்லாத் தண்டனைகளினின்றும் அவை எவ்வளவு கொடியதாக

---

36. வீரமாமுனிவர், **வேதவிளக்கம்**, ப. 9.
37. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 103.

> *இருந்தாலும் அவற்றினின்றும் இன்னாராகிய நான் பாவவிமோசனம் செய்கிறேன். இந்தக் காரணத்தினால் உத்தரிக்கும் இடத்தில் நீ அனுபவிக்க வேண்டிய உன்னுடைய எல்லாத் தண்டனைகளையும் நான் செலுத்தி விட்டேன். எனவே நீ இறக்கும்போது தண்டனையின் வாசல் மூடப்படும். வான்வீட்டின் வாசல் திறக்கப்படும்"*[38]

என்றிருந்தது. இந்தப் பாவமன்னிப்புச் சீட்டு விற்கும் உரிமையை எட்டாண்டுகளுக்குத் தலைமைப் பேராயர் ஆல்பர்ட் பெற்றார். இவர் போப்பு பத்தாம் லியோ காலத்தில் ப்ரண்டன்பர்க் (Brandenburg) பேராயராக இருந்தார். அவர் ஒரேகாலத்தில் இரு மண்டலங்களுக்குப் பேராயராக இருந்தார். ஆனால் அவர் அதற்குத் தகுதியான வயதுடையவரல்லர். எனினும் மூன்றாவதாக மேய்ன்ஸ் (Mainz) மண்டலத் தலைமைப் பேராயராகவும் விரும்பினார். அதற்காகப் போப்புவிடம் 30,000 பொற்காசுகள் செலுத்தி அப்பதவியைப் பெற்றார்.[39] அத்துடன் பாவமன்னிப்புச் சீட்டு விற்கும் உரிமையையும் பெற்றார். பாவமன்னிப்புச் சீட்டு விற்பதால் கிடைக்கும் வருமானத்தைப் போப்பின் அறிவிப்புப்படி (ஆணைப்படி)ப் பாதியைப் போப்புவுக்குக் கொடுத்துவிட்டு மீதிப் பாதியைத் தாம் எடுத்துக் கொண்டார். இந்தப் பணம் பதவிகளைப் பெறுவதற்காக வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவதற்குப் பெரிதும் உதவியது.

போப்பு விற்பனையாளர்களுக்கு ஓர் உத்தரவு விடுத்தார். மெய்யான வருத்தத்துடன் ஆயர்களிடம் பாவ அறிக்கை செய்வோருக்கே பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்கவேண்டும் என்றேது. ஆனால் விற்பனையாளர் அதைக் கடைப்பிடிக்கவில்லை. நாடுகள், நகரங்கள் எங்கும் சென்று பாவமன்னிப்புச் சீட்டுகள் பற்றி விளம்பரம் செய்து, அறிமுகம் செய்து, விற்பனை செய்யும் பொறுப்பு தொமினிக்கன் சபைத் துறவியான தெட்சலிடம் ஒப்படைக்கப்பட்டது. தெட்சல் லூத்தரின் நாடான ஜெர்மனியில் பாவமன்னிப்புச் சீட்டு விற்றதைக் கண்ணால் கண்ட ஒருவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

---

38. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 103.
39. **மேலது**, ப. 102.

"பொன்னாலும் வெல்வெட்டாலும் செய்யப்பட்ட துணியில் போப்புவின் ஆணை பொறிக்கப்பட்டுத் தெட்சலுக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டது. அனைத்து ஆயர்கள், துறவிகள், நகரசபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள் ஆகிய இவர்கள் கொடிகளுடனும் மெழுகுவர்த்தியுடனும் தெட்சலைச் சந்திப்பார்கள். அப்போது எல்லாக் கோவில் மணிகளையும் அடித்து தெட்சலைத் தலைமைத் திருச்சபைக்கு அழைத்துச் செல்வார்கள். கோவிலின் நடுவில் பொருத்தப்பட்ட சிவப்புச் சிலுவையில் போப்புவின் ஆணை பொறிக்கப்பட்ட துணி பொருத்தப்படும். பிறகு பாவமன்னிப்புச் சீட்டு வாங்குவதால் ஏற்படவிருக்கும் நன்மைகளைப் பற்றித் தெட்சல் உரையாற்றுவார். அதாவது பாவமன்னிப்புச் சீட்டு வாங்கப் பணப்பெட்டியில் காசு விழுவதால் ஏற்படும் ஓசை தொனித்தவுடன் உத்தரிக்கும் இடத்திலுள்ள ஆவிகள் விடுதலையாகுமாம்"[40]

என்று கூறி ஒவ்வோர் இடத்திலும் விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

பாவமன்னிப்பு(ச் சீட்டுப்) பற்றி ஏற்கனவே சிந்தித்துக் கொண்டிருந்த லூத்தர் தெட்சலின் (தெய்வ நிந்தனையான) வாய்மொழியும், பாவமன்னிப்புச் சீட்டு விற்பனை செய்யும் முறையும் தெய்வீகப் போதனைகளுக்கு மாறானவைகள் என்று எதிர்த்தார். ஆனால் நன்னெறிக்குப் பாதகமானவை என்று அவர் எதிர்க்கவில்லை. மேலும் இப்பாவமன்னிப்புச் சீட்டு பாமர மக்களைத் தவறான பாதையில் நடத்துவதாகவும், அது தெய்வ நிந்தனையான செயல் என்றும், கிறித்தவப் போதனைக்கு எதிரானது என்றும் தம் பல்கலைக்கழகக் பேராசிரியர்களை ஒன்று திரட்டி விவாதம் நடத்த முயன்றார். ஒருவரும் முன்வரவில்லை. இதுகுறித்துப் பல பேராயர்களுக்குக் கடிதம் எழுதினார்.[41] ஒருவரும் பதில் எழுதவில்லை. பாவமன்னிப்புச் சீட்டோடு புனிதர்களின் திருச்சின்னங்களில் ஆற்றல் மறைந்திருக்கிறது என்ற நம்பிக்கையையும் லூத்தர் கடிந்தார்.

---

40. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப.106.
41. **மேலது**, ப.106.

பிரடரிக் அரசர் வழக்கம்போல் 'அனைத்துத் தூயர்களின் திருநாளுக்கு' முந்தைய நாளில் (அக்டோபர் 31) திருச்சின்னங்களின் கண்காட்சி நடத்த ஒழுங்குகள் செய்து கொண்டிருந்தார். இந்தச் செயல்முறையும், பாவமன்னிப்புச் சீட்டு விற்கும் முறையும் பக்தி நெறிகளுக்கு இடையூறு ஏற்படுத்துகிறது என்று லூத்தர் உணர்ந்தார். இந்த உணர்வும் சிந்தனையின் தெளிவும் சேர்த்து மிகப் பெரிய கலகத்தை (புரட்சியை) உருவாக்கின.

லூத்தரின் கலகம்

லூத்தர் வித்தன்பர்க் அரண்மனைக் கதவில் பாவமன்னிப்புச் சீட்டு முதலான பல்வேறு பக்தி இயக்கங்களுக்கெதிரான 95 கோட்பாடுகளை எழுதி ஆணியால் அறைந்து வைத்தார் (31-101517). அதைத் தவறு என உணர்வோர் தம்மோடு வாதிடலாம் அவ்வாறு வாதிட இயலாதவர்கள் கடிதங்கள் மூலம் அவ்வாறு செய்யலாம் என்று அறை கூவினார்.

ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஆமென்

I 1 : 7 <u>மெய்த்தவமும் குருக்களின் மன்னிக்கும் அதிகாரமும்</u>

1 : 4 சுவிசேஷத்திற்கு இசைந்த மெய்த்தவம் வாழ்க்கை முழுவதும் இருக்கும்.

1 நம் ஆண்டவரும் தலைவருமாகிய யேசுகிறிஸ்து 'குணப்படுங்கள்' என்று மொழிந்தபோது விசுவாசிகளின் முழு வாழ்க்கையும் செயல் நினைந்து அழுங்க வேண்டியதாய் இருக்க வேண்டுமென்று சித்தம் கொண்டார்.

2 இந்த வாசகத்தைத் திருச்சபைச் சமயக் குருக்கள் செய்விக்கும் சாக்கிரமெந்துகளின் தபம் (அதாவது) 'பாவ அறிக்கையும் கழுவாயும்' என்று பொருள் கொள்வது கூடாது.

3 எனினும் இது அகத்துவம் என்பது மட்டும் அன்று வெளிப்படையாக உடலை வருத்தும் செயல்களை உண்டாக்காமல் அகத்துறவு இருக்க ஒண்ணாது.

4 ஆகவே தன்னை வெறுக்கும் காலம் இருக்கும் மட்டும் பாவத்தின் தண்டனை இருந்தே தீரும். ஏனெனில் இதுவே மெய்யான அகத்தவம். பரலோக அரசுக்குள் நாம் புகுமட்டும் இது தொடர்ந்து வரும்.

5 : 7 சாமக் குருக்களின் மன்னிக்கும் அதிகாரம் கட்டுப்பட்டது.

5 தம்முடைய அதிகாரத்தையும் அல்லது திருச்சபையின் அதிகாரத்திற்குட்பட்டுத் தாம் விதித்த தண்டனைகளைத் தவிர ஏனையவற்றையும் போப் ஆண்டவர் மன்னிக்க விரும்புகிறதில்லை மன்னிக்கவும் இயலாது.

6 அது கடவுளால் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதும் கடவுள் மன்னித்ததை ஒப்புக்கொள்வதும் தவிரக் குற்றப் பழியை மன்னிக்கவும் போப்பாண்டவரால் இயலாது. அவரது தீர்ப்புக்கு என்று விடப்பட்ட வழக்குகளில் மன்னிக்க அவருக்கு ஆற்றல் உண்டு என்பது உண்மை. தான் இத்தகைய வழக்குகளில் அவருக்கு உள்ள அதிகாரத்தை மறுத்தால் பாவப்பழி முழுவதும் மன்னிக்கப்படாமல் தொடர்ந்தே வரும்.

7 அதேசமயத்தில் கடவுளின் பிரதிநிதியாகிய குருவுக்குக் கீழ்ப்பட்டுத் தன்னை எல்லாவிதத்திலும் தாழ்த்தாதவனது பாவப்பழியைக் கடவுள் மன்னிக்கிறதில்லை.

II <u>இறந்தவர்களின் மன்னிப்பு</u> 8 -29

8-13 <u>திருச்சபையின் தண்டனை இறந்தவர்களின் மேல் செல்லாது</u>

8 திருச்சபையின் சட்டங்கள் உயிர் உள்ளவர்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளன. ஆகவே இச்சட்டங்களின்படி இறக்கும் தருவாயில் உள்ளவர்களின்மீது இவற்றைச் சுமத்தக்கூடாது.

9 ஆகவே போப்பாண்டவருக்குள்ளிருக்கிற பரிசுத்த ஆவியானவர் அன்பாய் இருக்கிறார் மரணமும் ஆபத்தும் விதிவிலக்குகளாகும்.

10 ஆன்மா திருத்தமடையும் இடத்தில் (உத்தரிக்கும் தலத்தில்) செய்ய வேண்டும் என்ற தவத்தைப்பற்றிச் சாகும் தருவாயில் உள்ளவர்களுக்கு விதிக்கும் குருமார் அறிவீனர்; பொல்லாதவர்.

11 திருச்சபையின் சட்டத்தை ஆன்மா திருத்தம் அடையும் இடத்திற்குச் செல்லும் என்று மாற்றம் செய்தது அத்தியட்சர் தூங்கும்போது விதைக்கப்பட்ட களைகள் என்பது தெளிவு (மத்தேயு 13-25)

12 முற்காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனைகள் பாவமன்னிப்பு கூறுதலுக்குமுன் அவர்கள் மனஅழுங்கல்கள் உண்மைதான் என்பதைச் சோதிப்பதற்கென்பது விதிக்கப்பட்ட தண்டனைகள்.

13 சாகப் போகிறவர் சாவினால் எல்லாத் தண்டனைகளுக்கும் விடுதலை பெற்றவராவர். திருச்சபையின் சட்டங்களுக்குச் செத்தவர் அவைகளிலிருந்து விடுதலை பெற உரிமையுள்ளவர்.

14-19 <u>ஆன்மா திருத்தம் அடையும் இடத்தில் பயம் நீக்கும் அன்பு வளரும்.</u>

14 சாகும் தருவாயில் உள்ளவர்களுக்குக் குறைந்த சுகம் அதாவது குறைவுள்ள அன்பு காரணமாகப் பெரும் பயம் உண்டாகும். அன்பு குறைந்த ஆன்மாவுக்குப் பயம் பெருகும்.

15 ஆன்மா திருத்தம் அடையும் இடத்தில் உண்டாகும் பயமும் பயங்கரமுமே போதுமான தண்டனையாகும்.

16 நரகம். ஆன்மா திருத்தமடையுமிடம். வான்வீடு என்பவை நம்பிக்கையின்மை குறைந்த நம்பிக்கை அடைக்கலத்தின் நிச்சயம் என்பனவற்றைப் போல வேறுபடும்.

17 ஆன்மா திருத்தமடையும் இடத்தில் ஆன்மாக்களின் பயங்கரம் கட்டாயமாகக் குறையும் அன்பு பெருகும்.

18 புண்ணியம் அவர்களுக்கு இல்லாத காரணத்தால் அன்பு பெருகாது என்பது சுருதியுத்தி என்ற அளவைகளால் நிரூபிக்க முடியாதது.

19 அந்த இடத்தில் அவர்கள் தங்களது ஆன்ம சுகத்தை அறிந்தும் நிச்சயப்பட்டு இருப்பார்கள் என்பதை விளக்க முடியாது. ஆனால் நாமோ இதைப்பற்றி முழுநிச்சயத்துடன் இருக்கலாம்.

20-29 <u>போப்பாண்டவரின் அதிகாரம் செல்லாது.</u>

20 எல்லாத் தண்டனைகளுக்கும் முழுமன்னிப்பு என்று சொல்லும்போது எல்லாம் என்பது சரியன்று.

21 போப்பாண்டவரின் பாவச்சீட்டினால் ஒருவன் எல்லாத் தண்டனை களிலிருந்தும் விடுதலை பெறுகிறான் என்றும் இரச்சிப்புப் பெறுகிறான் என்றும் பாவமன்னிப்புச் சீட்டைப்பற்றிப் பிரச்சாரம் செய்கிறவர்கள் கூறுவது தவறு.

22 ஆன்மா திருத்தப்படும் இடத்திற்குப் போகிறவர்களுடைய தண்டனையை நீக்குகிறதில்லை. திருச்சபைச் சட்டத்தின்படி அவர்கள் தாங்கள் வாழும் காலத்திலேயே தங்கள் தண்டனையை அனுபவித்திருக்க வேண்டும்.

23 ஒருவனுடைய தண்டனைகளை யெல்லாம் மன்னிப்பதாக இருந்தால் இத்தகைய மன்னிப்பு பரிபூரண நற்குணம் உடையோருக்கே கிடைக்கும். அன்னார் ஒருசிலரே ஆவர்.

24 'தண்டனை நீக்கம் உண்டு' என்ற வாக்கு மக்களின் பெரும்பாலாரை ஏமாற்றுகிறது என்பது தெளிவு.

25 பொதுவாக ஆன்மா திருத்தமடையும் இடத்தில் உள்ளவர்கள் மீது போப்பாண்டவருக்கு அதிகாரம் உண்டு என்பது அத்தியட்சர்களுக்கும் குருமாருக்கும் தங்கள் அத்தியட்சாதீனத்திலும் குருசேகரத்திலும் உள்ள அதிகாரமேயாகும்.

26 ஆன்மா திருத்தம் அடையும் இடத்தில் உள்ளவர்களுக்குப் போப்பாண்டவர் மன்னிப்பு அளிக்கின்றார் என்பது நல்லதே. இது திறவுகோல்களின் அதிகாரத்தினால் அன்றி பரிந்து பேசும் செபத்தினால் இவ்வாறு செய்யலாம்.

27 பணப்பெட்டியில் பணம் விழுந்த சத்தம் கேட்கும்பொழுது திருத்தம் அடையும் இடத்திலிருந்து ஆன்மா வெளியேறும் என்பது மனிதப் பிரச்சாரம் (தெய்வ வாக்கன்று).

28 பணப்பெட்டியில் விழுந்தபொழுது பொன் ஆசையும் இலாபம் தேடும் எண்ணமுமே பெருகும். திருச்சபை பரிந்து பேசுவதால் வரும் பயன் கடவுளின் கையில் மட்டுமே இருக்கிறது.

29 ஆன்மா திருத்தமடையும் இடத்தில் இருக்கிறவர் எல்லோரும் விலை கொடுத்து அவ்விடத்திலிருந்து மீட்கப்பட விரும்புகின்றனர் என்பது யாருக்குத் தெரியும்.

III 30-40 <u>உயிருள்ளோருக்குப் பாவமன்னிப்புச் சீட்டு</u>

30-35 <u>இரட்சிப்பின் நிச்சயத்தைப் பாவமன்னிப்புச் சீட்டுக் கொடுக்க இயலாது.</u>

30 தனது பாவ உணர்ச்சி உண்மையானது என்று ஒருவனும் உறுதி கூற இயலாது. ஆகவே ‘முழுப் பாவமன்னிப்புப் பெற்று விட்டேன்’ என்று சொல்லுதலும் இயலாது.

31 மெய்த்தவம் செய்தவனைக் காண்பது அரிது. பாவமன்னிப்புச் சீட்டைப் பாவ உணர்ச்சியோடு விலைக்கு வாங்கினவனைக் காண்பதும் அரிது.

32 பாவமன்னிப்புக்கென்று கடிதங்களைப் பெற்றுக் கொண்ட காரணத்தால் நாங்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டோம் என்று நம்புகிறவர்களும் அவர்களுடைய குருமார்களும் நித்திய தண்டனைக்கு ஆளாவார்கள்.

33 ‘கடவுளின் விலை மதிக்க முடியாத கிருபையினால் அவரோடு ஒப்புறவு ஆக்கப்பட்டோம்’ என்று போப்பாண்டவரின்

சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டவர்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

34 'இந்த மன்னிப்பின் கிருபை திருவருட் சாதனங்களால் வரும் பிராயச்சித்தங்களை மட்டுமே குறிக்கின்றது இவை மனித ஏற்பாடுகளே.

35 ஆன்மா திருத்தப்படும் இடத்திலிருந்து மீட்கப்படச் சீட்டுக்களை வாங்குகிறவர்களுக்கு மனக்குறை தேவையில்லை யென்பவர் கிறிஸ்தவ சித்தாந்தத்தை உபதேசிக்கிறதில்லை.

36-40 <u>மெய் உணர்ச்சி உள்ளோருக்குச் சீட்டு இல்லாமலே பாவமன்னிப்புக் கிடைக்கும்.</u>

36 மெய் குணப்படுதல் உள்ள கிறிஸ்தவன் எவனுக்கும் தண்டனையி லிருந்தும் பாவப்பழியிலிருந்தும் முழு மன்னிப்புப் பெறுவதற்கு முழு உரிமையுண்டு.

37 கிறிஸ்துவின் எல்லா ஆசிர்வாதங்களும் திருச்சபையின் எல்லா நன்மைகளும் உண்மையான கிறிஸ்தவன் ஒவ்வொருவனுக்கும் கிடைக்கும் பாவமன்னிப்புச் சீட்டு தேவையில்லை.

38 என்றாலும் போப்பாண்டவர் அளிக்கும் பாவமன்னிப்பையும் திருச்சபையின் நன்மைகளையும் அவமதிக்கக் கூடாது.

39 பாவமன்னிப்பு மிகுதியாகக் கிடைக்குமென்றும் மெய் குணப்படுதல் தேவையென்றும் ஒரேகாலத்தில் மக்களுக்குக் கூறுவது முன்னறிவுமிக்குள்ள மறைவல்லுநர்களாலும் முடியாது.

40 மெய் குணப்படுதல் உள்ளவன் தண்டனைகளை நாடுவான் தாராள மன்னிப்பு தண்டனைகளைக் குறைக்கும். அதோடு தண்டனைகளை வெறுக்கும் அவற்றை வெறுப்பதற்கும் இடம் உண்டுபண்ணும்.

IV 41-52 பாவமன்னிப்புச் சீட்டுகளும் நற்செயல்களும்

41-47 <u>நற்செயல்களுக்கும் பாவமன்னிப்புச் சீட்டுகளுக்கும் நெடுந்தூரம் உண்டு.</u>

41 போப்பாண்டவரின் மன்னிப்புச் சீட்டைப்பற்றி மிகவும் விழிப்பாய் இருக்க வேண்டும். இல்லையேல் அன்பினால் ஏவப்பட்ட நற்செயல் களைக் காட்டிலும் பாவமன்னிப்புச் சிட்டுக்களையே மக்கள் நாடுவார்கள்.

42 அறச்செயல்களோடு ஒப்பிட்டால் மன்னிப்புச் சீட்டு வாங்க வேண்டுமென்பது போப்பினது விருப்பம் அன்று என்று கிறிஸ்தவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்.

43 ஏழைகளுக்கு இரங்குவது சீட்டு வாங்குவதைக் காட்டிலும் சிறந்தது என மக்களுக்குப் போதிக்க வேண்டும்.

44 ஏனென்றால் அன்புச் செயல்களால் அன்பு வளரும் மனிதன் நல்லவனாகிறான். சீட்டை வாங்குவதால் ஒருவனும் நல்லவனாகிற தில்லை; தண்டனை தளர்த்தப்படுவதுதான் பயனாகும்.

45 தேவைப்பட்டவன் ஒருவனைக் கண்டும் காணாதது போலப் போகிறவன் தன் பாவத்தைக் கொடுத்துப் பாவமன்னிப்புச் சீட்டை வாங்கும்போது போப்பாண்டவரின் சீட்டை அன்றிக் கடவுளின் கோபத்தையே விலைக்கு வாங்குகிறான் என்று கிறிஸ்தவ மக்களுக்குப் போதிக்க வேண்டும்.

46 தங்கள் தேவைக்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்கள் அப்பணத்தைத் தங்கள் குடும்பச் செலவுக்கு வைத்துக் கொள்ள வேண்டும். மன்னிப்புச் சீட்டை வாங்கக்கூடாது.

47 கட்டாயமில்லாமல் சொந்த விருப்பத்தின்படிச் சீட்டை வாங்க வேண்டும்.

48-52 <u>போப்பாண்டவரும் இவ்வாறு நினைக்கின்றார்.</u>

48 பாவ மன்னிப்புச் சீட்டுக் கொடுக்கும் போப்பாண்டவருக்கு மக்களுடைய பணம் அன்றி அவர்களின் ஜெபமே தேவை.

49 இந்தச் சீட்டில் நம்பிக்கை வைக்காதமட்டும் போப்பாண்டவரின் சீட்டுக்கள் ஓரளவு நன்மை பயக்கும். ஆனால் இவற்றின் மூலமாகத் தெய்வ பயத்தை இழந்தால் அவை மிகமிக மோசமானவையாகும்.

50 பாவமன்னிப்புச் சீட்டை விற்பவர்கள் எவ்வளவு கொடுமை செய்து விற்கிறார்கள் என்று போப்பு அறிவார். இந்தப் பேதுருவின் ஆலயம் சாம்பலாகட்டும் என்பாரேயன்றித் தம் மக்களின் தோல், சதை, எலும்பு ஆகியவற்றைக் கொண்டு கட்டமாட்டார் என்று மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

51 பாவமன்னிப்புச் சீட்டை வாங்கத் தூண்டப்படுபவர்களுக்குப் போப்பாண்டவர் தம் சொந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும். அவருடைய கடமையும் விருப்பமும் இதுவே. இதற்கென்று பேதுருவின் ஆலயம் விற்கப்பட்டாலும் நல்லதுதான் எனக் கிறிஸ்தவ மக்களுக்குப் போதிக்க வேண்டும்.

52 பாவமன்னிப்புச் சீட்டினால் இரட்சிப்பு உறுதிப்படுகிறது என்பது பொய்.

V 53-80 <u>பாவமன்னிப்புச் சீட்டைப்பற்றிப் பிரச்சாரம்</u>

53-55 <u>விவிலியப் பிரசங்கமே பாவமன்னிப்புச் சீட்டைப் பற்றிய பிரச்சாரத்தைக் காட்டிலும் மேலானது</u>

53 பாவமன்னிப்புச் சீட்டைப் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதற்காகச் சில ஆலயங்களில் விவிலியப் பிரசங்கம் செய்யக்கூடாது என்று தடை செய்தவர்கள், கிறிஸ்தவர்களுக்கும், போப்புக்கும் எதிரிகள்.

54 ஒரே பிரசங்கத்தில் பாதியோ அல்லது பாதிக்கு மேலோ சீட்டைப்பற்றிக் கூறுவது தெய்வ வசனத்தைப் பாழாக்குவதாகும்.

55 போப்பாண்டவரின் எண்ணம் கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும். சிறு காரியமாகிய பாவமன்னிப்புச் சீட்டுக்கு ஒரு மணி அடித்து ஒரு ஊர்வலம் வந்து கூட்டம் நடத்தினால் எல்லாவற்றிலும் மிகப் பெரிய காரியமாகிய விவிலியத்திற்கு 100 மணியடித்து 100 ஊர்வலம் வந்து 100 ஆராதனை நடத்த வேண்டும்.

56-68 சுவிசேஷமே செல்வத்துட் செல்வம்

56 திருச்சபையின் செல்வத்திலிருந்து போப்பாண்டவர் பாவமன்னிப்புச் சீட்டைக் கொடுக்கிறார். அந்தச் செல்வம் இன்னதென்று இன்னும் மக்கள் அறிந்து கொள்ளவில்லை.

57 அச்செல்வம் இவ்வுலகத்திற்குரியதன்று. சீட்டுக்களை விற்பவர்கள், செல்வத்தை வாரி வழங்கவில்லை. மாறாகச் சேர்த்துக் குவிக்கிறார்கள்.

58 இந்தச் செல்வம் கிறிஸ்தவப் புண்ணியமன்று பக்தரின் புண்ணியமன்று போப்பு இல்லாமலே உள் மனிதனுக்கு அருளையும் பிற மனிதனுக்குச் சிலுவை, மரணம், நரகம் முதலியவற்றையும் அளிக்கிறார்கள்.

59 திருச்சபையின் செல்வம் திருச்சபையின் ஏழைகளே இது அக்காலத்தின் மரபு.

60 கிறிஸ்து திருச்சபைக்கு அருளிய திறவுகோலின் அதிகாரமே திருச்சபையின் செல்வம்.

61 தண்டனை நீக்கத்திற்குப் போப்பின் ஆதிக்கமே செல்லும்.

62 கடவுளின் மகிமை கிருபை, இவைபற்றிய விவிலியமே திருச்சபையின் உண்மைச் செல்வம்.

63 எனினும் இச்செல்வம் விற்கப்படுகிறது ஏனெனில் தலையானதை இறுதியானதாக்கிறது.

64 மறுபக்கத்தின் பாவமன்னிப்புச் சீட்டின் செல்வம் இயற்கையாக மிகமிக வரவேற்கப்படுகின்றது. ஏனெனில் கடையானது தலையானதாக ஆக்கப்படுகிறது.

65 ஆகவே விவிலியத்தின் செல்வங்கள் என்பவை வலைகள். இவைகளைக் கொண்டு முற்காலத்தில் செல்வர்களைப் பிடித்தனர்.

66 பாவமன்னிப்புச் சீட்டுகளும் வலைகளே இவற்றைக் கொண்டு இக்காலத்தில் மக்களின் செல்வத்தைக் கவர்கின்றனர்.

67 இச்சீட்டு மிகப்பெரிய கிருபை என்று பிரச்சாரக்காரர் கூறுவதால் இலாபம் பெறுகின்றனர்.

68 எனினும் அதைக் கடவுளின் அருளோடும், சிலுவையின் பக்தியோடும் ஒப்பிடுகையில் அதை மிகச்சிறிய கிருபை என்பது உண்மை.

69-80 <u>பாவமன்னிப்புச் சீட்டு விற்பனைப் பிரச்சாரம். விவிலியத்தைத் தாறுமாறாக ஆக்குகிறது.</u>

69 இந்தப் பிரச்சாரக்காரர்களை மிக்க மதிப்போடு வரவேற்பது அத்தியட்சர் குருமார்களின் கடமை.

70 ஆனால் இவர்கள் இருவரும் போப்பாண்டவரின் கட்டளையை நிறைவேற்றுகிறார்களா என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

71 போப்பாண்டவரின் பாவமன்னிப்புச் சீட்டை எதிர்த்துப் பேசுகிறவன் சபிக்கப்பட்டவன்.

72 சீட்டுப் பிரச்சாரகரின் பொன்னாசைக்குக் கட்டுக்கு அடங்காமல் எதிர்த்து நிற்பவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

73 சீட்டு வியாபாரத்தை எதிர்க்கிறவனைத் தண்டிப்போம் என்கிறார் போப்.

74 ஆனால் தூய அன்பையும், உண்மையையும், பாழாக்குகிறவர்களுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை.

75 சொல்ல முடியாத பாவத்தைத் தெய்வ கன்னியைக் கற்பழித்தவனைக் கூடப் போப்பாண்டவரின் சீட்டு மன்னித்து விடும் என்பது பைத்தியக்காரத்தனம்.

76 இதற்கெதிராக நாம் சொல்வது என்னவென்றால் மிகச்சிறிய பாவத்தைக்கூடப் போப்பாண்டவரின் சீட்டு மன்னிக்க இயலாது.

77 போப் அளிக்கும் கிருபையைக் காட்டிலும் மேலான ஒன்றைப் பேதுருகூட அளிக்க இயலாது என்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வது இருவருக்கும் எதிரான தூஷணமாகும்.

78 இதற்கெதிராக நாம் சொல்லுவது என்னவென்றால் இப்போது உள்ள போப்பும், வேறு எந்தப் போப்பும் மிகப்பெரிய கிருபையைத் தம் கையில் வைத்திருக்கின்றனர். அவை விவிலியம், சுபம் கொடுக்கும் வரம்.

79 போப்பின் சின்னத்தோடு உயர்த்தப்பட்ட சிலுவை கிறிஸ்துவின் சிலுவைக்குச் சமம் என்று சொல்வது தூஷணம்.

80 இத்தகையப் பிரச்சாரங்களை அனுமதித்துக் கொண்டிருக்கிற அத்தியட்சகர்களும் குருமாரும் வேதபண்டிதர்களும் கணக்குக் கொடுக்க வேண்டும்.

VI *81-91* <u>குரு அல்லாதாரின் எதிர்ப்பு.</u>

81 சீட்டைப்பற்றிய கட்டுக் கடங்காத பிரச்சாரங்கள் போப்பின் மேல் கற்றறிந்தோருக்கிருந்த நன்மதிப்பைக் குறைக்கின்றன. அவரை நிந்திக்கச் செய்கின்றன.

82 எடுத்துக்காட்டு : தேவாலயத்தைக் கட்டுவதற்குப் பொருள் சேர்ப்பதற்காக 'ஆன்மாக்களை மீட்டு விடுகிறேன்' என்பது மிகமிகக் கேவலமானது.

83 இறந்தவர்களுடைய ஆண்டு விழாவில் மீசாப்பலி செலுத்துவது ஏன்? அவர்களுக்காக விடப்பட்ட மானியங்களைத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பது ஏன்? சீட்டினால் இரட்சிப்புப் பெற்றவர்களுக்காக ஜெபம் செய்வது ஏன்?

84 மீண்டும் திருத்தி அமைக்கும் இடத்திலிருந்து கடவுள் அன்புள்ளவனைக் காப்பாற்றப் பணத்திற்காகப் பக்தி இல்லாதவனுக்கு அனுமதியளிக்கின்ற இந்தப் பக்தியின் தன்மை என்ன?

85 சபைச் சட்டங்கள் யாவை அவை வழக்கற்றுப் போயின இப்போது சீட்டின் பெயரால் உயிரும் சக்தியும் இருப்பது போல் தோன்றுகிறது.

86 போப் மிகப்பெரும் செல்வந்தராக இருக்கிறார் ஆதலால் அவர் ஏன் தம் சொந்தச் செலவில் ஆலயத்தைக் கட்டக்கூடாது.

87 மீண்டும் போப் எதை மன்னிக்கிறார்? உண்மையான மனக்குறையோடு இருக்கிறவர்களுக்கு முழு மன்னிப்பு இருக்கிறதே அவர்களுக்கு எதைக் கொடுப்பார்?

88 மீண்டும் விசுவாசிகளுக்கு ஒருநாளில் ஒருமுறை அளிக்கும் மன்னிப்பைப் போப்பாண்டவர் ஒருநாளில் 100 முறை அளித்து வந்தால் திருச்சபைக்கு எத்துணை பெரிய ஆசீர்வாதங்கள்.

89 சீட்டினால் பணத்தையன்றி ஆன்மாக்களை இரட்சிக்க விரும்புகிறவர் ஆயிற்றே! அப்படியிருக்க இம்மட்டும் கொடுக்கப்பட்ட மன்னிப்பை நிறுத்தி வைப்பது ஏன்? அவைகளுக்குச் சம சக்தி உண்டன்றோ?!

90 குரு அல்லாதாரின் இத்தகைய வாக்குவாதங்களையும், மனசாட்சியின் குத்தல்களையும் அடக்குவது கட்டாயத்தாலா? அடக்கு முறையைப் பயன்படுத்துவதால், திருச்சபையும், போப்பாண்டவரும், மக்களின் ஏளனத்திற்கு ஆளாகிறார்கள். கிறிஸ்துவின் அடியார்கள் துன்புறுகிறார்கள்.

91 போப்பாண்டவரின் ஆவியின்படியும் உள்ள கருத்தின்படியும் மன்னிப்பு பிரசங்கிக்கப்பட்டால் மேலே கூறிய ஐயம் திரிபுகளுக்கு முடிவுகள் உண்டாகும். இல்லையேல் அவை இருக்கவே மாட்டா.

VII *92 - 95* <u>போலிச் சமாதானமும் கிறிஸ்துவின் சிலுவையும்.</u>

92 'சமாதானம், சமாதானம்' என்று கிறிஸ்தவ மக்களுக்குச் சொல்லியும், சமாதானத்தைக் கொண்டு வராத போலி தீர்க்கதரிசிகள் ஒழியட்டும்.

93 'சிலுவை சிலுவை'யென்று கிறிஸ்துவின் மக்களுக்குச் சொல்லிச் சிலுவையில்லாமல் போகச் செய்த எல்லா மெய்தீர்க்கதரிசிகள் வாழட்டும்.

94 'உங்கள் தலைவரான கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்' தண்டனை, மரணம், நரகம், இவற்றிலும் 'உங்கள் தலைவர் கிறிஸ்துவைப் பின்பற்றுங்கள்' என்றும்,

95 "சமாதானத்தைப் பற்றிய போலி உறுதிகளால் அன்றிப் பல துன்பங்கள் வழியாக மோட்ச சாம்ராட்சியத்தில் உட்புகுமாறு உறுதி கொள்ளுங்கள்" என்றும் கிறிஸ்தவ மக்களை ஊக்குவிக்க வேண்டும்.[42]

இவ்வாறு தம்முடைய கோட்பாடுகளுக்கான விளக்கங்களைப் போப்புவுக்கு எழுதி அனுப்பினார். இறுதியில் உண்மையோடும் நம்பிக்கையோடும்

> "உங்கள் விருப்பப்படியே எனக்கு மொழியளியுங்கள். அல்லது சொல்லுங்கள். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது தள்ளி விடுங்கள் நான் பின்வாங்க மாட்டேன்"[43]

என்று முடித்தார்.

---

42. கிறிஸ்டோபர் குர்ண்மன், பி. கம்பர் மாணிக்கம், எஸ். தானியேல் மனோகர் (தொகுப்பாளர்கள்), **மார்ட்டின் லூத்தரின் படைப்புகளில் சில......**, பக். 218-229.

43. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 109.

போப்புவின் அழைப்பும் லூத்தரின் நிராகரிப்பும்

லூத்தரின் இக்கோட்பாடுகள் விரைவில் ஐரோப்பா முழுவதும் பரவலாயிற்று. 1517இல் போப் பத்தாம் சிங்கராயர் 'லூத்தர் பேதகத்தினன்' என ஒரு கண்டனக் கடிதம் எழுதி லூத்தரை உரோமாபுரிக்கு அழைத்தார்.[44] பிரடரிக் இளவரசரின் பரிந்துரையின்படி லூத்தர் அங்கு செல்லவில்லை.[45] போப்புவின் பிரதிநிதி ஆக்ஸ்பரோவில் (1518) லூத்தரைச் சந்தித்துப் பேசியபோது லூத்தர் தம் கோட்பாடுகளில் பிடிவாதமாக இருந்தார்.[46] பிறகு லைப்சிக் (Liepzig) பல்கலைக்கழகப் பேராசிரியரான ஜான் எக் (John Ech) என்பவருக்கும் (உரோமான் திருச்சபை சார்பாக) லூத்தருக்கும் நடந்த ஒரு பொது விவாதத்தில் (ஜூன் 1519) லூத்தருக்குத் தோல்வியே ஏற்பட்டது. அதனால் லூத்தர் 'பேதகத்தான்' (திரிபுக் கொள்கைக்காரன்) என்று தீர்ப்பளிக்கப்பட்டார்.[47] இத்தீர்ப்பை ஏற்றுக்கொண்ட லூத்தர் தம் நிலைமையை விளக்கிப் பல நூல்களை வெளியிட்டார்.

லூத்தரின் நூல்கள்

லூத்தர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கவை ஐந்து. அவை லூத்தரின் திடமான நம்பிக்கைகளைத் தெரிவித்தன. அவை

1. நற்செயல்களைப் பற்றிய அருளுரை (மே)
   (Sermon Good Works)

2 உரோமைப் போப்பாதீனம் (ஜூன்)
   (The Papacy at Rome)

3 ஜெர்மானியக் கிறித்தவச் செல்வாக்குப் பேருரை (ஆகஸ்ட்)
   (An Address to the Christian Nobility of the German Nation)

4 திருச்சபையின் பாபிலோனியச் சிறையிருப்பு (செப்டம்பர்)
   (The Babylonian Captivoty of the Church)

---

44. எம். எஸ். ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 317.
45. **மேலது**, ப. 317.
46. **மேலது**, ப. 317.
47. **மேலது**, ப. 318.

5 *கிறித்தவரின் தன்னுரிமை (நவம்பர்)*
(The Freedom of the Christian Man)[48]

ஆகியனவாகும் (இவையெல்லாம் 1520ஆம் ஆண்டில் எழுதியவை). இந்த நூல்கள் எல்லாம் திருச்சபையின் கோட்பாடுகளுக்கு எதிராகவும் முன்பு தாம் எழுதிய 95 கோட்பாடுகளுக்கு ஆதரவாகவும் இருந்ததால் திருச்சபைத் தலைவர்கள் லூத்தரைத் தம் திருச்சபையிலிருந்து விலக்கிவிட (புறம்பாக்க) முடிவெடுத்தனர்.

லூத்தர் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படல்

லூத்தரின் கோட்பாடுகளும், நூல்களும் மக்கள் மத்தியில் பரவிய நிலையில் போப் லூத்தரைத் திருச்சபைக்குப் புறம்பாக்கும் ஆணையை அஃதாவது வெளியேற்றும் ஆணையைப் பிறப்பித்தார் (15-6-1520). அது Bull Exsurge Domine என்றழைக்கப்பட்டது.[49] லூத்தர் திரிபுக் கொள்கைக்காரர் என்பதற்கு நாற்பத்தொரு குற்றச்சாட்டுகள் அதில் அடங்கியிருந்தன. அந்த ஆணை :

> *"இறைவா எழும்பும்! உமக்காக வழக்காடும். இந்த முட்டாள் மனிதர் நித்தமும் உம்மை எவ்வளவாய் நிந்திக்கிறார் என்பதை நினைவுகூரும். நீர் உம்முடைய ஊழியக்காரராகிய பேதுருவுக்காகக் கொடுத்த திராட்சைத் தோட்டத்தை நரிகள் பாழாக்கிக் கொண்டிருக்கின்றன. காட்டுப்பன்றி அதைப் பாழ்படுத்துகின்றது. காட்டு மிருகம் பேரழிவு செய்கிறது. அவரது சமயத் திரிபுகளால் ஏறியிருக்கும் நஞ்சை இனிமேலும் மந்தையின் தலைமை மேய்ப்பர் சகிக்க இயலாது. மேலும் திரிபுக் கொள்கைக் காரரான லூத்தரின் நஞ்சு நிறைந்த நூல்களை எங்கு கண்டாலும் உரோமைச் சபையின் உண்மையுள்ள எவரும் எரித்துவிட வேண்டும். லூத்தரை ஆதரிப்போரும் அவருக்கு அடைக்கலம் அளிப்போரும் தண்டனைக்கு உட்படுவார்கள்"*[50]

என்னும் கட்டளை பிறப்பித்து லூத்தர் அறுபது நாட்களுக்குள் பேதகத்தை (திரிபுக் கொள்கைகளை)க் கைவிடாவிட்டால் திருச்சபையிலிருந்து

48. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப.126.
49. **மேலது**, ப.121.
50. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப.136.

'புறம்பாக்க'ப்படுவார் என்று அந்த ஆணை அறிவித்தது. போப் ஆணையைக் கண்ட லூத்தர் தம் கோட்பாடுகளைக் கைவிடவில்லை. மாறாகத் தம்முடைய நூல்கள் திருச்சபையாரால் எரிக்கப்பட்டதை அறிந்து அவரும் போப்புவின் ஆணையை எரிப்பதென முடிவு செய்தார்.

லூத்தர் போப் ஆணையை எரித்தல்

ஜெர்மனியில் 1520ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் பத்தாம்நாள் காலை ஒன்பது மணிக்கு வித்தன்பர்க் கோட்டைக்கும், எல்பே ஆற்றுக்கும் (Elbe) இடையிலிருந்த பசும்புல்வெளியில் ஒரு கம்பத்தில் திருச்சபைச் சட்ட நூல்களையும் (Book of Canon Law) போப் ஆளுகைச் சட்டங்களையும் (Papal Dearetals) போப் ஆணையின் ஒரு நகலையும் (Copy of the Bull) கட்டிப் பொதுமக்கள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரின் முன்னிலையிலும் அவற்றை லூத்தர் எரித்தார்.[51] இந்த நாளே (10-12-1520) லூத்தரன் திருச்சபையின் தொடக்க நாளாகவும் ஏற்றுக்கொள்ளப் பெற்றது.

லூத்தரன் திருச்சபையின் தோற்றம்

உரோமன் திருச்சபையிலிருந்து வெளியேறிய லூத்தர், சுவிங்கிலி, கால்வின் முதலானவர்கள் உருவாக்கிய புதிய சபைகள் 'சீர்திருத்தச் சபைகள்' (Reformed Churches) என்னும் பொதுப் பெயரைப் பெற்றன. லூத்தர் உருவாக்கிய சபை 'லூத்தரன் சபை' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது.[52] இச்சபை காலப்போக்கில் டென்மார்க், நார்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் பரவியது. டென்மார்க் நாட்டுப் பேரறிஞர் ஹான்ஸ் டௌசென் (Hans Tousen) ஜெர்மனி நாட்டு வித்தன்பர்க் நகரில் லூத்தரின் அருளுரைகளைக் கேட்டு, அதைத் தன்னாட்டில் கல்லூரி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் போதித்தார்.[53] இப்போதனையைக் கேட்ட அன்றைய மன்னரான முதலாம் பிரட்ரிக் (Fredrick I) லூத்தரின்

---

51. **மேலது**, ப 138.
62. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப.185.
63. **மேலது**, ப.186.

கருத்துக்களை விருப்புடன் வரவேற்று அவை தம் நாட்டில் பரவ ஆவன செய்தார்.[54]

அரசரின் உதவியுடன் (1523 - 1533) அந்நாட்டைச் சேர்ந்த பேராசிரியரான பீடெர்சென் (Pedersen) விவிலிய மறையை டேனிசு மொழியில் மொழிபெயர்த்து வழிபாட்டு முறையையும் மாற்றியமைத்தார்.[55] இதனால் பொதுமக்கள் படிப்படியாகப் பழைய நம்பிக்கைகளையும் ஆசாரங்களையும் விடுத்து லூத்தர் கோட்பாடுகளை ஏற்கத் தொடங்கினர். இந்தக் கோட்பாடுகளை ஏற்ற டென்மார்க் நாட்டினர் தாங்கள் வணிகத்திற்காகச் செல்லும் நாடுகளிலெல்லாம் பரப்ப விரும்பினர். அவர்களின் விருப்பப்படியே டென்மார்க் மன்னர் நான்காம் ஃபிரடரிக் தமிழகத் தரங்கம்பாடியில் லூத்தரன் சபையைக் கால்கொள்ளச் செய்தார் (1706). (இந்தச் சபை தமிழகத்தில் நிறுவப்பட்ட விதத்தையும் அது தொண்டாற்றிய விதத்தையும் முதலாம் இயல் விவரிக்கின்றது.)

மேலும் இந்த இயலில் திருச்சபைகளுக்கிடையேயான முரண்பாடுகள் ஆராயப்பட்டன. அந்த முரண்பாடுகள் ஏற்படக் காரணமாக இருந்தவை திருச்சபையில் ஏற்பட்ட சீர்கேடுகளாகும். அதனால் அந்தச் சீர்கேடுகளைத் திருச்சபை எவ்வாறு களைந்தது என்பதையும் இனிக் காண்பது பொருந்தும். அந்தச் சீர்கேடுகளையும் குறிப்பாக லூத்தரால் எடுத்துக் கூறப்பட்ட சீர்கேடுகளைக் களையும் முகமாகப் போப் மூன்றாம் சின்னப்பரால் கூட்டப்பட்டதே திரிந்தென் திருச்சங்கம் (1563 Council of Trent).[56] அந்தத் திருச்சங்கம் நிறைவேற்றிய தீர்மானங்களுள் ஒருசில வருமாறு :

<u>விசுவாசத்திற்காக</u>

1 விவிலியம் பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று.

2 இவை இரண்டினையும் விசுவாசிகள் ஏற்றிடல் வேண்டும்.

---

64. **மேலது**, ப. 186.

65. **மேலது**, ப. 187.

66. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 378.

3 பழைய, புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் தேவ ஏவுதலால் எழுதப்பட்டவை.

4 திருமறை வசனங்கள் கடவுளிடம் இருந்து வந்தவை. எனவே அவற்றுக்குப் பொருள் கூறும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உரியது.

5 போதிக்கும் அதிகாரத்தைக் கற்பிக்கும் திருச்சபைக்குக் கிறிஸ்து வழங்கியுள்ளார்.

6 திருத்தந்தை தவறா வரம் பெற்றவர்.

7 புனித இராயப்பரும் அவருக்குப்பின் உரிய முறையில் திருத்தந்தை யானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர்.

8 உல்கேட் (Vulgate) என்றழைக்கப்படும் இலத்தீன் விவிலியமே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.

9 ஏழு அருட்சாதனங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை.

10 திருப்பலி, கல்வாரிப்பலி, உத்தரிக்கும் தலம் தூயவர்களுக்கும் அவர்களின் திருச்சின்னங்களுக்கும் வணக்கம் செலுத்துதல், திருச்சுருபங்களை வைத்தல் (உருவம்) பரிபூரண பலன்கள் என்பன திருச்சபையால் உண்மையென ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.[57]

<u>குருகுலச் சீர்திருத்தத்திற்காக</u>

1 திருச்சபையின் கர்தினால்கள் குழுவில் (College of Cordinals) அனைத்துலகத்திற்கும் உறுப்பினர் பதவி அளிக்க வேண்டும்.

2 ஆயர்கள் தங்கள் மறை மாவட்டங்களிலேயே தங்கி, மறை போதனைகளை நடத்த வேண்டும்.

3 ஆயர் தன் மறை மாவட்டத்துடன் திருமணம் செய்யப்படுகிறார். எனவே ஒன்றிற்கு மேற்பட்ட மறை மாவட்டங்களுக்கு அவர்கள் பொறுப்பு ஏற்கலாகாது.

---


67. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, பக். 379-380.

4 குருத்துவப் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும்.

5 திருச்சபையின் பரிபூரணப் பலனை வழங்கப் பிரச்சாரப் போதகம் செய்யும் முறை நீக்கப்பட்டுள்ளது.[58]

என்பன. லூத்தர் முதலான சீர்திருத்தவாதிகள் திருச்சபை நிர்வாகம், விசுவாசக் கோட்பாடு ஆகிய இரண்டு முறைகளில் நடந்த சீர்கேடுகளை எடுத்துக் கூறினர். அச்சீர்கேடுகள் அனைத்தையும் ஆய்ந்த அத்திருச்சங்கம் திருச்சபை நிர்வாகத்திலுள்ள சீர்கேடுகளைக் களைந்து சீர்திருத்தம் செய்ததாகக் கூறியது. ஆனால் விசுவாசக் கோட்பாடுகளில் மாற்றம் செய்யாமல் அப்படியே ஏற்றுக் கொண்டது. அதனையே விசுவாசப் பிரமாணம் என்றும் வெளியிட்டது. அதனை இந்நாளிலும் நாள்தோறும் திருப்பலியில் சொல்லச் சொல்லிக் கட்டளையிட்டுள்ளது.

இவ்வாறு உரோமன் திருச்சபைக்கும், திருத்தமுறைத் திருச்சபைக்கும், திருத்தமுறைத் திருச்சபைக்கும் இடையே நடந்த மோதல்கள் ஐரோப்பாவில் மட்டுமன்றிக் கிறித்தவ சமயங்கள் பரவிய நாடுகளிலெல்லாம் தொடர்ந்தன. அத்தொடர்ச்சியின் விளைவு தமிழ் உரைநடை வரலாற்றிற்கு ஒரு திருப்பத்தை உண்டாயிற்று. தமிழ் மொழியில் கிறித்துவ இலக்கியம் எனும் புதிய இலக்கிய வகைகள் தோன்றவும் காரணமாயிற்று.



68. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 380.

இயல் மூன்று
வீரமாமுனிவரின் நூல்களுக்கான பின்புலங்களும் நூல்களும்

இயல் மூன்று

வீரமாமுனிவரின் நூல்களுக்கான பின்புலங்களும் நூல்களும்

தரங்கம்பாடியில் லுத்தரன் சபையைப் பரப்ப வந்த சீகன்பால்குவும் அவரைத் தொடர்ந்து வந்த சமயத் தொண்டர்களும் பல்வேறு வகையான சமயத் தொண்டுகளைச் செய்து தங்கள் கோட்பாடுகளைப் பரப்பினர். அவர்கள் செய்த பணியை முதல் சமயத் தொண்டராகிய சீகன்பால்குவின் கடிதத்தின் வாயிலாக அறியமுடிகிறது. அக்கடிதத்தின் சாரம் (15-11-1713) :

1. *கடவுள் எங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தி எங்கள் மூலம் செயல்படுகிறார்.*
2. *மதமாற்றம் என்பது கடவுளின் செயல். அது கடவுளின் ஆசியால் நிறைவேற்றப்படுகிறது. எனவே செபவழியே எங்களின் முக்கிய வழி.*
3. *தாய் மொழியிலேயே கடவுளின் உண்மையான வார்த்தைகளை எடுத்துக் கூறுதல்.*
4. *இளைஞர்களுக்கெனக் கருணை இல்லத்தை* (Charity school for youth) *ஏற்படுத்தி, கல்வி புகட்டித் திருச்சபையின் வளர்ச்சிக்கு அவர்களைப் பயன்படுத்துதல்*
5. *பள்ளிகளிலிருந்து உருவாக்கப்படும் இளைஞர்களைப் பயன்படுத்தி இறை வார்த்தைகளை அச்சடித்து அது கிறித்தவ மதத்தில் சேரும் மக்களைச் சென்றடையச் செய்தல்.*
6. *மறைக்கல்வி போதிப்பதற்கான வேதியர்களை உருவாக்குதல்.*

7. கடமைக்கென மதமாற்றம் என்றில்லாமல் உண்மையான உள்ளங்கவர்ந்த நம்பிக்கையுள்ள மதமாற்றத்தை உருவாக்குவதற்குக் கிறித்தவ மதத்தைப் பற்றிய முழு உண்மைகளையும் போதித்தல்.

8. மக்களுக்குத் தேவையான எல்லா நல மையங்களையும் (good institutions) உருவாக்கி அதன் வழியாகத் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றுதல்.

9. பணியாளர்களை நியமித்து ஒவ்வொரு வாரமும் அவர்கள் செய்யும் பணியைக் கருத்தரங்கில் வெளிப்படுத்தச் செய்தல். அதன் மூலம் அவர்களை நல்வழியில் நடத்துதல்.

முதலான பணிகளைச் செய்யும்போது கடவுளுக்காகவும் இறை வார்த்தைக்காகவும் நாங்கள் எவ்வளவுதான் துன்பப்பட்டாலும் எங்களை நாங்களே துன்பப்படுத்திக் கொள்வது கிடையாது[1]. இப்பணிகளோடு தஞ்சை மாவட்டத்தில் பஞ்சம் ஏற்பட்டபிறகு (1726) உணவு, பொருள் வழங்கல் முதலான பணிகளையும் செய்தனர். இவர்கள் ஆற்றிய பணிகளை,

1. விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்தல்.
2. விவிலியத்தையும் வேறு பல கிறித்தவ நூல்களையும் சிறுசிறு நூல்களாக அச்சிட்டு மக்களுக்கு வழங்குதல்.
3. கருணையில்லம், மற்றும் பள்ளிகள் நடத்துதல்.
4. சமயப் போதனை செய்தல்.
5. பஞ்சத்தில் வாடிய மக்களுக்கு உதவி செய்தல்

என வகுத்துக் காணலாம்.

1. Arno Lehmann, **It Began to Tranquebar**, p. 110.

விவிலிய மொழி பெயர்ப்பு

கடவுள் ஏவுதலால் எழுதப்பட்ட விவிலியம் கிறித்தவ மதத்தின் அடிப்படைக் கோட்பாடு என்பது லூத்தரின் கருத்து.[2] ஆதலால் அவர் இலத்தீன் மொழியில் உள்ள விவிலியத்தை அவரவர் தாய் மொழியில் மொழி பெயர்த்து மக்கள் அனைவரும் படிக்க வேண்டுமென்று விரும்பினார். இக்கருத்துக்கு அரணாக முதன் முதலில் தாய்மொழியாம் ஜெர்மன் மொழியில் விவிலியத்தை மொழி பெயர்த்து மொழி பெயர்ப்புப் பணியைத் தொடங்கி வைத்தார்.[3] அவ்வாறே அவர் வழித்தோன்றலாகிய லூத்தரன் சபையார் அனைவரும் தாங்கள் தங்கள் சமயத்தைப் பரப்பும் நாடுகளிலெல்லாம் அந்தந்த நாட்டு மொழிகளில் விவிலியத்தை மொழி பெயர்த்து அம்மக்கள் படித்து அறிய உதவினர். சான்றாக லூத்தரன் சபை பரவிய டென்மார்க் நாட்டில் விவிலியத்தை டேனிஷ் மொழியில் மொழி பெயர்த்ததைக் கூறலாம்.[4] அம்முறையில் தஞ்சை தரங்கம்பாடியில் தம் சமயத் தொண்டுகளைத் தொடங்கிய லூத்தரன் சபையார் முதன் முதலில் விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்த்து அதனை அச்சடித்து மக்களுக்குக் கொடுத்துப் படிக்கச் செய்தனர்.

தமிழில் விவிலிய மொழி பெயர்ப்பு

சீகன்பால்கு தமிழகத்திற்கு வந்து (1706) தமிழ் கற்றவுடன் தம் முதல் பணியாக விவிலிய மொழி பெயர்ப்பைத் தொடங்கினார் (22-6-1708). இவருக்கு முன்பே தமிழகத்தில் சமயத் தொண்டாற்றிய கத்தோலிக்கக் குருக்கள் விவிலியத்தில் சிறுசிறு பகுதிகளை மொழி பெயர்த்துத் தங்களின் அருளுரைக்குப் பயன்படுத்தி வந்தனர்.[5] கிறித்தவ சமய நூல்கள் பலவற்றை உரைநடையாக எழுதியிருந்தனர். அவற்றுள் 'சுவிசேசப் புத்தகங்கள்' (Gospel pericopies) என்னும் நூலும்,[6] 'ஞானோபதேச வினாவிடை' என்னும் மொழி பெயர்ப்புச் சுவடியும்,[7] விலிலிய மொழி பெயர்ப்புச் சிறுசிறு பகுதிகளும் சீகன்பால்குவின் விவிலிய

---

2. **விவிலியம், புதிய ஏற்பாடு**, *சின். 2, திமோ. 3 : 16.*
3. *ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம்,* **திருச்சபைச் சீர்திருத்தம்**, *ப.152.*
4. **மேலது**, *ப.187.*
5. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 9.
6. *சரோஜினி பாக்கியமுத்து,* **விவிலியமும் தமிழும்**, *ப.16.*
7. **மேலது**, *ப.10.*

மொழி பெயர்ப்புக்கு உதவியாக இருந்தன. சீகன்பால்குவிற்குத் தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியரின் மகனாகிய கணபதி ஆசிரியரும்,[8] சீகன்பால்குவின் கணக்குப் பிள்ளையும்[9] விவிலிய மொழி பெயர்ப்புக்கு உதவினர். இந்த உதவிகளுடன் மூன்றாண்டுகளுக்குள் (22-6-1708 - 31-3-1711) புதிய ஏற்பாடு முழுவதையும் சீகன்பால்கு மொழி பெயர்த்தார்.[10] அதன்பிறகு பழைய ஏற்பாட்டில் ரூத் ஆகமம் முடிய மொழி பெயர்த்தார்.[11] எஞ்சிய பகுதிகளைப் பெஞ்சமின் சூல்ட்சு (Benjamin Schultze) மொழி பெயர்த்தார்.[12] இவ்வாறு மொழி பெயர்த்த விவிலியத்தை நான்கு பகுதிகளாக அச்சிட்டு வெளியிட்டனர்.

1723	புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாட்டில் நியாயாதிபதி ஆகமம் முடியவும்	சீகன்பால்கு
1724	சங்கீதங்கள்	சீகன்பால்கு
1726	ரூத் ஆகமம் முதல் உன்னதப் பாட்டு முடிய	சூல்ட்சு
1727	மீதிப்பகுதி	சூல்ட்சு[13]

அச்சுப் பிரதிகள் வெளியிடல்

விவிலியப் பகுதிகளையும் லூத்தர் எழுதிய திருமறை அறவுரையை, வேதோபதேச வினாவிடை என்ற பெயரிலும் மொழி பெயர்த்து அச்சிட்டதோடு[14] போர்த்துக்கீசிய மொழியில் "நமக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம்"[15] என்ற புத்தகத்தையும் அச்சிட்டுக் கொடுத்தனர். மேலும்

---

8. சிரில் புருஸ்பெர்த், **இந்தியன் திருச்சபை**, ப. 17.
9. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 9.
10. சரோஜினி பாக்கியமுத்து, **விவிலியமும் தமிழும்**, ப. 10.
11. தயானந்த பிரான்சிஸ், **யாமறிந்த நூல்களிலே**, ப. 93.
12. சபாபதி குலேந்திரன், **கிறித்தவத் தமிழ் வேதாகமத்தின் வரலாறு**, ப. 52.
13. சபாபதி குலேந்திரன், **தமிழ் வேதாகமத்தின் வரலாறு**, ப. 53.
14. சிரில் புருஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை**, ப. 174.
15. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 106.

அக்கியானிகளோடே பண்ணின சிறிது தர்க்கப் பிரசங்கங்கள்,[16] திருச்சபைப் பேதகம்,[17] வேத சாஸ்திரம்[18] முதலான நூல்களையும் 'துதிப்பாடல்களை'யும்[19] வண்ண அட்டைகளால் மனத்தை மயக்கக் கூடிய சிறுசிறு பிரதிகளையும்[20] அச்சிட்டு மக்களுக்கு வழங்கினர். தமிழ் நூல்களை ஓலைச்சுவடியில் படித்துச் சோர்ந்து போன தமிழ் மக்களுக்கு அச்சுப் பிரதிகள் பார்ப்பதற்கு வியப்பையும் படிப்பதற்கு ஆர்வத்தையும் ஊட்டின. மேலும் 'மனிதன் மீட்படையத் தேவையான நெறிமுறைகள்' என்னும் நூல் ஒருபுறம் தமிழும் மற்றொருபுறம் போர்த்துக்கீசியமுமாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.[21] இவ்வாறு அச்சுயந்திரத்தையும் அச்சுக்கலையையும் சமயத் தொண்டிற்காகப் பயன்படுத்தியது போலவே கருணை இல்லங்களையும் பள்ளிகளையும் தொடங்கி அவற்றையும் சமயத் தொண்டிற்காகப் பயன்படுத்தினர். இப்பணிகளால் கிறித்தவம் மக்களிடம் எளிதாகச் சென்றடைய முடிந்தது.

கருணை இல்லங்கள் மற்றும் பள்ளிகள்

தமிழ் நாட்டில் கிறித்தவத்தைப் பரப்பத் தொடங்கிய அக்காலகட்டத்தில் கத்தோலிக்கப் பிரிவினர் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டனர். கிறித்தவ சமயத்தைத் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் தழுவிக் கொண்டபோது உயர்சாதி மக்கள் இவர்களைக் கண்டு ஒதுங்கினர். கிறித்தவ சமயம் தாழ்த்தப்பட்டவர்களுக்கான சமயம், என்ற கருத்து பரப்பப்பட்டது. இந்நிலையினை மாற்ற இவர்கள் உயர்சாதி மக்களிடம் மதத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டினர். அதற்கேற்ற வகையில் தங்களைப் பார்ப்பனர்களைப் போலவே அதாவது உச்சிக்குடுமி வைத்தல், பூணூல் அணிதல், பஞ்சகச்சம் கட்டல் எனத் தம் தோற்றத்தை மாற்றிக் கொண்டதோடு தங்களையும் ஐயர் என்றே அழைத்துக் கொள்ளத் தொடங்கினர். இம்முயற்சியும் வெற்றி பெறவில்லை. இவ்வாறு பல நிலைகளிலும் அவர்கள் வெற்றி பெறாத சூழலிலேயே இந்த

---

16. ஞானாகரபிசம் (ப. ஆ.), **தமிழ்க் கிறித்தவ மரபு**, ப. 6.
17. வீரமாமுனிவர், **பேதக மறுத்தல்**.
18. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 123.
19. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 41.
20. வீரமாமுனிவர், லூத்தேரினத்து இயல்பு.
21. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 56.

மண்ணிலே பிறந்து வளர்ந்து இம்மொழியைப் பேசி இப்பண்பாட்டில் திளைத்த இளைஞர்களைக் கொண்டு சமயப்பணியை மேற்கொண்டால் தங்களின் சமயம் மக்களிடம் எளிதாகச் சென்றடைய முடியும் என்ற நம்பிக்கையில்தான் அவர்கள் கருணை இல்லங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.[22]

ஆதரவற்ற ஏழைக் குழந்தைகளைக் கருணை இல்லங்களில் சேர்த்து அவர்களுக்குக் கிறித்தவ சமயக் கல்வியைப் புகட்டி அவர்களைச் சமயப் பணியாளர்களாக உருவாக்கித் தம் சமயத் தொண்டிற்கு அவர்களையும் உதவியாளர்களாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

டேனிஷ் பள்ளி	-	டென்மார்க் மொழி
போர்த்துக்கீசியப் பள்ளி	-	போர்த்துக்கீசிய மொழி
மலபார் பள்ளி	-	தமிழ்
வேதியர் பள்ளி	-	தமிழ்

முதலான கல்விக்கூடங்களைத் தொடங்கி[23] அவற்றின் வழியாகவும் சமயத் தொண்டு செய்தனர். இத்துடன் சமயப் போதனையும் செய்தனர்.

சமயப் போதனை செய்தல்

தரங்கம்பாடியில் முதல் லுத்தரன் கிறித்தவ நிறுவனம் தொடங்கப்பட்டபோது அச்சபையில்,

> "முன்னாள் கிறித்தவர்கள், ஏழை மக்கள், மற்றும் அதிகப் பணத்திற்காக வாங்கப்பட்ட குழந்தைகள் இருந்தனர்"

என்று Christian friend of truth என்னும் நூலில் எழுதியிருப்பதாக ஆர்னோலேமன் குறிப்பிடுகிறார்.[24]

---

22. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 110.
23. **Ibid.**, p. 46.
24. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 42.

"உணவிற்காகவும், உடைக்காகவும் தம்மை அதிகாரிகளிடம் விற்றுவிட்டு அவர்களுக்கு அடிமைகளாய்ச் சிலர் தரங்கம்பாடியில் இருந்தார்கள்"[25]

என்றும் குறிப்பிடுகின்றார். சமயப் போதனை பெறுவதற்காக ஒவ்வொரு நாளும் இரண்டு மணி நேரம் ஒதுக்கி அவர்களுக்குக் கிறித்தவ உண்மைகளை உரைத்து வந்தனர். கருணை இல்லம் மற்றும் பள்ளிகள் இவற்றில் இருக்கும் பிள்ளைகளை ஊருக்குள் அழைத்துச் சென்று அவர்களுடன் பாட்டுப் பாடிக் கூட்டம் கூட்டிப் பிறகு கிறித்தவ நெறிகளை எடுத்துரைத்து வந்தனர். வீடு வீடாகச் சென்றும் சமயப் போதனைகளைச் செய்து வந்தனர். இவர்கள் செய்து வந்த பணிகளைக் கிரண்ட்லர் எழுதிய கடிதத்தின் வழியாக (1713) அறியமுடிகிறது.

"ஜெபத்திற்கும் மக்களின் தாய்மொழியிலேயே சுவிசேஷசம் பிரசங்கிக்கப்படுவதற்கும் முதலிடம் அளிக்கப்பட்டது. பின் வருங்காலத் தலைமுறைகளுக்குக் கிறித்தவத்தைப் பயிற்சி அளிக்கவும், சபைக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் ஊழியர் தயாரிக்கவும், தர்மப் பள்ளிக்கூடங்கள் நிறுவுதல், கிறித்தவ இலக்கியம் அச்சிட்டுப் பகிர்ந்து கொடுத்தல், இந்திய உபதேசிகர் வீடு வீடாய்ச் சென்று கிறித்தவர்களுக்குப் போதனை கொடுப்பது, மிஷனரிகளுக்கும் இந்திய ஊழியருக்கும் சேர்த்து வாராவாரம் கூட்டம் நடத்துதல் முதலானவை கவனிக்கப்பட்டன. இக்கூட்டங்களில் கடந்த கால வேலைபற்றி அறிக்கை செய்வதும் பணியாற்றுவதற்குத் தேவையான புதிய உண்மைகள் பற்றிக் கற்பிக்கப்படுவதுமுண்டு. இம் முயற்சிகளின் நோக்கம் கிறித்தவர்கள் எண்ணிக்கையில் அதிகரிக்க வேண்டுமென்பதன்று மக்கள் வெளித்தோற்றத்திற்கு மாத்திரம் கிறிஸ்து சமயத்தை அனுசரிக்காது உள்ளவாறே நெஞ்சத்தில் மாற்றம் ஏற்பட்டுக் கிறிஸ்தவ உண்மைகளை நன்குணர்ந்து பக்தி வாழ்க்கை நடத்த வேண்டும்"[26]

---

25. விமலா மனுவேல், **இந்தியத் திருச்சபைத் தலைவர்**, ப.73.
26. சிரில் புரூஸ்பெர்த், **இந்தியத் திருச்சபை**, ப.77.

என்பதாகும். இதன் வழியாகக் கிறித்தவ மிஷனரிமார்கள் பன்முக நடவடிக்கைகளின் மூலம் தங்கள் மதத்தைப் பரப்பும் பணியைச் செய்து வந்ததை அறியமுடிகிறது.

பஞ்சத்தில் பணி

தஞ்சைப் பகுதியில் வெள்ளப் பெருக்குக் காரணமாகக் கொடிய பஞ்சம் (1726) ஏற்பட்டது.[27] தாய் தான் உணவின்றிப் பட்டினி கிடந்ததால் தன் பிள்ளைக்குப் பால் (உணவு) கொடுத்து வளர்க்க இயலாத வறுமைச் சூழலுக்குத் தள்ளப்பட்டாள். பெற்றோர்கள் தாம் பெற்ற பிள்ளை உணவின்றி இறப்பதைவிட உணவு கிடைக்கும் இடத்தில் அதை உண்டு உயிரோடு வாழ்ந்தால் போதும் என்றும், தாங்களும் பசியாற உண்ண வேண்டுமென்றும் பெற்றோர்கள் எண்ணியதால் பிள்ளையை விற்கும் மனச்சாட்சியற்ற மிகப்பெரிய செயலுக்குத் துணிந்தனர். இச்சூழ்நிலையில் லூத்தரன் சபையார் விற்கப்படும் பிள்ளைகளை விலைக்கு வாங்கி அவர்களுக்காகப் பள்ளி ஒன்றை நிறுவி அவர்களைத் தங்கள் வழிமுறையில் வளர்த்தனர். நெஞ்சை உருக்கும் இக்கொடிய பஞ்சத்தில் லூத்தரன் சபையார் செய்த பணி,

> "பசியால் இருந்தேன் எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள். அந்நியனாய் இருந்தேன் என்னை வரவேற்றீர்கள். ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினீர்கள். நோயுற்றிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்"[28]

என்னும் இயேசுவின் சொற்களை அப்படியே பின்பற்றுவதாக இருந்தது. இப்பஞ்சத்தைப் பற்றி 1729ஆம் ஆண்டு மடலும் தெரிவிக்கிறது. வீரமாமுனிவரும் பஞ்சத்தில் வாடிய மக்களுக்காக மனமிரங்கினார் என்பதை,

---

27. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 17.
28. **விவிலியம், புதிய ஏற்பாடு**, *மத். 25 : 35-36.*

"பஞ்ச நோய்கள் உங்களை வருத்த நாம் இரக்கத்தினால் வருந்தி அழுவாராக அழுது, நொந்தார்க்கு நொந்து மெலிவாருக்கு மேவியப்பட்டதோடே நாமும் மெலிந்தாற்போல வருந்தா நிற்போம்"[29]

என்ற அவரின் இந்தக் கூற்றே உறுதிப்படுத்துகிறது.

நன்கொடையாளர்கள்

சமூகத்தை வறுமை, அறியாமை, நோய் ஆகியவற்றிலிருந்து மீட்பதையே கிறித்தவத் திருச்சபையார் தங்களின் முதல் நோக்கமாகக் கொண்டிருந்தனர். இவற்றை நிறைவேற்றுவதற்காகப் பல பெருந்தனக்காரர்களிடம் நன்கொடை பெற்றனர். இவ்வாறு நன்கொடையளித்தவர்களின் விவரம் வருமாறு :

1. இங்கிலாந்திலுள்ள கிறிஸ்தவ அறிவு வளர்ச்சிக் கழகத்தார் அச்சியந்திரம் ஒன்றும் (1712) போர்த்துக்கீசிய மொழியில் புதிய ஏற்பாடு நூல்களும் கொடுத்தனர்.[30]
2. டென்மார்க் அரசர் ஆண்டுதோறும் 2000 டாலர் தன் நாட்டு அஞ்சலக வருமானத்திலிருந்து ஒதுக்கிக் கொடுத்தார்.[31]
3. சமயத் தொண்டர்கள் (கிரண்ட்லர், ஜார்டன், போவிஸ்) முதன் முதலில் தரங்கம்பாடிக்கு வந்தபோது ஏராளமான பணம் கொண்டு வந்தனர் (1709).[32]
4. கிரண்ட்லர் தம் மனைவியின் 8000ம் டாலரைக் கொடுத்தார்.[33]
5. கிரண்ட்லர் தம் ஆண்டு ஊதியத்தில் தாம் எடுத்துக் கொண்டு ரூ 200 தவிர மீத ஊதியத்தைச் சமயத் தொண்டிற்காகக் கொடுத்தார்.[34]

---

29. வீரமாமுனிவர் பதிதர் பேரில் திருக்கடவூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதின நிருபம், ப.1.
30. சிறில் புரூஸ்பெர்த், இந்தியத் திருச்சபை, ப.171.
31. மேலது, ப.176.
32. மேலது, ப.176.
33. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 87.
34. சிறில் புரூஸ்பெர்த், இந்தியத் திருச்சபை, ப.176.

6. சென்னையிலுள்ள டென்மார்க் நாட்டுக்காரரின் உயில்படி ரூ 600 கிடைத்தது.[35]

7. இங்கிலாந்திலிருந்து உண்டியல் (தண்டல்) வழியாக 1000 டாலர் கிடைத்தது.[36]

8. சீகன்பால்கு ஐரோப்பிய நாடுகளில் கேட்ட உதவியின்மூலம் 628 டாலர் கிடைத்தது.[37]

9. ஐரோப்பாவில் உள்ளவர்கள் பள்ளியில் தங்கிப் படிக்கும் ஒரு குழந்தைக்கு ஒரு ஆண்டுக்காகும் செலவுத் தொகையை ஏற்றல்.[38]

என நன்கொடைகளின் வாயிலாகச் செய்த சமயத் தொண்டுகளால் ஈர்க்கப்பட்டு முதன்முதலில் லுத்தரன் சபையில் சேர்ந்தவர் இராசநாயக்கன் என்பவர். அவரைப் பற்றியும், அவரைப் போன்ற இதர சமயத் தொண்டர்களைப் பற்றியும் இனி விரிவாகக் காணலாம்.

இராசநாயக்கன்

தஞ்சைப் பகுதியைச் சேர்ந்த[39] இராசநாயக்கன் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த (பறையர்)[40] கத்தோலிக்கக் கிறித்தவர்.[41] கத்தோலிக்கப் பள்ளியில் எழுத்தறிவு பெற்றார். அங்குப் புனிதர்களின் வரலாறு, கன்னி மாதாவின் அற்புதங்கள் முதலான ஓலைச்சுவடிகளைப் படித்தார்.[42] இன்னும் பல நூல்களைப் படிக்க ஆர்வங் கொண்டார். பிறகு தஞ்சை அரசரின் படையில் சேர்வைக்காரனாகப் பணியில் சேர்ந்தார்.[43] அப்போது புதிய ஏற்பாட்டு அச்சுப்பிரதி அவருக்குக் கிடைத்தது. அதன் விளைவை,

---

35. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 47.
36. **Ibid.**, p. 47.
37. **Ibid.**, p. 93.
38. **Ibid.**, p. 96.
39. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 14.
40. **Ibid.**, p. 14.
41. சரோஜினி பாக்கியமுத்து, **விவிலியமும் தமிழும்**, ப. 61.
42. **மேலது**, ப. 61.
43. **மேலது**, ப. 61.

> "இரவு முழுவதும் விளக்கொளியில் படித்தேன். ஏற்கெனவே கனன்று கொண்டிருந்த எனது நம்பிக்கை மீது அந்த வேத வசனங்கள் நெய்த் துளிகளாகப் பெய்யவே எனது நம்பிக்கை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. நூலைப் படித்து முடித்ததும் அதை விளங்கிக் கொள்கின்ற ஒளியை ஆண்டவன் எனக்கு அருளினார்"[44]

என விளக்குவார்.

தரங்கம்பாடிக்கு வருதல்

1726ஆம் ஆண்டு தஞ்சைப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பஞ்சம் தரங்கம்பாடியையும் பாதித்தது.[45] தரங்கம்பாடிப் பகுதிக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியின் காரணமாகத் தஞ்சைப் படையிலிருந்த இராசநாயக்கன் தரங்கம்பாடிக்கு வந்தார். அங்கு, தாம் முன்பு படித்த விவிலிய மொழி பெயர்ப்புச் சுவடியை அச்சிட்டு வெளியிட்டவர்கள் தரங்கம்பாடியிலுள்ள சமயத் தொண்டர்கள் என்பதை அறிந்து அவர்களுடன் தொடர்பு கொண்டார். அப்போது அங்கிருந்த சமயத் தொண்டர்களில் முதன்மையானவர்கள் ஃபிரெடிரிக் பிரெஸியர் (Friedrich Pressier), வால்த்தர், கிறிஸ்தோபர் ஆகியோராவர். இராசநாயக்கன் இவர்களிடம் திருமுழுக்குப் பெற்று லூத்தரன் சபையில் சேர்ந்தார்.[46] அவரோடு படைவீரர்கள் சிலரும் திருமுழுக்குப் பெற்றனர். அதன்பிறகு சிறிது காலம் படையில் பணியாற்றிக் கொண்டே விவிலியத்தை மக்களுக்குப் போதித்தார். பிறகு தமது அரசாங்கப் பணியைத் துறந்து முழுநேரமாக விவிலியத்தைப் போதிக்கும் பணியை மேற்கொண்டார்.[47]

இப்பணியின் விளைவாகப் பல கத்தோலிக்கர்களும் சூரப்பன் என்னும் ஒரு கத்தோலிக்க வேதியரும் அவர் மகனுமான சத்தியநாதனும் லூத்தரன் சபையில் சேர்ந்தனர். சத்தியநாதன் லூத்தரன் சபையில் வேதியராகப் பணி ஏற்றார்.[48]

---

44. சரோஜினி பாக்கியமுத்து, **விவிலியமும் தமிழும்**, ப. 62.
45. **மேலது**, ப. 62.
46. சரோஜினி பாக்கியமுத்து, **விவிலியமும் தமிழும்**, ப. 61.
47. **மேலது**, ப. 61.
48. சிரில் புரூஸ்பொர்த், **இந்தியத் திருச்சபை**, ப. 182.

இராசநாயக்கனின் பணி லுத்தரன் சமயத் தொண்டர்களுக்கு மிகவும் உதவியாக இருந்ததால் அவர்கள் அவருக்குச் சிறப்பு ஊதியம் அளித்தனர்.[49] இவரைப் போலவே இன்னும் பலர் லுத்தரன் சபையில் சேர்ந்தனர்.

இக்னேசி

இக்னேசியும் அவரது இளைய சகோதரர் சருவனும் வடுகர் இனத்தைச் சார்ந்தவர். இவர்கள் கத்தோலிக்க மதத்தில் வீரமாமுனிவரிடமிருந்து பணியாற்றியபொழுது இக்னேசி சமையல்காரராகவும், சருவன் வேதியராகவும் செயல்பட்டனர்.[50] இவர்களின் செயல்முறைகளை வீரமாமுனிவரின் மடல் பின்வருமாறு விளக்குகிறது. அதன் சாரம் :

> "வடுகர் சமுதாயத்தைச் சேர்ந்த இருவர் எங்களுக்கு அதிகத் தொந்தரவைக் கொடுத்தார்கள். அவர்களில் ஒருவன் இன்னாசி இவன் எங்களிடம் சமையல் வேலை செய்தவன். மற்றவன் அவனுடைய சகோதரன், சருவன். இவன் எங்களிடம் வேதியராகப் பணி புரிந்தவன் முதலாமவன் டேனிஷ் சபையில் வேதியராக நியமிக்கப்பட்டான். அவன் தஞ்சாவூர் அரசிற்கு அடிக்கடி வந்து டேனிஷ் சபையில் பல தாழ்த்தப்பட்ட இனத்தினரைச் சேர்த்தான். அடுத்தவன் மேலும் மோசமான காரியத்தைச் செய்தான். இதுவரை கடற்கரை ஓரமாக மட்டுமே தங்கள் செயல்பாடுகளை நிகழ்த்திக் கொண்டிருந்த டேனிஷ் சபையினரை நாட்டின் உட்பகுதிக்கு அழைத்து வந்து பலருக்கும் அவர்களை அறிமுகம் செய்து வைத்தான். இவ்வாறாக அவன் நமது திருச்சபையை அழிக்கும் நோக்கத்தில் மும்முரமாகச் செயல்பட்டான். இது தொடர்பாக அவன் டேனிஷ் சபையினருக்கு எழுதிய கடிதங்கள் சில நமக்குக் கிடைத்தன. அதன் பேரில் அவன் நமக்குப் புரிந்த துரோகம் வெளிப்படுத்தப்பட்டது. அவன் பணியிலிருந்தும் திருச்சபையிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளான்"[51]

---

49. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 13.
50. **Ibid**., p. 5.
51. *1730ஆம் வருடம் ஆகஸ்ட் 26ஆம் தேதி எழுதப்பட்ட 1729ஆம் வருடத்திற்கான ஆண்டு மடல்.*
    S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 5.

என அமைந்துள்ளது. இதுதவிர 'நியோபைட்ஸ்' (Neophytes) என்ற இனமக்களும் லூத்தரன் சபையில் சேர்ந்தனர்[52] என்று வீரமாமுனிவர் தம் ஆண்டு மடலில் குறிப்பிடுகிறார் (1729).

சமயத் தொண்டர்கள் இயன்றவரைத் தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஆதரவு காட்டி அவர்களையே தங்கள் சபையில் சேர்த்தனர். இதன் விளைவாகத் திருக்கடவூரிலுள்ள கத்தோலிக்கரான ஆதி திராவிடர் ஒருவர் லூத்தரன் சபையில் சேர்ந்தார்.[53] அதனால் கத்தோலிக்கச் சமயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டார் (புறம்பாக்கப்பட்டார்) (அதாவது கத்தோலிக்கக் கோயிலுக்கு விலக்கப்பட்டவர்கள் வரக்கூடாது என்பதாகும்.) லூத்தரன் சபையில் சேர்ந்தவருக்கு அவர் நண்பரான செல்வந்தர் ஒருவர் இவருக்கு ஆதரவு கொடுத்தார். ஆதலால் அவ்வூர் மக்களும் லூத்தரன் சபையில் சேர்ந்தனர். புறம்பாக்கப்பட்டவர்களை ஆதரித்து அவர்களைப் போலவே தாங்களும் கத்தோலிக்கக் கோயிலுக்குச் செல்லாமல் இருந்தனர்.[54] இவர்களைப் போலவே இப்பகுதியைச் சுற்றியுள்ள பலர் லூத்தரன் சபையில் சேர்ந்ததால் ஆண்டுதோறும் அவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டேயிருந்தது. இதனை

ஆண்டு	போர்த்துக்கீசியர்	தமிழர்	மொத்தம்
1707	16	19	35
1708	30	27	57
1709	4	13	17
1710	23	30	53
1711	4	15	19
1712	8	13	21
1713	16	9	25

---

52. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 5.
53. சரோஜினி பாக்கியமுத்து, **விவிலியமும் தமிழும்**, ப. 61.
54. **மேலது**, ப. 11.

1714	*23*	*18*	*41*
1715	*13*	*8*	*21*
1716	*8*	*2*	*10*
1717	*14*	*21*	*35*
1718	*17*	*16*	*33*
1719	*22*	*39*	*61*
1720	*18*	*26*	*44*
1721	*12*	*6*	*18*
1722	*5*	*9*	*14*
1723	*18*	*5*	*23*
1724	*6*	*15*	*21*
1725	*23*	*11*	*34*
1726	*24*	*25*	*49*
1727	*50*	*77*	*127*
1728	*20*	*245*	*265*
1729	*17*	*265*	*282*
1730	*39*	*257*	*296*

எனும் இப்பட்டியலால் தெளியலாம்.[55]

லூத்தரன் சபையார் தரங்கம்பாடியில் சமயத் தொண்டு செய்து கொண்டிருக்கும்போது அவர்களுக்கு முன்பிருந்தே கத்தோலிக்கர்கள் தஞ்சை ஏலாக்குறிச்சியில் சமயப்பணி ஆற்றிக் கொண்டிருந்தனர். ஏலாக்குறிச்சியைச் சேர்ந்த பிறவிக் கத்தோலிக்கர்களில் சிலர் லூத்தரன் சபையாரின் சமயத்

55. Arno Lehmann, **It Began at Tranquebar**, p. 122.

தொண்டுகளால் ஈர்க்கப்பட்டு அவர்களும் சபையில் சேர்ந்தனர். இதையறிந்த ஏலாக்குறிச்சியில் சமயத் தொண்டாற்றிய வீரமாமுனிவரும், சென்னை மயிலாப்பூரிலிருந்த அவருடைய தலைவர்களும் அதிர்ச்சியுற்றனர். இவ்வதிர்ச்சி இரு திருச்சபைகளுக்கிடையே முரண்பாடுகள் வளரக் காரணமாயிற்று. இம்முரண்பாடுகளை,

1. கத்தோலிக்கத் திருச்சபையாருக்கு (வீரமாமுனிவர்) முரண்பாடு ஏற்படக் காரணங்கள்
2. லுத்தரன் திருச்சபையாருக்கு முரண்பாடு ஏற்படக் காரணங்கள்

ஆகிய துணைத்தலைப்புகளின் வழி ஆராயலாம்.

1. கத்தோலிக்கத் திருச்சபையாருக்கு (வீரமாமுனிவர்) முரண்பாடு ஏற்படக் காரணங்கள்

1. விவிலியத் தமிழ் மொழிபெயர்ப்பில் தவறு
2. மொழி பெயர்ப்பில் வீரமாமுனிவர் கண்ட குறைபாடுகள்
3. கத்தோலிக்கர் லுத்தரன் சபையில் சேர்தல்
4. நியோஃபைட்ஸ் இனத்தார் முழுதும் லுத்தரன் சபையில் சேர்தல்
5. பஞ்சத்தில் குழந்தைகளை விற்றல்
6. லுத்தரன் சபையார் இலவச உறைவிடக் கல்வி பயிற்றுதல்
7. லுத்தரன் சபையார் அச்சு நூல்கள் வெளியிடல்
8. லுத்தரன் சபையார் முரண்பாட்டுக் கருத்து நூல்கள் வெளியிடல்
9. கத்தோலிக்க வேதியர் லுத்தரன் சபையில் சேர்தல்
10. திருக்கடையூர் மக்கள் கோயிலைப் புறக்கணித்தல்
11. கத்தோலிக்கரான இராசநாயக்கன் லுத்தரன் சபையில் சேர்ந்த பிறகு செய்த செயல் முறைகள்

என முரண்பாட்டுக் காரணங்களை வகுத்து ஒவ்வொன்றாய் நோக்குவது பொருத்தமுடையாகும்.

விவிலியத் தமிழ் மொழி பெயர்ப்பில் தவறு

பொதுவாக எந்தவொரு கருத்தும் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று சேர வேண்டுமெனில் அவ்வந் நாட்டு மொழிகளில் அக்கருத்துக்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். லூத்தரும் தாம் ஏற்றுக்கொண்ட விவிலியத்தின் கருத்துக்கள் தம் நாட்டு ஜெர்மானியர்களுக்குச் சென்று சேரவேண்டும் என்று விர்ம்பினார். அவரே ஜெர்மானிய மொழியிலும் மொழி பெயர்த்து விவிலியத்தின் சிறப்பையும் அத்தியாவசியத்தையும் கீழ்க்கண்டவாறு விளக்கினார் :

> "விவிலியம் ஒன்றே திருச்சபையின் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும் அளவுகோல்; சோதித்தறியும் உரைகல். திருச்சபையின் அதிகாரமும் விவிலியத்தில்தான் ஆதாரப்பட்டிருக்கிறது. தூய ஆவியானவர் மனிதரோடு பேசுவதற்குப் பயன்படுத்தும் கருவியும் அதுவே. நமக்குத் தேவையான புதிய செய்தியைத் திரும்பவும் திரும்பவும் விவிலியமறை தன்னுள் கொண்டுள்ளது. அதன் மையச் செய்தி என்னவெனில், கடவுளுக்கும் அவர் படைப்புக்கும் உள்ள உறவே. இந்தச் சாதாரண உறவு எழுத்தின்படி புரட்சிகரமானது. அது எல்லாவற்றையும் மாற்றுகிறது"[56]

லூத்தர் கருத்துப்படியே தரங்கம்பாடி லூத்தரன் சபையாரும் விவிலியத்தைத் தமிழ் மொழியில் பெயர்த்து அதை எல்லோரும் படித்துக் கிறித்துவை அறிய விரும்பினர். அந்தக் கிறித்துவை - கிறித்தவத்தை மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சியில் தரங்கம்பாடியார் தமிழாக்கம் செய்த விவிலிய நூல் பெரும் பங்களித்தது.

தாங்கள் பின்பற்றும் சமயத்தை, - கோட்பாடுகளை - தங்கள் மொழியிலேயே படித்து உணர்கின்ற பொழுது ஏற்படும் தெளிவு அவர்களின் நம்பிக்கை வளர்த்தற்குப் பெரும் துணையாகும். இந்த அடிப்படையில் விவிலியத்தின் பங்களிப்பு மிகுதியாக இருந்த அதேவேளையில் அதே

---

56. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 191.

மொழியாக்கம் கத்தோலிக்கர்களைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கியது. போப்பின் கட்டளைகளை ஏற்றுக்கொண்டவர்களாகவும் மரபுவழிப்பட்ட நம்பிக்கையில் திளைப்பவர்களாகவும் விவிலியத்தை இலத்தீன் மொழியிலேயே அறிந்தவர்களாகவும் விவிலியம், இலத்தீன் மொழியிலேயே இருக்க வேண்டுமென்று விரும்பியவர்களாகவும் இருந்த கத்தோலிக்கர்களுக்கு இப்பணிகள் வெறுப்பைத் தந்தன. அதன் விளைவாக மொழியாக்கத்தின் தன்மைகள் குறித்து அவர்கள் குறை காணத் தொடங்கினர். மொழியாக்கத்திலுள்ள தவறுகள் குறித்துத் தம் கடுங் கண்டனத்தைத் தெரிவித்ததில் முன்னிலை வகிப்பவர் வீரமாமுனிவர் ஆவார். அவர் கூற்று வருமாறு :

> "முத்தும் பவளமும் மூழ்கி எடுக்க அறியாதவர்கள் மோசம் போகாதபடிக்குக் கடலில் விழ வேண்டாமென்று இராசா விலக்கினாற் கடலிற் கிடக்கும் முத்தும் பவளமும் எடுக்க வேண்டாமென்று அவன் விலக்கினதாகச் சொன்னால் அது பொய்யல்லோ. அவ்வண்ணமே அமிர்தக் கடலாகிய வேதாகமங்களில் - முத்தும் பவளமுமாகத் தேவ - இரகசியங்கள் கிடப்பது நிச்சயம்தானே! ஆகிலுங் கடலிலுள்ள மணிகள் - நீர்மேல் மிதவாதது போல வேதத்திலேயும் பல தேவ - இரகசியங்கள் மேலே தோன்றாமல் ஒளித்திருப்பதே நிச்சயமாகிப் படியாதவன் அவற்றைக் கண்டெடுக்க வேண்டாம் என்றாற்போல மறைந்திருக்கும் வேத வசனங்களுக்குத்தானே அர்த்தஞ் சொல்லத் துணிந்தால் ஆண்டவர் நினைத்த அர்த்தத்துக்கு விபரீதங்களைச் சொல்லி மயங்கிக்கெடுவது நிச்சயம்தானே"[57]

இந்த உவமைக்கூற்றே அவர்கள் விவிலிய மொழியாக்கத்தை விரும்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

விவிலியத்தின் தமிழாக்கம் குறித்து வீரமாமுனிவர் எந்த அளவு கசப்புணர்ச்சி கொண்டிருந்தார் என்பதை வி. மி. ஞானப்பிரகாசம் அடிகளார் ஒரு

---

57. வீரமாமுனிவர், **பேதகம் மறுத்தல்**, ப.14.

நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி விளக்குவது இங்கு நோக்கத்தக்கததாகும். அந்நிகழ்ச்சி வீரமாமுனிவரும் லுத்தரன் சபைத் தொண்டரான ஸ்கல்ட்சும் சந்தித்துக் கொண்டபோது (1726) ஸ்கல்ட்சு தமிழ் விவிலிய மொழி பெயர்ப்பை வீரமாமுனிவரிடம் காண்பித்தார். அதைப் பார்த்த முனிவர் அப்பணியைப் பாராட்டி ஒன்றும் சொல்லவில்லை. தவறுகள் நிறைந்த இந்த மொழிபெயர்ப்பு,

"முத்துக்களை அள்ளிப் பன்றிகளுக்குப் போட்டது போலவும்"[58]

"மாணிக்கக் கற்களை அள்ளி மண்ணில் எறிந்தது போலவும்"[59]

உள்ளது என்றும் தவறான இந்த மொழிபெயர்ப்பு மக்களைச் சென்றடைவது,

"பாலில் நஞ்சைக் கலந்து கொடுப்பது போலவும்"[60]

இருந்ததாக முனிவர் நினைத்திருக்கலாம் என்பதாகும்.[61]

விவிலியத் தமிழ் மொழிபெயர்ப்பில் வீரமாமுனிவர் கண்ட குறைபாடுகள்

எந்த ஒரு நூலை மொழி பெயர்த்தாலும் அடிப்படையாகச் சில குறைபாடுகள் தோன்றுவது இயற்கை. ஒரு நூலை மொழிபெயர்க்கும்பொழுது மொழி பெயர்ப்பாளர் நூலின் மூலமொழியிலும் அதே அளவு மொழியாக்கம் செய்யவேண்டிய மொழியிலும் நல்ல தேர்ச்சியும் புலமையும் பெற்றிருக்க வேண்டும் அவற்றுடன் இரண்டு மொழி பேசுவோரின் மரபுக் கூறுகளையும் அறிந்தவராக இருக்க வேண்டும். அத்தகு திறமையுள்ளவர்களால் மொழி பெயர்ப்புக்கொள்ளும் நூலே சிறப்பாக அமையும். ஆனால் தரங்கம்பாடியார் விவிலியத்தை மொழி பெயர்க்கும்பொழுது இருமொழியிலும் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள் வாழ்ந்திருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. அதனால் அம்மொழியில் அங்கொன்றும், இங்கொன்றும் சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. தரங்கம்பாடியாரின் சமயப் பணிவினால் ஏற்பட்ட செல்வாக்கு கத்தோலிக்கப் பிரிவினரைப் பெரிதும் பாதித்ததனால் கத்தோலிக்கர்களின்

---

58. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 9.
59. **Ibid.**, p. 9.
60. **Ibid.**, p. 9.
61. வி. மி. ஞானப்பிரகாசம், **காரித்தாஸ் என்னும் சேசு சபை இதழ்**, ஜூலை 1963.

கோபம் முழுக்கவும் அம் மொழி பெயர்ப்பின்மீது திரும்பியது. இலத்தீனில் தேர்ச்சியும் தமிழில் நுண்மாண் நுழைபுலமும் கொண்டிருந்த வீரமாமுனிவர் அம்மொழியாக்கத்தில் காணப்படும் தவறுகளை இரண்டு மொழிகளின் மொழி மரபு அடிப்படையில் வெளிப்படுத்தலானார். வீரமாமுனிவரின் பார்வையில் தரங்கம்பாடியார் என்ன நோக்கத்திற்காக ஈடுபட்டார்கள் என்பதைவிட இவர்கள் எப்படிச் செய்யலாம் என்ற ஆத்திர உணர்வே மேலோங்கி இருந்தது எனலாம். அம்மொழியாக்கத்திலுள்ள குறைபாடுகளை வீரமாமுனிவர் கீழ்க்கண்ட முறைமைகளில் சுட்டிக் காட்டுகின்றார்.

மொழி மரபு

பண்பாடு

விசுவாச சத்தியம்

இலக்கணம்

கொள்கைக்கேற்ப மாற்றி எழுதுதல்

மொழிமரபுக் குறைபாடு

இயேசு, கூட்டத்திற்குப் போதித்துக் கொண்டிருந்தபோது பெண்ணொருத்தி எழுந்து,

> "உம்மைத் தாங்கிய வயிறும் நீர் பாலுண்ட கொங்கைகளும் பேறு பெற்றவையே!"[62]

என்று கூறினாள். அதற்கு ஏசு மறுமொழியாக,

> "கடவுளுடைய வார்த்தையைக் கேட்டுக் கடைப்பிடிப்பவர்கள் அதிலும் பேறு பெற்றவர்கள்"[63]

என்றார். இப்படித்தான் விவிலிய மூலநூலில் உள்ளது. இதை லுத்தரன் சபையார் மொழி பெயர்த்தபோது பெண்ணொருத்தி யேசுவிடம் பேசியதற்கு,

62. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 9.
63. **Ibid.**, p. 9.

"உனக்கு என்னுடனே காரியம் என்ன? என்று மொழி பெயர்த்தார்கள்.
இது தவறு எப்படியெனில்,

"இலத்தின் மொழியில் (Mihi et tibi) மிதிபெத் தீபி என்று இருக்க இரண்டுங் 'கு' வ்வென்னும் நான்காம் வேற்றுமை ஆகையால் நமக்கும், உமக்கும் என்று அர்த்தமாகும்"[64]

ஆனால் தரங்கம்பாடியார் 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு இல்லாமல் மொழி பெயர்த்தமையால் அதன் அர்த்தம் மாறித் தவறான கருத்துகள் உருவாகின்றன.

பண்பாட்டுக் குறைபாடு

ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழர் பண்பாடு. இதற்கு ஏற்ப,

"கணவன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யட்டும்"[65]

என்று விவிலியத்தில் இருக்கிறது. இதை மொழி பெயர்த்த தரங்கம்பாடியாரோ,

"புருஷனானவன் தன் ஸ்திரியானவளுக்குச் செய்ய வேண்டிய பிறவுபகாரத்தைச் செய்யக் கடவான்"[66]

என்று மொழி பெயர்த்து எழுதினார்கள். இதற்கு வீரமாமுனிவர் கூறும் விளக்கம், 'கணவன் தன் மனைவிக்குச் செய்யும் பிற உபகாரம் என்பதற்கு அர்த்தம் என்னவென்றால் தன் மனைவியின் ஆசையைப் பிறரைக் கொண்டு நிறைவேற்றுவது' என்பதாகும்.[67] இதில் கணவன் மனைவிக்குரிய தன் கடமையைச் செய்யாமல் பிறரைக் கொண்டு செய்விப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்குப் பொருந்தாத செயலாகத் தோன்றுகிறது.

---

64. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 45.
65. **விவிலியம் புதிய ஏற்பாடு**, கொரி. 7 : 3.
66. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 25.
67. **மேலது**, ப. 25.

திருமணம் கடவுளின் அருளால் நடக்கிறது. கணவன் மனைவி இருவரும் ஒருவர் ஒருவரைப் புரிந்து கொண்டு மதிப்பும், அன்பும், ஒழுங்கும் ஒருங்கே பெற்றுத் தாங்கள் செய்யும் அனைத்துச் செயல்களையும் மன ஒருமைப்பாட்டுடன் செய்ய வேண்டும். கணவன் தாம் கொண்ட தாரத்தை மதிக்காமலும் விரும்பாமலும் மற்றொரு பெண்ணை விரும்பினால் தம்மைக் கடவுள் தண்டிப்பார் என்று அஞ்சியும் வாழ வேண்டும் என்ற கருத்தை விவிலியப் புதிய ஏற்பாட்டில் புனித சின்னப்பர் எபிரேயருக்கு,

> "திருமணம் அனைவராலும் மதிக்கப்படுவதாக பள்ளி அறை மஞ்சம் மாசுறாதிருக்கட்டும்"[68]

என்று எழுதினார். அந்த வசனத்தைத் தரங்கம்பாடியார் மொழி பெயர்த்ததற்கு உண்டாகும் அர்த்தமோ எனில் குருக்களுக்கும் சந்நியாசிகளுக்கும் திருமணம் செய்வது நல்லது என்றும், லுத்தரோடு தாங்கள் சொல்லும் அர்த்தத்துக்கு இந்த வசனம் உதவும்படிக்கு அதனை மாற்றி,

> "சகல பேரிடத்திலும் சமுசாரத்துவம் சங்கைபடத்தக்கது"[69]

என்றனர். ஆகையால் சந்நியாசிகள் - குருக்கள் இவர்களிடத்தில் விவாகம் நல்லது என்பர். ஆயினும் சகல பேரிடத்திலும் விவாகம் நல்லது என்றால்,

> "பெற்ற மகளைத் தகப்பன் கொண்டாலும் அண்ணன்கூடப் பிறந்த தங்கையைக் கொண்டாலும் திருமணம் மதிக்கத்தக்கது"[70]

என்று எண்ணத் தோன்றுவதாக உள்ளது என்கிறார் வீரமாமுனிவர். மேலும் சின்னப்பர் கொரிந்தியருக்கு,

> "மற்ற அப்போஸ்தலர்களும் ஆண்டவரின் சகோதரர்களும் கேபாவும் செய்தது போல நாங்களும் ஒரு பெண் பிள்ளையைத் தங்கச்சியாகக் கூட்டிக் கொண்டு போக எங்களுக்கு உரிமை இல்லையா"[71]

---

68. **விவிலியம் புதிய ஏற்பாடு**, *சின். எபி. 13 : 4.*
69. *வீரமாமுனிவர்,* **வேத விளக்கம்**, *ப. 228.*
70. *வீரமாமுனிவர்,* **வேத விளக்கம்**, *ப. 228.*
71. **விவிலியம், புதிய ஏற்பாடு**, *சின். 1 கொரி 9 : 4.*

என்று எழுதினார். இப்பகுதியை மொழி பெயர்த்த லுத்தரன் சபையாரோ அப்போஸ்தலர்களும் பெண்சாதியை வைத்திருந்தார்கள் என்று காட்டி மற்றக் குருக்களால் சந்நியாசிகளும் விவாகம் செய்வது நல்லதென்று ஒப்பித்தார்கள் என்பதை,

> "மற்ற அப்போஸ்தலர்களைப் போலவும் ஆண்டவருடைய சகோதரர்களைப் போலேயுங் கேப்பெஸ்கிறவரைப் போலேயுங் கூடப்பிறந்தவளாயிருக்கிற ஒருத்தியைப் பெண்சாதியாக அங்கங்கே கூட்டிக்கொண்டு போகவும் எங்களுக்கு வல்லமை உண்டு"[72]

என்று எழுதி வைத்தனர்.

ஆகையால் கூடப்பிறந்த தங்கச்சியைப் பெண்சாதியாக வைப்பது மிருக இனத்தில் ஒழிய அறியாமையில் அமிழ்ந்த நாட்டிலும் நடவாத முறையாகும் என்பதைத் தரங்கம்பாடியார் அறியாது எழுதியுள்ளார்களே என்று வருத்தமுற்று வீரமாமுனிவர் எழுதுகிறார்.

விசுவாச சத்தியத்தில் குறைபாடு

மேலும் மேற்சொன்ன வசனத்தில் சேசுநாதருக்குச் சகோதரர்கள் உண்டு என்னும்போது அவரையல்லாதே தேவமாதா பெற்ற பல பிள்ளைகள் உள்ளனர் என்றும், ஆதலால் அவள் கன்னி மாறாத தாயல்ல என்றும் எண்ணத் தோன்றுகிறது.

லுத்தரன் சபையினர் தேவமாதாவைப் பரிச்த்தக் கன்னி என்று விசுவசிக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்கள் இயேசுநாதருக்குச் சகோதரர்கள் உண்டு என்றதால் அவர்கள் விசுவாச சத்தியத்தை மறுக்கிறார்களே என்று வீரமாமுனிவர் குறை கூறுகிறார்.

இலக்கணக் குறைபாடு

தரங்கம்பாடியினர் உரைநடைமொழி, பேச்சுமொழி என்ற வேறுபாடு தெரியாமல் மொழி பெயர்த்துள்ளனர் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

---

72. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 221.

"புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் போல் கலப்பற்ற ஞானப்பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாய் இருங்கள்"[73]

என்று விவிலியத்தில் இருக்கிறது. தரங்கம்பாடியாரோ,

"புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் போல் கலப்பற்ற ஞானப்பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாய் இருங்கோ"[74]

என்று பேச்சுமொழிச் சொற்றொடராகவே இருக்கிறது.

தம் கொள்கைக்கேற்ப மாற்றி எழுதுதல்

இராயப்பர் எழுதிய நிருபத்தில்,

"ஆண்டவர் உங்களைத் தேர்ந்து கொண்டதால் தரும நடக்கைகளால் அதில் நிலைகொள்ளுங்கள்"[75]

என்று 'விவிலியத்தில் உள்ளதை லுத்தரது கொள்கையான 'தரும நடக்கைகளால் பலன் இல்லை' என்பதைக் கருத்தில் கொண்டு 'தரும நடக்கை' என்பதை விட்டுவிட்டு எழுதினார். இவ்வாறு மூலத்தை விட்டுவிட்டு மொழி பெயர்த்திருக் கிறார்களே என்ற வருத்தம் வீரமாமுனிவருக்கு இருந்தது.

மேற்கண்ட குறைகள் நிறைந்த நஞ்சு கலந்த நற்செய்தி உயிரைக் கொல்லும் தன்மை உடையது. அதனால் அதைக் காணவும், படிக்கவும் செய்யாதீர்கள் என்பதை,

"நீங்கள் கரையேறுவதற்கு உங்களுக்கு எழுதப்பட்டதாக எண்ணிப் பதிதர் கீழ்மொழித் தமிழாய் அச்சிலே பதித்துத் தந்த சுவிசேஷமும் பற்பல பிரபந்தங்களும் உயிரைக் கொல்லும் நஞ்சென்று அதுகளை வெறுத்துக் காணவும் கேட்கவும் வேண்டாம்"[76]

---

73. **விவிலியம், புதிய ஏற்பாடு**, *1 இரா. 2 : 2.*
74. *வீரமாமுனிவர்,* **வேத விளக்கம்**, *ப. 237.*
75. **விவிலியம்**, *2 இரா. 1 : 10.*
76. *வீரமாமுனிவர்,* **வேத விளக்கம்**, *ப. 240.*

எனக் குறிப்பிடுகிறார். இப்பகுதிகளால் வீரமாமுனிவர் மொழி பெயர்க்கப்பட்ட விவிலியத்தின்மீது கொண்டிருந்த பொருள் பொதிந்த வெறுப்பு தெள்ளிதின் விளங்குகிறது.

தற்கால விவிலியத் தமிழாக்கம் பல புதிய மாற்றங்களைப் பெற்று அச்சாகியுள்ளது. இத் தமிழாக்கத்தில் வீரமாமுனிவர் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் எந்த அளவில் ஏற்கப்பெற்றுள்ளன அல்லது களையப் பெற்று அவரது கருத்துரைகள் ஏற்கப்பட்டுள்ளன என்பது ஐயமாகவே உள்ளது. தரங்கம்பாடியார் வெளியிட்ட விவிலியத்திற்கும் தற்காலத் திருவிவிலியத்திற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. இருப்பினும் அத்திருவிவிலியத்தை இரண்டு பிரிவினரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது இங்கே குறிக்கத்தகும்.

வீரமாமுனிவருக்குத் தவறான மொழி பெயர்ப்பு ஏற்படுத்திய மன வருத்தத்தோடு ஒரு லுத்தரன் சபையாரைக்கூடத் தம் கத்தோலிக்கத் திருச்சபையில் சேர்க்க இயலவில்லையே என்ற மனருத்தமும் சேர்ந்து துன்பத்தை அதிகரிக்கச் செய்தது.

லுத்தரன் சபையில் 'கத்தோலிக்கர்கள்' சேர்தல்

இயேசு சபையைத் தொடங்கிய இஞ்ஞாசியார் தாம் அச்சபையைத் தொடங்கியபோது,

> "காத்திருக்கும் மோசமான அழிவினின்று ஒரு லுத்தரையாவது மீட்க வேண்டும்"[77]

என்று எண்ணினார். அவர் தொடங்கிய இயேசு சபையில் சேர்ந்த வீரமாமுனிவர் இவ்வெண்ணத்தைக் கொண்டு இருந்ததில் வியப்பில்லை. தரங்கம்பாடியும் ஏலாக்குறிச்சியும் அக்காலத்தில் சோழ மண்டலப் பகுதிகளாகவே கருதப்பட்டன. ஏலாக்குறிச்சியில் வீரமாமுனிவர் பணியாற்றியபோது ஒரு லுத்தரையாவது மீட்க வேண்டும் என்ற எண்ணத்தைச் செயல்படுத்த அவர் பல வழிகளில் முயன்றார்.

---

77. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 449.

ஆனால் அதற்குள்ளாகக் கத்தோலிக்கர்கள் பலரும், கத்தோலிக்க வேதியர்கள் சிலரும் லூத்தரன் சபையில் சேர்ந்துவிட்டனர்[78] என்றறிந்து துன்பமடைந்தார். லூத்தரன் சபையில் சேர்ந்தவர்களுள் ஒரு இனத்தவரான நியோபைஃட்ஸ் என்பாரும் உள்ளடங்குவர் என்பது முன்னரே குறிக்கப்பட்டுள்ளது.

நியோபைஃட்ஸ் (Neophytes) இனத்தார் லூத்தரன் சபையில் சேர்தல்

தாழ்த்தப்பட்ட மக்களாக வீரமாமுனிவரால் குறிக்கப்பெறும் மக்கள் எந்தச் சாதியினர் என அறிய இயலவில்லை. வீரமாமுனிவரும் தரங்கம்பாடி யாரும் பணியாற்றிய அப்பகுதிகளில் பறையர்களைப் போலவே அதிக எண்ணிக்கையிலும், ஓரளவு பொருளாதார நிலையில் சமமாகவும் சமூக அளவில் சிறிது உயர்வான இடத்திலும் கருதப்பட்ட சமூகம் 'பள்ளிகள்' என அழைக்கப்பெறும் வன்னியச் சமூகத்தார் ஆவர். இப்பிரிவினரும் பெரும் எண்ணிக்கையில் கிறித்தவ சமயத்தைத் தழுவியுள்ளனர். எனவே வீரமாமுனிவரால் குறிக்கப்பெறும் நியோபைஃட்ஸ் என்பார் இப்பள்ளி (வன்னியர்)களாகவே இருக்க வேண்டும்.

> "1729ஆம் ஆண்டு அநேகமான புதிய கிறிஸ்தவர்கள் (Neophytes) பணத்தினால் கவரப்பட்டு டேனிஷ் கிறிஸ்துவ சபையில் சேர்ந்துள்ளனர். வறுமையின் கொடுமை தாளாமல் அரிசி மற்றும் வாழ்க்கைக்கு உரிய இதர அத்தியாவசிய பொருட்களை பெற, தங்கள் ஆத்மாக்களை அவர்களிடம் விற்றுள்ளார்கள்"[79]

எனக் குறிப்பார் வீரமாமுனிவர்.

மக்கள் பசியின் கொடுமை தாங்க இயலாமல் உணவுக்காக லூத்தரன் சபையைச் சேர்ந்ததோடு தங்கள் குழந்தைகளைப் பேணி வளர்க்க இயலாமையால் அவர்களை விற்கவும் துணிந்தனர்.

பஞ்சத்தில் குழந்தைகளை விற்றல்

தமிழ் நாட்டு வரலாற்றில் பஞ்சங்களைப் பற்றிய செய்திகள் பரவலாகக் கிடைக்கின்றன. பாண்டிய நாடு பன்னிரெண்டு ஆண்டு வறட்சியினால்

---

78. இராசமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 5.
79. 1730ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆம் தேதி எழுதப்பட்ட ஆண்டு மடல்.

பாதிக்கப்பட்டுப் பஞ்சத்தினால் தாக்குண்டதனால் பாண்டிய வேந்தனே தன் நாட்டு அறிஞர்களை அழைத்து அவர்களைப் பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துப் பஞ்சம் முடிந்த பின் அழைத்துக் கொண்டதாக இறையனார் களவியல் உரை பதிவு செய்துள்ளது.[80] திருநாவுக்கரசர் - திருஞானசம்பந்தர் காலத்திலும் தமிழ் நாட்டில் பஞ்சம் ஏற்பட அந்தப் பஞ்சத்தைப் போக்க இவர்கள் அறப்பணிகள் செய்ததைப் பெரியபுராணத்தின் வழியாக அறியமுடிகிறது. சமயவாதிகள் பஞ்சகாலத்தில் மக்களுக்கு உதவுவதை இறைப்பணியாகவே கருதி வந்துள்ளனர் என்பதைத் திருநாவுக்கரசர் வரலாறும் உணர்த்துகிறது. சிவபெருமான் திருநாவுக்கரசருக்கு வாசியுள்ள காசு அளித்த நிகழ்ச்சி இதற்கு உதாரணமாகும்.[81]

ஆனால் விசயநகரப் பேரரசுக் காலத்தில் ஏற்பட்ட பஞ்சம் நீண்டகாலத் தொடர்கதையாய் அமைந்தது. 1726இல் ஏற்பட்ட பஞ்சம் மழை வெள்ளத்தால் ஏற்பட்டதென்றால் அதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே தமிழகம் வறட்சியாலும் விசயநகரப் பேரரசில் ஏற்பட்ட உட்குழுக்களின் கலகங்களாலும் இவர்கள் எதிர்கொண்ட போர்களினாலும் தமிழகத்தின் பஞ்சம் தொடர்ந்தே வந்திருக்கிறது. இப்பஞ்சத்தின் விளைவாக அரிசிக்காகத் தம் பிள்ளைகளையும் உறவினர்களையும் அடிமைகளாக விற்கும் நிலை ஏற்பட்டது. இப்பஞ்சத்தைப் பயன்படுத்தி ஐரோப்பிய அடிமை வியாபாரிகள் தம் சந்தையைத் தமிழகத்திலும் விரிவுபடுத்தினர். இக்கொடுமைபற்றிக் கிழக்கிந்திய வணிகக் குழுமத்தில் பணிபுரிந்த வில்லியம் மித்வால்ட் (William Mithwald) எழுதிய கடிதம் பின்வருமாறு :

> “பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வேங்கட தேவராயர் இறந்துவிட்டார். அவருடைய பதவிக்காகப் பலர் போட்டியில் இறங்கியுள்ளனர். விசயநகரப் பேரரசில் உள்ள நாயக்கன்மார்கள் அவர்களுடைய கட்சிகளில் சேர்ந்து கொண்டு உட்கட்சிப் பூசலில் ஈடுபட்டுள்ளனர். இக்கட்சி வேறுபாட்டினால் நாட்டில் பெரியதொரு உள்நாட்டுக் கலகம் தோன்றியுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் பஞ்சமும்

---

80. க. நெடுஞ்செழியன், **தமிழ் நாட்டில் பஞ்சங்கள்** (ஆய்வுக் கட்டுரை), ப. 4.
81. **மேலது**, ப. 5.

பிணியும் நிரம்பி உள்ளன. நாட்டு மக்கள் சொல்லவொண்ணாத வறுமையில் வாடுகின்றனர். வறுமைப் பிணியால் வாடும் மக்கள் தங்கள் குழந்தைகளையே விலைபோசி விற்கின்றனர். ஐந்துபணம் பெறுமானமுள்ள அரிசிக்கு ஒரு குழந்தை வீதம் பச்சிளம் குழந்தைகள் விலைபோகின்றன. அடிமை வியாபாரிகள் இக்குழந்தைகளையும் மற்றையோரையும் அரிசியைக் கொடுத்து வாங்கிப் பின்னர் அவர்களைக் கிழக்கிந்தியத் தீவுகளில் விற்று விடுகின்றனர். ஆற்றல் படைத்த மக்களை விலங்குகளைப் போல விலைக்கு வாங்கி அடிமைகளாக்கி லாபம் சம்பாதிப்பது பஞ்சமகாபாதகங்களுள் ஒன்றாகும்"[82]

லுத்தரன் சபையார் இலவச உறைவிடக் கல்வி பயிற்றுதல்

தரங்கம்பாடியார்கள் உணவும் உறையுளும் இலவசமாக்கிப் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்த்துக் கல்வி புகட்டினர். ஆயினும் அப்பிள்ளைகளைப் பெற்றோர்கள் பார்க்க வரும்போது அனுமதி தர மறுத்தனர். அப்பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைப் பார்த்தால் அவர்களுடன் சென்று விடுவார்களோ என்ற அச்சத்தாலும் அதனால் சமயப் பணியின் வளர்ச்சி தடைபடுமோ என்று கருதியதாலும் தரங்கம்பாடியார் பெற்றோரைப் பார்க்கத் தடுத்தனர் எனலாம். இதனைத் தரங்கம்பாடியாரைக் கண்டிக்கும் ஒருவாய்ப்பாக வீரமாமுனிவர் பயன்படுத்திக் கொள்கிறார். பெற்றோர் - பிள்ளை உறவை (உரிமையை)த் தடை செய்கிறார்களே என்று வருந்தினார்.[83]

லுத்தரன் சபையார் அச்சு நூல்கள் வெளியீடல்

தமிழகத்தில் சமயப்பணி செய்த கத்தோலிக்கச் சமயத் தொண்டர்கள் கோவாவைத் தலைமை இடமாக்கிக் கொண்டு கொச்சி, கொல்லம், புன்னைக்காயல் (தூத்துக்குடி அருகில்) ஆகிய இடங்களில் அச்சுக்கூடங்களை அமைத்துக் கிறித்தவ நூல்களை அச்சிட்டனர்.[84] அந்நூல்களை மக்களுக்கு

---

82. தே. வே. மகாலிங்கம், **விஜயநகரப் பேரரசில் நிலைபெற்றிருந்த பொருளாதார வாழ்க்கை வரலாறு**, பக். 169 - 170.
83. மா. சு. சம்பந்தன், **அச்சும் பதிப்பும்**, ப. 78.
84. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகம்**, ப. 2.

வழங்காமல் சமயத் தொண்டர்கள் மட்டுமே பயன்படுத்தி வந்தனர். இந்த அச்சுக்கூடங்கள் டச்சுக்காரர்களின் படையெடுப்பால் அழிந்தன.[85] அதன் பிறகு அவர்கள் வேறு அச்சுக்கூடங்கள் நிறுவிப் பணி செய்திலர். அதனால் கத்தோலிக்கரின் சமயத் தொண்டில் அச்சுப்பணி தொடர்ந்து இடம்பெறாது போய்விட்டது.

இந்நிலையில், தரங்கம்பாடியிலுள்ள லுத்தரன் சபையார் அச்சியந்திரம் நிறுவிக் கிறித்தவ நூல்களை அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வழங்கினர். இதனால் லுத்தரன் சபையின் கோட்பாடுகள் விரைவாக மக்களைச் சென்றடைந்தன. அந்நூல்களைப் படித்தவர்களில் சிலர் லுத்தரன் சபையில் சேர்ந்தனர். அச்சு நூல்களைப் படித்து மக்கள் லுத்தரன் சபையில் சேர்கிறார்கள் என்பதை அறிந்த வீரமாமுனிவர் லுத்தரன் சபையார் 1000 நூல்கள் அச்சிட்டு அவை மக்களைச் சென்று சேரும்போது நம்மால் ஒரு நூல் அச்சிட்டு அதுகூட மக்களைச் சென்று சேர வழி செய்ய இயலவில்லையே என்று மனம் வருந்தினார்.[86] இந்த மனவருத்தத்தைத் தமது கடிதத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

> “திருச்சபையின் போதனைகளுக்குப் புறம்பான கருத்துக்களுடன், வேதாகம புத்தகங்களைத் தரங்கம்பாடியார் தவறான தமிழ் மொழி பெயர்ப்பில் வெளியிட்டுள்ளார்கள். மேலும், அவற்றுக்கு அவர்கள் கொடுக்கும் விளக்கவுரைகள் வேதாகமத்தை மேலும் சீர்குலைக்கும் வகையில் உள்ளன. ஆனால் அவர்களின் அச்சுப் பெயர்ப்பு அருமையாக உள்ளது. அவை பல வடிவங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. பணத்திற்கு ஆசைப்பட்டு ஏற்கனவே சில கிறிஸ்தவர்கள் திருச்சபையிலிருந்து விலகி அவர்களுடன் சேர்ந்துள்ளனர். அப்படி விலகிச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகிறது. அவர்களின் ஒவ்வொரு புத்தகத்திற்கும் எதிர்ப்புப் புத்தகங்கள் வெளியிட எங்களிடம் பணவசதியும் இல்லை. பதிப்பகமும் இல்லை. ஆகவே,

---

85. நா. வேலம்மாள், **தமிழக நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள்**, முனைவர் பட்ட ஆய்வேடு, ப. 64.
86. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 13.

> ஆயிரக்கணக்கில் அவர்கள் வெளியிடும் புத்தகங்களுக்கு எதிர்ப்பு புத்தகங்கள் வெளியிட சிரமமாக இருக்கிறது"[87]

முரண்பாட்டுக் கருத்து நூல்கள் வெளியிடல்

இயேசு சபையார் தமிழகத்தில் லுத்தரன் சபையார் பணி செய்யும் தரங்கம்பாடிப் பகுதிக்கருகில் இருந்து பணி செய்தபோதிலும் லுத்தரன் சபையாரின் கொள்கைகளைப் பற்றி நூலாக எதுவும் எழுதி வெளியிடவில்லை. ஆனால் தரங்கம்பாடியில் பணி செய்த லுத்தரன் சபையார் 'நமக்கும் அவருக்குமுள்ள வித்தியாசம்' (லுத்தரன் சபைக்கும் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் உள்ள வேறுபாடு) எனும் நூலையும் 'திருச்சபைப் பேதகம்' எனும் நூலையும் அச்சிட்டு வெளியிட்டார்கள். இதன் வாயிலாக இரண்டு திருச்சபைகளுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் வெளிப்பட்டன. வழிபாட்டு முறைகளிலும் இரண்டு பிரிவினருக்கும் உள்ள வேறுபாடுகளையும் மக்கள் அறிந்து கொள்ளும் நிலை உருவாயிற்று. இதனால் லுத்தரன் சபையாரின்மீது கத்தோலிக்கர்களுக்கிருந்த பகையுணர்வு கூடியது. லுத்தரன் சபையார் பணம் கொடுத்தே மக்களைத் தங்கள்பால் ஈர்க்கின்றனர் எனக் கத்தோலிக்கர் குற்றஞ் சாட்டினர். வீரமாமுனிவரும்,

> "நாட்டிலிருக்கும் உரோமன் திருச்சபைக் குருக்களுக்குச் சொல்லாதேயுங்கள். சொன்னால் இகழ்ச்சியாகும்"[88]

என்றும்,

> "மாதா வணக்கத்தை மறுத்தால் பணம் தருவோம்"[89]

என்றும் தரங்கம்பாடியார் சொன்னார்கள் எனத் தாம் எழுதிய நிருபத்தில் குறிப்பிடுகிறார்.

கத்தோலிக்க வேதியர்கள் லுத்தரன் சபையில் சேர்தல்

தமிழகத்தில் கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்பவந்த சமயத் தொண்டர்கள் ஐரோப்பியர்களாக இருந்ததால் அவர்கள் தமிழ் மொழியை அறியாதிருந்தனர்.

---

87. 1728ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் தேதி எழுதப்பட்ட ஆண்டு மடல்.
88. **வீரமாமுனிவர் பதிதர் பேரில் திருக்கடவூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதின நிருபம்**, ப. 11.
89. **மேலது**, ப. 11.

தமிழ் மக்களோடு இரண்டறக் கலந்து சமயக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துக்கூற இயலாதவர்களாக இருந்தனர். அதனால் தங்கள் சமயத் தொண்டிற்கு உதவி செய்யும் வகையில் தமிழறிந்தவர்களின் பங்களிப்பு மிகுதியாகத் தேவைப்பட்டது. எனவே சமயத் தொண்டில் விருப்பமுள்ள இல்லறத்தார்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட உதவியாளர்களே 'வேதியர்கள்' என்றழைக்கப்பட்டனர். இவர்கள் சமுதாயத்தில் மதிப்பு மிக்கவர்களாகவும், பண ஆசை அற்றவர்களாகவும் பிறருக்கு உதவவேண்டுமென்ற எண்ணத்துடன் செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப் பெற்றனர். வீரமாமுனிவரும் அவ்வாறே எதிர்பார்த்தார்.[90] இவர்களுக்கு ஐரோப்பியச் சமயத் தொண்டர்களே ஊதியம் அளித்து வந்தனர். வீரமாமுனிவர் காலத்தில் வேதியர்களுக்கு அளித்த ஊதியம் அவர்களின் இல்லற வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை. இதனை வீரமாமுனிவர் நன்குணர்ந்தார். அதனால் தம் தலைவருக்கு வேதியர்களின் ஊதியத்தை உயர்த்தச் சொல்லிப் பரிந்துரை செய்தார். இப்பரிந்துரை,

> "மதுரைப் பணிக்களத்திற்கு உதவி செய்த கோவாவிலுள்ள தென்னந்தோப்பை மராட்டியர்கள் கைப்பற்றினார்கள். அதனால் வருமானம் குறைந்தது. போர்த்துக்கல்லிலிருந்து சிறிதளவு பணமே வந்தது. எனவே வேதியர்களுக்குச் சிறிதளவு பணமே ஊதியமாக வழங்கப்படுகிறது. ஆனால் லுத்தரன் சபையாரால் நான்கு மடங்கு ஊதியம் வேதியர்களுக்கு அளிக்கப்படுகிறது. அதனால் நம் வேதியர்களுக்கும் ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும்"[91]

என்பதாகும்.

இச்சூழ்நிலையில் தரங்கம்பாடியிலுள்ள லுத்தரன் சபை, கத்தோலிக்கர் வாழ்ந்து வந்த தஞ்சை அரசருக்கு உட்பட்ட பகுதிகளிலும் பரவத் தொடங்கியது. இதன் காரணமாக லுத்தரன் திருச்சபையாரின் எண்ணிக்கை பெருகியது. அதனால் பல புதிய மண்டலங்கள் உருவாயின. ஒவ்வொரு மண்டலத்திற்கும்

---

90. வீரமாமுனிவர், **வேதியர் ஒழுக்கம்**, ப. 118.
91. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 13.

ஒவ்வொரு வேதியர் பணியில் அமர்த்தப்பட்டார்.[92] கத்தோலிக்கச் சமயத்தாரிடம் உள்ள வேதியர்களைப் போல லுத்தரன் சபையிலுள்ள வேதியர்களும் இல்லறத்தார்களாகவே இருந்தனர். இவர்களுக்கு லுத்தரன் சபைத் தொண்டர்களே ஊதியம் வழங்கினர். இந்த ஊதியம் கத்தோலிக்கச் சமயத் தொண்டர்கள் தங்கள் வேதியர்களுக்கு அளித்த ஊதியத்தைப் போல நான்கு மடங்கு அதிகமாகும்.[93] ஐரோப்பாவிலிருந்து பொருளுதவி தாராளமாகக் கிடைத்ததால் இவர்கள் மக்களிடம் எளிதாகத் தம் சமயத்தைக் கொண்டு செல்ல முடிந்தது. இவ்வாறு மக்களிடம் லுத்தரன் சபையைப் பரப்புவதற்குப் பெரிதும் பங்காற்றியவர்கள் வேதியர்களாவர். கடும் பஞ்சம் நிலவிய ஒரு காலச் சூழலில் இவர்களின் இடையறாத பணியின் காரணமாக மக்கள் அதிக எண்ணிக்கையில், லுத்தரன் சபையைத் தழுவினர். இதனால் வேதியர்களின் தொண்டைப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு அதிக ஊதியம் வழங்கினர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கத்தோலிக்கச் சபை வேதியர்கள், லுத்தரன் சபையில் சேர்ந்து வேதியராகப் பணியாற்ற முன்வந்தனர்.[94]

திருக்கடையூர் மக்கள் கோவிலைப் புறக்கணித்தல்

கத்தோலிக்கத் திருச்சபையில் உள்ளவர்கள் அத்திருச்சபையின் படிப்பினைக்கு எதிரான போதகங்களைக் (Heresy) கூறினால், திருச்சபைத் தலைவர்கள் ஒன்றுகூடித் தவற்றைச் சுட்டிக்காட்டித் தவறான கொள்கையை விட்டுவிடுமாறு கேட்டுக் கொள்வார்கள். அதற்கு அவர் உடன்படவில்லை என்றால் திருச்சபையாளர்களால் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படுவார்.[95] இது திருச்சபை மரபு. அதைப்போலவே கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்து சென்ற சபைகளில் கத்தோலிக்கர் சேர்ந்து விட்டால் அவரைத் திருச்சபையிலிருந்து விலக்கி வைப்பர்.[96] இதனடிப்படையில் திருக்கடவூரில்

---

92. *சிரில் புருஸ்பெர்த்,* ***இந்தியத் திருச்சபை****, ப. 181.*
93. **Ibid.**, p. 9.
94. *இராஜமாணிக்கம்,* ***வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்****, ப. 288.*
95. *"தரங்கம்பாடியாருடன் தொடர்பு கொண்டுள்ளவர்களை திருச்சபையிலிருந்து விலக்கி வைத்துள்ளார்கள். அவர்களின் பெயர்கள் அடங்கிய தாள்களை தீயிட்டு கொளுத்தி உள்ளார்கள். கடந்த ஈஸ்டருக்கு முதல்நாள் இத்தாலிய குரு பெஸ்கி (வீரமாமுனிவர்) பத்தாயிரம் கிறிஸ்தவர்களை இவ்வாறு தண்டித்துள்ளார்"*
- ஜேசுதாஸ் தங்கசாமி, ***திருச்சபை வரலாறு****, ப. 73.*
96. *கால்மெட் என்பவர் 1730 செப்டம்பர் 28 பல்லாவரத்தில் இருந்து எழுதப்பட்டது. ப. 7.*

உள்ள ஆதி திராவிடர் (பறையர் இனத்தவர்) ஒருவர் லுத்தரன் சபையில் சேர்ந்தபோது அவரைத் திருச்சபையிலிருந்து விலக்கி வைத்தனர்.[97] 'விலக்கி வைத்தல் என்பது வேறு சபையில் சேர்ந்தவர் கத்தோலிக்கக் கோவிலுக்கு வரக்கூடாது. அவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் சமயச் சடங்குகள் நிறைவேற்றப்படாது' என்பதாகும்.

ஆகையால் செல்வந்தர் தம் நண்பருக்காகக் கோயிலுக்குச் செல்லாமல் இருந்து விட்டார். செல்வந்தர் கோயிலுக்குச் செல்லாததால் அவ்வூர் மக்கள் அனைவருமே கோயிலுக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டனர் என்பதும் முன்னரும் குறிக்கப்பட்டுள்ளது. ஊரார் முழுதும் கோயிலுக்குச் செல்லாத இந்நிகழ்ச்சி வீரமாமுனிவருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. இவ்வாறு மற்ற ஊரார்களும் செய்தால் திருச்சபை வளர்ச்சி பாதிக்கப்படுமே என்று வருந்தினார். இந்த வருத்தத்தை வீரமாமுனிவர் பதிதர் பேரில் திருக்கடவூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய கடிதம் விரிவாக வெளிப்படுத்துகிறது.[98]

இராசநாயக்கனின் செயல்முறைகள்

இராசநாயக்கன் பிரச்சனைகளை வழக்கறிஞர் போலத் தீர விசாரித்து நீதிபதி போல நடுவுநிலைமையோடு தீர்ப்புச் சொல்லக்கூடிய திறமை பெற்றவர்.[99] பகைவரையும் ஈர்க்கக்கூடிய பேச்சு வன்மை உள்ளவர். இத்திறமைகளைப் பெற்ற இவர் தாம் பிறந்து வளர்ந்த கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்காக இக்குணங்களைப் பயன்படுத்தினாரிலர். மாறாக லுத்தரன் சபையில் சேர்ந்த பிறகு அச்சபையில் மக்களைச் சேர்ப்பதற்கும் பெற்றோர்களுக்கும் லுத்தரன் சபையாருக்கும் இடையில் இருந்து குழந்தைகளை வாங்கி விற்பதற்கும்[100] என்று லுத்தரன் சபை வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். ஆனாலும் வீரமாமுனிவர் இராசநாயக்கனைப் பற்றியும் அவரின் பழக்க வழக்கங்கள் குறித்தும் குறிக்கும் செய்திகள் முரணாக உள்ளன. இராசநாயக்கன் குடிகாரராகவும், கடனாளியாகவும் இருந்தவர் என்றும், அப்படிப்பட்ட ஒருவரை இவர்கள் வேதியராக நியமித்துள்ளார்களே என்றும்

---

97. வீரமாமுனிவர் பதிதர் பேரில் திருக்கடவூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதின நிருபம், ப. 2.
98. மேலது, ப. 3.
99. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 13.
100. **Ibid.**, p. 11.

வீரமாமுனிவர் குறித்திருப்பதை மேலும் ஆராய வேண்டியுள்ளது. இராசநாயக்கன் கத்தோலிக்கச் சமயத்தில் இருந்தபோது குடிகாரனும் கடனாளியுமாக இருந்தார். ஆனாலும் அப்போது அவரைப் பற்றி ஒன்றும் கூறாத வீரமாமுனிவர் இராசநாயக்கன் லூத்தரன் சபையில் சேர்ந்தபிறகு கடன்காரன், குடிகாரன் என்று குறிப்பிடுவது[101] 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்பதைப் போல உள்ளது. இராசநாயக்கனைப் பற்றி வீரமாமுனிவர் குறிப்பிடும் செய்தி,

> "இராசநாயக்கன் உண்மையான மனம் மாறுதலினால் லூத்தரன் சபையைச் சேரவில்லை. பணத்திற்காகவே சென்றார். பஞ்சத்தின் காரணமாகக் குழந்தைகள் இவர் வழியாக லூத்தரன் சபைக்கு பிறக்கப்பட்டார்கள்........ கடன் குடிப்பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட இராசநாயக்கன் பணத்துக்கு ஆசைப்பட்டு லூத்தரன் சபையில் சேர்கிறான்"[102]

என்பதாகும்.

ஏலாக்குறிச்சி தஞ்சைத் திருச்சபையைச் சார்ந்த பகுதியாகும். ஏலாக்குறிச்சிப் பாதிரியார்கள் தஞ்சை அரசரால் சிறையில் அடைக்கப்பட்டனர். ஒருவர் சிறையிலேயே உயிர் துறந்தார். மற்றொருவர் சில ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலையானார். (இச்செய்தி முதல் இயலில் கூறப்பட்டுள்ளது.) இச்சூழ்நிலையில் வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சியில் பணியேற்றார். தஞ்சை அரசரால் பாதிரியார் துன்புற்றதால் வீரமாமுனிவர் பகலில் அங்குச் சென்று சமயக் கடமைகளைச் செய்ய இயலவில்லை. எனவே அப்பகுதி மக்கள் சமயச் சார்பான சடங்குகளில் பங்குபெற இயலாமலிருந்தனர்.

இந்நிலையில் தஞ்சையைச் சேர்ந்த இராசநாயக்கன் லூத்தரன் சபையில் சேர்ந்து அச்சபையின் வளர்ச்சிக்காகத் தஞ்சைப் பகுதியில் இரவு பகல் பாராமல் உழைத்தார். இதனால் சிலர் கத்தோலிக்கத் திருச்சபையை விட்டு லூத்தரன் சபையில் சேர்ந்தனர். மற்றும் பலர் சேரும் நிலையில் இருந்தனர்.[103] தம்

---

101. **Ibid**, p. 13.
102. **Ibid**, p. 13.
103. அமுதன் அடிகள், **இத்தாலி நாட்டு வித்தகர்**, ப. 29.

திருச்சபைப் பகுதியாகிய தஞ்சைப் பகுதிக்குள் தாம் சென்று பணியாற்றத் தடையிருக்கும்போது இராசநாயக்கன் தஞ்சையைச் சேர்ந்தவர் என்பதால் எவ்விதத் தடையுமின்றி வேதியராகப் பணியாற்றிக் கத்தோலிக்கர்களை லூத்தரன் சபையில் சேர்த்தார் என்ற செய்தியைக் கிராபி (Grafe),

> "வீரமாமுனிவர் குருவாக இருந்ததால் சமயத் தொண்டு காரணமாகத் தஞ்சைப்பகுதிக்கு இரவில் மட்டும்தான் செல்ல முடிந்தது. ஆனால் இராசநாயக்கன் தஞ்சைக்காரனாக இருந்ததால் எப்போதும் செல்ல முடிந்தது"[104]

என்று குறிப்பிடுகிறார். இராசநாயக்கனின் செயல்முறை வீரமாமுனிவரைப் பெரிதும் பாதித்ததால் அவர் திருக்கடையூருக்குச் சென்று அங்குத் தங்கியிருந்து கொண்டு தரங்கம்பாடியிலிருந்த இராசநாயக்கனுக்கு ஒரு கடிதம் எழுதினார். தரங்கம்பாடியும் திருக்கடையூரும் சாலை வழியாக எட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. ஆனால் குறுக்கு வழியில் 'நடக்கும்' தூரமே இருந்தது. அதனால் தரங்கம்பாடியிலிருந்து திருக்கடையூருக்கு யாரும் கடிதம் எழுதுவதில்லை. அப்படி இருந்தும் இராசநாயக்கன் வீரமாமுனிவருக்கும் கடிதம் எழுதினார்.[105] இராசநாயக்கன் லூத்தரன் சபையில் சேர்ந்து கத்தோலிக்க மதத்திற்கு எதிராகச் செய்த செயல்களினால் வருத்தமுற்ற வீரமாமுனிவர் இராசநாயக்கரையும் அவருக்கு உதவியாய் இருந்த அவர் தம்பி சின்னப்பனையும் கத்தோலிக்கக் கிறித்தவ மதத்திலிருந்து விலக்கி வைத்தார்.[106]

மேற்கூறிய முறைகளில் கத்தோலிக்கர்கள் லூத்தரன் சபையாரின்மீது முரண்பாடு கொண்ட அதேவேளையில் லூத்தரன் சபையாரும் சிற்சில காரணங்களால் கத்தோலிக்கச் சமயத்தாரின்மீது முரண்பாடு கொ...

---

104. S. Rajamanickam, **Madurai and Tranqueb...**
105. **Ibid**, p. 14.
106. **Ibid**, p. 14.

லூத்தரன் சபையார் முரண்பாடு கொள்ளக் காரணங்கள்

1. லூத்தரன் சபையில் சேர்ந்தவர்களைக் கத்தோலிக்கச் சபையிலிருந்து நீக்கி வைத்தல்.[107]

2. கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலகிச் சென்றவர்களின் பெயர்களை எழுதி அவற்றைத் திருவிழாவின் போது தீயிலிட்டுக் கொளுத்துதல்.[108]

3. வீரமாமுனிவர் விவிலிய தமிழ் மொழி பெயர்ப்பைப் பாராட்டாமல் தவறு கண்டுபிடித்தல்.[109]

முதலான காரணங்களால் முரண்பாடு கொண்டனர். இம்முறையில் இரு சபையாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டாலும் லூத்தரன் சபையே சமயத் தொண்டில் வெற்றி பெற்றதாகக் கொள்ள முடிகிறது.

லூத்தரன் சபை வெற்றி பெறக் காரணங்கள்

ஆதரவற்ற ஏழைக் குழந்தைகளைக் கருணை இல்லங்களில் சேர்த்து அவர்களுக்குக் கிறித்தவ சமயக் கல்வியைப் புகட்டி அவர்களைச் சமயப் பணியாளர்களாக உருவாக்கியதால் கிறித்தவம் எளிதாக மக்களைச் சென்றடைந்தது. இம்முறையில் லூத்தரன் சபை வெற்றி பெற்றது. இவர்களும் பார்ப்பனர்களிடையே சமயத்தைப் பரப்ப முயன்று தோல்வியுற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.[110]

லூத்தரன் சபையார் வெற்றி பெற்றார்கள் என்ற சூழ்நிலையிலும் இரண்டு திருச்சபையினருக்கும் இடையே முரண்பாடு வளர்ந்து கொண்டே செல்லாமல் தடுக்க வேண்டும் என்ற முடிவிற்கு வீரமாமுனிவர் வந்தார். அவர் நுண்மாண் நுழைபுலம் மிக்கவராததால் இரு பிரிவினருக்கும் வருத்தம் மிகாதவாறு நன்கு சிந்தித்து இரண்டு வழிமுறைகளை மேற்கொண்டார்.

---

107. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 14.
108. **Ibid.**, p. 14.
109. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 9.
110. **Ibid.**, p. 7. Fr. Le Caron பாண்டிச்சேரியிலிருந்து எழுதிய மடல் (15-10-1718).

1. ஏலாக்குறிச்சியில் திருவிழாக் கொண்டாடித் தம் மக்களை அன்னையிடம் அடைக்கலப்படுத்துதல்

2. விவிலியக் கருத்து அடிப்படையில் நூல் எழுதுதல்

இவ்விரு வழிமுறைகளால் இரு திருச்சபையாரிடம் நிலவிய முரண்பாடுகளும் பகையுணர்வும் ஓரளவு குறையத் தொடங்கின.

நூல்கள்

"மூவுலகிற்கு மெய்கொள் நாயகி"[111]

என்று தேம்பாவணியில் மரியாளைப் போற்றிடும் வீரமாமுனிவர் 'பத்தியுடையார் காரியத்தில் பதறார்' என்னும் புலமை மொழிக்கேற்ப மரியாளின் பத்தி முயற்சியைப் பேணி வளர்த்தார். அன்னையின் பெயரால் ஆலயங்களை உருவாக்கி மரியாள் இலக்கியம் என்னும் வகையில் மரியாளிடம் தமக்குள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தினார். அன்னையின் அருளை வேண்டத் துணைபுரியும் கருவியாகச் செபமாலையினையும் அன்னை மரியின் உருவமும் கிறித்து பெருமானின் திருவுருவமும் பதிக்கப்பட்ட உத்திரியத்தையும் குறிப்பிடும் வீரமாமுனிவர் அவற்றை அணிவோர் துன்பங்கள் நீங்கி உண்மை இன்பம் வாய்க்கப் பெறுவர் எனக் கூறித் தன் பத்தியை வெளிப்படுத்தினார்.[112] அந்த நம்பிக்கையோடு தம் திருச்சபை மக்களையும் அன்னையிடம் அடைக்கலப்படுத்தினார்.

அன்னையிடம் தம் கத்தோலிக்க மக்களை அடைக்கலப்படுத்தல்

கத்தோலிக்க மக்கள் லுத்தரன் சபையில் அதிகமான எண்ணிக்கையில் சேர்ந்து கொண்டிருந்தனர். லுத்தரன் சபையாரைப் போலத் தம் மக்களுக்குப் பணம் கொடுக்க முடியாத சூழலில் இருந்த வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சிக் கோயிலின் 'பாதுகாவலி'யாக இருந்த இயேசுவின் தாயாகிய அன்னையிடம் தம் மக்களை அடைக்கலப்படுத்தி, இனிமேல் தம் மக்கள் லுத்தரன்

---

111. வீரமாமுனிவர், **தேம்பாவணி**, 10 : 39.
112. வீரமாமுனிவர், **திருக்காவலூர்க் கலம்பகம்**, பாடல் 92.

சபையில் சேரக்கூடாது என்று வேண்டித் திருவிழாக் கொண்டாடினார். அதன்பிறகு வீரமாமுனிவர் தம் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் இப்போது கிறித்தவ மக்கள் லுத்தரன் சபையில் சேருவது இல்லை. அன்னையின்மீது கொண்ட விசுவாசமே எங்களுக்கு வெற்றியைக் கொடுத்தது என்று மகிழ்ந்து எழுதுகிறார். அதன் சாரத்தை இராசமாணிக்கம்,

> "வீரமாமுனிவர் எங்களையும் எங்கள் கிறித்தவ மக்களையும் மதமாற்றத்திலிருந்து காப்பாற்று என்று அடைக்கல அன்னைக்கு ஆண்டுதோறும் எடுக்கக்கூடிய விழாவில் வேண்டினார். அவர் வேண்டுதல்படியே மதமாற்றம் கட்டுப்பட்டு வெற்றி பெற்றது என்று குறிப்பிடுகிறார்.[113]
>
> இச்செய்தியை வீரமாமுனிவர் விழாவின் பயனாகக் கத்தோலிக்கர்களின் விசுவாசம் உறுதிப்பட்டதால் இனிமேல் கத்தோலிக்கர்கள் பணத்திற்காக லுத்தரன் சபையாரை நாடிச் செல்ல மாட்டார்கள். லூத்தரன் சபையார் இனிமேல் பணமும் கொடுக்க மாட்டார்கள். லுத்தரன் சபையார் பணத்தால் வெற்றியடையும் போது நாம் வேண்டுதல் செயல்பட்டு வெற்றியடைந்தோம்"[114]

என்று தம் ஆண்டு மடலில் குறிப்பிடுகிறார். இம்முறையில் வெற்றி பெற்றதாக மகிழ்ந்தபோதும் தம் தலைமைக் குருவாகிய தொமினிக் மடியரா கடிதத்தின்படிக் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் வகையில் நூல் எழுதுகிறார்.

நூல் எழுதுதல்

வீரமாமுனிவர் நூல் எழுதிய உரைநடை நூல்களை நான்கு வகைகளாகப் பகுத்துக் காண்பது பொருந்தும்.

---

113. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 5.
114. 1729 ஆண்டு மடல். ஆகஸ்ட் 26ஆம் நாள் எழுதப்பட்டது.

1. *தாமே எழுதிய கடிதங்கள்*

பதிதர் பேரில் திருக்கடையூர் நாட்டுத்	
திருச்சபைக்கு எழுதிய நிருபம்	*1727*
பொது நிருபம்	*1727*
வேதியர் ஒழுக்கம் நூல்	*1728*
வாமன் சரித்திரம்	*1742*
பரமார்த்தகுருவின் கதை	*1743*

2. *தம் தலைவர் கடிதப்படி எழுதியது*

வேத விளக்கம்	*1728*

3. *லுத்தர் சபையாரின் நூலுக்கு மறுப்பாக எழுதியது*

பேதகமறுத்தல்	*1728*

4. *லுத்தர் சபையார் அச்சடித்து வெளியிட்ட நூலின் வனப்பைக் கண்டு மயங்கி அச்சபையாரின் இயல்பை எடுத்துக்கூற எழுதியது*

லுத்தேரினத்தியல்பு	*1735*

மேலே கூறப்பட்ட அனைத்துக் கடிதங்களும் நூல்களும் (வாமன் சரித்திரம் தவிர) லுத்தரன் சபையாரின் செயல்முறைகளோடு தொடர்பு கொண்டவை களாகவே இருக்கின்றன. இந்நூல்களின் சாரத்தை மேலே வகுத்துள்ள முறையின்படியே காண்பது பொருத்தமுடையதாகும்.

தாமே எழுதியது

கடிதங்கள்

பதிதர் பேரில் திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம்

திருக்கடவூர் தற்பொழுது திருக்கடையூர் என்று வழங்குகிறது. வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சித் திருச்சபையில் பொறுப்பேற்றுப்

பணியாற்றியபோது செல்வாக்குப் பெற்ற கீழ்ச்சாதிக்காரர் (பறையர்) ஒருவர் தரங்கம்பாடி லூத்தரன் சபையாரிடமிருந்து பணத்தைப் பெற்று அவர்கள் திருச்சபையில் சேர்ந்தார். அவர் அவ்வூரில் செல்வாக்குப் பெற்றவராக இருந்ததால், அவ்வூரிலுள்ள மற்றவர்களையும் லூத்தரன் சபையில் சேர்த்திடக்கூடாது என்று நினைத்துக் கத்தோலிக்கத் திருச்சபையார் அவரைத் தம் சபையிலிருந்து விலக்கி வைத்தனர். அதாவது அவர் கத்தோலிக்கக் கோயிலுக்குப் போகக் கூடாது, சமயச் சடங்குகளில் ஈடுபடக்கூடாது எனத் தடுத்து விட்டனர். லூத்தரன் சபையில் சேர்ந்தவர்மீது அவ்வூரில் உள்ளவர்கள் பாசம் வைத்ததால் அவர்களும் கோயிலைப் புறக்கணித்து அங்குச் செல்ல மறுத்தனர். இதனைக் கேள்வியுற்ற வீரமாமுனிவர்,

> "இந்த விஷயத்தில் பலமுறை நாம் உங்களுக்குப் புத்தி சொன்னது ஒழிய பிறரைக் கொண்டு சொல்வித்தும் பல நிருபங்களை எழுதியும் அனுப்பித்தோம். இதெல்லாம் சிலபேர் எண்ணாததால் விரிவாக இந்த நிருபத்தை உங்களுக்கு எழுதத் துணிந்தோம்"[115]

எனக் குறிப்பிட்டு எழுதுகிறார். மேலும் ஆண்டவர்மீது அன்பு வைக்காமல் மனிதர்கள்மீது அன்பு செலுத்துதல் தகாத அன்பாகும். ஆதலால் ஊரார் மீது கொண்டுள்ள அன்பை விடுத்து இறைவன் மீது அன்பு கொள்ளுங்கள் என்று எழுதி முடிக்கிறார்.

திருச்சபைக்குப் பொது நிருபம்

ஏலாக்குறிச்சித் திருச்சபைக்கு உட்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு எழுதிய இக்கடிதம் முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத்த பகுதி முழுவதும் விவிலியத் தமிழ் மொழி பெயர்ப்பிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதாகவே உள்ளது. தரங்கம்பாடியார் தாம் தமிழாக்கம் செய்த விவிலிய மொழி பெயர்ப்பைக் கத்தோலிக்க மக்களுக்குப் படிக்கக் கொடுத்தனர். அந்த மொழி பெயர்ப்புப் பணியை வீரமாமுனிவர் விரும்பவில்லை. அதனால்,

115. வீரமாமுனிவர் பதிதர் பேரில் திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம், ப. 2.

> "புதிதாய்க் கீழ்மொழியாகத் தரங்கம்பாடியிலே முளைத்துப் புறப்பட்ட விவிலியம் கிறித்துவின் விவிலியத்தைக் கெடுக்கவும் சனங்களை மயக்கவும் உண்டு பண்ணின உபாயம்"[116]

என்கிறார். லுத்தர்,

> "ஒருவன் எந்தப் பாவம் செய்தாலும் கரையேறுவேன் என்று உறுதியாய் விசுவசித்தாலே போதும் என்றும், கள் சாராயம் நிறையக் குடிக்கலாம் என்றும், தவசுநாளும் வெள்ளியும் சனியும் இல்லாமல் வேண்டும் பொழுதெல்லாம் மாமிசம் உண்ணலாம் என்றும் ஒரு பெண்ணை விட்டு வேறொரு பெண்ணைக் கொள்ளலாம்"[117]

என்றும் அவர் கூறியுள்ளதும் எண்ணத்தகும். இவர் குறிப்பிடும் குறைபாடுகளுக்கு ஏற்பவே தரங்கம்பாடியார்களும் விவிலியத்தை மொழி பெயர்த்துள்ளனர்.

> "வான்வீடு சேரத் தவம் செய்ய வேண்டுமென்று[118] விவிலியத்தில் சொல்லியிருக்க லுத்தரன் சபையார் தவமெல்லாம் சேசுநாதருடைய பலன்களுக்கு ஈனமாகும் என்றும் தவத்தைச் செய்யலாகாது என்றும் கூறியிருக்கிறார்கள்"[119]

> "ஒருவன் வான்வீடு சேர என்ன செய்ய வேண்டுமென்று யேசுவைக் கேட்டபோது அவர் தேவகட்டளைகளைக் கைப்பிடிப்பாயாக[120] என்று கூறினார். லுத்தரன் சபையாரோ வான்வீடு சேருவதற்கு விசுவாசம் மாத்திரம் போதும் என்று படிப்பிக்கிறார்கள்"[121]

என விவிலிய மொழியாக்கத்தில் உள்ள அடிப்படை முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

---

116. வீரமாமுனிவர், **பொது நிருபம்**, ப. 21.
117. **மேலது**, ப. 24.
118. **விவிலியம், புதிய ஏற்பாடு**, லூக். 3 : 8.
119. வீரமாமுனிவர், **பொது நிருபம்**, ப. 24.
120. **விவிலியம், புதிய ஏற்பாடு**, மத். 19 : 16.
121. வீரமாமுனிவர், **பொது நிருபம்**, ப. 22.

> *"இவ்வாறு லுத்தரன் சபையார் குறையுள்ள விவிலியத்தைக் கத்தோலிக்கர்களிடம் பரப்பிக் கொண்டு வருகிறார்கள். இது வான்வீடு சேர்ப்பதில்லை. அதனால் வான்வீடு சேர்வதற்குரிய வழிமுறைகளை ஆய்ந்து அதன்வழி நடங்கள்"*[122]

என்கிறார். திருச்சபை மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கடிதம் எழுதியதைப் போலவே தம் வேதியர்களுக்கும் அறிவுரை வழங்கும் வகையில் 'வேதியர் ஒழுக்கம்' எனும் நூலை எழுதினார்.

வேதியர் ஒழுக்கம்

வேதியர் பற்றிய விளக்கம் முன்னரே விளக்கப்பட்டுள்ளது. உரோமன் திருச்சபையார் வேதியர்களுக்குக் குறைவான ஊதியம் அளித்து வந்தனர். இந்தக் குறைவான ஊதியம் வாழ்க்கையை நடத்தப் போதாத அக்காலத்தில் தஞ்சைப் பகுதியில் பஞ்சம் ஏற்பட்டதால் விலைவாசி உயர்ந்தது. அதனால் வேதியர்கள் வாழ்க்கை நடத்த மேலும் பணப்பற்றாக்குறை ஏற்பட்டது. இச்சமயத்தில் லுத்தரன் சபையார் போதுமான ஊதியம் வழங்கக் கத்தோலிக்க வேதியர்களில் சிலர் லுத்தரன் சபையில் சேர்ந்தனர். இவர்கள் தங்கள் தொழிலின் புனிதம், உயர் நோக்கம், தங்களின் உயர் பண்பு, கல்வியறிவு, பிறர் அன்பு தன் அன்பு ஆகிய குணங்களைப் பெற்றவர்களாக வாழவேண்டும்[123] என்பதை மறந்து பணத்தின்மீது கொண்ட ஆசையாலும், தங்களின் தொழில் சிறப்பை உணராததனாலும், தாங்கள் சமுதாயத்தில் முன்மாதிரியான வாழ்க்கை வாழவேண்டியவர்கள் என்பதை அறியாததினாலும், ஆன்மீக வாழ்வைப்பற்றி அக்கறை கொள்ளாததனாலும், தங்கள் தொழிலுக்குக் கல்வியறிவு வேண்டும் என்பதை உணராததனாலும் இவற்றை எல்லாம் அவர்கள் உணரும்படியாக அறிவுரை வழங்கி அவற்றை அவர்களுக்குப் பயிற்றுவிக்க விரும்பினார். இதனடிப்படையில் 'வேதியர் ஒழுக்கம்' எனும் நூலை எழுதி வேதியர் பள்ளி ஒன்றையும் தொடங்கி அதில் முப்பது பேருக்குத் தாமே பயிற்றுவித்தார். இப்பயிற்சி முறை லுத்தரன் சபையின் பழக்க வழக்கங்களுக்கு நேர்மாறாய் அதாவது லுத்தரன் சபையில் உள்ள

---

122. வீரமாமுனிவர், **பொது நிருபம்**, ப. 22.
123. வி. மி. ஞானப்பிரகாசம், க. ப. அறவாணன் (ப. ஆ), **வீரமாமுனிவம்**, ப. 60.

வேதியர்கள் கடனாளி குடிகாரன்[124] படிப்பறிவு அற்றவர்கள்[125] பணத்தின்மீது ஆசை கொண்டவர்கள்[126] ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கையில் வாழாதவர்கள்[127] தங்களை வளர்த்த சபைக்கே துரோகம் செய்பவர்கள்[128] என்று வீரமாமுனிவர் அறிந்ததால் இவர்களைப் போன்ற வாழ்க்கை வாழாமல் சமுதாயத்தில் முன்மாதிரியான வாழ்க்கையைத் தம் வேதியர் பின்பற்ற வேண்டும் என்று விரும்பியவராகவும் இந்நூலை எழுதி அப்பள்ளியைத் தொடங்கி நடத்தியிருக்கின்றார் எனலாம். இப்பள்ளி வீரமாமுனிவரால் ஏலாக்குறிச்சியில் தொடங்கி நடத்தப்பட்டது. தற்போது திண்டிவனத்தில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வேதியர் ஒழுக்கம்

1 - 2	வேதியர் இயல்பும் மாட்சியும்
3	பொதுத் தொழில்
4	தொழிலுக்கு ஆயத்தம்
5	தன்னைக் காத்தல்
6	பிறரை நினைவுகூரல்
7 - 14	பயனளிக்கும் வழிவகைகள்
	நல்லொழுக்கம்
	ஆண்டவரை மன்றாடல்
	ஆண்டவரை நம்பல்
	புறக்கோலம் காணாமை
	அன்பு காட்டல்
	பிறர் பொருள்மீது ஆசையின்மை

---

124. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 13.
125. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 228.
126. **வீரமாமுனிவர் பதிதர் பேரில் திருக்கடலூர்த் திருச்சபைக்கு எழுதிய திருபம்**, ப. 1.
127. **மேலது**, ப. 1
128. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 5.

15 - 20 செயல்முறைகள்

இடம் காலம் நோக்கல்

கூடப்போய்க் கூட்டிவரல்

பயன்கருதாது துணிவோடு செயல்படல்

ஒற்றுமை

தேவதூதர் துணை

ஒழுக்கத்திற்கு உறுதி

ஆகிய இருபது அதிகாரங்களை உள்ளடக்கியிருக்கிறது.

"வேதியர்கள் இயேசு கிறிஸ்து செய்த தொழிலையே தாம் செய்வதாக உணர்ந்து தாழ்ச்சி, பொறுமை, எளிமையுடன் செயலாற்ற வேண்டும்.[129]

பிறர் செய்த புண்ணியங்களால் மகிழ்ச்சியும் அவர்கள் செய்த பாவங்களினால் துக்கமும் கொள்ள வேண்டும்.[130]

இறக்கும் நிலையில் உள்ளவர்கள் தங்களின் பாவங்களை உணர்ந்து அப்பாவங்களுக்காக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புப் பெறச் செய்ய வேண்டும்.[131]

இவ்வுலகப் பொருள்களின் மீதுள்ள ஆசையை வெறுத்துப் பாவிகள் மனந்திருந்த ஆசை கொண்டு பணியாற்ற வேண்டும்.[132]

திருமணச் சடங்குகளுக்கு ஆர்வமுடன் செல்வதைப் போலவே நோயுற்றவர்களைக் காணவும் ஆர்வமுடன் செல்ல வேண்டும்.[133]

---

129. வீரமாமுனிவர், **வேதியர் ஒழுக்கம்**, ப. 5.
130. **மேலது**, ப. 9.
131. **மேலது**, ப. 18.
132. **மேலது**, ப. 80.
133. **மேலது**, ப. 106.

ஆதரவு கிடைக்கும் இடங்களுக்கு அடிக்கடிச் செல்வது போல் அவரசத் தேவையுள்ள இடங்களுக்கும் அடிக்கடிச் செல்ல வேண்டும்.[134]

பாவத்தைப் பகைத்துப் பாவிகளை நேசித்து அவர்களின் ஈடேற்றத்திற்கு உதவ வேண்டும்.[135]

தன்னை முழுதும் நம்பாமல் ஆண்டவரை நம்பி, சாதி, செல்வ வேறுபாடு காணாமல், அன்பு கொண்டு பிறர் ஈடேற்றத்திற்கு உழைக்க வேண்டும்.[136]

சிலருக்கு நயமும் சிலருக்குப் பயமும் காட்டி அவரவர் குணமறிந்து தவறு செய்தவர்கள் தனித்திருக்கும்போது தவறுகளை எடுத்துச் சொல்லி அவர்களை மனம் வருந்தச் செய்ய வேண்டும். எதிர்பார்த்த பலன் கிடைக்காதபோது மனந்தளராமல் விடாமுயற்சியுடன் செயல்பட வேண்டும்.[137]

எல்லோரும் தங்களோடும், குருக்களோடும் ஒற்றுமையாக இருந்து, காவல் சம்மனசின் நற்குணங்களைப் பெற்றுச் சிறப்புடன் பணியாற்ற வேண்டும்.[138]

தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்கு அறிய வேண்டிய உண்மைகளையும் நடக்க வேண்டிய முறைகளையும் அவரவர்களுக்கு ஏற்பப் படிப்பித்து வாழ்வதே வேதியர் ஒழுக்கத்திற்கு உறுதுணையாகும்"[139]

என்பதாம்.

---

134. வீரமாமுனிவர், **வேதியர் ஒழுக்கம்**, ப.106.
135. **மேலது**, ப.122.
136. **மேலது**, ப.125.
137. **மேலது**, ப.145.
138. **மேலது**, ப.151.
139. **மேலது**, ப.151.

வாமன் சரித்திரம்

தமிழ் மரபுப்படி நூல்களின் பயன் ‘அறம் பொருள் இன்பம் வீடடைதல்’ என்பார் பவணந்தி முனிவர்.[140] இதனை வடநூலார் ‘புருஷோத்தங்கள்’ என்பர். பரிமேலழகர் ‘உறுதிப்பொருள்’ என்பார்.[141] இம்மை வாழ்வில் துய்க்க வேண்டிய இன்பங்களை அறத்தின் வழியில் துய்க்கும் ஒருவன் ஈடடைவான் என்பது அதன் கருத்து. இதைப் போலவே கிறித்துவத்திலும் தவறான வழியில் செல்பவன் மனந்திருந்தி தூய வாழ்க்கையை மேற்கொண்டால் அவன் இறைவனின் மன்னிப்பைப் பெறுவான். அவ்வாறு பாவமன்னிப்பைப் பெற்ற உயிர் இறந்ததற்குப் பிறகு வான்வீடு செல்லும் என்பது கிறித்துவத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டை வாமன் சரித்திரத்தின் வாயிலாக வீரமாமுனிவர் விளக்குகின்றார்.

முனிவரின் இலக்கியப் படைப்புகளுள் தலைசிறந்தது என்று எல்லோராலும் போற்றப்படுவது தேம்பாவணி. அத்தேம்பாவணியில் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசை முனிவர், மக்கள் வான்வீடு அடையும் வழியைக் கூறுவதாக ஒரு பகுதி உள்ளது. அப்பகுதியில் வாமன் என்ற படைத்தளபதியும் அறிவுரை கேட்பதாக உள்ளது. வாமன் போர்த் தொழிலில் சிறப்புற்றவன். மற்றத் தொழில்கள் பற்றித் தெரியாதவன். செல்வச் செழிப்பில் காமவாழ்க்கையில் ஈடுபட்டவன். அவன் சூசை முனிவரின் அறிவுரையைக் கேட்டுத் தான் செய்த குற்றங்களுக்காக மனம் வருந்தித் தெளிவு பெற்று அம்முனிவர் கூறிய வழியில் நடக்க முயற்சித்தான். இக்கருத்தை உரைநடையாக (உரையாடலாக)த் தருகிறார் முனிவர்.

பரமார்த்தகுருவின் கதை

வீரமாமுனிவர் எழுதிய நூல்களிலெல்லாம் புகழ்பெற்ற நூல் பரமார்த்தகுருவின் கதையாகும். இஃது ஏறக்குறைய உலகிலுள்ள பண்பட்ட மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. முனிவரே முதன்முதலாக அதை இலத்தீனில் மொழி பெயர்த்ததோடு மாணவர் நலம் கருதி,

---

140. பவணந்தி முனிவர், **நன்னூல்**.
141. திருவள்ளுவர், **திருக்குறள் பரிமேலழகருரை**.

ஒரேபக்கத்தில் ஒருபகுதி தமிழாகவும், மற்றொரு பகுதி அதற்குரிய இலத்தீனாகவும் வெளியிட்டார். இலத்தீன் மொழி மேலைநாட்டில் அக்காலத்தில் பொதுமொழியாக வழங்கினபடியால், அதைஅறிந்த பலநாட்டு அறிஞர்கள் தங்கள் மொழியில் எளிதில் அக்கதையை மொழி பெயர்க்க முடிந்தது. இதை அவர் எழுதிய,

> "தமிழகத்தில் அலுவல் பார்க்கும் வெள்ளையர்கள் தமிழ் கற்பதற்குத் துணைபுரியும் பணியின் ஒருபகுதியாக இந்நூலைப் படைக்கின்றேன். இங்கே சுற்றுவட்டாரத்தில் வழங்கும் நகைச்சுவை ததும்பும் கதைகளைத் தமிழ் மொழி கொண்டும் இந்நூலில் எழுதியுள்ளேன். புதிதாகத் தமிழ் கற்கும் வெள்ளையர்கள் வெற்றுக் கருத்துக்களைப் படிப்பதனிலும் நகைச்சுவைக் கதைகளைப் படிப்பதில் ஆர்வமும் ஊக்கமும் மிகுதியாகக் கொள்வர். இதனால் கதைக்கும் கதையாகிறது. தமிழ் மொழி இலக்கணம் கற்பதற்கும் வழியாகிறது. அதாவது ஒரேநேரத்தில் சுவைக்கவும் கற்கவும் முடியும். மற்றும் தமிழ் கற்கும் வெள்ளையர்க்குத் துணையாயிருப்பதற்காகக் கதைகள் இலத்தீனிலும் தரப்பட்டுள்ளன. தமிழில் ஏற்படும் ஐயங்களை இலத்தீன் பகுதியைக் கொண்டு தெளிவு செய்யலாம். எனவே இரு மொழிகளிலும் எழுதி இந்நூலை அமைத்தேன்"[142]

இந்த முன்னுரையிலிருந்து அறியமுடிகிறது.

தமிழ் நாட்டில் வழங்கின கதையை[143] வீரமாமுனிவர் நகைச்சுவைமிக்க நூலாக எழுதுகிறார். பரமார்த்தகுரு என்று ஒருவர் இருந்தார். அவருக்கு ஊழியம் செய்யும் மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்று ஐந்து சீடர்கள் இருந்தனர்.[144] இந்த அறுவரையும் கொண்டு,

1 ஆற்றைக் கடந்த கதை

2 குதிரை முட்டை வாங்கின கதை

---

142. சுந்தர சண்முகனார், **தமிழ் இலத்தீன் பாலம்**, ப. 103.
143. வீரமாமுனிவர், **வேதவிளக்கம்**, ப. 223.
144. வீரமாமுனிவர், **பரமார்த்த குருவின் கதை**, ப. 1.

3 வாடகை மாடேறிப் பிரயாணம் போவது

4 குதிரை பிடிக்கத் தூண்டில் விட்ட கதை

5 குதிரை மேல் நின்று ஊருக்குப் போன கதை

6 பிராமணன் சொன்ன புரோகிதக் கதை

7 குதிரையிலிருந்து விழுந்த கதை

8 குருவைச் சேமித்த கதை

முதலான எட்டுக் கதைகளைப் பெற்றுள்ளது இந்நூல். இவற்றுள் குரு குதிரையிலிருந்து விழுந்த கதையைத் திருச்சபையில் எழுதப்படாது மரபுரிமையாக வழங்கப்படும் வேத வாக்கியங்களை விசுவசிக்க மாட்டோம் என்று கூறும் லுத்தருடனும் அவர் சீடர்களுடனும் ஒப்பிட்டு வேத விளக்கம் என்னும் நூலில் கூறுகிறார்.

> "கள்ளக் குருவாகிய லுத்தர் சீடர்களான பதிதர் இதலே பரமார்த்தகுருவின் சீடர்களானார்கள். அது எப்படி என்றால் இந்நாட்டில் வழங்கும் கதையின்படியே ஒரு கண் குருடும் ஒரு கால் நொண்டியும் வாலுமின்றிக் காதுமின்றித் தவ - உரூபமாய் வற்றினதோர் குதிரை மேலே பரமார்த்த குரு வழிப்போகையில் கீழே தொங்கின மரக்கொம்பு பட்டுத் தலைப்பாகு பிறகே விழுந்ததாம். அதனைச் சீடர்கள் எடுத்தார்கள் என்று எண்ணிச் சற்று அப்பால் நடந்த பின்பு அது எங்கே என்று குரு கேட்டாராம். அதற்கு அவர்கள் தலைப்பாகை கீழே விழுந்து கிடக்கும் என்றதற்கு அவன் கோபித்து விழுந்ததெல்லாம் எடுக்கத் தேவையில்லையோ என்றான். அதைக் கேட்ட சீடர் ஓடிப்போய் விழுந்த தலைப்பாகையை எடுத்துக்கொண்டு வருகையில் அன்று இரவு பசும் பயிரில் மேய்ந்த குதிரை கழிந்துவிடா நின்றது. அந்த லத்தியையும் தலைப்பாகையில் ஏந்தி எடுத்துக் குருவின் கையில் வைத்தார்கள். அதற்கு அவன் மிகவும் சினந்ததற்கு விழுந்ததெல்லாம் எடுக்கக் கற்பித்ததல்லோ என்றார்கள். அப்போது அவன் எடுக்கத் தகுவதும் எடுக்கத் தகாததும் உண்டு என்றமையால் எடுக்கத் தகுவதை மாத்திரம் வேறுபட எழுதச் சொன்னார்கள். அவனும் எழுதினான். அப்புறம் போகையில் வழுக்கு

> நிலத்தில் தளர்ந்த நடையோடு நொண்டிக் குதிரை தவறி விழுந்து அருகில் இருந்த தாழ்ந்த குழியில் பரமாத்த குருவும் தலைகீழ் கால் மேலாக விழுந்து கோவென்று அலறி என்னை எடுக்க ஓடி வாருங்கள் என்று கூப்பிடச் சீடர்கள் வந்து எழுதித் தந்த ஓலையை எடுத்து ஒருவன் வாசிக்கத் தலைப்பாகு விழுந்தால் எடுக்கவும் - சோமன் வேஷ்டி விழுந்தால் எடுக்கவும் - சட்டையும் உள்ளுடையும் விழுந்தால் எடுக்கவும் என்று அவன் வாசித்தபடி ஒன்றொன்றாய் எல்லாத்தையும் எடுத்து கைக்கு நிருவாணமாய்க் கிடந்த குரு தன்னையும் எடுக்கச் சொல்லி எத்தனை சினந்தாலும் உம்மை எடுக்கச் சொல்லி எழுதினது எங்கே காட்டு என்று எழுதினபடி செய்வோமொழிய எழுதாததை ஒருகாலும் செய்யச் சம்மதியோம் என்றும் சீடர்கள் சாதித்ததனால் தப்பும் வழி வேறு ஒன்றின்றி அந்தக் குரு ஓலையும் எழுத்தாணியும் வாங்கிக் கொண்டு கிடந்தவிடத்திலே நானும் விழுந்தால் எடுக்கக் கடவீர்கள் என்று எழுதினான். எழுதினது என்று சீடர் கண்ட பின்னர் குருவையும் எடுத்துக் கொண்டார்கள். இந்தக் கதை பதிகரிடத்தில் மெய்யாக நடக்கும் தன்மையல்லோ"[145]

என்று லுத்தரையும் அவர் சீடர்களையும் ஏளனப்படுத்தி நகைச்சுவையுடன் எழுதுகிறார். அதனால் இந்நூல் அவர்களை ஏளனப்படுத்த எழுதப்பட்ட நகைச்சுவை நூலே எனலாம்.

காரைக்காலில் பல்லாண்டு வாழ்ந்த மேலைநாட்டு அறிஞர் வேன்சான் என்பவர் இக்கதை மேலை நாட்டுக் கதை என்றும், அந்த அளவுக்கு அதில் மேனாட்டுக் கருத்துப் பொதிந்திருக்கிறது என்றும் பல சான்றுகள் தருவதாக இராஜமாணிக்கம் அடிகள் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

> "கழுதை உப்புப் பொதியை ஆற்றில் சுமந்து சென்றதும், நாய் நிழலைக் கண்டு கறியை இழந்ததும் (கதை 1), குதிரை முட்டை வாங்கியதும் (கதை 2), சுட்ட கறி வாசனைக்குப் பணச் சத்தத்தால் ஈடு கட்டியதும் (கதை 3),

145. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, பக். 223 - 224.

சிறுநீர் வரியும் (கதை 5), கிளையை முனையிலிருந்து வெட்டியதும் (கதை 6) போன்ற பல பிறவும் வேன்சான் தமது ஆய்வுக் கட்டுரையில் எடுத்துக் காட்டுகிறார். அப்பாவிப் பரமார்த்த குருவும் அறிவற்ற சீடரும் என்ற இந்திய நாட்டுக் கதை அடிப்படையில் மேல்நாட்டுக் கதையே பெரும்பாலும் இடம்பெறுகிறது. ஆகவே இது மேல் நாட்டுக் கதை என்கிறார்"[146]

என்று குறிப்பிடுவதால் இது மேலும் ஆராயத்தக்கதாக இருக்கிறது. கடிதங்கள், வேதியர் ஒழுக்கம், வாமன் சரித்திரம், பரமார்த்தகுரு கதை ஆகிய நூல்களை எழுதிய வீரமாமுனிவர் தம் தலைவர் கடிதப்படியும் அவர் வேண்டுகோளுக்கேற்பவும் நூல் எழுதுகிறார்.

தலைவர் கடிதப்படி எழுதிய வேத விளக்கம்

லுத்தரன் திருச்சபை தோன்றியதற்கான காரணங்கள் குறித்து முன்னரே விளக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபை வற்புறுத்திய கருத்துக்களை மறுத்து ஏறத்தாழ 95 வகையான குற்றச்சாட்டுகளை மார்ட்டின் லுத்தர் வெளியிட்டதும் அக்குற்றச்சாட்டுகள் எதற்குமே உரோமன் திருச்சபை (லுத்தரின் காலத்திலேயே) உடனே விளக்கம் அளிக்கவில்லை என்பதும் ஏற்கெனவே விளக்கப்பட்டுள்ள செய்திகளாகும். லுத்தரின் அந்த 95 வகையான குற்றச்சாட்டுகளில் சிலவும் அவற்றுக்கு விடையும் விளக்கமும் தரக்கூடிய வகையிலேயே வேத விளக்கம் என்னும் இந்நூல் அமைந்திருக்கிறது.

தமிழகத்திலுள்ள ஏலாக்குறிச்சிப் பகுதியில் வாழும் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் தரங்கம்பாடியிலுள்ள லுத்தரன் சபையில் நாளுக்கு நாள் அதிகமான அளவில் சேர்ந்து கொண்டிருந்தனர். இவர்கள் கத்தோலிக்க வேதத்தின் விளக்கங்களையும் சிறப்புகளையும் அறியாத காரணத்தால்தான் லுத்தரன் சபையில் சேர்கின்றனர் என்று தமிழகத் தலைமைக் குரு 'டொமினிக் மடையரா' கருதினார்.[147] அதனால் ஏலாக்குறிச்சித் திருச்சபையில் பணியாற்றும்

---

146. ச. இராஜமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 265.
147. **மேலது**, ப. 268.

வீரமாமுனிவருக்கு அவர் பகுதியில் வாழும் கத்தோலிக்க மக்கள் கத்தோலிக்க வேதத்தின் விளக்கங்களையும் சிறப்புகளையும் உணருமாறு நூல் எழுதச் சொல்லிக் கடிதம் எழுதினார்.[148] அதன் காரணமாக வீரமாமுனிவர் லுத்தரன் சபையார் குற்றச்சாட்டுகளாகக் கூறிய பாரம்பரியக் கருத்துகளில் சிலவற்றைக் கூறி அவற்றுக்கு விளக்கமும் தருவதாக இந்நூலை எழுதினர். அந்த நூலே வேதவிளக்கமாகும். இந்நூல்,

1. புறச்சமயம் முளைத்த வகை
2. புறச்சமய விபரீதம்
3. மோஷவாசிகள் வணக்க விளக்கம்
4. தேவமாதா ஆராதனை விளக்கம்
5. சொன்ன வணக்கப் பழமை
6. சுருப வணக்க விளக்கம்
7. சுருப வணக்கப் பழமை
8. திருச்சபைக் கற்பனை விளக்கம்
9. திருச்சபை வழுவாமை
10. உரோமன் திருச்சபை விளக்கம்
11. உத்தரிக்கிற தல விளக்கம்
12. தேவதிரவிய அனுமானங்கள் பொது விளக்கம்
13. தேவதிரவிய அனுமானங்கள் தனி விளக்கம்
14. தேவநற்கருணை விளக்கம்
15. பூசை விளக்கம்
16. தேவ வாக்கிய விளக்கம்

---

148. ச. இராசமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 268.

17. வேத முத்திரையாகிய புதுமை விளக்கம்

(வேத சாட்சியருளானந்த சுவாமியால் விளங்கின புதுமைகள்)

18. வேத விளக்க நிலைமை

முதலான பதினெட்டுப் பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இவற்றுள் புனிதர் வணக்கம், உத்தரிக்கும் தலம், பாவமன்னிப்பு முதலான சில கருத்துக்களுக்கு முந்தைய இயல்களில் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. அதனால் விளக்கம் பெறாத சில கருத்துக்கள் மட்டும் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

புறச்சமயம் முளைத்த வகை

வீரமாமுனிவர், மார்ட்டின் லூத்தரால் தொடங்கப்பட்ட லூத்தரன் சபையைப் 'புறச்சமயம்' என்று குறிப்பிடுகிறார். மார்ட்டின் லூத்தர் கத்தோலிக்கச் சமயத் தொண்டராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கியவர் என்பதும், கத்தோலிக்கத் திருச்சபை தன் பழைய மரபுக்கு மாறாக அவ்வப்பொழுது பல புதிய கருத்துக்களை - நம்பிக்கைகளை - சடங்குகளைப் புகுத்தி அவற்றை வணிக நோக்கில் கடைப்பிடிக்கத் தொடங்கியது என்பதும் அவற்றைக் களைய முற்பட்ட முயற்சியில் தோல்வி அடைந்த மார்ட்டின் லூத்தர் பின்னர்த் தாமே ஓர் அமைப்பைத் தொடங்கியதும் முன்னரே குறிக்கப்பட்ட செய்திகளாகும். அவற்றின் விரிவையே இம்முதல் பகுதியில் வீரமாமுனிவர் விளக்குகிறார். மார்ட்டின் லூத்தர் இயேசுநாதரைத் தலைவராகக் கொண்டு அவர் கூறிய மொழிகள் அடங்கிய விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு தனி இயக்கத்தைத் (லூத்தரன் சபையைத்) தொடங்கினார். ஆனாலும் விரமாமுனிவர் மார்ட்டின் லூத்தர் ஏசுவை ஏற்க மறுத்தவராகவும் அவரை இழிவுபடுத்திப் பேசியவராகவும் சித்திரிக்கின்றார். அப்பகுதி,

> "லூத்தர் தானே சேசுநாதர் நம்மை இரட்சிக்க வந்த மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனிதனும் என்றார் . . . . பின்பு சேசுநாதரைச் சகல பாவிகளினும் பாவியென்றும் அவனைப் போல வேறு பாவியில்லை என்றும் அவரைக் கள்ளன் என்றும் கர்த்தர் துரோகி

> என்றும் தேவதூஷன் என்றும் வேதத்தைக் கெடுத்தவன் என்றும் பசாசு என்றும் லுத்தர் கக்கினான்"[149]

என்றமைகிறது. இப்பகுதியால் மார்ட்டின் லுத்தர், இயேசுநாதர் பெயரில் நிலையில்லாத கொள்கையுடையவர் என்று குற்றஞ்சாட்டுகின்றார் வீரமாமுனிவர். மேலும் மார்ட்டின் லுத்தரை அவன், இவன் என்று ஒருமையில் சுட்டித் தம் வெறுப்பையும் காட்டுகின்றார் வீரமாமுனிவர். அவரின் இத்தகைய குற்றச்சாட்டுகள் மேலும் ஆய்தற்குரியதாகும்.

லுத்தர் மரணம் இயற்கையானது என்று வரலாற்றாசிரியர்கள்[150] கூற வீரமாமுனிவரோ லுத்தர் தற்கொலை செய்து கொண்டு இறந்தார் என்கின்றார். இதை,

> "லுத்தர் ராத்திரி நன்றாய்ச் சாப்பிட்டுப் படுத்துக்கொண்டவிடத்துத் தன்பாவத்தின் பாரத்தைத் தானே பொறுக்க மாட்டாமல் தன் கையால் தன் கழுத்தை நெருக்கிச் சகல பாவங்களைப் போதித்த நாக்குப் புறப்படச் செத்துப் பசாசுகள் - மிகக் களிகூறக் கீழ் நரகத்து வீழ்ந்தான்"[151]

எனக் குறிப்பிடுகின்றார்.

புறச்சமய விபரீதம்

புறச்சமயமாகிய லுத்தரன் சபை பல்வேறு சபைகளாகப் பிரிந்த முறையையும் அவை செயல்பட்ட விதங்களையும் விளக்குகிறது. மேலும் தரங்கம்பாடி லுத்தரன்சபை ஏலாக்குறிச்சி மக்களிடையே விரைவாகப் பரவுவதனால் கிறித்தவ சமயம் பற்றிய உண்மைக் கோட்பாடுகள் கத்தோலிக்கத் திருச்சபை மக்களால் அறியப்படாமல் போகலாம் அல்லது தவறான கருத்துக்கள் பரப்பினால் கிறித்தவக் கோட்பாடுகளே பழிக்கு ஆளாகலாம் என்ற அச்சத்தின் அடையாளமாக இவ்வியல் அமைந்திருக்கிறது.

---

149. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 10.
150. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், **திருச்சபைச் சீர்திருத்தம்**, ப. 183.
151. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 17.

கத்தோலிக்க உரோமன் திருச்சபையை விட்டு விலகிய மார்ட்டின் லுத்தருக்குக் கல்வீன், மேலந்தோன், ஸ்விங்கிலி முதலான சீடர்கள் இருந்தனர். இவர்களும் மார்ட்டின் லுத்தரைப் போலவே திருச்சபைப் பாரம்பரியக் கருத்துக்களை ஒதுக்கிவிட்டு விவிலியத்தை மட்டும் பின்பற்றினால் போதுமென்று மக்களுக்குப் போதித்து வந்தனர். விவிலியச் சொற்றொடர்களுக்கு விளக்கம் கூறும் முறையில் இவர்களுக்குள்ளேயே முரண்பட்ட கருத்துக்கள் தோன்றி வளர்ந்து வந்தன. இதனால் லுத்தரன் திருச்சபை பல்வேறு பிரிவுகளாகக் கிளைத்து வளரத் தொடங்கியது. மேலும் விவிலியத்தைப் படிப்பவர்கள் அவரவர் அறிவுக்கு ஏற்றபடிப் பொருள் புரிந்து போதிக்கத் தொடங்கினர். அதன்படி வாழவும் முயற்சித்தனர். அதனால் புறச்சமயமாகிய லுத்தரன் சபை ஒரு தலைமையில் இயங்காமல் பல பிரிவுகளாகப் பிரிந்து நின்றது. இதனை,

> "அப்போஸ்தலமார் நாளிலே துவக்கி ஓயாமல் பிறந்த பல புறச்சமயங்கள் லுத்தேர் முளைத்த நாளில் - ஐரோப்பாக் கண்டத்திலே எல்லாம் மடிந்து புதைக்கப்பட்டிருந்த தொழிய ஒன்றாகிலும் அப்போது விளங்கி நின்றதுமில்லை. அதற்கு ஒரு கோயிலும் ஒரு கூட்டமும் ஒரு தலமும் நின்றதில்லை. லுத்தேர் முதற்கொண்டு தோன்றின புறச்சமயங்களோ எனில் இன்றும் நிலைபெற்றாலும் ஒரு தலைமையில் நில்லாமல் ஆயிரம் பிரிவாக வேறுபட்டு ஒருமுகமும் நிலையும் இல்லாமல் அலைவது கண்டோம்"[152]

என்னும் சொற்களால் விளக்குகிறார். மேலும் கத்தோலிக்கத் திருச்சபையைக் கற்புடைய பெண்ணிற்கும் புறச்சமயங்களை விலைமாதருக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார். அப்பகுதி,

> "தன் பத்தாவைப் பார்த்த கண்ணால் பிறரைப் பார்க்க மாட்டாத கற்புடையாளைப் போல உரோமன் திருச்சபை யேசு கிறிஸ்துவுக்கு ஒரு நெறி நிற்கும் கற்புடையாளாக வேதத்தில் புகழப்பட்டதாமே. பதிதர் சமயங்களோ எனில் நாளுக்கு நாள் வேறாகி அவனவன் ஆசைக்கு

152. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, பக். 19 - 20.

> அளவாக விபரீதங்களைக் காட்டினதனால் பொருளைப் பற்றி அன்பினை மாறி வந்த யாவர்க்கும் பிரியங் காட்டி யாவரையும் வஞ்சகமாகக் கெடுத்து ஒரு காவலும் ஒரு நெறியும் ஒரு நட்பும் வெட்கமுமில்லாமல் இகழப்படும் விலைமாந்தராகச் சமயங்கள் எல்லாம் வேதத்தில் நிந்திக்கப்பட்டது என்று அறிவோம்"[153]

என்று குறிப்பார். இன்று புனிதர்கள் வணக்கம் என்று கூறுவதை வீரமாமுனிவர் மோட்சவாசிகள் வணக்கம் என்று குறிப்பிடுகிறார்.[154]

தேவமாதா ஆராதனை விளக்கம் (மரியன்னை வணக்கம்)

உலகத்தை ஆளும் அரசரை அவர் ஆளுகையின்கீழ் வாழும் மக்கள் மதித்து வாழ்கின்றனர். அவ்வாறு அரசரை மதிக்கும்போது அவர்களின் தாயை மதித்தும் வாழ்கின்றனர். தங்களுக்குக் குறை ஏற்பட்டபோது அரசரை நேரில் கண்டு குறைகளைக் கூறித் தீர்வு கண்டு வருகின்றனர். சிற்சில வேளைகளில் அரசரால் விரும்பப்படும் அவர் தாய், மனைவி, நண்பர்கள், உறவினர்கள் வழியாகவும் தம் குறைகளை அரசருக்குத் தெரிவித்துத் தீர்வு காண்பதும் உண்டு. இந்த உலக வழக்குப் போலவே விண்ணுலக அரசராகிய இயேசுவை அணுகித் தம் குறைகளைத் தீர்க்க முடியாத காலங்களில் அவரின் தாயாகிய கன்னிமரியாளின் வழியாகவும், புனிதர்களின் வழியாகவும் மக்கள் தம் குறைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். இதற்குக் கத்தோலிக்கத் திருச்சபை ஆதரவு தருகிறது. கன்னிமரி இயேசுவை ஈன்றெடுத்தால் அவர் பெண்களில் பேறு பெற்றவராகத் திருச்சபையால் கருதப்படுகிறார். இக்கருத்தை,

> "திருச்சபை மரியன்னையை இறைவனுக்குக் கீழ் உள்ளவராகவும் வானத் தூதர்களுக்கும் புனிதர்களுக்கும் மேல் உள்ளவராகவும் மதித்து, கடவுளுக்குரிய ஆராதனையை மறுத்து, சிறப்பு வணக்கம் செலுத்துகிறது"[155]

---

153. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, பக். 22 - 23.
154. **மேலது**, ப. 26.
155. **மேலது**, ப. 45.

எனும் வீரமாமுனிவர் கூற்றால் அறியமுடிகிறது.

சொன்ன வணக்கப் பழமை (புனிதர் கன்னி மரியாள் வணக்கம் பழமையானது)

லூத்தரன் சபையார் புனிதர், கன்னி மரியாள் இவர்களை வணங்கும் முறை திருச்சபை தொடங்கிய முதல் 500 வருடங்கள் வரை நடைபெறவில்லை என்றும், 500 வருடங்களுக்குப் பிறகே திருச்சபையில் இடம்பெற்றதென்றும் கூறுகின்றனர். இவ்வாறு கூறும் கூற்று தவறென்றும் திருச்சபை தொடங்கிய காலத்திலிருந்தே இம்முறை நடைபெற்று வருகிறது என்பதை மெய்ப்பிக்கும் பொருட்டாகவும் இவ்வியல் அமைகிறது. திருச்சபை தொடங்கிய முதல் 500 வருடங்களுக்குள் புனிதர், கன்னி மரியாள் இவர்களை வணங்கும் முறை தொடர்ந்து நடந்தது என்பதை 500 ஆண்டுகளுக்குள் நடந்த உதாரணங்களுடன் (431, 420, 397, 393, 378, 293, 254 ஆண்டுகளில் நடந்தவை) விளக்குவதாக இவ்வியல் அமைகிறது. அவற்றுள் திருச்சபை, கன்னிமரியை மதித்து 'மங்கள வார்த்தைச் செபம்' இயற்றி இன்றுவரை வழங்கிவரும் முறையைக் காணமுடிகிறது.

திருச்சபை கன்னிமரியாளைப் போற்றுகிறது என்பதற்கு அடையாளமாக மங்கள வார்த்தைச் செபத்தை இயற்றியுள்ளது. இது மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது.

1. கபிரியேல் என்னும் தேவதூதர் கன்னிமரியாளுக்குக் கூறியது
2. இயேசுவின் முன்னோடியாகிய திருமுழுக்கு அருளப்பரின் தாயாகிய எலிசபெத், கன்னிமரியாளைப் பற்றிக் கூறியது.
3. இறுதியாகத் திருச்சபை கட்டளையிட்டது.

இதனை,

"கன்னிமரியை உலகமெல்லாம் சிறப்பாகத் துதிக்கும்படிக்கு அவள் கருவுறுநாளில் தேவதூதர் வாயினால் துவக்கின மங்கள வார்த்தை செபத்தை முடிக்க கட்டளையிட்டனர். அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. இது கபிரியேல் என்னும் தேவதூதர் சொன்ன மங்களம். மீளவும் பெண்சாதிகளுக்குள்ளே யாசீர்வதிக்கப்பட்டவளு நீரே - உம்முடைய

திருவயிற்றின் கனியாகிய சேசு - ஆசிர்வதிக்கப்பட்டவரே. இது - எலிசபேத்தம்மாள் சொன்ன மங்களம் - அர்ச் - மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் - மரணநேரத்திலும் வேண்டிக் கொள்ளும். இது திருச்சபை அன்று கட்டளையிட்ட மங்களமாக மந்திரமுடிந்ததாமே"[156]

என எடுத்துக்காட்டுவார்.

இவ்வாறு திருச்சபை தொடங்கிய நாளிலிருந்து சிறப்புச் செய்வதால் கன்னிமரி வணக்கம் மிகப் பழமையானது என்பது தெளிவாகிறது.

உருவ வணக்கம் (உருவ வழிபாடு)

இவ்வுலகில் பிறந்த சிலர் பிறருக்குத் துன்பம் தராமல் அவர்களுக்கு நன்மை செய்து, அவர்களின் துன்பங்களில் பங்கு கொண்டு அத்துன்பங்களைத் தீர்க்க முயற்சி செய்தும், செயற்கரும் செயல்களைச் செய்தும் உலகம் போற்றும் உத்தமர்களாக வாழ்ந்து இறக்கின்றனர். அவர்களை நினைவு கூரவும் அவர்கள் காட்டிய வழியில் நடக்கவும் விரும்பிய மக்கள் அவர்களைப் போன்ற உருவங்களைச் செய்து வைத்து அவர்களின் நற்குணங்களைப் பின்பற்றி வருகின்றனர். இதனடிப்படையில் இந்து சமயமும் கத்தோலிக்கச் சமயமும் உருவமற்ற இறைவன் மனித அவதாரம் எடுத்துப் பிறந்து வாழ்ந்ததால் உருவ வழிபாட்டை ஏற்கின்றன. இசுலாம் உருவவழிபாட்டை மறுக்கிறது. கத்தோலிக்கத் திருச்சபை உருவ வழிபாட்டை ஏற்றுக் கொண்டது. இதற்கான காரணங்களை வீரமாமுனிவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

"பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அதாவது கடவுள் இவ்வுலகில் மனிதனாகப் பிறப்பதற்கு முன்பு கடவுள் உருவமற்று இருந்தார். அதனால் உருவ வழிபாடு விலக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உருவமற்ற இறைவன் இயேசு மனித உருவமெடுத்து இவ்வுலகில் மனிதனாகத்

156. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 48.

தோன்றினார். மக்களோடு வாழ்ந்தார். அவர்களை ஈடேற்றினார். இப்போது தம் தந்தையுடன் வான்வீட்டில் வாழ்கிறார்"[157]

அதனால் கத்தோலிக்கத் திருச்சபை இயேசுவுக்கு உருவம் கொடுத்து வழிபாடு செலுத்தலாம் என்கிறது. அதைப்போலவே இவ்வுலகில் பிறந்து வாழ்ந்த புனிதர்களும் மரியன்னையும் இன்று இயேசுவோடு வானுலகில் இருப்பதாக நம்புவதால் அவர்களுக்கும் உருவம் வைத்து வழிபாடு செய்யலாம் என்கிறது கத்தோலிக்கத் திருச்சபை. இது இயேசு பிறந்த காலத்திலிருந்து அதாவது திருச்சபை தொடங்கிய காலத்திலிருந்து கடைப்பிடித்து வரும் மிகப் பழமையான முறையாகும்.

தேவதிரவிய அனுமானங்கள் (திருவருட் சாதனங்கள்)

மக்கள் கடவுளின் அருளைப் பெறுவதற்காகப் பலியிடுதல், பூசை செய்தல், தூப தீப மலர் அஞ்சலி செய்தல் முதலான பல்வேறு செயல்களைச் செய்தனர். கத்தோலிக்கக் கிறித்தவ மக்களும் கடவுளின் அருளைப் பெறுவதற்காகத் திருப்பலி நிறைவேற்றல், அதில் பங்கு கொள்ளுதல், ஜெபம், தவம் செய்தல், தூபதீப மலர் அஞ்சலி செய்தல் முதலான பல முறைகளைக் கையாண்டு வருகின்றனர்; அவற்றோடு குருக்கள், ஆயர்கள் ஆகிய இவர்களால் நடத்தப்படும் சில சடங்கு முறைகளையும் செயல்படுத்தி வருகின்றனர். இந்தச் சடங்கு முறைகளைத்தாம் திருவருட்சாதனங்கள் என்று திருச்சபை வழங்குகிறது. அவை

ஞானஸ்நானம்	-	(திருமுழுக்கு)
உறுதிபூசுதல்	-	(திடப்படுத்துதல்)
நற்கருணை		
பச்சாதாபம்	-	(பாவமன்னிப்பு)
அவஸ்தை பூசுதல்	-	(நோயில் ஆறுதல் படுத்தல்)
குருத்துவம்		
மெய் விவாகம்	-	(திருமணம்)[158]

157. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 58.

ஆகிய ஏழு ஆகும். மக்கள் கடவுளின் அருளைப் பெறுவதற்காக அவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை இந்த ஏழு திருவருட்சாதனங்களும் அவர்களுக்காக நிகழ்த்தப்படுகின்றன. இவை நிகழும்போது இதனைப் பெறுபவர்கள் அவை பற்றிய தெளிவான சிந்தனையையும் கடவுளின் அருள் கிடைக்கும் என்ற உறுதியான விசுவாசத்தையும் உடையவர்களாக இருக்க வேண்டும் என்ற திருச்சபையின் விருப்பப்படியே இச்செயல்முறைகள் நடைபெறுகின்றன. இந்த அருட் சாதனங்களால் கிடைக்கும் கடவுளின் அருளோடு செபம், தவம், தானம் முதலான புண்ணியச் செயல்களையும் சேர்த்துச் செய்யும்போதுதான் மனிதன் வான்வீடு சேர்வதற்கு வழி காணுகிறான் என்பது கத்தோலிக்கத் திருச்சபையின் கருத்து.

கடவுளின் அருளைப் பெறுவதற்காகத் திருவருட் சாதனங்கள் நிகழ்த்தப்படும் முறையைக் கீழே காணலாம். இந்தத் திருவருட் சாதனங்களைக் குருத்துவ நிலையில் உள்ளவர்கள் மட்டுமே நிகழ்த்தலாம். சமயச் சடங்குகளான திருவருட் சாதனங்களுக்கு மூன்று பண்புகள் இருக்கின்றன. அவை

1. சடங்கு வெளிப்படை அடையாளமாகத் தெரியும்படி நிகழ்த்தப்படுதல்.
2. சடங்கு முறையால் கடவுளின் அருள் கிடைப்பது உறுதியாதல்.
3. அந்த அருளைப் பெறுவதற்கு இயேசு கட்டளை இட்ட அதே சொற்களைத் தற்போது பயன்படுத்துதல்[159]

என்பன. இவற்றின் அடிப்படையில் சில திருவருட் சாதனங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

திருமுழுக்கு

திருமுழுக்கின்போது குருவானவர், திருமுழுக்குப் பெறுபவரின் தலையில் தண்ணீர் ஊற்றி, 'திருமுழுக்குப் பெற்றவனாகிய நீ கடவுளின் அருளைப் பெறுகின்றாய்' என்று சொல்லி, 'தண்ணீராலும் பரிசுத்த ஆவியினாலும் திரும்பப்

---

158. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 64.
159. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 78.

பிறவாதவன் ஈடேற்றம் அடையான். ஆனால் நீயோ தண்ணீராலும் பரிசுத்த ஆவியினாலும் திரும்பப் பிறந்துள்ளாய். ஆதலால் உமக்கு ஈடேற்றம் உண்டு' என்று திருமுழுக்குச் சடங்கை நிகழ்த்துகின்றார். இதனால் திருமுழுக்குப் பெற்றவன் பாவத்திலிருந்து தூய்மையாகி ஞானத்தில் பிறந்து வாழத் தொடங்குகிறான். ஞானத்தில் பிறந்தவன் வளர்ந்து சிறுவனாகும் காலத்தில் துன்பத்தால் துவண்டு விழாமல் கடவுளின் அருளில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகத் திருச்சபை 'உறுதி பூசுதல்' என்னும் சடங்கைச் செய்கிறது. குருக்களின் தலைவராகிய ஆயர் உறுதி பூசுதல் பெறுபவரின் நெற்றியில் எண்ணெய் பூசித் தலையில் கைவைத்து, 'கடவுளின் அருள் உன்னோடு இருக்கிறது. பரிசுத்த ஆவி உன்னைத் திடப்படுத்துகிறது. அதனால் தொடர்ந்து வெற்றியுடன் செயல்படு' என்று ஊக்கங் கொடுக்கிறார்.

நற்கருணை

உடலை வளர்ப்பதற்கு உணவு தேவை. அதுபோலவே ஆன்மாவை வளர்ப்பதற்கு ஆன்ம உணவு தேவை. அந்த ஆன்ம உணவுதான் இயேசுவின் உடலும் இரத்தமுமாகிய நற்கருணை. இந்த நற்கருணையை இயேசுநாதர் இவ்வுலகில் வாழ்ந்தபோது தாம் இறப்பதற்கு முதல்நாள் இரவு உணவின்போது ஏற்படுத்தினார். எவ்வாறெனில் கோதுமை அப்பத்தை எடுத்துத் தம் சீடர்களிடம்,

> "இது என் உடல். இதை என் நினைவாக உண்ணுங்கள்"[160]

என்றும் திராட்சைரசத்தை எடுத்து

> "இது உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் இதை என் நினைவாகப் பருகுங்கள்"[161]

என்றும் ஆன்ம உணவாகிய நற்கருணையை உருவாக்கினார். இதை அடியொற்றியே குருவானவர் ஆலயத்தில் திருப்பலி நிகழ்த்தும்போது ஆன்ம உணவாகிய நற்கருணையை மக்களுக்கு வழங்குகிறார்.

---

160. **விவிலியம், புதிய ஏற்பாடு,** லூக். 22 : 19.
161. **விவிலியம், புதிய ஏற்பாடு,** லூக். 22 : 20.

பாவமன்னிப்பு

இன்ப துன்பம் நிறைந்த உலகில் நன்மையும் தீமையும் உண்டாகிறது. இதனடிப்படையில் மனிதன் நற்குணங்களும் தீயகுணங்களும் பெற்று விளங்குகிறான். அதனால் பிறருக்கு நன்மையும் தீமையும் செய்கிறான்; நன்மை செய்யும்போது மகிழ்ச்சியும் தீமை செய்யும்போது வருத்தமும் கொள்கிறான். வருத்தம் உண்டாவதற்குக் காரணமாக இருக்கும் தீமையைப் பாவம் என்பர். பாவம் செய்த மனிதன் தன் தவறை நினைத்து வருந்தி ஆறுதல் பெற விழைகிறான். இந்த ஆறுதலை இறைவன், பெரியோர், நண்பர் ஆகிய இவர்களாலேயே கொடுக்கமுடியும் என்று நம்பி அவர்களிடம் பெற முற்படுகிறான். இவ்வாறு மக்கள் வாழ்க்கையில் நடைபெறும். இந்தச் செயல்முறையை இறைவன் இயேசு அன்றே ஏற்படுத்தினார். அவர்தம் சீடர்களிடம்,

> "எவரெவர் பாவங்களை மன்னிப்பீர்களோ அவரவர் பாவங்கள் மன்னிக்கப்படும். எவரெவர் பாவங்களை மன்னியாது விடுவீர்களோ அவரவர் பாவங்கள் மன்னியாது விடப்படும்"[162]

என்று கூறினார். சீடர்களும் அவ்வாறே மக்களுக்குப் பாவமன்னிப்பை நிகழ்த்தி வைத்தனர். அவர்களைப் போலவே அவர்களின் வழிவந்தவர்களாகிய குருக்களும் இன்று பாவமன்னிப்பைச் செயல்படுத்துகின்றனர். மக்கள் இயேசுவின் பிரதிநிதியாகிய குருக்களிடம் பாவங்களைக் கூறி மனம் வருந்தி, ஆறுதல் பெறும் முறைதான் 'பாவமன்னிப்பு' என அழைக்கப்படுகிறது. மனிதன் ஆறுதல் பெறுவதற்குப் பாவமன்னிப்பு ஒரு காரணமாக இருப்பதால் அதைத் தாம் விரும்புவதாகவும் ஆனால் அதைப் பணம் பறித்தலுக்குப் பயன்படுத்தினதால்தான் வெறுப்பதாகவும் லுத்தர் கூறினார். இதனை,

> "தற்போது பழக்கத்தில் இருந்துவரும் தனிப்பாவ அறிக்கையை (குருவிடம் கூறும் முறை Private confession) அதற்கு வேத ஆதாரம் இல்லாவிட்டாலும், அதை நான் ஆதரிக்கிறேன். அது மிகவும் பயனுள்ளது. அவசியமானதாகையால் அதை எடுத்துவிட நான்

---

162. **விவிலியம், புதிய ஏற்பாடு**, அரு. 20 : 23.

விரும்பவில்லை. கிறிஸ்தவ சபையில் அது இருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்; ஏனெனில் துன்புறும் ஆன்மாக்களுக்கு அது இணையற்ற நிவாரணமாயிருக்கிறது. நமது சகோதரனுக்கு நமது உள்ளத்தைத் திறந்து நம்மை உறுத்திக் கொண்டிருக்கும் பாவத்தை அவனிடம் தனிப்பட அறிக்கையிட்டால், அந்தச் சகோதரனுடைய உதட்டிலிருந்து புறப்படும் ஆறுதலான வார்த்தை கடவுளிடமிருந்து வந்த வார்த்தையாகும். அவ்வார்த்தையை விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளும்போது கடவுளுடைய கிருபையால் சமாதானத்தைக் கண்டடைகிறோம். அதில் ஒரு காரியத்தை நான் வெறுத்துத் தள்ளுகிறேன். அதென்னவெனில் இதுபோன்ற பாவ அறிக்கையைப் போப்புவின் கொடுங்கோன்மைக்கும் அச்சுறுத்திப் பணம் பறித்தலுக்கும் உள்ளாக்கினதுதான்"[163]

எனவரும் அவரின் இக்கூற்று தெளிவுபடுத்துகிறது. திருச்சபையில் இந்தப் பாவ மன்னிப்பு பெறும் முறையில்தான் பாவமன்னிப்புச் சீட்டு விற்கும் பழக்கம் உருவானது. அதில் சிற்சில குறைபாடுகள் இருந்தன. (அந்தக் குறைபாடுகளும் அவற்றை லூத்தர் களைய முற்பட்ட முறைகளும் இரண்டாம் இயலில் விளக்கப் பெற்றுள்ளன.)

நோயில் பூசுதல்

ஒருவர் இறக்குந்தறுவாயில் சுயநினைவுடன் இருக்கும்போது குருவானவர் அவரிடம் சென்று, அவர்தம் பாவங்களை நினைத்து வருந்தி ஆறுதல் பெற்று இறைவனில் நிலைத்து நிற்கச் சில சடங்குகளைச் செய்து உதவுகிறார். இந்த முறையே 'நோயில் பூசுதல்' ஆகும். ஆணும் பெண்ணுமாகக் கூடி அறத்தோடு இல்லறம் நடத்தத் 'திருமணமும்' மக்களை ஆன்மீக வழியில் நடத்திச் செல்லக் 'குருத்துவமும்' என்ற ஏழு திருவருட்சாதனங்களால் மனிதன் தூய வாழ்வு பெற்று ஈடேற்றம் அடைகிறான்.

---

163. மார்ட்டின் லூத்தரின் படைப்புகளில் சில : மொழிபெயர்ப்பு; மார்ட்டின் லூத்தர், **ரோமச் சபையின் பாபிலோனியச் சிறையிருப்பு**, ப. 106.

பூசை விளக்கம் (திருப்பலி)

கடவுள் ஒருவரே. அவரே உண்மைக்கடவுள். அவர் உலகம் எல்லாவற்றையும் ஆளுகின்றவர். அவருக்கு நாம் கீழ்ப்படிந்து வணக்கம் செலுத்த வேண்டும் என்ற உண்மைகளை உறுதிப்படுத்தும் வகையில் செய்யப்படும் சடங்கு முறையே 'திருப்பலி'யாகும். இந்தத் திருப்பலி அன்று இயேசு கிறித்து கல்வாரி மலையில் சிலுவையில் மரித்ததன் நினைவாகச் செய்யப்படுகிறது. இதுவே திருப்பலியும் நற்கருணைப் பலியுமாகும். இந்தப் பலி, ஆலயத்தில் நாள்தோறும் நிறைவேற்றப்படுகிறது. இந்தப் பலியின்போது இவ்வுலகப் பொருள்களாகிய கோதுமை அப்பமும் திராட்சை ரசமும் இறைவனின் உடலும் இரத்தமுமாக மாற்றப்பட்டு ஆன்ம உணவாக மக்கள் உட்கொள்கின்றனர். இந்த முறைதான் கத்தோலிக்கத் திருச்சபையில் திருப்பலி என்றழைக்கப்படுகிறது. இதனை,

> "ஒன்றாகிய மெய்யான கடவுள் எல்லாத்தையும் உடையவராகி யெல்லாத்தையும் ஆளும் ஆண்மையைக் காட்டவும் அவருக்கு நாம் கீழ்ப்படிந்து உரிய வணக்கத்தைச் செய்யவும் ஸ்தாபிக்கப்பட்ட குருக்களால் யாதொரு ஞான அர்த்தத்தைக் காட்டும் புறச்சடங்கோடே இவ்வுலகப் பொருளே தேவ பலியாகும்படிக்கு திருப்பொருளாகச் செய்த பின்பு - அந்த பலியே அழிக்கப்பட்டுக் கடவுளுக்கு மாத்திரம் செய்யும் படைப்புப் பூசையாமே. ஆகையால் மெய்யான குருக்கள் தவிர மற்றவர் ஆணும் பெண்ணும் என்ன சடங்கு செய்தாலும் அது மெய்யான பூசையல்ல"[164]

என்று வீரமாமுனிவர் விளக்குவதால் அறியலாம்.

தேவ வாக்கிய விளக்கம் (வேதவாக்கிய விளக்கம்)

உலகிலுள்ள ஒவ்வொரு சமயத்திற்கும் அந்தந்தக் கடவுள்களின் அல்லது இறைத்தூதர்களின் அருள்வாக்கு எழுதப்பெற்ற புனித நூல்கள் உள்ளன. அவ்வாறே கிறித்தவ சமயத்திற்கும் விவிலியம் என்னும் புனித நூல் உள்ளது. இந்நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் இரண்டு பெரும் பிரிவுகளைக்

164. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப.162.

கொண்டது. இயேசு கிறித்து பிறப்பதற்கு முன் யூத சமயத்தவரால் பின்பற்றப்பட்டு வந்த வேத வாக்கியங்கள் பழைய ஏற்பாடு என்றும், இயேசு கிறித்து பிறந்த பிறகு அவருடைய போதனைகள், அவருடைய சீடர்கள் மக்களுக்கு எழுதிய கடிதங்கள் ஆகியவை புதிய ஏற்பாடு என்றும் வழங்கப்படுகின்றன. இவை எழுதப்பட்ட வேதவாக்கியங்கள் ஆகும்.

எழுதப்படாத வேதவாக்கியம்

இயேசு பிறப்பதற்கு முன்னுள்ள பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உருவமற்ற இறைவன் தம் மக்களுக்கு ஒளியாக, மேகத்தூணாகத் தோன்றியதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு தோன்றி அவர்களுடன் உடன்படிக்கை செய்து உறவாடும்போது அவர் கூறிய கருத்துகளை மக்களுக்கு அவர் எழுதிக் கொடுக்கவுமில்லை. எழுதச் சொல்லிக் கட்டளையிடவும் இல்லை. மாறாக அக்கூற்றுகள் மக்கள் வாய்மொழியாகவே போதிக்கப்பட்டு வந்தன.

புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இயேசு கிறித்து தம் போதனைகளைத் தம் சீடர்களுக்கு எழுதிக் கொடுக்கவுமில்லை; எழுதச்சொல்லிக் கட்டளையிடவும் இல்லை.

இவ்வாறு பழைய புதிய ஏற்பாட்டுக் காலங்களில் வாய்மொழியாகப் போதித்த போதனைகளே எழுதாத வேத வாக்கியங்கள் ஆயின. கிறித்தவ சமயத்தில் வாழ்ந்து வீடுபேறு அடைவதற்கு இந்த வேத வாக்கியங்களை மக்கள் பின்பற்றுவதோடு அவர்கள் பக்தி நெறியிலும் வாழவேண்டுமென்று திருச்சபை விரும்பியது. அதற்காக நற்செயல்கள் செய்தல், செபம் தபம் செய்தல் முதலான பல்வேறு செயல்முறைகளைத் திருச்சபை கடைப்பிடிக்கச் செய்தது. இந்தச் செயல் முறைகளே திருச்சபையின் 'பாரம்பரியங்கள்' (மரபுரிமைகள்) என்றழைக்கப்படுகின்றன. இந்தப் பாரம்பரியக் கருத்துகள் மேற்கூறிய எழுதாத வேத வாக்கியங்கள் ஆகிய இரண்டும் ஒன்று சேர்க்கப்பட்டுத் திருச்சபையால் எழுதாத வேதவாக்கியங்கள் என்று வழங்கப்படுகின்றன.

வேத முத்திரையாகிய புதுமை விளக்கம் - பொது விளக்கம்

உலகில் இறைவன் இயேசு ஏற்படுத்திய உண்மையான வேதம் தவிர மனிதரால் உண்டாக்கப்பட்ட வேதங்கள் பல இருக்கின்றன. இவற்றுள் இறைவன்

ஏற்படுத்திய உண்மையான வேதம் எது என்று மக்கள் அறிய விரும்பியபோது இறைவன் புதுமைகளைச் செய்து (உலகப் படைப்புகளால் செய்ய முடியாத காரியம்) தாம் ஏற்படுத்திய உண்மையான கத்தோலிக்க வேதத்தை வெளிப்படுத்தினார்.

இதையறிந்த 'புறச்சமயத்தாராகிய' லுத்தர், கல்வீன் முதலானவர்கள் தாம் உண்டாக்கிய பொய்யான சமயத்தில் மெய்யான புதுமைகளை இறைவன் செய்யாமையால் பொய்யான புதுமைகளால் ஒப்புவிக்க முயன்றனர் எனக் குற்றம் சாட்டுகிறார் வீரமாமுனிவர். இதனை,

> "அப்படியே லுத்தர் பசாசுக்கும் தனக்கும் இருந்த பழக்கமும் சிநேகமும் நம்பி தன் மதத்தை அனுசரித்திருந்த ஒருத்தியைப் பிடித்த பசாசை ஓட்டுவேன் என்று உறுதியாய்ச் சொல்லி தானும் பேய் பிடித்தவளும் மற்ற சில பேர்களும் ஓர் அறையிலிருந்து பசாசை ஓட்டத் துவக்கி நான் சொல்லும் சமயம் மெய்யான சமயம் என்று ஒப்பிக்க உடனே போவாயாக என்று பசாசுக்கு கட்டளையிட்டார். கட்டளையை ஏற்ற பசாசு லுத்தரைக் கொல்ல முயலுகையில் அவர் தப்பியோடி ஒளிந்து போனார்"[165]

என்று லுத்தருடன் இருந்த ஸ்தாபிலன் எழுதினதாக வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.

கணவன் உண்மையிலேயே இறத்தல்

புதுமை நடக்கிறது என்று உலகத்தாருக்கு எடுத்துக்காட்ட விரும்பிய புறச்சமயத்தார் உயிருடன் வாழும் ஒருவரை இறந்ததுபோலப் படுக்கச் செய்து மனைவி அழுவது போலவும் அவளுக்கு உதவி செய்ய வந்த புறச்சமயத்தார் தாங்கள் கடவுளிடம் மன்றாடி உயிர் பிழைக்க வைக்கப் போவதாகவும் அவளிடம் கூறிக் கடவுளிடம் வேண்டிய பிறகு உயிர் பெற்று வந்தது போல நடிக்கச் சொல்லி ஏற்பாடு செய்திருந்தனர். இதைச் செயல்படுத்தும்போது அவர் உண்மையிலேயே இறந்தது போக அம்மனைவி நடந்தவற்றை ஊராருக்கு எடுத்துரைத்து அது

---

165. வீரமாமுனிவர், **வேதவிளக்கம்**, ப. 241.

பொய் மதம் என்பதை நிரூபித்தாள்.[166] இவ்வாறு 'பொய்யான வேதத்தில் பொய்யான புதுமைகள்' நடக்க உண்மையான கத்தோலிக்க வேதத்தில் உலகம் முழுவதும் உண்மையான புதுமைகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அப்புதுமைகளில் வெளிநாடுகளில் நடந்தவற்றைச் சொன்னால் தரங்கம்பாடியிலுள்ள லுத்தரன் சபையார் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் தமிழகத்தில் மறவர் நாட்டில் சமயத் தொண்டு செய்து இறந்த அருளானந்த சுவாமிகள் (4-2-1694) என்னும் வேதசாட்சியின் பெயரால் நடந்த புதுமைகளை எடுத்துக்காட்டுகிறார். இந்தப் புதுமைகளை விசாரித்தவர் வீரமாமுனிவர் என்பதும் குணம் பெற்றவர்கள் வேத விளக்கம் எழுதும்போது உயிருடன் இருந்தனர் என்பதும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தற்போது தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது ஓரியூர். அங்குதான் அருளானந்த சுவாமிகள் வெட்டுண்டு இறந்தார். அவர் பெயரால் நடந்த புதுமைகளை மறவநாட்டில் ஒவ்வோர் ஊராகச் சென்று விசாரித்த வீரமாமுனிவர் பத்துப் புதுமைகளை மட்டுமே வேதவிளக்கப் புத்தகத்தில் 'உண்மையான வேதத்திற்குச் சாட்சியாக'க் கொடுக்கிறார். அவற்றுள் ஒருசில வருமாறு :

1. கிடங்கூர்பாமணி வயலென்னும் ஊரிலே மறவ இராயப்பன் உள்ளான். அவன் ஒருவரும் அறியாத பிணியைக் கொண்டு தலைநீங்கலாக உடலில் எங்கும், ஒருவகைக் கொப்புளம் புறப்பட்டு நாவற்பழங்களைப் போலவும் மிளகு போலவும், பாக்குப் போலவும் எலுமிச்சங்காய் போலவும், விளங்காய் போலவும் பற்பல பருமத்து தோன்றினதாம். அவற்றைக் கீறும்போது இரத்தமும் சலமும் வெளிப்பட்டதாம். இவ்வாறு நெடுநாள் இருந்ததால் அச்சந்தரும் உருவத்தோடு மருந்து உதவி இல்லாமல் வருந்தி நாணித் திரிந்த பின்பு வேதசாட்சியாக அருளானந்த சுவாமி வெட்டுண்ட தலத்திற்குச் சென்று அவர் வேண்டுதலினால் ஆண்டவரிடம் ஆரோக்கியம் தரச்சொல்லி

166. மேலது, II, 242.

மன்றாடி அங்குள்ள மண்ணை எடுத்துக் கரைத்து உடலெல்லாம் பூசிக் கொண்டான். பூசின ஆறு நாட்களில் கொப்புளங்கள் மறைந்து இந்நாள் வரைக்கும் நன்றாய் இருக்கிறான்.[167]

2. ஓரியூருக்குத் தென்புறத்தில் இருக்கும் முழத்தகமென்னும் ஊரிலே 1721ஆம் ஆண்டில் பள்ளப்பெரியானுக்கு பிறவிக்குருடியாய் ஒரு பெண் பிறந்தாள். இரண்டு கண்களும் வெண்மை நிறமாகவே இருந்தன. அருளானந்தரின் உதவியால் ஆண்டவரிடம் வேண்டியபோது ஒரு கண் பார்வை கிடைத்து சுகமாக இருக்கிறாள்.[168]

3. மணக்குடி குறுமடை என்னும் ஊரில் 1720இல் மறவ அருளப்பனுக்குப் பிறந்த குழந்தை செத்துக் கிடந்தாற் போலச் சீவனில்லாமல் துவண்டு சதையில்லாமல் வற்றி அசைவில்லாமல் கிடந்து தோலும் எலும்புமாய்க் கருகி கைகால் அசைவில்லாமல் கிடந்தது. இதைக் கண்டவர் யாவரும் அவற்றுக்கு இரங்கினதொழிய ஒரு மருந்தாயினும் அறிந்து கொடுப்பாரில்லை. கடைசியிலே மனிதரால் ஆகாத உதவி வேதசாட்சி அருளானந்த சுவாமியால் ஆகும் என்று நிறைந்த நம்பிக்கையோடு அவர் பாடுபட்ட இடத்திற்குச் சென்று அழுது வேண்டிக் கொண்டு அம்மண்ணைப் பூசியவுடன் நோவு நீங்கி சதை வளர்ந்து இரத்தம் ஓடி நரம்புகள் பலப்பட்டு நீட்டவும் மடக்கவும் தொழிலைச் செய்யவும் வழங்கினதாம். இந்நாள் வரைக்கும் ஒரு குறையின்றிப் பயிர்த்தொழிலைச் செய்து கொண்டிருக்கிறான்.[169]

மேற்சொன்ன எல்லாப் புதுமைகளும் உண்மை என்பதால் இந்தப் புதுமைகளைக் கண்டவர்கள் இந்த வேதமே ஆண்டவர் உண்டாக்கிய வேதம் என்றும் ஈடேற்றத்திற்குரிய வேதம் என்றும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வீரமாமுனிவர் வற்புறுத்துகிறார்.

---

167. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, பக். 246 - 247.
168. **மேலது**, ப. 251.
169. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 247.

வேத விளக்க நிலைமை (கத்தோலிக்க வேதத்தின் விளக்க நிலை)

விவிலியக் கருத்துக்களோடு மரியன்னை புனிதர் வணக்கம், இவற்றோடு இயேசு முதலானவர்களின் உருவ வழிபாடு, உத்தரிக்கும் தலம் உண்டு என்னும் நம்பிக்கை. திருச்சபைக் கட்டளை, தேவதிரவிய அனுமானங்கள், எழுதாத வேத வாக்கியம் முதலான பாரம்பரியக் கருத்துகளைக் கடைப்பிடித்து நடப்பவர்கள் வான்வீட்டைச் சென்றடையலாம். வான்வீடு சேர்வதற்கு இவையே விளக்குச் சுடர்களாக விளங்குகின்றன. விளக்குச் சுடர்களாகிய பாரம்பரியக் கருத்துக்களும் விவிலியமும் சேர்ந்து செயல்படும் நிலையே கத்தோலிக்கக் கிறித்தவ வேதத்தின் நிலையாகும்.

வேத விளக்கத்தின் இன்றியமையாத கருத்து

1. கத்தோலிக்கச் சமயத்தின் கொள்கைகளைக் கத்தோலிக்க மக்கள் அறிந்து கொள்வதற்காக எழுதப்பட்டது.
2. கன்னிமரி, புனிதர் ஆகிய இவர்களின் வழியாக நாம் இறைவனிடம் மன்றாடலாம்.
3. கடவுளுக்கு உருவம் செய்து வைத்து வழிபாடு நடத்தலாம்.
4. மக்கள் துறவிகள் ஆகியோர் சேர்ந்த திருக்கூட்டமே திருச்சபை. இந்தத் திருச்சபையில் காணப்படும் தலைவர் போப். காணப்படாத தலைவர் கிறிஸ்து. கிறிஸ்துவினிடத்திலிருந்து பணி செய்வதால் இவர் தவறு செய்யாதவர். இவர் மக்களுக்கு இடும் கட்டளை ஏசு கிறித்து இடும் கட்டளை போன்றது. எனவே திருச்சபைக் கட்டளைகளை எல்லோரும் அனுசரிக்க வேண்டும்.

"திருச்சபை கடைப்பிடித்து வரும் கன்னிமரி புனிதர் வணக்கம், இறைவனின் உருவம் செய்து வழிபடும் உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளுதல், உத்தரிக்கும் தலம் உண்டு என்று நம்புதல், திருமுழுக்கு, உறுதி பூசுதல், நற்கருணை, பாவமன்னிப்பு, நோயில் பூசுதல், குருத்துவம், திருமணம் ஆகிய ஏழு திருவருட்சாதனங்களைக் கிறித்துவே ஏற்படுத்தினார் என்று நம்புதல் இயேசு பிறந்து துன்பப்பட்டுக் கல்வாரியில் இறந்ததன் நினைவாகத்தான் திருப்பலி நடைபெறுகிறது என்பதை ஏற்றல்"

இன்று ஒவ்வொரு நாளும் ஆலயங்களில் நடைபெறும் திருப்பலியின்போது இயேசு உண்மையாகவே நற்கருணையில் பிரசன்னமாகிறாள் என்று விசுவசித்தல்.

எழுதாத வேத வாக்கியங்களும் உண்டு என்பதை நம்புதல்.

இவையாவும் வேத விளக்கத்தின் இன்றியமையாச் செய்திகளாகும்.

நூலின் சிறப்பு

மார்ட்டின் லூத்தர் எழுப்பிய குற்றச்சாட்டுகள் எதற்கும் திருச்சபையைச் சார்ந்தவர்கள் யாரும் விடையளிக்கவோ தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்து அக்குற்றச்சாட்டுகள் யாவும் தவறானவை என்று எடுத்துரைக்கவோ முன்வரவில்லை. மாறாகக் குற்றச்சாட்டு எழுப்பிய மார்ட்டின் லூத்தரை அமைதிப்படுத்தவே முயன்றனர். மார்ட்டின் லூத்தர் அதற்கு உடன்படவில்லை. எனவே அவர் எழுப்பிய குற்றச்சாட்டுகள் அனைத்தும் மிகமிக விளக்கமான முறையில் விடைபெறாமலே நின்றன.

இந்நிலையில், ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்குப் பிறகு அக்குற்றச் சாட்டுகளுக்கு விடையளிக்க முயன்றது திருச்சபை. அவ்விடைகளின் விளக்கம் தமிழில் ஒரு நூலாக வெளிவந்திருப்பதே இந்நூலின் தனிச்சிறப்பிற்குரிய காரணம் ஆகும். திருச்சபையார் இலத்தீன் மொழியில் எழுதிய அந்த விளக்கம் வீரமாமுனிவரால் தமிழில் ‘வேதவிளக்கம்’ என்னும் நூலின் இறுதியில் தருவதும் இந்நூலுக்குரிய தனிச்சிறப்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இறுதியில் திறிந்துப் பொதுச் சங்கம் இயற்றிய விசுவாச சங்கீர்த்தனத்தை இலத்தீனிலிருந்து மொழி பெயர்த்துத் தந்ததோடு நூலில் வரும் முக்கியமான தலைப்புகள் எங்கு வருகின்றன என்று உடனே கண்டுபிடிப்பதற்கு அவற்றைப் பத்துப் பக்கத்தில் அகரவரிசையில் அமைத்து நூல் முழுவதையும் 140 பிரிவாகப் பிரித்து எண்ணிட்டு எந்தப் பொருள் எந்த எண்ணில் எந்தப் பக்கத்தில் வருகிறது

என்றறிய ஒவ்வொன்றிற்கும் பிரிவு எண்ணும் பக்க எண்ணும் தந்திருக்கிறார். இதனைப் பின்னிணைப்பில் காணலாம்.[170]

லுத்தர் சபையாரின் நூலுக்கு மறுப்பாக எழுதியது

பேதக மறுத்தல்

வீரமாமுனிவர் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் கொள்கைகளும் லுத்தரன் சபைக் கொள்கைகளும் வேறுபடும் விதங்களை விளக்கி வேத விளக்கம் எழுதினார். இந்நூலைப் படித்துப் பொருள் உணர்ந்து பதில் எழுதும் அளவிற்குத் தரங்கம்பாடியில் இருக்கும் லுத்தரன் சபைத் தலைவர்கள் தமிழறிவு பெற்றிருக்கவில்லை.

உரோமன் திருச்சபையில் பிறந்து வளர்ந்த ஒருவன் தன் பெற்றோர் சொல் கேளாமல் 14-ஆவது வயதில் லுத்தரன் திருச்சபையில் சேர்ந்தான். எற்கெனவே ஸ்பெயின் மொழியில் வேறொருவர் எழுதியிருந்த நூலை இவன் போர்த்துக்கீசிய மொழியில் 'திருச்சபைப் பேதகம்' என்ற தலைப்பில் மொழி பெயர்த்தான். பேதகம் என்பது திருச்சபையின் படிப்பினைக்கு எதிரான போதகமும் விசுவாச சத்தியங்களைத் தவறு என்பதுமாகும்.[171] இவை அடங்கிய அந்த நூலைத் தரங்கம்பாடியார் தமிழில் மொழி பெயர்த்தனர். அந்நூலில் 13 பக்கங்களும், 24 பேதகங்களும், 78 பொய்களும் இருந்தன. இந்நூலையே அச்சடித்து வெளியிட்டனர். முனிவர் இந்நூலைப் படித்து அதிலுள்ள எல்லாப் போதகங்களையும் கூறி, அவற்றுக்கு மறுப்புக்காக எழுதிய நூலே 'பேதக மறுத்த'லாகும்.

லுத்தரன் சபையார் கூறிய பேதகங்கள்

1. விவிலியம் ஆண்டவர் ஏவலால் எழுதப்பட்டது. அதனால் எது விவிலியம் என்றறியத் திருச்சபைச் சான்று தேவையில்லை.[172]

---

170. V. M. Gnanapragasam, **The Contribution of Fr. Beschi to Tamil**, p. 174.
171. ஜேசுதாஸ் தங்கசாமி, **திருச்சபை வரலாறு**, ப. 70.
172. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 7.

2. குருப்பட்டம் பெறாதவர்கள், விவிலியத்தை ஆராய்ந்து படிப்பதையும், மொழி பெயர்த்துப் படிப்பதையும் திருச்சபை தடுக்கிறது. இதனால் அறியாமை வளர்கிறது.[173]

3. விவிலிய நூலின் ஆழமான கருத்துகளை அவரவரே புரிந்து கொள்ளலாம்.[174]

4. புனிதர்களை வணங்குதல் கூடாது.[175]

5. விலிலியத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பது போலத் திருச்சபைச் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதில்லை.[176]

6. உருவ வழிபாடு வேதத்திற்கு ஏற்றது அன்று.[177]

7. புனிதர்களிடம் வேண்டிக் கொள்ளக் கூடாது.[178]

8. அனைவர் பாவத்திற்கும் இயேசு பரிகாரம் செய்து அவற்றை நீக்கியிருக்கிறார். அதனால் மனிதன் தபசு செய்ய வேண்டியதில்லை.[179]

9. கிறிஸ்து ஒருவரே கடவுளுக்கும் நமக்கும் நடுவர். மரியாளும் புனிதர்களும் நடுவர்கள் அல்லர்.[180]

10. ஆலயத்தில் நடைபெறும் பூசை பலி அன்று.[181]

11. ஈடேற்றத்திற்கு விசுவாசம் மட்டுமே போதுமானது.[182]

12. ஈடேற்றம் பற்றி ஒருவரும் ஐயப்படக்கூடாது.[183]

---

173. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 12.
174. **மேலது**, ப. 18.
175. **மேலது**, ப. 22.
176. **மேலது**, ப. 24.
177. **மேலது**, ப. 28.
178. **மேலது**, ப. 33.
179. **மேலது**, ப. 44.
180. **மேலது**, ப. 45.
181. **மேலது**, ப. 51.
182. **மேலது**, ப. 55.
183. **மேலது**, ப. 59.

13. நற்செயல்கள் பயனற்றவை.[184]

14. போப் அவருடைய அதிகாரம் ஆகியவைகளில் தவறான (போக்குகள்) கருத்துகள்.[185]

15. குருப்பட்டம் பற்றிய தவறான கருத்து.[186]

16. லத்தீனில் பூசை செய்யக்கூடாது.[187]

17. திருவருட் சாதனங்கள் விசுவாசத்தால் மட்டுமே பயனளிக்கின்றன.[188]

18. அப்பத்தையும் ரசத்தையும் இரு உருவங்களில் நற்கருணையாக உட்கொள்ள வேண்டும்.[189]

19. குருக்கள் திருமணம் செய்து கொள்ளலாம்.[190]

20. ஒருசந்தி, புலால் விலக்கு பயனற்றது.[191]

21. உரோமன் திருச்சபை புறச்சபைக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறுகிறது.[192]

22. இவ்வுலக அரசர்களுக்குக் குருக்களும் துறவிகளும் கீழ்ப்படியத் தேவையில்லையென்று உரோமன் திருச்சபை கூறுகிறது.[193]

23. அந்திக்கிறிஸ்து உரோமாபுரியில் ஆட்சி செய்யும் பாப்பரசர்.[194]

---

184. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 65.
185. **மேலது**, ப. 71.
186. **மேலது**, ப. 77.
187. **மேலது**, ப. 82.
188. **மேலது**, ப. 85.
189. **மேலது**, ப. 91.
190. **மேலது**, ப. 92.
191. **மேலது**, ப. 96.
192. **மேலது**, ப. 99.
193. **மேலது**, ப. 102.
194. **மேலது**, ப. 104.

24. வான்வீடு, நரகம் மட்டுமே உண்டு. உத்தரிக்கிற தலம் என்று ஒன்று இல்லை.[195]

ஜோசப்பின் டோரதி தமது ஆய்வேட்டில் தந்துள்ள லுத்தரன் சபையாரின் கோட்பாடுகள் தரங்கம்பாடியார்கள் மேலே வெளியிட்ட திருச்சபைப் பேதகத்தின் தெளிந்த வடிவமாக உள்ளது. அப்பகுதி,

> "விவிலியத்தின் வசனங்களுக்கு ஏற்ப வாழ்க்கை அமைய வேண்டும். இறப்புக்குப் பிறகு ஆன்மாக்கள் மோட்சம் நரகம் என்ற நிலையை அடைகின்றனவே தவிர உத்தரிக்கும் தலம் என்று ஒன்று இருப்பதென்பதும் அங்கிருந்து ஆன்மாக்கள் திருத்தமடைந்து வீடுபேற்றை அடையும் என்றுரைப்பதும் குருமார்களின் கற்பனையே. போப்பின் தலைமை ஏற்கக்கூடியது அன்று. பாவமன்னிப்புச் சீட்டினால் ஒருவன் எல்லாத் தண்டனைகளிலிருந்தும் விடுதலை பெறுகிறான் என்றுரைப்பது வெறும் கற்பனையாம். ஆன்மா உத்தரிக்கும் தலம் எனப்படும் தூய்மையாகும் இடத்தில் இருந்தாலும் அந்த ஆன்மாவின்மீது போப்பிற்கு அதிகாரம் உண்டு என்பது ஏற்கக் கூடியது அன்று இறைவனுக்கு வடிவம் தந்து வழிபடுவதும் கூடாது. கன்னி மரியாள் இயேசுவின் தாய் என்ற நிலையில் தாயரில் சிறந்தவள் என்ற தகுதி போதுமானது. சிலுவையன்றி மனிதருக்கு இரட்சணியம் வேறு இல்லை"[196]

இவ்வாறு அமைந்துள்ளது. லுத்தரன் சபையார் கூறிய எல்லாப் பேதகங்களுக்கும் ஒவ்வொன்றாகப் பதில் கூறுகிறார் வீரமாமுனிவர்.

1. விவிலியம் ஆண்டவர் ஏவலால் எழுதப்பட்டாலும் அதற்குத் திருச்சபையின் சாட்சி வேண்டும். அந்த ஒருவரால் (எடு. மத்தேயு) எழுதப்பட்டது என்பதற்கும் அந்நூலில் இடைச்செருகல் இல்லை என்பதற்கும் திருச்சபையின் சாட்சி வேண்டும் (அங்கீகாரம்).[197]

---

195. வீரமாமுனிவர், பேதகமறுத்தல், ப. 110.
196. ஜோசபின் டோரதி, தேம்பாவணி இரட்சணிய யாத்திரிகம் - ஓர் ஒப்பாய்வு, ப. 59.
197. வீரமாமுனிவர், பேதகமறுத்தல், ப. 11.

2. குருப்பட்டம் பெறாதவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு உரோமன் திருச்சபை தடை சொல்கிறது. இதற்குக் காரணம் கடலில் முத்தெடுக்க வல்லவர்களே, கடலில் இறங்கி முத்தெடுப்பர். அதுபோல விவிலிய அறிவுடைய குருக்களே விவிலிய விளக்கத்திற்குத் தகுதியுடையவர்கள்.[198]

3. புனித இராயப்பர் சொன்ன வேத வசனங்களின்படி விவிலியத்தில் பொருள் கண்டுபிடிப்பது அரிது. ஐயங்களைத் தீர்க்க அவரவர் விரும்பிய வழியே போகாமல் திருச்சபைக்குத் தலைவராகிய இராயப்பர் தொடங்கி அதனை ஆண்டு வரும் பாப்பரசர்கள் மறைநூல் வல்லுநர்கள் இவர்களைக் கலந்து ஆலோசித்துச் செய்கின்ற முடிவே எல்லாரும் கைக்கொள்ளத்தக்க சிறந்த முடிவாகும்.[199]

4. கடவுளுக்கு இணையாகப் புனிதர்களை வணங்கவில்லை. புனிதர்கள் கடவுள் இல்லை. அவர்களை ஒருவரும் கடவுளாக நினைக்கவில்லை. அவர்கள் கடவுளின் அன்புறவில் நிலைத்து நிற்பவர்கள். அதனால் நாம் அவர்களை வணங்கி நமக்கு வேண்டிய வரங்களை நமக்காகக் கடவுளிடம் மன்றாடக் கேட்கிறோம். அதாவது புனிதர்களிடம் வரங்களைக் கேட்காமல் அவர்கள் வழியாக இறைவனிடம் கேட்கிறோம்.[200]

5. பெரியோர்கள் இட்ட நற்கட்டளைகளைக் கேட்டு அவர்கள் காட்டிய நல்வழியில் நடப்பது நல்லது. அதைப்போன்று மனிதராகிய பாப்பரசர் சொல்வதைக் கேட்டு நடப்பதும் நல்லது.[201]

6. உரோமன் திருச்சபை இயேசுநாதருக்கு உருவம் வைக்கும்போது மெய்யான கடவுளாகிய இயேசுவை நினைத்து அவருக்கு மட்டும்

---

198. வீரமாமுனிவர், பேதகமறுத்தல், ப.17.
199. மேலது, ப.19.
200. மேலது, ப.21.
201. மேலது, ப.22.

ஆராதனை செலுத்துகிறது. மற்றப் புனிதர்களுக்கு அவர்களின் உருவச்சிலைகளைக் காணும்போது வணக்கம் மட்டும் செலுத்துகிறது.[202]

7. புனிதர்கள் இறைவனின் அருளைப் பெற்று அவரோடு இருப்பதால் அவர்கள் நம்மை அறிந்து கொள்கிறார்கள். நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுகிறார்கள்.[203]

8. இயேசு நம்மைப் பாவத்திலிருந்து முழுமையாக மீட்டார். நாம் சிற்சில வேளைகளில் பாவப்பரிகாரத்திற்காக ஒருசந்தி, புலால் விலக்கு, தவம் முதலான நற்செயல்கள் செய்யும்போது இயேசுவின் மீட்புச் செயலுக்குப் புகழ் உண்டாகிறது.[204]

9. கடவுளுக்கும் மனிதர்களுக்கும் பாலமாக இருந்து உறவை ஏற்படுத்துகிறவர் யேசு ஒருவரே. புனிதர்கள் யேசுவின் அருளைப் பெற்றிருப்பதால் அவர்களும் இறைவனுக்கும் நமக்கும் பாலமாக இருந்து உறவை ஏற்படுத்துகிறார்கள்.[205]

10. யேசு கல்வாரி சிலுவைப் பலியில் தம்மைப் பலியாக்கி நம்மை ஈடேற்றினார். இந்தச் சிலுவைப்பலியின் நினைவாகவே நாள்தோறும் ஆலயங்களில் நற்கருணைப்பலி (பூசை) நிறைவேற்றப்படுகிறது.[206]

11. நாம் வான்வீடு செல்ல உதவியாய் இருப்பது நற்செயல்களுடன் கூடிய கடவுள் மீது கொண்ட விசுவாசம்.[207]

12. கடவுள் ஞானமும் நீதியும் கொண்டு நம்மை ஈடேற்றுவார் என்பதை ஐயமில்லாமல் விசுவசித்து வேத கட்டளைகளின்படி நல்வழியில் நடக்க வேண்டும்.[208]

---

202. வீரமாமுனிவர், பேதகமறுத்தல், ப. 29.
203. மேலது, ப. 34.
204. மேலது, ப. 41.
205. மேலது, ப. 49.
206. மேலது, ப. 53.
207. மேலது, ப. 57.
208. மேலது, ப. 61.

13. மனிதன் தன் ஆற்றலால் செய்யும் செயல்களால் ஈடேற்றம் அடைவதில்லை. ஆண்டவர் இயேசு உதவியினால் நற்செயல்கள் செய்யும் போது மிகுந்த பலனைப் பெற்று ஈடேற்றமடைகிறான்.[209]

14. திருச்சபையின் அஸ்திவாரமாகிய இயேசு வானுலகைத் திறக்கவும் அடைக்கவும் உரிமையுள்ளவர். அவர் பிறந்து வாழ்ந்து இறந்து உயிர்த்து இவ்வுலகிலிருந்து மறைந்து வானுலகிலுள்ள தம் தந்தையிடம் சென்றபோது தம் திருத்தூதர்களுள் (சீடர்களுள்) ஒருவரான இராயப்பரைக் காணப்படும் திருச்சபையின் அஸ்திவாரமாகவும் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று தலைவராகவும் ஆக்கிச் சென்றார். இதனால் இராயப்பர் திருச்சபையின் தலைமை ஆதிக்கத்தைப் பெற்றார். அவர்வழிவந்த போப்பும் திருச்சபையின் அஸ்திவாரமாகவும் தலைவராகவும் ஆடுகளை மேய்ப்பவராகவும் உலகம் உள்ளவரை இருப்பார்.[210]

15. திருப்பலியை ஆண்டவர் அறிந்த லத்தீன் மொழியில் நடத்தி உபதேசத்தைத் தமிழில் செய்வதால் தவறொன்றுமில்லை (இப்போது திருப்பலி தமிழில்தான் நடைபெறுகின்றது.)[211]

16. திருச்சபையின் அதிகாரம் பெற்று ஆலயங்களில் திருப்பலி ஆராதனை, செபம் ஆகியவற்றை மக்கள் அறிந்த மொழிகளில் நடத்தலாம்.[212]

17. நாம் செய்யும் நற்செயல்களான தவம், விசுவாசம், பக்தி முதலானவை திருவருள் பெற ஆயத்தமாக இருக்க, திருவருட் சாதனங்கள் கடவுளின் அருளை நமக்குப் பெற்றுத் தருகின்றன.[213]

18. இயேசு அப்பத்தோடு இரத்தத்தையும் குடிக்கச் சொன்னது உண்மைதான். திருச்சபையின் தொடக்க காலத்தில் மக்கள் அப்பம் மட்டுமே உண்ட பழக்கம் இருந்திருக்கிறது. காரணம்

---

209. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 65.
210. **மேலது**, ப. 73.
211. **மேலது**, ப. 78.
212. **மேலது**, ப. 83.
213. **மேலது**, ப. 88.

இயேசுவின் உடலாகிய அப்பத்தில் இரத்தமும் கலந்து இருக்கிறது என்று நினைத்ததேயாகும்.[214]

19. எல்லோரும் திருமணம் செய்து கொள்ளலாம். திருமணம் செய்து கொள்ள விரும்புகிறவர்கள் குருவாகச் செல்ல வேண்டும் என்பதில்லை. ஆனால் குருவாகச் செல்ல விரும்புகிறவர்கள் தாம் இறக்கும்வரை விரத்தனாக வாழவேண்டும்.[215]

20. மனிதன் ஆசையை அடக்கவும் தவத்தைச் செய்யவும் நினைத்த பல பொருள்களைத் திருச்சபை விலக்கிய வெள்ளி சனி தவக்காலங்களில் உண்ணாதிருப்பது சிறந்த முறையாகும்.[216]

21. உரோமன் திருச்சபை திரிதெந் என்னும் நகரில் ஒரு கூட்டம் கூட்டியது. அதில் பிரிந்து சென்ற சபையினரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவரவர் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று எல்லோருக்கும் அழைப்புக் கொடுத்தது. அவர்கள் கூட்டத்திற்கு வந்து தங்கள் கருத்துக்களைக் கூறாதே சென்றால் தண்டனை உண்டு என்றும் எச்சரித்திருந்தது. ஆனால் யோவானுஸ் என்ற புறச்சபையார் கூட்டத்துக்கு வந்து தம் கருத்துக்களைப் பற்றிப் பேசாதே சென்றதால் உரோமன் சபை அவருக்குத் தண்டனை கொடுத்ததே தவிரக் கொடுத்த வாக்கை மீறி எதையும் செய்யவில்லை.[217]

22. ஆளும் அரசர்களுக்குக் குருக்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். ஆனால் குருக்களின்மீது குற்றம் உண்டாகும்போது அரசர்கள் அதை விசாரித்து வழக்குப் பேசித் தண்டிக்கக்கூடாது. இம்முறை மதிப்பினால் ஏற்பட்டதேயன்றித் தேவகட்டளையினால் ஏற்பட்டதன்று.[218]

---

214. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 93.
215. **மேலது**, ப. 94.
216. **மேலது**, ப. 97.
217. **மேலது**, ப. 100.
218. **மேலது**, ப. 105.

23. நானே கிறிஸ்து என்னைத் தவிர வேறு ஒருவரையும் வணங்கக்கூடாது என்று கூறிக்கொண்டு கோயிலில் வீற்றிருப்பவரே அந்திகிறிஸ்து என்பவராவார். போப் நானே கிறிஸ்து என்னை வணங்குங்கள் என்று கூறாமல் இயேசு கிறிஸ்துவை வணங்கி வருவதால் அவர் அந்திக்கிறிஸ்து இல்லை.[219]

24. இறந்தபிறகு ஆன்மா செல்வதற்கு வான்வீடு, நரகம் இவைதவிர அற்ப, குற்றங்களுக்காக உத்தரித்துச் சுத்தராகும் இடம் ஒன்று உள்ளது. அந்த இடமே உத்தரிக்கும் தலமாகும்.[220]

வீரமாமுனிவர் மறுத்துக்கூறிய பேதகத்தின் தெளிந்த வடிவமாக இருப்பது ஜோசப்பின் டோரதியின் கருத்து. அப்பகுதி,

"தனித்தனி நிலைகளில் தேவனுக்கும் அன்னை மரியாளுக்கும் புனிதர்களுக்கும் முறையே தேவ ஆராதனையும் மேலான வணக்கமும் உரியன. அன்னை மரியாளுக்குச் சமயச் சடங்குகளில் தனி மரியாதை உண்டு. கத்தோலிக்கத்தின் வாழும் தலைவராக, இறை இயேசுவின் பிரதிநிதியாக இருப்பவர் போப். குருக்கள், ஆயர்கள் போன்ற மதப் பெரியோர்களுக்குப் பட்டம் தர அதிகாரம் அளிப்பவர் போப். இறக்கும்தறுவாயிலுள்ள ஆன்மாக்களுக்கு நோயில் பூசுதல் என்னும் இறுதி அருட்சாதனத்தை அளித்து வான்வீட்டுக்கு வழி காட்டலாம். வாழும் உயிர்கள் அடிக்கடிக் குறைந்த பட்சம் ஆண்டுக்கு ஒருமுறையாவது தாங்கள் செய்த பாவங்களை இறைவனின் பிரதிநிதியாகிய போப்பால் குருத்துவம் அளிக்கப்பட்ட குருவிடம் முறையிட்டுப் பாவமன்னிப்பைப் பெறவேண்டும். பாவமன்னிப்புப் பெற்ற பிறகுதான் திருவிருந்தில் கலந்து கொள்ள இயலும் என்ற நிலையும் உண்டு. வான்வீடு நரகம் தவிர உத்தரிக்கும் தலமும் உண்டு"[221]

---

219. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 109.
220. **மேலது**, ப. 113.
221. ஜோசபின் டோரதி, **தேம்பாவணி இரட்சணிய யாத்திரிகம் ஓர் ஒப்பாய்வு**, ப. 66.

என்பதாகும்.

வீரமாமுனிவர் 24 அதிகாரங்களில் பேதகங்களை மறுத்த பின், லுத்தர் சந்நியாசிகள் கொடுக்கும் வார்த்தைப்பாடுகள் தொடர்பான நூலில் எழுதிய,

> "ஒருவன் ஒன்றிலே மாத்திரம் ஒரு பொய் சொன்னானோ, சந்தேகமற அவனிடத்தில் இறைவன் இல்லை. இதுவும் தவிரச் சொன்ன மற்றதிலேயும் அவனை நம்பத் தேவையில்லை என்றான். இந்த நியாயத்தைச் சொன்ன லுத்தேர் தன் சீடர்கள் இப்போது ஒரு சின்னச் சுவடியில் 78 பொய் சொன்னதை அறிந்தால் என்ன செய்வான் என்று எழுதவும் தேவையில்லை"[222]

எனக் குறிப்பார். இப்பகுதியினை மேற்கோள் காட்டி வீரமாமுனிவர், "லுத்தர் இப்படி எழுதியிருக்கிறார். அவருடைய சீடர்களோ இந்தச் சிறிய சுவடியில் 78 பொய்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதை அறிந்தால் லுத்தர் என்ன செய்வார்? என்று நான் எழுதவும் வேண்டுமோ" என்று லுத்தரின் எழுத்துக்களைக் கொண்டு முடிக்கிறார்.

லுத்தர் சபையாரின் இயல்பைக் கூறுவது லுத்தேரினத்து இயல்பு

வேத விளக்கம், பேதக மறுத்தல் முதலான நூல்களை வீரமாமுனிவர் எழுதிய பிறகும் லுத்தர் மீதும், தரங்கம்பாடியிலுள்ள லுத்தரன் சபையார் மீதும் இருந்த மனவருத்தம் குறையவில்லை. தரங்கம்பாடியிலிருந்து அச்சுப் பதித்து வெளிவந்த நூல்களின் கருத்து வருத்தம் தரக்கூடியதாகவும், அவற்றின் மேல்புற அட்டை கண்ணைக் கவரும்படியாகவும் இருந்தன. இப்படி இருந்தது வீரமாமுனிவருக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்தது. இவ்வருத்தத்தின் முடிவாக லுத்தர் இயல்பையும் லுத்தரன் சபையார்களின் இயல்பையும் குறிப்பாகத் தரங்கம்பாடி லுத்தரன் சபையார் இயல்பையும் விளக்க முனைந்து, அதையும் தம் கருத்தாகக் கூறாமல் விவிலியத்தை நம்பும் அவர்களுக்கு விவிலியப் பகுதியிலிருந்து எடுத்துக்காட்டுத் தந்து ஒப்பிட்டுக் கூறினார். விவிலியத்திலிருந்து

222. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப. 115.

எடுத்துக் காட்டுத் தந்து ஒருவரையொருவர் தாக்கிக் கூறும் முறை அக்காலத் திருச்சபையில் வழக்கமாக இருந்தது. எனவே வீரமாமுனிவரும் அவ்வுத்தியைப் பின்பற்றியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

விவிலியப் பகுதி

வானத்திலிருந்து ஒரு விண்மீன் மண்ணில் விழுந்தது. அதற்கு நரகத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. அது பாதாளக் குழியைத் திறந்தது. குழியிலிருந்து பெரும் சூளையைப் போலப் புகை எழும்ப, கதிரவனும் வான்வெளியும் அப்புகையால் இருளடைந்தன. புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் கிளம்பி மண்ணின்மீது படையெடுத்து வந்தன. தரையில் ஊரும் தேள்களுக்கு உள்ள கொடுமை அவற்றுக்கு அளிக்கப்பட்டது. மண் மீதுள்ள புல்லுக்கோ பசும் பூண்டுக்கோ மரங்களுக்கோ தீங்கிழைக்காமல் கடவுளின் முத்திரை நெற்றியில் இல்லாதவர்களுக்கு மட்டும் தீமை செய்ய வேண்டுமென்று அவற்றுக்குக் கட்டளையிடப்பட்டது.

அந்த வெட்டுக்கிளிகள் போருக்குத் தயாரான குதிரைகள் போலக் காணப்பட்டன. அவற்றின் தலைகளில் பொன்முடிகள் இருப்பது போலத் தோன்றின. அவற்றின் முகங்கள் ஆண்களின் முகங்களைப் போல் இருந்தன. அவற்றின் பிடரிமயிர் பெண்களின் கூந்தலையும் அவற்றின் பற்கள் சிங்கங்களின் பற்களையும் ஒத்திருந்தன. அவை மார்பில் இருப்புக் கவசம் அணிந்திருப்பது போல் தோன்றின. அவற்றின் சிறகுகளின் இரைச்சல் போர்முனைக்கு விரையும் பெரியதொரு தேர்ப்படையின் இரைச்சல் போன்றிருந்தது. பாதாளக் குழியின் தூதனாகிய பசாசு அவற்றின் அரசனாக இருந்தான்.[223]

---

223. **விவிலியம் புதிய ஏற்பாடு**, திருவெளிப்பாடு 91-11.

இந்த விவிலியப் பகுதியில் கூறப்படும் விழுந்த விண்மீனை லூத்தருக்கும், வெட்டுக்கிளியின் உடல் உறுப்புகள் முதலானவைகளை அவர் சபையாருக்கும் (தரங்கம்பாடி) ஒப்பிட்டு அவர்களின் செயல் முறைகளை எடுத்து விளக்குகிறார்.

விழுந்த விண்மீன்

மார்ட்டின் லூத்தர் கத்தோலிக்கக் கிறித்தவத்தின் புனித அகஸ்தீனார் சபையில் சிறந்த குருவாக விளங்கினார். இவர் உணர்வில் உயர்ந்து, ஞானத்தில் சிறந்து, தவம், கற்பு, தானம், இரக்கம், பொறுமை, ஊக்கம் இவை போன்ற எல்லா நற்குணங்களிலும் உயர்ந்து கதிரென விளங்கினார். பின்னர் இந்த நற்குணங்களை இழந்து சிற்றின்பம் விரும்பிக் காம போகத்தில் அமிழ்ந்து மீனெனக் கீழுள்ள நரகத்தில் விழுந்தார். அதாவது கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலகினார். அப்போது பசாசு, அவருக்குத் தலைவராக இருந்து அவரை வழி நடத்தியது.[224]

நரகத்திறவுகோல்

இயேசு தம் முதன்மைச் சீடராகிய இராயப்பருக்கு வான்வீட்டின் திறவுகோலைக் கொடுத்தது போலப் பசாசு தன் முதன்மைச் சீடராகிய லூத்தேருக்கு நரகத்தின் திறவுகோலைக் கொடுத்தது. அவர் அத்திறவுகோலால் நரகத்தைத் திறந்தவுடன் புகை மண்டிலம் எழும்பிக் கதிரவனாகிய இயேசுநாதரையும், வேதமாகிய ஆகாயத்தையும் மறைப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது.[225]

இயேசுநாதரை மறைப்பது போல் மண்டின புகையாதெனின் லூத்தரன் சபையார் வேத வாக்கியங்களுக்குச் சொன்ன 'விபரீத அர்த்தங்களேயாகும்'.

விட்டில் பறவை

விட்டில் பறவை லூத்தரன் சபையார்கள் ஆவார்கள். இப்பறவைகளுக்கு உடலெல்லாம் முழுவயிறாக இருப்பதால் நேரே நடக்கவும் மேலே பறக்கவும் இயலாது. இது போலவே 'லூத்தேரானிகளும்' ஒருசந்தி என்று சொல்லப்பட்ட

---

224. வீரமாமுனிவர், **லூத்தேரினத்தார் இயல்பு**, ப. 9.
225. **மேலது**, ப. 12.

எல்லா நல்லொழுக்கங்களையும் ஆகாது என்று பகைத்து வேத கற்பனையின்படி நடக்கவும் ஞானத்து எழுந்து பறக்கவும் முடியாமல் இருக்கின்றனர்.

தரங்கம்பாடியில் இருக்கும் லுத்தரன் சபையினர் தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக மக்களுக்குப் பொருள் கொடுத்துத் "தங்களின் வேதம்தான் தர்ம வழியைக் காட்டுகிறது; உண்மையான வேதம்; வான்வீடு சேர்க்கும் வேதம்; கலப்பில்லாத விலிலியம் உள்ள வேதம்" என்று விவிலிய மொழி பெயர்ப்பை அச்சடித்து எல்லோருக்கும் தாமே வலியச் சென்று கொடுக்கின்றனர். தாங்கள் விட்டில் பறவைகள் என்பதை மறந்து இச்செயல்கள் மூலம் ஞானிகளைப் போல மேலே பறக்க நினைக்கின்றனர். ஆனால் இவர்கள் அச்சுப் பதித்த புத்தகங்களில் 'தருமங்கள் செய்வதால் பயனில்லை; துறவறம் செல்வது பாவம்; கூடப்பிறந்தாளை மனைவியாக்கிக் கொள்வது தருமம்" முதலான முறையற்ற செயல்களை அச்சடித்துள்ளனர். இவற்றை வேதமாகக் கொண்டு மக்களிடம் படிப்பிக்கும் போது இவர்கள் விட்டில் பறவைகள் ஆகையால் கீழே விழுகிறார்கள்.[226] வீரமாமுனிவர் 'விட்டில் பூச்சி' எனக் குறிப்பது வெட்டுக்கிளியை ஆகும்.

அரசின்மை

விட்டில் பறவையின் இயல்பு தலைவன் இல்லாமல் கூட்டங்கூட்டமாய்ச் செல்லுதல். அதைப் போலவே லுத்தேரானிகள் தமக்கு ஒரு தலைவன் இல்லாமல் பிறர் கட்டளையைக் கேட்காமல் அவரவர் உணர்ந்தபடி மறைமுறைகளை அனுசரிப்பது நல்லது என்கின்றனர். இதனால் விட்டில் இனமும் லுத்தேர் இனமும் ஒன்றாகும்.[227]

ஆண்முகமும் பெண் கூந்தலும்

தரங்கம்பாடியில் இருப்பவர்கள் மனிதரைப் போல ஞானத்தைப் பேசி மாதரைப் போல் அன்பு காட்டி அச்சுப் பதித்த புத்தகங்களை மக்களிடம் கொடுக்கின்றனர். அப்புத்தகங்களின் அச்சுப் பதித்த அழகும், ஏடுகள் சேர்த்த

---

226. வீரமாமுனிவர், **லுத்தேரினத்தார் இயல்பு**, ப.13.
227. **மேலது**, ப.14.

சீர்மையும் ஆகிய இவை எல்லாம் மக்களை மயக்கும் வழிகளாகும். இப்புத்தக வனப்புத் தன்மையும் மயக்குவித்தாக ஆசிரியர் கூறுகிறார்.

ஏலாக்குறிச்சியிலிருந்து தரங்கம்பாடிக்குச் சென்ற கத்தோலிக்கக் கிறித்தவர்களிடம் அங்குள்ள சிலர் தங்களைத் துறவிகள் என்றனர். சிறிது நாட்கள் கழித்து அவர்கள் துறவறம் விட்டு இல்லறம் புகுந்தனர். இவர்களின் இந்த நிலையற்ற பேச்சை நேரத்திற்கு ஏற்ப அழகை மாற்றிக் கொள்ளும் பெண்களின் கூந்தலுக்கு ஒப்பாகக் கூறுகிறார்.[228]

தேள் கொடுக்கு

தரங்கம்பாடியார்கள் *வலியப் பொருள் கொடுத்தும் அதைப் பெற்றவர்கள் மதம் மாறவில்லை என்றால் காவல் காத்துத் துன்புறுத்தினர். பெரியோர்களை வணங்குவது நல்லது; ஆனால் தேவ தாயை வணங்கக்கூடாது என்றனர். கத்தோலிக்க மதத்தில் பிறரை வஞ்சித்தவரைத் தங்கள் சபையில் வேதியராகச் சேர்த்தனர். இவ்வாறு மக்களுக்கு முதலில் ஞானமும் அன்பும் காட்டிப் பிறகு அவர்களுக்குத் துன்பத்தையும் கொடுத்தனர். இதனால் தேள் கொடுக்கிற்கு ஒப்பாயினர்.*[229]

சிங்கப்பல்

தரங்கம்பாடியார் *வானுலகில் இயேசுவோடு வாழும் புனிதர்களை நம் துன்பங்களை அறியாதவர்கள்; வேண்டுதலைக் கேளாதவர்கள் என்றும் போப்பை அந்திகிறிஸ்து, கள்ளன், விவிலியத்தைக் கெடுத்தவன் என்றும், மறைநூல் வல்லுநர்களை வேசரிக் கூட்டங்கள் என்றும் உரோமன் திருச்சபை பற்றிக் குறை கூறுவதால் அவர்கள் சிங்கப்பல்லுக்கு ஒப்பாகின்றனர்.*[230]

இரும்புக் கவசம்

லுத்தர் தம் சகோதரிக்கு எழுதிய கடிதத்தில் இப்பூவுலகில் இன்பமாக வாழ்வதற்குத் தம் மதம் ஏற்றது; வான்வீடு சேர்ப்பதற்கு உரோமன் திருச்சபையே

---

228. வீரமாமுனிவர், **லுத்தேர் இனத்து இயல்பு**, *ப. 18.*
229. **மேலது**, *ப. 19.*
230. **மேலது**, *ப. 20.*

ஏற்றது என்றார். இது தரங்கம்பாடியார் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். இருந்தாலும் பிடிவாதத்தால் தங்கள் மதமே வான்வீடு சேர்க்கும் என்று கூறுவதால் அவர்கள் இருப்புக் கவசம் அணிந்த விட்டில்களுக்கு ஒப்பாகின்றனர்.[231]

பொன்முடி

லுத்தர் தாம் எழுதிய புத்தகத்தில் தம்மைப்பற்றி 'அப்போஸ்தலர்' நாள் தொடங்கி இந்நாள் வரைக்கும் நான் மட்டுமே எல்லோருக்கும் ஆறுதலான நியாயங்களை வெளிப்படுத்தியிருக்கிறேன். மேலும் நானே விவிலியத்தையும் தெளிவாக வெளிப்படுத்தினேன் என்று தனக்குத் தானே பொன்முடி சூடிக் கொண்டார்.

தரங்கம்பாடியாரும் விவிலிய மொழி பெயர்ப்பிலுள்ள தவறுகளை ஏற்றுக் கொள்ளாமல் தங்களுக்குத் தாங்களே பொன்முடி சூட்டிக் கொள்கின்றனர்.[232]

பரிப்படை

உரோமன் திருச்சபையார், லுத்தர் தம் திருச்சபையின்மீது கூறிய குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரிக்க, லுத்தரைத் திரிதெந் நகரக் கூட்டத்திற்கு வரச்சொல்லி ஓலை அனுப்பினர். லுத்தரோ போருக்குச் செல்வது போல் 24000 காலாட்படைகளும் 5000 குதிரைப் படைகளும் தன்னைச் சூழ்ந்து வந்தால் கூட்டத்திற்கு வருவேன் என்றார். பிறகு விட்டில் பறவைகளாக 'லுத்தரானிகள்' எல்லோரும் போருக்குச் சென்றபோது தங்கள் பகையின் காரணமாக ஒரு நாளிலே 16000 பேர் இறந்தனர். (இக்குறிப்புக்கான வரலாற்றாதாரங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.)

இதைப் போலவே லுத்தர் சபையினர் கோயில் பெயரைச் சொல்லித் தரங்கம்பாடிக்குள் புகுந்து போருக்கு ஆயத்தப்பட்ட குதிரைப் படை போல நின்றனர் உரோமன் திருச்சபையார் வெகுநாள் பணி செய்து மக்களைக் கத்தோலிக்கத் திருச்சபையில் சேர்த்தனர். ஆனால் தரங்கம்பாடியினர் இங்கு வந்த

---

231. வீரமாமுனிவர், **லுத்தேர் இனத்து இயல்பு**, ப. 24.
232. **மேலது**, ப. 24.

சிறிது நாட்களிலேயே நிறைய மக்களைத் தம் மதத்தில் கூட்டமாகச் சேர்க்கும்போது போரும் பகையும் உண்டாகிறது என்பது இங்கு உருவகிக்கப்படுகிறது.

பகைக்கு அரசன்

போப்பை, காணப்படும் திருச்சபைக்குத் தலைவராக ஏற்காத லுத்தர் பசாசைத் தலைவராக ஏற்றார். அவரைப் போலவே ஆங்காரம் கொண்ட தரங்கம்பாடியினரும் பசாசைத் தலைவராக ஏற்றிருக்கின்றனர்.[233]

சங்கரித்தோன்

பசாசு எல்லாவற்றையும் வேரோடு அழிப்பதால் 'சங்கரித்தோன்' எனப் பெயர் பெற்றது. அதைப் போலவே லுத்தரும் திருச்சபையின் எல்லாக் கொள்கைகளையும் முழுதாக அழிக்க முற்பட்டதால் சங்கரித்தோன் ஆகிறார்.[234] இவர்களைப்பற்றி வீரமாமுனிவர் கூறும் குற்றச்சாட்டுகள் சற்று மிகையாகவே உள்ளன. சான்றாக,

> "இறைப்பணி (தரங்கம்பாடியினர்) நல்லொழுக்கம் இல்லாதவர்களும், சுடுநெஞ்சுடையவர்களும் மாத்திரம் லுத்தேர் மதத்தில் சேர்வர். இதற்கு ஆதாரமாக இந்நாளில் இந்நாட்டில் நடந்த செய்திகளைக் காணலாம். தரங்கம்பாடி லுத்தர் சபையில் சேர்ந்த யாவரும் தம் மனைவியை மறுத்து மற்றப் பெண்களின் மேல் ஆசை கொண்டனர். பிறர் தாரத்தைப் பறிப்பவர்கள், பிறர் கைப் பொருளைக் கவர்ந்து தாய் தகப்பனை நிந்தித்து அடித்தவர்கள், சாராயம் நிறையக் குடிப்பவர்கள், தீய ஒழுக்கத்தால் நெடுநாள் கோயிலும் குருவும் இழந்தவர்கள் ஆகிய இத்தன்மை கொண்டவர்கள் மட்டுமே உரோமன் திருச்சபையிலிருந்து லுத்தர் சபையில் சேர்ந்தவர்கள் ஆவார்கள்".[235]

எனும் பகுதியைக் குறிப்பிடலாம்.

---

233. வீரமாமுனிவர், **லுத்தேர் இனத்து இயல்பு**, ப. 29.
234. **மேலது**, ப. 30.
235. **மேலது**, ப. 30.

விவிலியப் பகுதியை லூத்தருக்கும் அவர் சபையாருக்கும் ஒப்பிட்டுச் சொல்லக் காரணங்கள்

விவிலியப் பகுதியை (காட்சி ஆகமத்தை) எழுதியவர் அருளப்பர். இக்காட்சி ஆகமத்தின் ஐந்தாம் எக்காளம் எனும் பகுதி, உலகில் நிகழவிருக்கும் கேடுகள் பற்றிக் கூறுவது ஆகும். அந்தப் பகுதியைப் பற்றிப் பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. அருளப்பர் இதை எழுதிய காலம் கி. பி. முதல் நூற்றாண்டு. ஆனாலும் இக் 'காட்சி'யினை லூத்தருக்கு ஒப்பிட்டுக் கூறும் மரபும் ஏற்பட்டுவிட்டது. உரோமன் திருச்சபை கற்பிக்கும் உண்மைகளாகிய ஏகக்கடவுள், திருத்துவம் மறுத்தல், யேசுவின் தேவத்தன்மையைப் பறித்தல், வானோர் வணக்கம் அழித்தல், தேவ அன்னை வணக்கம் அழித்தல், உருவ வழிபாடு புறக்கணித்தல், எழுதப்பட்ட வேத வாக்கிய உரிமை, காரணக் குருக்கள் ஒழுங்குமுறை, திருப்பலி, திருச்சபைக் கட்டளை, திருச்சபைத் தலைமை, துறவு, கன்னிமை, பரிபூரணப் பலன், வேண்டுதல் நேர்ச்சி, மந்திரத் தொகுப்பு, புதுமை நிலை, தவம், ஒரு சந்தி, இரக்கம், பொறை, தானம், நிறைநிலை, திவசம், விரதம் ஆகிய இவற்றை எல்லாம் வேராடு பிடுங்கி எறிய நினைத்தார் மார்டின் லூத்தர். ஆதலால் இந்த விவிலியப் பகுதியோடு ஒப்பிட்டு எழுதுகிறார் வீரமாமுனிவர்.[236]

வீரமாமுனிவர் லூத்தரன் சபையாருடன் முரண்பாடுகள் கொண்டு நூல் எழுதித் தம் வெறுப்பைத் தெரிவித்த அதே வேளையில் அச்சபையார்களிடம் மனித நேயத்துடனும் செயல்பட்டிருக்கிறார். கல்வியில் சிறந்தவராக விளங்குவதைப் போன்றே மனித நேயம் மிக்க உயர்ந்த மனிதராகவும் விளக்கியிருக்கிறார். இவ்வாறே லூத்தரன் சபையாரும் மனித நேயம் மிக்கவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருந்தும்.

வீரமாமுனிவரின் மனித நேயமிக்க செயல்கள்

வாழும் உயிரினங்களில் மனித இனமே தலைமை சான்றது. எண்ணவும் எண்ணியவற்றை நினைக்கவும், நினைத்தவண்ணம் பேசவும் கூடிய ஆற்றல் மனித இனத்திற்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பாகும்.

---

236. வீரமாமுனிவர், **லூத்தேர் இனத்து இயல்பு**, ப. 32.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்த லரிது"[237]

என்ற அவ்வையாரின் கூற்றும் இதன் சிறப்பை உணர்த்தும். உண்பதும் உடுப்பதும் மனித இனத்தின் அடிப்படைத் தேவைகள். இவற்றைப் போன்றே அன்பு, பாசம், நேசம் முதலான பண்புகளும் பொதுவானவை. இப்பண்புகள் நிறைந்த மனித நேயத்தைப் போற்றி வளர்த்து வந்தவர் வீரமாமுனிவர்.

மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மற்றவர்கள்பால் அன்பு செலுத்த வேண்டும். அன்புதான் இன்பத்தின் ஊற்று. அவ்வின்ப ஊற்றே மனித இனத்தில் படிந்துள்ள மாசுகளைக் கழுவவல்லது. திருவள்ளுவர்,

"அன்பின் வழிய துயர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு"[238]

என்று அன்பை உலகப் பொதுமையாக்குவார். அன்பின் அடிப்படையில் எழுந்த இக்கோட்பாட்டை, ஃபிரோலோவ் (Fraolov) பின்வருமாறு விளக்குவர்.

"மனிதநேயம் மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில் அமைந்ததொரு கோட்பாடு. மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும் அவனது நலன்களைப் பேணி வரவும் சமுக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெறவும் துணை புரிவது இக்கோட்பாடு. சமயம் மற்றும் இனவெறிக் கொடுமை, சமயக் காழ்ப்பு ஆகிய அனைத்து இயல்புகளையும் களைவது இதன் நோக்கம்"[239]

இந்த நோக்கத்துடன்தான் வீரமாமுனிவர் லூத்தரன் சபைச் சமயத் தொண்டராகிய வால்த்தரோடு கொள்கையில் முரண்பட்டிருந்தாலும் வால்த்தர் எழுதிய கடிதத்திற்குப் பதில் எழுதும்போது தம் தலைவர்கள்மீது கொண்ட அன்பால் அவர்களை எப்படி விளித்துக் கடிதம் எழுதுவாரோ அப்படியே

---

237. இரா. சக்குபாய், **பாரதிதாசன் படைப்புகளில் மனித நேயம்**, மேற்கோள் : ப. 16.
238. திருவள்ளுவர், **திருக்குறள்**, 80.
239. இரா. சக்குபாய், **பாரதிதாசன் படைப்புகளில் மனித நேயம்**, மேற்கோள் : ப. 16.

வால்த்தரின் மீதும் அன்பு கொண்டு மேலும் மிகவும் மரியாதைக்குரிய தந்தையே என்று விளித்து எழுதுகிறார்.[240]

உதவிக்கு நன்றி கூறுதல்

கிறித்தவமதமாகிய கத்தோலிக்கமும், லூத்தரன் சபையும் திருச்சபைப் பாரம்பரியக் கொள்கைகளைப் பின்பற்றுவதில் மாறுபாடுகள் கொண்டிருந் தாலும் இரு பிரிவினரும் மனித மதிப்பை மதித்தனர் என்பதை,

> "கத்தோலிக்க வேதியர் தரங்கம்பாடிக்குச் சென்ற பயணத்தின்போது நோயுற்றார். அவரைக் கண்ணுற்ற தரங்கம்பாடியார்கள் நன்கு கவனித்து மருந்து கொடுத்து வழிப்பயணத்திற்கு பணமும் கொடுத்து அனுப்பினார்கள். ஏலாக்குறிச்சிக்கு வந்த பிறகு வேதியர் இச்செய்தியை வீரமாமுனிவரிடம் கூறினார். வீரமாமுனிவர் உடனே தரங்கம்பாடியாருக்கு நன்றி கூறி மடல் எழுதினார்"[241]

என்னும் ராஜமாணிக்கம் கூற்றால் அறியமுடிகிறது. மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட இச்செயல்,

> "சார்வாகர்களின் இன்றியமையா நோக்கம், மனிதப் பண்புகளுக்கு மெருகூட்டி, சிந்தனை உரிமைகளைத் தடைப்படுத்தாமலும், மதச்சார்பற்றதுமான ஒரு சமூக அரசியல் சூழலை உருவாக்குவதே ஆகும். அவர்களுடைய கோட்பாடுகள் எல்லாம் மனித இனத்தின் மீதும், இவ்வுலக வாழ்வின் மீதும் நம்பிக்கையும் அன்பும் அருளும் கொண்ட மனிதநலக் கோட்பாடே ஆகும்"[242]

என்னும் கருத்தோடு ஒப்பிட்டுக் காணத்தக்கதாகும்.

---

240. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 11.
241. **Ibid**., p. 11.
242. க. நெடுஞ்செழியன், **தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம்**, *மேற்கோள் : ப. 57*

மனித உயிரைக் காத்தல்

மறுமலர்ச்சிக் (Rennaissance) கால ஐரோப்பாவில் ஏற்பட்ட புதிய சிந்தனைப் போக்காகத் தோன்றிய இக்கோட்பாடு பற்றி அமெரிக்கக் கலைக்களஞ்சியம்,

> "மனித நேயம் சமயத்தை - அறிவியலை - அல்லது ஏதேனும் ஓர் அரசியலைச் சார்ந்தோ அல்லது எதனையும் சாராமல் தனித்தோகூட இருக்கலாம். ஆனால் அதன் உயிர்த் துடிப்பு என்னவெனில் மதச்சார்பின்மை - முற்போக்குடைமை - சமயப்பொறை ஆகியன"[243]

என்று கூறுகிறது. இக்கருத்துக்கேற்ப இராசநாயக்கன் கத்தோலிக்கச் சமயத்திலிருந்து லுத்தரன் சபையில் சேர்ந்து பணியாற்றியபோது கத்தோலிக்கர் ஒருசில சமயங்களில் அவரைக் கொல்ல முயன்றனர். அதனை அறிந்த வீரமாமுனிவர் அக்கொடுஞ்செயல் நடக்காமல் தடுத்திருக்கிறார்.[244] முனிவரின் இச்செயல் சமயப் பொறை மிகுந்த மனித நேயத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

மாற்றுக் கருத்துடையாரின் அரசரை மதித்தல்

வீரமாமுனிவரும் வால்த்தரும் தத்தம் தாய்நாடுகளை விட்டுத் தமிழகத்தில் இருந்தபோதும் வீரமாமுனிவர் வால்த்தருக்குக் கடிதம் எழுதும்போது,

> "தமக்கும் டென்மார்க் அரசர் நான்காம் பிரட்சைக்கும் உள்ள தொடர்பை அக்கடிதத்தில் குறிப்பிட்டார். பொலோஞா (Bologna)வில் இந்த டென்மார்க் அரசர் ராணுசியோ (Ranutio) என்னும் உயர் அலுவலர் வீட்டில் தங்கியிருந்தார். இந்த அலுவலர் வீரமாமுனிவருக்கு உறவினர். அரசர் அங்கிருந்தபோது வீரமாமுனிவர் அவ்வீட்டிற்குச் சென்று தங்கியிருந்தார். அந்த நாட்களை நன்றியுடன் நினைவுகூர்ந்தார்."[245]

---

243. **Encyclopaedia Americana**, Vol. 14, p. 553.
244. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 11.
245. **Ibid.**, p. 11.

இக்கருத்து தம் கொள்கையில் வேறுபட்டுள்ள வால்த்தரின் சபையை ஆதரிக்கும் டென்மார்க் அரசரை நினைவுகூர்வதால் அவருடைய

"தூயஉள்ளம் அன்புள்ளம் பெரியஉள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே யெனும்"[246]

மனித உள்ளம் வெளிப்பட்டு மிளிர்கின்றது என்பதற்குச் சான்றாகிறது.

வீரமாமுனிவர் வால்த்தருக்குக் கடிதம் எழுதும்போது முதலில் இத்தாலி மொழியில் எழுதினார். இதை வால்த்தர் புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது என்பதை அறிந்த பிறகு இருவரும் அறிந்த இலத்தீன் மொழியில் எழுதினார்.[247] இம்முயற்சியே வீரமாமுனிவரின் மனிதப் பாங்கினைத் தெளிவுறுத்துகிறது.

வீரமாமுனிவரைப் போலவே லுத்தரசன் சபை சமயத் தொண்டர்களும் மனித நேயத்துடன் செயலாற்றியுள்ளனர். இந்நிலையில் அவ்விரு திருச்சபைகளைச் சார்ந்தோரும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டிய தேவையையும் உணர்ந்திருந்தனர். இந்நிலையை உணர்த்தி,

"ஆதலால் நாமிருவரும் (வீரமாமுனிவரும் வால்த்தரும்) ஒன்றுபடுவோம் என்று லுத்தரன் சபைச் சமயத் தொண்டராகிய வால்த்தர் வீரமாமுனிவருக்குக் கடிதம் எழுதினார் (8-2-1728)".[248]

வீரமாமுனிவர் கத்தோலிக்க மதத்திலிருந்து லுத்தரன் சபைக்கு வந்தவர்களின் பெயர்களை எழுதி நெருப்பிலிட்டு எரித்தார். லுத்தரன் சபையினர் அதை மறந்து, அவரெழுதிய 'கொடுந்தமிழ் இலக்கணம்' என்னும் நூலை அவருடைய ஒப்புதலுடன் அவர் உயிருடன் வாழும்போதே அச்சிட்டு அவரைப் பெருமைப்படுத்தினர்.[249]

---

246. பாரதிதாசன்; **பாரதிதாசன் கவிதைகள்**, ப. 131.
247. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 11.
248. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 11.
249. S. Rajamanickam, **Madurai and Tranquebar**, p. 11.

இரு சபையார்களும் முரண்பாட்டுக் கருத்துகளுடன் வாழ்ந்தாலும் மனித நேயத்துடன் வாழ்ந்தனர் என்பதே பெருமைதரத்தக்க செயலாகும். இவ்வாறு புயலாக வீசி, இடியாக முழங்கிப் பகைமை பாரட்டிய இரு திருச்சபைகளும் காலப்போக்கில் தம் பகைமையை மறந்து நட்பு பாராட்டத் தொடங்கினர். தமிழ் நாட்டுக் கல்வித்துறையும் இலக்கியத்துறையும் வளர அவ் ஒற்றுமை பெரிதும் துணையாயிற்று.

இயல் நான்கு
தமிழ் உரைநடை வரலாற்றில் வீரமாமுனிவர்

இயல் நான்கு

தமிழ் உரைநடை வரலாற்றில் வீரமாமுனிவரின் இடம்

உரைநடையின் தோற்றம்

சங்க காலத்தில் தமிழ் நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவிலேயே இருந்தன. காவியம், வரலாறு, சோதிடம், மருத்துவம் முதலான பல துறைகளில் தமிழ் மக்கள் தங்களுடைய அறிவுச் செல்வத்தைச் செய்யுள் வடிவிலேயே சேமித்து வைத்து வந்தனர். செய்யுள் வடிவமாக இருந்த இலக்கியங்களுக்குப் பொருள் காண்பது கடினமாக இருந்தது. அதனால் செய்யுளின் பொருளை எளிமையாகக் காண அச்செய்யுள்களுக்கு உரை எழுதினர். இம்முறையில் உரை எழுந்த காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் உரையாசிரியர் காலமாகும். அக்காலம் தனித்த உரைநடை நூல்கள் தோன்றிய காலமன்று. மாறாகத் தமிழ் மொழியில் அமைந்த இலக்கிய இலக்கண நூல்களுக்குப் பொருளுரை கண்ட காலமாகும். அந்த வகையில் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் தம் உரைப்பாயிரமாகத் தரும் செய்திகள் தமிழ் உரைநடையின் செறிவுக்குக் கட்டியம் கூறுகின்றன. அதன் பின்னர்த் தனித்த உரைநடை நூல்களைக் கிறித்தவச் சமயத் துறவிகளிடமிருந்தே காணமுடிகின்றன.

கிறித்தவத் துறவிகளின் உரைநடை நூல்கள்

1577இல் எழுந்த ‘கிறித்தவ வேதோபதேசம்’ எனும் நூலை அடுத்து 1579இல் என்றிக் துறவி (Henry) ‘வணக்கம்’ எனும் நூலை எழுதினார்.[1] அந்நூலின் உரைநடைப்பகுதி,

1. மயிலை சீனி. வேங்கடசாமி, **கிறித்தவமும் தமிழும்**, ப. 22.

"நமமுடைய நாயன செசுக பிறநத வருழசம சூருளள (1576) கொமபஞ்ஞிய தொ செசு வகையிலுளபடட பாதிரிமாா பெசுககரீயையிலுளள கிரிசித தியானிகளுககு மறறந தமிடபாஷசை யறிநத கிரிசிசு தியானிகளுககு ஞ சறுவ நனமையு முணடாகு, வெணுமெனறு விசசிறறிடுககிறெம"[2]

என்பதாகும். இவ்வாறு புள்ளி இல்லாத எழுத்துகளைக் கொண்டு அமைந்ததால் படிப்பதற்குக் கடினமாக இருந்தது. இவரையடுத்து வந்த தத்துவப்போதகர் 'தமிழ் உரைநடை நூல்களின் தந்தை' எனப் போற்றப்படுபவர்.

தத்துவப் போதகரின் உரைநடை

அவரின் உரைநடையில் வடமொழிக் கலப்பு மிகுதியாக இருந்தது. தமிழ் அறிந்தவர்களுக்குக்கூட அவரின் நடை சற்றுக் கடுமையாக உள்ளதை,

"ஞானோபதேசத்தைக் கேட்க ஆசையாயிருக்கிறவன் முந்த முந்த ஞானோபதேசம் ஏதென்றும் ஞானோபதேசத்தினாலே வருகிற பிரயோசம் ஏதென்றும் அறியவேணும். ஞானோபதேசமென்றால் அவனவன் கரையேறுகிறதற்கு பராபர வஸ்துவாகிற சர்வேசுரனை அறியவும் பாவங்களைத் தள்ளி மரணபரியந்தம் புண்ணிய வழியிலே நடக்கவும் படிப்பிக்கிற உபதேசமானது ஞானோபதேசமென்று சொல்லலாம். ஆனபடியினாலே இந்த ஞானோபதேசமானது உலக வியர்த்த (வீண்) கதைகளென்றும், உலோகத்துக்கடுத்த வியாபார (வேலை) முதலான நடக்கைகள் என்றும் சொல்லப்படாது. இது இப்படி இருக்கையிலே மகிமையிலே கரை காணாத சமுத்திரம் போலிருக்கிற சர்வேசுரனானவரை நம்மாலே அளவறுக்கக் கூடாதிருந்தாலும், சமுத்திரத்தை முழுதும் காணாமல் கூடினமாத்திரம் அதை அறியலாமென்கிற பாவனையாக அவரை அறியலாம் என்று சொல்லக் கடவோம்"[3]

2. Rajamanickam, **The first Oriental Scholar** நூலிலிருந்து மேற்கோள், ப.180.
3. **Ibid.**, p. 198.

எனும் பகுதியால் அறியலாம். மேலும் இவரே 'சின்னக் குறிப்பிடம்' எனும் சிறிய சுவடியைச் சிறுவர்கள் படிப்பதற்கேற்ப வினா விடையாக எளிமையாக எழுதியுள்ளார் என்பதை,

குரு	-	சர்வத்துக்கும் கர்த்தாவாய் இருக்கிறவர் யார்?
சீசன்	-	சர்வேசுரன்
குரு	-	எத்தனை சர்வேசுரன்?
சீசன்	-	ஒரே சர்வேசுரன்
குரு	-	அவர் தேவ சுபாவத்திலே ஒருவராய் இருந்தாலும் ஆள் வகையிலே எப்படி இருக்கிறார்?
சீசன்	-	திரித்துவமாய் இருக்கிறார்"[4]

எனும் பகுதியால் தெளியலாம். கத்தோலிக்கத் துறவிகளின் உரைநடை இப்படி இருக்க லுத்தரன் திருச்சபையைப் பரப்ப வந்த முதல் சமயத் தொண்டராகிய சீகன்பால்கு (1683 - 1716)வின் உரைநடை, தமிழ் உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றது எனலாம்.

சீகன்பால்குவின் உரைநடை

இவர் உரைநடை புள்ளியில்லாத எழுத்துக்களைக் கொண்டதும் பேச்சு வழக்கைக் கொண்டதுமான உரைநடையாக அமைந்தது என்பதை,

> "இதற்கிடையிலெ, அவரதானெ இரதப பிறையாசஙகளையுந தமது நிததிய சுவிஷெதததையும பொதுவாகவும பிறதானமாகத தமிடபடுததபபடட புதிய [illegible] இருநது பொஸதகஙகளையும, அதுகளுகைகுச சீவியததுககான சீவியததினொரு வாசினையாகவும அதுகளுனககுச சீவியததுககான சீவியததினொரு வாசினையாகவும ஈடெறறதுககான சறுவெஸ

---

4. மேற்கோள் : Rajamanickam, **The first Oriental Scholar**, p. 202.

பரனுடைய ஒரு வலலமையாகவும இருககுபடிககு உனககுச சததம பணணிக கொடுககவும ஆசறுவதிததுக கொடுககவும, இபபடியெ சலஙகள சமுததிரததின ஆளததை மூடிக கொளளுகிறாபபொலெ"[5]

எனும் பகுதி உணர்த்தும். இவர்களுக்கெல்லாம் காலத்தால் பிந்தியவராகிய வீரமாமுனிவர் எழுதிய உரைநடை, தமிழ் உரைநடையின் போக்கினைப் புதுக்கியது எனலாம்.

வீரமாமுனிவரின் உரைநடை

படித்தவர்களே புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைந்திருந்தாலும் மொழிக் கலப்பு மிகவும் குறைவாக உள்ளதாகவும் இருந்தது. நூலுக்குரிய இலக்கணமாக

"நுதலிப் புகுதல் ஒத்து முறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல். . . . ."[6]

முதலான 32 தந்திர உத்திகளோடு எழுவகை மதஙகளைப் பற்றியும் நன்னூலார் விளக்குகிறார். அவை :

"எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே"[7]

---

5. மேற்கோள் : சு. சக்திவேல், **நூறாண்டுத் தமிழ் உரைநடை**, ப. 93.
6. பவணந்தி முனிவர், **நன்னூல்**, நூற்பா 14.
7. பவணந்தி முனிவர், **நன்னூல்**, நூற்பா 11.

என்பன. ஒரு நூலாசிரியன், தான் எழுதும் நூலில் தன்னுடைய கருத்துகளை மட்டும் விளக்கிக் கொண்டு செல்லாமல் பிறருடைய கருத்துகளையும் சொல்லி அவற்றுக்கு உடன்படுவது போலக் காட்டிப் பின்னர் அவற்றை மறுத்து இறுதியில் தன்னுடைய கருத்தை நிலைநாட்டுவதே தமிழர் மரபாக இருந்தது என்பதை அந்நன்னூல் நூற்பா உணர்த்துகிறது.

தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளை நன்குணர்ந்த வீரமாமுனிவர் தாம் எழுதிய நூல்களில் எழுவகை மதம் பற்றிய கோட்பாடுகளை நன்கு பின்பற்றி உள்ளார் என்பது அவர் நூல்களின் வழியாக உணரமுடிகிறது. மணிமேகலை, 'சமயக்கணக்கர்தந் திறங்கேட்ட காதை' - நீலகேசி ஆகியவற்றில் ஒவ்வொரு கோட்பாடுகளையும் பின்பற்றக்கூடிய கற்பனைப் பாத்திரங்களைப் படைத்து அப்பாத்திரங்களின் வழியாக அவர்தம் கோட்பாடுகளைச் சொல்ல வைத்துப் பின்னர் அவற்றிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதன் வாயிலாக அவர்களை மனந்திருந்தச் செய்வது அந்நூல்களின் நோக்கமாக இருந்தது. வீரமாமுனிவரும் தாம் எழுதிய நூல்களில் மேலே காட்டிய இலக்கியங்களின் உத்திமுறைகளைப் பின்பற்றியுள்ளார். இதனைப் பின்வரும் பட்டியலால் உணரலாம்.

வேத விளக்கம்	-	தருக்கம்
பேதகமறுத்தல்	-	கண்டனம்
லுத்தேரினத்தியல்பு	-	முற்றுருவகம், அங்கதம்
வேதியர் ஒழுக்கம்	-	எளியநடை
வாமன் சரித்திரம்	-	செந்தமிழ் நடை
பரமார்த்தகுருவின் கதை	-	கொடுந்தமிழ் நடை - நகைச்சுவை

நடைநலன்

கன்னட இலக்கியமாகிய கவிராஜமார்க்கத்தில் நூலின் பயன்பற்றிக் கூறப்படும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

"உள்ளத்தில் நன்கு படியும் வண்ணம் காவிய 'பாவம்' விளங்கப் புதிய வடிவமாக நூல் எழுதினால் அது கற்போர் உள்ளத்தைக் கவரும். இன்றேல் அது யாரைக் கவரும்? நானாவிதமாக நினைத்து நினைத்துச்

சொல்லும் ஆற்றல் உடையவர் அன்பு பிறக்குமாறு தம் இதயத்தில் எழுந்த மணிமாலை போல் நலம் பயக்கும் வண்ணம் எழுதுதல் புகழ் அளிக்கும். ஆய்ந்து பார்த்தால் அதன் பெருமை எளிதில் கிட்டுவதாகும். காவியம் தன் பணியில் புதுமை வடிவம் பெறவேண்டும். பயன் விளைவில் மீட்டும் மீட்டும் பார்க்கும் வண்ணம் கவர்ச்சியுடையதாதல் வேண்டும்"[8]

என்று இங்கே காவியத்திற்குரிய பண்புகள் பேசப்படினும் அது உரைநடைக்கும் பொருந்தும். இந்நிலையில் வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் எல்லாம் லுத்தரன் சபையாரை மறுக்கும் வகையில் கிறித்தவப் பாரம்பரியக் கொள்கைகளுக்கு விளக்கம் அளிக்கும் ஒரே கருத்துடைய நூல்களாக இருந்தாலும் ஒவ்வொரு உரைநடை நூலும் தருக்கம், கண்டனம், ஏளனம், எளிய நடை, செந்தமிழ் நடை, நகைச்சுவை என வெவ்வேறு அமைப்புகளைக் கொண்டு கவர்ச்சியுடையனவாக இருத்தலே அவற்றின் பெருமை எனலாம்.

வேத விளக்கம் - தருக்கம்

அறிவுத் துறைகள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது தருக்கவியல் எனும் அளவையியல் ஆகும். Logic என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு நிகரான தமிழ்ச்சொல் அளவையியல் அல்லது தருக்கம் என்பதாகும். அளவையியலைப் பற்றி விளக்கும் க. நெடுஞ்செழியன்,

"தருக்கவியலில் தேர்ந்த ஒரு பேச்சாளன் அல்லது வாதி தன் திறனை வெளிப்படுத்தியும் வெளிப்படுத்தவும் எழுதிய நூல்கள் பேச்சுக்கலையின் வரைவிலக்கணமாக அமைந்தன. அவ்விலக்கணங்கள் 'உத்திகள்' எனப்படும். அவ்வுத்திகளும் முப்பத்திரண்டு என வகைப்படுத்தப் பட்டன. எந்த ஒரு நூலும் முப்பத்திரண்டு உத்திகள் இல்லாமல் இயற்றப்படுவதில்லை. அதனாலேயே நூலுக்குரிய தலையாய இலக்கணங்களுள் ஒன்றாக இவ்வுத்திகள் இடம்பெற்றன. நூலுக்குரிய உத்திகள் என்ற பொருளில்தான் 'தந்திர உத்தி' என்ற பெயர் அமைந்தது.

---

8. மேற்கோள் : க. நெடுஞ்செழியன், **மெய்க்கீர்த்திகள் அமைப்பும் நோக்கும்**, ப.129.

தமிழில் 'தந்திரம்' என்ற சொல்லிற்கு நூல் என்ற பொருளும் உண்டு. சிவஞான முனிவரும் 'தந்திரமென்பது நூல்' எனக் குறிப்பார்"[9]

என விளக்குவார்.

பேச்சுக்கலைக்குரிய இவ்விலக்கணங்களே பிற்காலத்தில் நூலுக்குரிய இலக்கணங்களாகவும் அமைந்தன என்பதை,

"ஈரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியோடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்"[10]

எனும் தொல்காப்பிய நூற்பா உணர்த்தக் காணலாம். இந்த அடிப்படையிலேயே தமிழில் இயற்றப்பட்ட நூல்கள் அவை இலக்கணமாயினும் இலக்கியமாயினும் அமைந்தன எனலாம்.

பிற்காலத்தில் எழுந்த சமயங்களின் எழுச்சிக்கும் இத் தருக்கவியல் அடிப்படையாய் அமைந்தது. தருக்கம் இல்லாத சமயக் கல்வியே இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்குத் தருக்கவியல் சமயக் கல்வியில் சிறப்பிடத்தைப் பெற்றது.

தருக்கமும் சமயக் கல்வியும்

இரண்டு சமயவாதிகளுக்கு இடையே நடைபெறும் வாதப்போரில் வென்றோருக்குச் சிறப்பு மட்டும் சேர்வதில்லை. மாறாக, வென்றவனின் சமயமும் சிறப்புக்குரிய வகையில் ஏற்றுக்கொள்ளப்பெறும் நிலையை அடைந்தது. திருவள்ளுவரும்,

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு"[11]

---

9. க. நெடுஞ்செழியன், **உலகத் தோற்றமும் தமிழர் கோட்பாடும்**, ப. 68.
10. **தொல்காப்பியம்**, மரபியல், 65 : 3-5.
11. திருவள்ளுவர், **திருக்குறள்**, 642.

எனக் குறிப்பதும் தருக்கவியலின் தனித்தன்மையை உணர்த்தும். தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சமய வரலாற்றிலும் தருக்கம் பெற்றிருந்த இடத்தை க. நெடுஞ்செழியன்,

"அவரவரும் தத்தம் கருத்துக்களை நிலைநாட்டவும் மக்கள் நடுவே தம் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும் தருக்கவியலையும் அளவை இயலையும் நாட வேண்டியதாயிற்று. ஒரு பேரரசன் தனது நாட்டைக் காக்கவும், பகைவர்களை அழிக்கவும் படைகளை நம்பி இருப்பதைப் போன்றே மெய்யியலாளர்களும் தருக்கத்தையும் அளவையியலையும் நம்பியிருந்தனர்"[12]

எனத் தெளிவுபடுத்துவார்.

சமயவாதிகளுக்கு இடையே நடைபெறும் மோதலில் வென்றவருக்கு ஏற்படும் சிறப்பையும் தோற்றோருக்கு ஏற்படும் இழிவையும் சீனப்பயணியான யுவான்சுவாங் குறிப்பிலிருந்து க. நெடுஞ்செழியன் தரும் மேற்கோள் வருமாறு :

"வினையம் (லியு) சமய உரைகள் (லூன்) சூத்திரங்கள் (கிங்) ஆகியவை எல்லாம் பௌத்த நூல்கள். இந்நூல்களிலுள்ள ஒரு பிரிவை முழுவதுமாக விளக்கிப் பொருளுரைக்கும் ஒருவருக்குக் கர்மதானக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இரண்டு பிரிவுகளுக்கு விளக்கம் அளிக்கும் ஒருவருக்கு, இத்துடன் சேர்த்து உயர்ந்த பதவியோ அல்லது தனி அறையோ அளிக்கப்படுகிறது. மூன்று பிரிவுகளை விளக்குபவருக்கு குற்றேவல் புரியவும் பணிந்து நடக்கவும் வெவ்வேறு வேலைக்காரர்கள் ஒதுக்கப்படுகின்றனர். நான்கு பிரிவுகளை விளக்குபவருக்குத் தூய மனிதர்கள் என்றும் (உபாசகர்கள்), பணிவிடைகளைச் செய்யும் தொண்டர்களாக பௌதீகச் சீடர்கள் ஒதுக்கப்படுகின்றனர். இத்திருமுறைத் தொகுதிகளில் ஐந்து பிரிவுகளையும் விளக்கும் ஒருவருக்கு ஒரு மெய்க்காவலரும் அனுமதிக்கப்பட்டார். பேரவையில் ஒருவர்,

12. க. நெடுஞ்செழியன், **உலகத் தோற்றமும் தமிழர் கோட்பாடும்**, ப. 129.

பண்பட்ட சொற்கள், நுண்ணிய ஆய்வுத்திறன், ஆழ்ந்த ஊடுருவும் பார்வை, செறிவு மிக்க தருக்க அறிவு ஆகியவற்றால் (வாக்குவாதம் செய்து) தனித்து விளங்குவாரேயெனில், விலையுயர்ந்த ஆபரணங்களால் அணி செய்யப்பட்ட யானையின்மீது அவரை அமர வைத்துப் புடைசூழ மடாலயத் தலைவாயில் வரை அவரை ஊர்வலமாக இட்டுச் செல்வார்கள். இதற்கு மாறாக ஒருவர் வாக்குவாதத்தில் தோற்றாலும் அல்லது வெறுப்பூட்டக் கூடியதும் நடை பண்பற்றதுமான சொற்களைப் பயன்படுத்தினாலும், அல்லது தருக்கவியலில் எந்தஒரு விதி வரம்பைப் புறக்கணித்துத் தன் மனம் போன போக்கில் மேற்கோள் காட்டினாலும், அவர் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அழுக்கையும் புழுதியையும் அவர் உடல் மீது பூசிக் கண் காணாத இடத்திற்குக் கொண்டு செல்வார்கள். அல்லது ஒரு வடிகாலில் தள்ளி முழுக்கி விடுவார்கள்''[13]

தமிழ் இலக்கிய வரலாற்றில் அளவையியல் பெறும் சிறப்பைப் போலவே மேலை நாட்டு இலக்கிய வரலாற்றிலும் அறிவியல் வரலாற்றிலும் அளவையியல் சிறப்பான இடத்தை வசிக்கிறது. அம்மரபில் அளவையியலை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். அவை

பகுப்பளவை (Deductive Logic)

தொகுப்பளவை (Inductive Logic)

என்பன.

பகுப்பளவை

மரபு வழிப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில் உருவாகும் அளவையியல் 'பகுப்பளவை' என்பதாகும். அனுமானங்களைக் கொண்டும் ஒரு முடிவுக்கு வரலாம். இம்முறையைப் பற்றி,

13. மேற்கோள் : க. நெடுஞ்செழியன், உலகத் தோற்றமும் தமிழர் கோட்பாடும், பக். 129-130.

"பகுப்பளவை அனுமானங்களுக்குச் சிந்தனைத் திறனே அடிப்படை. அனுபவம் ஏதுமின்றிப் பகுப்பளவை அனுமானங்களைப் பெறமுடியும். பகுப்பளவை அனுமானம் என்பது தொடர்புடைய பல கருத்துரைகளின் இணைப்பால் விளைகிறது. கொடுக்கப்பட்ட கருத்துரைகளுக்கிடையே உள்ள தொடர்பும், கருத்துரைகளில் இடம்பெறும் பதங்களின் இயல்பும், பொருளும் அனுமானிக்கப்படும் முடிவுரைக்கு ஆதாரங்களாகின்றன.

உரைகளையும் உரைகள் வெளிப்படுத்தும் கருத்துகளையும் பகுத்தாராய்வதால் முடிவுரை வெளிப்படுகிறது. பகுப்பளவை அனுமானத்தின் ஏற்புடைமைக்கு அனுபவம் ஆதாரமாவதில்லை. அடுக்கப்படும் ஆதார உரைகளிடையே உள்ள முரணின்மை, இயைபு, இடையறாத் தொடர்பு போன்றவை பகுப்பளவை அனுமான முடிவுரையின் ஏற்புடைமையைத் தீர்மானிக்கின்றன. பகுப்பளவை அனுமானங்களின் முடிவுரைகள் அனுபவ உலகில் பொருந்துகின்றனவா என்பதைவிட ஆதார உரைகளோடு அளவைத் தொடர்பு உடையனவா என்பதே முக்கியம். ஆதார உரைகளிடைக் காணப்படும் அளவைத் தொடர்பின் நீட்சியாகவும் சிந்தனையின் தொடர்ச்சியாகவும் முடிவுரை காண்பது பகுப்பளவை அனுமானத்தின் இயல்பு"[14]

என விளக்குவார் க. நாராயணன்.

தொகுப்பளவை

அறிவியல் அடிப்படையைக் கொண்ட அளவையியல் முறை இதுவாகும். இம்முறையின் தன்மைகள் பற்றி,

"உலகு தழுவிய உண்மைகளை - இயற்கைவிதிகளை - அடிப்படையாகக் கொண்டு அமைந்த அளவை முறை இதுவாகும். இயற்கையின் விதிகளுக்கான காரணங்களை ஏன் எதற்கு என்று அறியக்கூடிய வழிமுறைகளைக் காட்டுவது இவ் அளவையியல். 'பழம் மரத்திலிருந்து

14. க. நாராயணன், ஆய்வு எது? ஏன்? எப்படி?, ப. 66.

> வீழ்வதற்குப் புவி ஈர்ப்பே காரணம்' என்று கண்டறிந்த அறிவியல் முடிவை இதற்குச் சான்றாகக் காட்டலாம். தனிப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து உலகு தழுவிய உண்மைகளைக் கண்டறிவது இத்தொகுப்பு வழி அளவையியலின் நோக்கம். அறிவிற்கும் பட்டறிவிற்கும் உட்பட்ட உய்த்துணர்வுகளையும் இது ஏற்றுக் கொள்கிறது"[15]

என விளக்குவர்.

மேலை நாட்டுக் கல்வியில் தேர்ந்தும் தமிழ் இலக்கிய இலக்கண தருக்கவியல் நூல்களில் தோய்ந்தும் தம் ஆழ்ந்த புலமையை மேலும் வளர்த்துக் கொண்டவர் வீரமாமுனிவர். எனவே அவருடைய நூல்களில் கீழை, மேலை நாடுகளின் அளவையியல் முறைகள் இடம் பெறுதல் என்பது இயல்பாகும். வேதவிளக்கமென்னும் இவருடைய நூல் அளவையியல் முறைக்கு அதிலும் குறிப்பாகப் பகுப்பளவை முறைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

மரபு வழிப்பட்ட கிறித்தவச் சமயத்தில் அதாவது கத்தோலிக்கப் பிரிவின் பாரம்பரிய நம்பிக்கைகளிலிருந்து சற்று விலகிப் புதிய பாதையைக் கண்டவர் மார்ட்டின் லுத்தர். பாரம்பரியத்தை எதிர்த்ததனால் அது எதிர்ப்புச் சமயமாகப் புராட்டஸ்டாண்ட் (Protestant) எனப் பெயர் பெற்றது. ஆயினும் மரபுவழிப்பட்ட கத்தோலிக்கப் பாரம்பரியத்திலிருந்து அது முற்றிலுமாக விலகிச் சென்றுவிடவில்லை. கத்தோலிக்கச் சபையும் லுத்தரின் திருத்தமுறைத் திருச்சபையும் கிறித்தவத்தின் அடிப்படையான விவிலியத்தை ஒத்துக் கொள்கின்றன. இதில் எந்தவித மாற்றமும் இல்லை. பாரம்பரியக் கருத்துகள் என்ற ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டே லுத்தர் சபையின் மீது தனது தாக்குதலைத் தொடுக்கின்றார் வீரமாமுனிவர். அத்தாக்குதல் முறை பகுப்பளவை முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது.

---

15. க. நெடுஞ்செழியன், **தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம்**, ப. 442.

திருச்சபைப் பாரம்பரியக் கருத்துகளுள் சில

1. சனிக்கிழமை ஓய்வுநாள் என்று வேதத்தில் எழுதியிருக்க ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக அனுசரிப்பது.
2. வேதத்தில் எழுதாத விசுவாச மந்திரத்தைச் சொல்வது.
3. குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்கலாம் என்று வேதத்தில் எழுதாதபோது குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுப்பது.
4. பெண் பிள்ளைகளுக்குத் தேவநற்கருணை கொடுக்கலாம் என்று வேதத்தில் எழுதாதபோது அவர்களுக்கும் நற்கருணை கொடுப்பது

முதலான கருத்துகள் ஆகும்.

கத்தோலிக்கத் திருச்சபையினர் எழுதப்பட்ட விவிலியத்தோடு எழுதாத வேதவாக்கியமாகிய திருச்சபைப் பாரம்பரியக் கருத்துக்களையும் அனுசரிக்க வேண்டும் என்கின்றனர். லுத்தரன் சபையாரோ எழுதப்பட்ட விவிலியத்தை மட்டுமே விசுவசிக்க வேண்டும் என்கின்றனர். ஆனால் மேற்கூறிய திருச்சபைப் பாரம்பரியக் கருத்துகளை விசுவசித்துக் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்தக் கருத்துகளை விசுவசிக்கும்போது மற்றத் திருச்சபைப் பாரம்பரியக் கருத்துக்களையும் கடைப்பிடிப்பதில் தவறில்லை என்கிறார். இக்கருத்தின் சாரம் :

> "ஓய்வுநாளை சனிக்கிழமையாய் அனுசரிக்க மூன்றாங் கற்பனையாக எழுதப்பட்டதல்லோ அப்படியாகிலும் பதிதர் முதலாய்ச் சனி நாளானுள் அனுசரியாமல் ஆதிவாரங் கொண்டாடுவார்கள். இப்படி நாட்களை மாறுதற்கு உத்தாரம் வேதத்தில் எழுதப்பட்ட தெங்கே பின்னையுங் நம்மோடே பதிதரும் அனுசரித்துச் சொல்லும் விசுவாச மந்திரம் வேதத்தில் எழுதினது எங்கே. இப்படியே குழந்தைகளுக்கு முதலாய் ஞானஸ்நானங் கொடுக்க வேண்டுமென்றும் எவரும் ஞானஸ்நானங் கொடுக்கலாம் என்றும் பெண் பிள்ளைகளுக்குத் தேவநற்கருணைக் கொடுக்க வேண்டுமென்றும் இவை எல்லாம் வேதத்தில் எழுதப்பட்டது எங்கே. எங்கும் எழுதாதாயினும் பதிதரும் இவை எல்லாத்தையும் அனுசரிப்பானேன். இவை எல்லாஞ் செய்ய வேண்டியதென்று பதிதருஞ்

> சொல்லும்போது இவை எல்லாம் ஆண்டவர் படிப்பித்ததுங் கற்பித்ததுமாக வேண்டுமல்லோ. எழுதின வேதவாக்கியத்தால் கற்பியாதிருக்கக் கொள்ள அதனைக் கற்பித்து தேவவாக்கியம் எழுதப்படாமல் பரம்பரமாய்த் தலைமுறை தலைமுறையாக வழங்கினதென்றும் அப்படி பரம்பரமாய் எழுதப்படாமல் வழங்கின தேவவாக்கியத்தை நாஞ்சொன்னபடி உட்கொண்டு விசுவசிப்பது நியாயம் என்றும், பதிதரும் சொல்லக் கடவார்கள்"[16]

என்பதாகும். விலக்கப்பட்டவர் எனும் பொருளைத் தரும் பதிதர் எனும் சொல் லுத்தர்களை - தரங்கம்பாடியரைக் குறிப்பதாகும்.

பேதகமறுத்தல் - கண்டனம்

வேத விளக்கத்தில் தருக்க உத்தியைப் பயன்படுத்தியவர் பேதக மறுத்தலில் கண்டன உத்தியைப் பயன்படுத்துகிறார். சமயம் மக்கள் வாழ்வோடு இணைந்தது ஆதலால் அவர்கள் மொழி, நூல் எல்லாவற்றிலும் சமய மணம் கமழ்கிறது.[17] இன்றைய மொழியியல் வல்லுநர்கள் மொழியின் பிறப்புப்பற்றி வெவ்வேறு கருத்துகள் கொண்டிருந்தாலும் தமிழ் நாட்டில் சிவபெருமானே தமிழ் மொழியை அகத்தியருக்கும் வடமொழியைப் பாணினிக்கும் வழங்கினார் என்ற நம்பிக்கை ஒன்றும் உண்டு. மொழி இறைவனால் உருவாக்கப்பட்டது என்னும் கருத்தே அம்மொழியின் சமயச் சார்பை உறுதிப்படுத்தி விடுகிறது. ஆதலின், அம்மொழியில் தோன்றிய இலக்கியங்களில் அச்சார்பு இருப்பதில் வியப்பில்லை. சங்க இலக்கியத்திற்குப் பிறகு தமிழில் தோன்றிய அனைத்து வகை இலக்கியங்களும் ஏதேனும் ஒருவகையில் சமயச் சார்பு கொண்டனவாகவே அமைந்துள்ளன. மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி, சீவக சிந்தாமணி முதலான இலக்கியங்கள் பௌத்த சமண சமயங்களைச் சார்ந்து நிற்க, தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய பனுவல்கள் சைவ வைணவ சமய இலக்கியங்களாக மட்டுமல்லாது பக்தி இயக்கத்தின் வெளிப்பாடுகளாகவும் அமைந்தன.

---

16. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 220.
17. அ. மு. பரமசிவானந்தம், **சமயமும் சமூகமும்**, ப. 83.

இலக்கியங்கள் சங்க காலத்தில் தனிமனித உணர்வும், காப்பிய காலத்தில் இலக்கியப் பாத்திரங்களின் உணர்வும் வெளிப்படும்படி எழுந்தன. காலப் போக்கில் இலக்கியங்கள் பல்வேறு வடிவங்களாக - வகைகளாகத் தழைக்கின்ற போது அவற்றுக்கிடையே மோதல்கள் பெருகின. இந்த மோதலில் வலுவுடையவையே வாழும் ஆதலின் ஒவ்வொரு சமயமும் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளத் தங்கள் கொள்கைகளை எடுத்துரைத்தன. தன்னிலை விளக்கத்தால் மட்டுமே வளரமுடியாத சமயம் தனக்குப் போட்டியாக வரும் பிற சமயங்களையும் தாக்கத் தொடங்கிற்று. பயிர் வளரக் களை களைவது போலத் தான் வளரத் தன்னோடு வளர்வனவற்றையும் களையாகக் கருதி அழிக்கும் சமய முயற்சிகள் கண்டன இலக்கியத்தை உருவாக்கின.

இலக்கியங்கள் தாம் சார்ந்த சமயக் கருத்துக்களைச் சொல்வதைவிட எதிர்க்கும் சமயத்தை, சமய முதல்வாதியைத் திட்டும் இலக்கியங்களாகவே வளர்ந்தன. கண்டன இலக்கியம் ஒருவகையில் திட்டு இலக்கியமே. சமயங்களை வளர்க்கச் சமய இலக்கியங்கள் பெரிதும் துணைபுரிந்தன. அதே வேளையில் பிற சமயங்களின் வளர்ச்சியைத் தடுக்கவும் அவை பயன்பட்டன. அவ்வாறு பயன்பட்ட இலக்கியங்கள் சமய மோதலுக்கும் வித்திட்டன. அம்மோதல்கள் பல இலக்கியங்கள் தோன்றவும் அடித்தளமாயின. அவ்வாறு 'கல்லுக்குக் கல் அண்டை கொடுத்தாற்போல'ச் சமயப் பரப்பலையும் பரசமயத் தாக்குதல்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட இலக்கிய வகைகள் எல்லா நாடுகளிலும் மொழிகளிலும் தோன்றியுள்ளன. இதன் வீச்சு வெளிநாட்டில் தோன்றித் தமிழ் நாட்டில் பரவிய கிறித்தவ சமயத்தையும் விட்டு வைக்கவில்லை.

இருசமய முரண்பாட்டால் லுத்தரன் சபையார் 'திருச்சபை பேதகம்' எனும் நூலை வெளியிட, வீரமாமுனிவர் அதற்கு மறுப்புக்கூற முன்வந்ததால் விளைந்த கண்டன நூலே 'பேதகமறுத்தல்' எனும் நூல். கண்டனம் எனும் சொல்லுக்கு 'மறுப்பு' என்று பொருள் கூறுகிறது கழக அகராதி.[18] இந்த அடிப்படையில் லுத்தரன் சபையார் கூறிய கொள்கை முரண்பாடுகளுக்கு வீரமாமுனிவர் கூறும் மறுப்புக் கொண்டதே பேதக மறுத்தல் ஆகும்.

---

18. கழக அகராதி, ப. 272.

விவிலியப் பொருளை நிச்சயிக்கவோ தர்க்கங்களை நீக்கவோ திருச்சபை தேவை இல்லை என்றும் விவிலியத்திற்கு ஒவ்வொருவரும் நினைத்தபடிப் பொருள் கொள்ளலாம் என்றும் கூறும் தரங்கம்பாடியாரை நோக்கி வீரமாமுனிவர்,

> *"நன்னூல் தொல்காப்பியம் சிந்தாமணி சிலப்பதிகாரத்தில் கண்ட ஐயம் நீங்க வயலில் நாற்று நடுகிற பள்ளத்திகளையும் சேற்றில் கிளிஞ்சில் எடுக்கிற பறைச்சிகளையும் கேளாமல் நெடுநாள் செந்தமிழ் நன்கு பயின்ற கற்றோரை மட்டும் கேட்க வேண்டும் என்று கூறினால் என்ன தவறு?"*[19]

என வினவுகின்றார். விவிலியத்தை அவரவர் படித்துப் பொருள் புரிந்து கொள்ளும்போது தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்பாகிவிடும். அவ்வாறு ஏற்படாமல் இருக்க,

> *"பலவகைக் கறியும் அன்னமும் இனிதாய் உண்ட தாயானவள், பிள்ளைக்கு முலைப்பால் மாத்திரம் கொடுப்பது திருட்டு என்றால், நாங்கள் செய்வதும் திருட்டுத்தானே. குழந்தை கெட்டிப் போசனமும் உணவும் உண்டால், சீரணிக்க மாட்டாமையால், அதற்குக் கேடாகும் என்று, அதனைத் தாயே உண்டு, தனது அன்பின் தொழிலால் இனிய அமிர்தமாக்கி, அதனைக் குழந்தைகளுக்குப் பாலாக ஊட்டினால், பிள்ளைக்கு வஞ்சனை செய்யாமல் அன்பு காட்டினாள் என்று சொல்ல வேண்டியதல்லோ? அவ்வண்ணமே நீங்களும் வேதத்தில் இன்னும் குழந்தைகளாகையால் வேத விசயங்களும் அதிலுள்ள வர்த்தமானங்களும் கெட்டிப் போசனம் போல் சீரணியாத உணவாகாதபடி, அதை ஆராய்ந்து இனிய அமிர்தமாக்கி அன்போடு சொல்லவும், பல ஞான புத்தகங்களை எழுதிக்காட்டவும் செய்தோம்"*[20]

---

19. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப.15.
20. **மேலது**, ப.15.

எனவும் விளக்குகின்றார். வேதாகமத்தைத் திருச்சபை உத்தரவின்றி மொழி பெயர்க்கக் கூடாது என்ற திருச்சபைக் கட்டளையை மறுக்கும் தரங்கம்பாடியரை நோக்கி வீரமாமுனிவர்,

> *"கடலடியில் இருக்கும் முத்து, பவளங்களை மூழ்கி எடுக்க அறியாதவர்கள் மோசம் போகாதபடி கடலில் விழவேண்டாமென்று அரசன் விலக்கியது போல், விவிலியத்தில் பல தேவரகசியங்கள் மேலே தோன்றாமல் மறைந்திருக்க, நன்றாய்ப் படியாதவன் தவறான பொருள் கண்டு மயங்கிக் கெடலாம். ஆகவே, அறிந்தவர்களைக் கடலில் மூழ்கவிட்டு, மணிகளை எடுத்து யாவருக்கும் கொடுப்பது போல், திருச்சபையும் அறிந்த அறிவாளிகளைக் கொண்டு விவிலியத்தில் ஒளிந்திருக்கும் தேவரகசியங்களை எடுத்து மக்களுக்கு அறிவிக்கிறது"*[21]

என்று அறிவுறுத்துகின்றார்.

கண்டன உத்தியில் லுத்தர் சபையினரின் பேதகங்களை மறுத்துத் தம் கொள்கைகளை நிலைநிறுத்தியதோடு, லுத்தரையும் அவர் சபையாரையும் ஏளனப்படுத்தும் நோக்கில் முற்றுருவகமாகவும் ஏளனமாகவும் 'லுத்தேரினத்தியல்பு' எனும் நூலை எழுதினார்.

லுத்தேரினத்தியல்பு - முற்றுருவகம், ஏளனம்

கவிதை சிறக்கக் காரணமானவற்றுள் ஒன்று உவமையாகும். உவமை என்பது எல்லா மனிதர்களும் அறிந்து உணரக்கூடியது. அதனால்தான் யாவரும் உவமையைக் கையாண்டு வருகின்றனர். கவிதையில் மட்டுமின்றி உரைநடையிலும் பேச்சிலுங்கூட உவமைகளை ஆண்டு வருகின்றனர். உரைநடையையும் உரையாடலையும் பொறுத்தஅளவில் சொல்வோர் கருத்தைக் கேட்போர் நன்கறிந்து கொள்ளவே உவமை பயன்படுகிறது.

---

21. வீரமாமுனிவர், **பேதகமறுத்தல்**, ப.14.

'புலி பூனையைப் போல் இருக்கும்' என்றால் அறிந்த பூனையைக் கொண்டு அறியாத புலியைக் கேட்போனுக்கு விளக்குவதே ஆகும்.[22] இந்தக் கருத்தோடு தோன்றிய உவமை நன்கு பயன்படுத்தப்பட்ட பிறகு உவமையில் குறுக்கம் தோன்றலாயிற்று. இக்குறுக்கத்தையே இலக்கணம் 'உவமத்தொகை' என்று கூறிற்று. இவ் உவமையே பிறகு 'உருவகம்' ஆயிற்று.[23] இவை இரண்டிற்கும் பெரிய வேறுபாடு காணாத காரணத்தால் தொல்காப்பியர் உருவகம் எனத் தனியே ஒன்றையும் கூறவில்லை. ஆனால் தண்டியலங்கார ஆசிரியர்,

> "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
> ஒன்றென் மாட்டின் அஃது உருவகமாகும்"[24]

என்று கூறுகின்றார்.

உருவகத் தோற்றம்

கவிஞர்கள் 'தாமரை முகம்' என்னும் உவமைத்தொகையை 'முகத்தாமரை' என்று கூறினர். அங்ஙனம் கூறுவதால் புதியதோர் அழகு தோன்றியது. தாமரை முகம் என்று கூறும்பொழுது இரண்டு சொற்களாகி விட்டிசைக்கப்படுகின்றன. ஆனால் 'முகத்தாமரை' என்னும்பொழுது ஒரு சொல்லாகி விடுகிறது. இதனையே 'உருவகம்' எனப் பிற்காலத்தில் பெயரிட்டனர்.

தென்றல் வீசத் தொடங்கியவுடன் நெருப்புப் போல் சிவந்த நிறத்துடன் மாமரம் தழைத்தது. இக்கருத்தைக் குமரகுருபரர்,

> "தென்னந் தமிழின் உடன்பிறந்த சிறுகால்
> அரும்பத் தீயரும்பும் தேமா"[25]

எனும் அடிகளில் உருவகமாக்குகிறார். 'நெருப்புப் போல் மா துளித்தது' என்று கூறுவதற்கும் 'தீயரும்பும் தேமா' என்பதற்கும் உள்ள வேறுபாட்டை யாவரும்

22. அ. ச. ஞானசம்பந்தன், **இலக்கியக்கலை**, ப. 159.
23. **மேலது**, ப. 159.
24. **தண்டியலங்காரம்**,
25. மேற்கோள் : அ. ச. ஞானசம்பந்தன், **இலக்கியக்கலை**, ப. 160.

நன்கறிதல் கூடும். இங்ஙனம் உருவகம் செய்தமையால் இக்காட்சி படிப்பவர் மனத்தில் அப்படியே நிலைத்து நிற்கிறது.

முற்றுருவகம்

தனிப்பட்ட உருவகத்தை அல்லாமல் ஒரு பாடல் முழுவதும் உருவகம் ஆகிவரும் நிலை முற்றுருவகம் ஆகும். சீவக சிந்தாமணியில் சீவகன் காந்தருவதத்தையை மணக்க நடந்த போரில் வெற்றி கொண்டான். அதுகண்ட மன்னர் அவன்பால் பொறாமை கொண்டு போருக்கு எழுகின்றார். சீவகனும் போருக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கிளம்பினான். அவனை ஒரு யானையாக உருவகம் செய்கிறார் திருத்தக்க தேவர்.

> "தாழிருந் தடக்கையும் மருப்புந் தம்பியார்
> தோழர்தன் தாள்களாச் சொரியு மும்மதம்
> ஆழ்கடற் சுற்றமா அழன்று சீவக
> ஏழையர் போதகம் இனத்தொ டேற்றதே"[26]

என்னும் பாடலில் சீவகபோதகம் என்னும்போது மனத்தில் வீரஉணர்வு உண்டாகுமாறு சீவகனைப் படைத்துள்ளார். அவ்வாறே வீரமாமுனிவரும் தாம் கூறவிரும்பிய கருத்தை மக்கள் உணர்வு நிலையில் அறிதல் வேண்டுமென்பதற்காக விவிலியத்தில் ஒருபகுதியை எடுத்து அகவல்பாவாக யாத்து அப் பாடல் முழுவதையும் முற்றுருவகப்படுத்துகின்றார். அப்பாடலின் சாரம் :

> "வான்மேல் இருந்த மீன் கீழே விழுந்து நரகவாயிலின் கோலை வாங்கி அதனைத் திறந்தது. அதிலிருந்து கிளம்பிய புகை ஆகாயத்தையும் சூரியனையும் மறைப்பது போல இருந்தது. அப்புகையிலிருந்து விட்டில் பறவைகள் குழுவாக மொய்த்தன. அதன் தோற்றம் வியக்கத்தக்கதாக இருந்தது. அப்பறவை தன் வடிவம் மாறி ஆண்முகம், பெண் கூந்தல், சிங்கப்பல், தேள் கொடுக்கு வால் கொண்டதாக மாறித் தலையில் பொன்முடியும், மார்பில் இருப்புக் கவசமும் அணிந்து போருக்குப்

---

26. திருத்தக்கதேவர், **சீவக சிந்தாமணி**, 780.

புறப்பட்ட புரவிப்படை எனப் போர்க்களத்தில் தேர்ப்படை விடும் ஒலிபோல இருசிறகைப் புடைத்துப் படை அரசனாகச் சங்கரித்தோன் எனப்படும் நரகராசன் நின்றான்"[27]

என்பதாகும். இங்கு வீரமாமுனிவர் லுத்தரையும் சீடர்களையும் பற்றிச் சொல்ல விரும்புகிறார். லுத்தர் மீது இருந்த கோபத்தால் அவரை "நரகத்தலைவன்' என்றும் அவர் சீடர்களை நரகத்திலிருந்து மேலெழுந்துவரும் 'விட்டில் பறவைகள்' என்றும் உருவகப்படுத்துகிறார்.

விண்ணிலிருந்த மீன்	-	கத்தோலிக்கத் திருச்சபையில் லுத்தர் துறவியாய் இருத்தல்
விழுந்த விண்மீன்	-	லுத்தர் கத்தோலிக்கத் திருச்சபையி லிருந்து விலகுதல்
நரகத்தைத் திறத்தல்	-	கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலகியதால் பசாசின் முதன்மைச் சீடராகி நரகத்தைத் திறத்தல்
புகை மண்டிலம்	-	விவிலியத்திற்கு அவரவர் புரிந்து கொண்டபடிப் பொருள் கொள்வதால் ஏற்படும் விபரீதக் கருத்துகள்
விட்டில் பறவை	-	லுத்தரன் சபையார்
விட்டில் பறவைக்கூட்டம்	-	தலைமையற்ற லுத்தரன் சபையார்
ஆண்முகம்	-	அச்சுப் பதித்த புத்தகத்தின் அழகு
பெண் கூந்தல்	-	தரங்கம்பாடியார் தங்களைத் துறவி என்று கூறி இல்லற வாழ்க்கை வாழ்தல்
தேள் கொடுக்கு	-	வறுமையில் வாடுபவர்களுக்கு வலியப் பொருள் தந்து அவர் மதம் மாற வில்லை என்றால் துன்பம் கொடுத்தல்

27. வீரமாமுனிவர், **லுத்தேர் இனத்தார் இயல்பு**, ப. 4.

சிங்கப்பல்	-	போப் பற்றிய தவறான கருத்து
இருப்புக் கவசம்	-	வான்வீடு சேர்க்கும் சமயம் கத்தோலிக்கம் என்று லுத்தர் கூறியிருக்கத் தரங்கம்பாடியார் பிடிவாதமாகத் தங்கள் மதமே வான்வீடு சேர்க்கும் என்று கூறல்
பொன்முடி	-	தரங்கம்பாடியார் தமிழ் விவிலிய மொழி பெயர்ப்பிலுள்ள தவறுகளை ஏற்றுக் கொள்ளாமல் தங்களுக்குத் தாங்களே முடி சூட்டிக் கொள்ளுதல்
பரிப்படை	-	கோவில் பெயரைச் சொல்லித் தமிழகம் வந்த தரங்கம்பாடியார் கத்தோலிக்கர் கொள்கைகளுடன் போரிட்டு நிற்றல்
படைக்கு அரசன்	-	ஆங்காரம் கொண்ட தரங்கம்பாடியாருக்குப் பசாசு தலைமை
சங்கரித்தோன்	-	லுத்தர் திருச்சபையின் எல்லாக் கோட்பாடுகளையும் அழிக்க முற்பட்டதால் சங்கரித்தோன்

என ஒவ்வொரு பகுதியையும் லுத்தர், அவர் சிடர், தரங்கம்பாடியார் ஆகியவர்களுடன் உருவகப்படுத்துகிறார். கத்தோலிக்கர்கள் லுத்தரன் சபையில் சேர்கிறார்கள் என்று வீரமாமுனிவர் வருத்தமுற்றார். அச்சபையில் கத்தோலிக்கர் சேர்வது குறித்து அவர்களுக்குப் பலமுறை கடிதம் எழுதினார். மக்கள் வீரமாமுனிவரின் அறிவுரைக்குக் கீழ்ப்படிந்ததாகத் தெரியவில்லை. அதனால் அவர்களுக்கு நரகத்தைப் பற்றிய பயவுணர்வை உண்டாக்கி அவர்களைக் கத்தோலிக்கத் திருச்சபையிலேயே நிலைநிறுத்த வேண்டும் என்று விரும்பி, லுத்தரன் சபையில் சேர்வதால் நரகத்திற்குத்தான் செல்லமுடியும் என்று நரகத்தைப் பற்றிய பயவுணர்வை மக்களுக்கு ஊட்டுகின்றார்.

ஏளனம்

ஒருவரைப் புகழ்வது போலப் பழித்துரைப்பது ஏளனம். இதைத் தண்டியலங்காரம் 'வஞ்சப்புகழ்ச்சி' என்கிறது. ஔவையார், தொண்டைமானைப் போர் செய்து விப்ப்புண் படாத அழகான உடலினன்; போர்க்கருவிகளுக்கு நெய் பூசி, மயில் தோகை சாத்தித் தூசு படாமல் பாதுகாப்பாக வைத்திருக்கிறான் என்று புகழ்ந்து கூறுகிறார்.[28] உண்மையில் தொண்டைமானைப் போர் செய்து விழுப்புண் படாத உடலினன் எனவும் போர்க் கருவிகளைப் பயன்படுத்தாதனால் கூர் மழுங்காமல் பாதுகாப்பாக வைத்திருப்பவன் எனவும் பழிக்கிறார்.

> வீரமாமுனிவரும் கீழ் உலகின் திறவுகோலை வைத்திருக்கும் முதன்மைச் சீடர் -
>
> ஜெர்மானிய விவிலிய மொழி பெயர்ப்பால் முடி சூட்டப்பட்ட அரசர் -
>
> குதிரைப்படைக்குத் தலைவர் -
>
> போருக்குச் சென்று வெற்றி கொண்டவர்

என்று லுத்தரைப் புகழ்கிறார். இவற்றின் வாயிலாகத் தீயவர்கள் வாழும் நரகத்தின் திறவுகோலை வைத்திருக்கும் முதன்மைச் சீடர், விவிலியத்தை முதன் முதலில் இலத்தீன் மொழியிலிருந்து ஜெர்மானிய மொழியில் மொழி பெயர்த்ததைக் கத்தோலிக்கத் திருச்சபை ஏற்றுக் கொள்ளாத நிலையில், தனக்குத்தானே மொழி பெயர்ப்பு அரசர் என்று முடி சூட்டிக் கொண்டது, ஆங்காரம் கொண்ட சீடர்களுக்குத் தலைவரானது, திருச்சபையின் சீர்கேடுகளை எடுத்துக் கூறுகிறேன் என்று திருச்சபைச் சட்டங்கள் அனைத்தையும் அழிக்கத் துணிந்து அம்முயற்சியில் வெற்றி பெற்றேன் என்றது ஆகிய செயல்களைச் செய்தவர் என்று பழிக்கிறார்.

வாமன் சரித்திரம் - செந்தமிழ் நடை

மாணவனின் ஐயங்களுக்கு ஆசிரியர் விடையளிப்பதைப் போல வாமன் என்னும் படைத்தளபதியின் ஐயங்களுக்குச் சூசை தெளிவூட்டும் பாங்கில்

---

28. புறநானூறு, 95.

அமைந்தது இந்நூல். இந்நூலுக்கு அவர் தந்த தலைப்பே ‘சூசை மாமுனிவருக்கும் வாமனுக்கும் நடந்த சல்லாபம்’ என்பதாகும். சல்லாபம் என்னும் சொல் உரையாடல் எனும் பொருளில் கையாளப்பட்டுள்ளது.

வாமன் என்பவன் கிறித்தவத் தொன்மங்கள் (Christian Mythology) எதிலும் இடம்பெறாத பாத்திரம். வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணியில் அவரால் புதிதாகப் படைக்கப்பட்ட ஒரு படைத்தளபதியே வாமன் என்பவன் ஆவான். அந்தப் பாத்திரத்தைக் கொண்டு இன்ப நுகர்வுகளின் தீமை பற்றி எடுத்துக்கூறும் ஒரு வாய்ப்பாக வாமன் சரித்திரத்தைப் படைக்கிறார். வீரமாமுனிவர் எழுதிய உரைநடை நூல்களிலேயே அளவில் சிறியது இந்நூல். இந்நூலின் தொடக்கத்திலேயே,

> “. . . . . . படைமுகத்தஞ்சாத வீர நெஞ்சுடைய தளகர்த்தனாகிய வாமனென்றொருவனித்தமே யந்தஞான விதிகளை விரும்பிக் கேட்பான். கேட்பினு நெடுநாள் பூந்தடாகத்திற் கிடந்து வேர் கொள்ளாத பாசி போலவனு மெல்லாவற்றையு முட்கொண்டொப்ப நடக்கமாட்டா திருப்பான். எக்காலமு மிரணப்போரிற் செயங்கொண்டவனாயினும் பாவத்திற் பழகிக் காமப்போரி லெப்போதுந் தோர்வைப் பட்டவனாவான். ஆகையாற் கேட்டவுணர்வினால் உள்ளசைந்து புண்ணியத்தின் மேலாசையுட் கொண்டவுடனே தான் விலைமாதரை நினைத்து மயங்கித் தடுமாறி மனக்கவலை யாற்றாதுருகிநோவான். நொந்திச் சிந்தையுட் கொள்ளாதொருநாளந்த முனிவரை நோக்கிச் சொல்லத் தொடங்கி யிருவருட்சல்லாப முண்டாயிற்று”[29]

எனத் தம் நூலின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறார்.

விவிலியம் காமத்தைக் கடிவது. எனவே அந்த ஒரு கூறை முதன்மைப்படுத்தி இந்நூலை எழுதியிருப்பதன் வாயிலாகச் சமயப் பரப்பில் ஈடுபடும் துறவிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் இதில் தெளிவுபடுத்தி விடுகிறார். சூசையைப் பற்றி வாமன் குறிப்பிடும்போது,

---

29. வீரமாமுனிவர், வாமன் சரித்திரம், ப. 24.

> "ஐயா, வாலிபத்திலருந்தவத்தோடு நீர் பழகினதாகையிற் சொன்ன தெல்லாஞ் செய்வதுமக் கெளிதாமே. நானோவென்றால் பாவத்திற் சென்மித்துப் பாவத்தோடு வளர்ந்து பாவத்துள்ளமிழ்ந்திக் கிடக்கவே வாயூமை பாடவுங் காலொண்டியாடவுங் கைமுடவன் சிலம்பம் போடவும் பல கற்பனைகளைக் கேட்டாற் போலே நீரோதினபடி நடப்பதென்னாலாற்றாதையா"[30]

எனச் சூசையின் துறவு வாழ்க்கையின் மேன்மையைப் புகழ்வதன் வாயிலாகச் சமயத் துறவிகள் என்போர் எப்படி வாழ வேண்டும் என்பதையும் உய்த்துணர வைக்கின்றார். தேம்பாவணியில் 28ஆவது படலமாக வாமனாட்சிப் படலம் வருகிறது. அப்படலத்தை இங்கு 'வாமன் கதை' என்ற பெயரில் தெளிவாக எழுதுகிறார். எழுதியதோடு அதற்கு இலத்தீன் மொழி பெயர்ப்பும் மேனாட்டுக் குரு மாணவர்களுக்காகத் தருகிறார். இதற்கு முனிவர் இலத்தீனில் எழுதிய முகவுரை வருமாறு :

> "(பரமார்த்த கதை போல) கேலியில்லாததும் நல்ல நடைக்கு மாதிரியானதுமான பகுதி ஒன்றை இங்குத் தரஎண்ணி, சிற்றின்பம் நாடும் உயர்ந்த தளபதி ஒருவனுக்கு, துறவியார் ஒருவர் அளித்த அறிவுரைகளை இங்கு தருகிறேன். தேம்பாவணிக் காவியத்தில் வரும் வாமனாட்சிப் படலத்திலிருந்து இதைத் தேர்ந்தெடுத்தேன். அங்குச் செய்யுள் நடையில் இருந்தாலும், ஓரளவு எடுப்பாய் இருக்கும். கொடுந்தமிழ் தமிழ் - இலத்தீன் அகராதியில் காணாத எச்சொல்லும் இங்கு வராது. மேலும் கொடுந்தமிழின் இலக்கணத்தில் ஒழுங்கு விளக்கம் பெறாத எந்த வாக்கியத்தையும் நான் கையாளவில்லை"[31]

என்று எழுதுகிறார்.

கிறித்தவ சமயப் பரப்புநராகவும் பாதிரியாரைப் போன்ற சமயத் தலைமையை ஏற்றவர்களாகவும் கிறித்தவப் பணியாற்றிய லூத்தர் சபையினர்

---

30. வீரமாமுனிவர், **வாமன் சரித்திரம்**, ப. 24.
31. இராசமாணிக்கம், **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்**, ப. 103.

திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் இந்நூல் அமைந்திருக்குமோ என்ற ஐயமும் எழுகின்றது. இக்கருத்து மேலும் ஆய்வுக்குரியது.

கூடா ஒழுக்கத்தின் தீமையை விளக்கி உரையாடல் வடிவில் அமைந்த இந்நூல் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு புது முயற்சியாக அமைந்தது. இந்தப் புதுமுயற்சியோடு நகைச்சுவையாகப் பரமார்த்த குருவின் கதையும் எழுதியுள்ளார்.

பரமார்த்த குருவின் கதை - நகைச்சுவை - எள்ளல்

வாழ்க்கை பல சுவைகளைக் கொண்டது. இன்பமும் துன்பமும் கூட இருவகைச் சுவைதான். மனித வாழ்க்கையே கலை வடிவம் பெறுகின்றபொழுது அவற்றுள் எட்டு வகையான சுவைகளைச் சேர்த்து வாழ்க்கையை முழுமை பெறச் செய்கின்றனர். அச்சுவைகளின் வெளிப்பாடுகளை மெய்ப்பாடுகள் என்று வகைப்படுத்துவார் தொல்காப்பியர்.

> "நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென
> அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப"[32]

என வகைப்படுத்துவார்.

இம் மெய்ப்பாடுகளுள் தலையாயது நகை எனப்படும் நகைச்சுவையாகும். உயிரினங்களில் மனிதன் மட்டுமே சிரிக்கத் தெரிந்தவன் என்பதும் நகைச்சுவையின் தலைமைக்குக் காரணமாகலாம். இந்தச் சுவையின் தோற்றத்துக்குரிய களங்களாக 'எள்ளல் இளமை பேதமை' என அமைப்பார் தொல்காப்பியர். பிறரின் செயல்களைக் கண்டும் அச்செயல்களில் புலப்படும் அறியாமையைக் கண்டும் தோன்றும் சிரிப்பினை எள்ளலுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

---

32. **தொல்காப்பியம், பொருளதிகாரம்,** மெய்ப்பாட்டியல், 251.

தமிழக நாட்டார் வழக்காற்றில் இடம்பெற்றிருந்த ஒரு கதையைத் தமது சமய எதிரிகளாக மாறிய லூத்தர் சபையினரோடு ஒப்புமைப்படுத்திய வகையில் வீரமாமுனிவரால் புதிய வடிவம் பெற்றதே 'பரமார்த்த குருவின் கதை' என்னும் நகைச்சுவைத் தொகுப்பாகும்.

சராசரி அறிவுக்கும் குறைவான அறிவை உடைய ஒரு குரு, முற்றிலும் சிந்திக்கும் ஆற்றலே இல்லாத ஐந்து சீடர்கள் - இவர்களின் ஒவ்வொரு செயலும் பேதமையின் எடுத்துக்காட்டுகள்; நகைச்சுவைக்குரிய ஊற்றுக்கண்கள். கிறித்தவ சமயத்தில் மாபெரும் புரட்சியாளராகத் தோன்றிய லூத்தரைப் பரமார்த்த குருவாகவும் லூத்தரைப் பின்பற்றியோரைப் பரமார்த்த குருவின் சீடர்களாகவும் அவர் படைத்திருப்பது தொல்காப்பியர் குறிப்பிடும் நகைச்சுவை பற்றிய இலக்கணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

கதை சொல்லும் உத்தியும் கிராமத்துப் பாணியில் தன்னைச் சுற்றி அமர்ந்திருக்கும் பேரப்பிள்ளைகளுக்குப் பாட்டி சொல்லும் பாங்கில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்குச் சான்றாக,

> "பரமார்த்த குருவென் றொருவ ரிருந்தார். அவர் ஏவினதுக் கூழியம் செய்ய மட்டியும் மடையனும் பேதையும் மிலேச்சனும் மூடனு மென்றைவர் சீஷராக விருந்தார்கள்.
>
> இவர்க ளைவருங் கால்நடையாக மற்றைச் சீசர்களை விசாரிக்கக் கிராமங்கள் வழியாய்ப் போய் மடத்துக்குத் திரும்பி வருகையில் ஒருநாள் மூன்றாம் சாம நேரத்திலே ஓர் ஆற்றங்கரைக்குச் சென்றார்கள்"[33]

எனவரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

ஏட்டில் எழுதப்பெறாது மக்கள் வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வந்த நாட்டார் இலக்கியங்களுக்கு ஒரு சிறப்பைத் தேடித் தந்த பெருமை நா. வானமாமலையைச் சாரும். அவர்தாம் வாய்மொழியாக வந்த பாடல்களையும் கதைகளையும் அச்சிட்டு நூல் வடிவாக்கி, அவற்றிலுள்ள

---

33. வீரமாமுனிவர், **பரமார்த்த குருவின் கதை**, ப. 3.

ஆய்வுத் தளங்களை எல்லாம் அறிஞர் உலகம் காணச் செய்தவர்.[34] ஆயினும் அந்தத் துறையில் வானமாமலைக்கும் ஏறத்தாழ 250 ஆண்டுகளுக்கு முன்னே தம் பங்களிப்பைச் செய்த பெருமை வீரமாமுனிவரைச் சாரும். பரமார்த்த குருவின் கதை அந்த வகையில் ஒரு முன்னோடியாகும்.

உரைநடை

இலக்கிய இலக்கணங்களுக்கு அமைந்த உரைநூல்களைத் தவிர்த்துத் தமிழில் எழுந்த வேறு உரைநடை நூல்கள் இல்லை. கிறித்தவத் துறவிகள் தமிழில் உரைநடை நூல்கள் எழுதியது வரையிலும் இந்த நிலையே தொடர்ந்தது. இன்றைக்கு அச்சு வடிவில் கிடைக்கும் தொடக்க காலத் தமிழ் உரைநடை நூல்களின் அமைப்பை நோக்கக் கிறித்தவப் பாதிரியார்களுக்கு முன்பும் தமிழில் உரைநடை நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. ஆயினும் கிறித்தவத் தமிழ்த் துறவிகளின் கன்னி முயற்சியால் (Maiden attempt) எழுந்த இந்நூல்கள் தவழ்ந்த குழந்தையின் 'நடை பயிலும்' முயற்சியைப் போல அவ்வுரைநடை நூல்கள் அமைந்துள்ளன.

புள்ளி பெறாத ஒற்றெழுத்துகள், முற்றுப்பெறாத தொடர்கள், பொருள் வகைக்கும் சொல் வகைக்கும் பொருத்தமில்லாத மொழிஆக்க முயற்சிகள் ஆகியவற்றோடு தமிழ் மக்கள் எதிர்கொண்ட புதியதொரு சமயத்திற்குக் கொள்கை விளக்கங்களாக அமைந்த அந்நூல்கள், எந்த வகையில் மக்களைச் சென்றடைந்தன என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும். இருப்பினும் தற்காலத் தமிழ் உரைநடையின் வளர்ச்சிக்கு அக்கிறித்தவத் துறவிகள் எழுதிய உரைநடை நூல்களே முன்னோடிகள் என்பதில் ஐயமில்லை.

அருட்தந்தை என்றிகஸ், தத்துவப் போதகர் ஆகிய இருவர் எழுதிய நூல்களை அடுத்தும் வீரமாமுனிவர் எழுதிய நூல்கள் ஒரு வெளிநாட்டுத் துறவி எழுதிய நூலைப் போல அல்லாது இந்த மண்ணிலே பிறந்து வளர்ந்து இம்மண்ணுக்குரிய இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுணர்ந்து தேர்ந்து தெளிந்த ஒரு தமிழறிஞரின் உரைநடையை ஒத்துள்ளது.

---

34. க. நெடுஞ்செழியன், நாட்டார் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரை.

இவருடைய உரைநடையில் மெய்யெழுத்துகள் புள்ளி பெற்றன. கிறித்தவ மூலநூலில் இருந்த பெயர்கள் தமிழ் மரபுக்கேற்பவும் மூலமொழியின் பொருள் தன்மைக்கேற்பவும் மொழியாக்கம் செய்யப் பெற்றன. கம்பனைப் போன்று காவியம் படைக்கும் மொழி ஆளுமையைக் கொண்டுள்ள வீரமாமுனிவரிடம் உரைநடை வழக்கு, செய்யுள் வழக்கு, நாட்டார் வழக்கு (Folk Elements) ஆகிய மூன்று கூறுகளும் ஒருங்கிணைந்து வெளிப்படுகிற பாங்கு சிறப்புக்குரியது. அவருடைய கவிதை நூல்களைச் செய்யுள் மரபுக்கும், வேதவிளக்கம், பேதக மறுத்தல் முதலானவற்றை உரைநடை மரபிற்கும் பரமார்த்த குரு கதையை நாட்டார் வழக்காற்றியலுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் காட்டலாம்.

இருப்பினும் இவ்வுரைநடை நூல்களிலும் தமிழ்ச் செய்யுளின் வீச்சு தூக்கலாக இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இயல் ஐந்து

நூல்களின் அமைப்பும் நடை நலனும்

இயல் ஐந்து
நூல்களின் அமைப்பும் நடை நலனும்

உரைநடை சிந்தனைக்கு உருவம் படைக்கிறது. உரைநடையில் அறிவைப்பெறமுடிகிறது. இதிலிருந்து வரும் ஒலி கூடியும் குறைந்தும் செறிந்தும் நெகிழ்ந்தும் மாறுபட்டுக் கொண்டே இருக்கும். உரைநடையில் அமைந்திருக்கும் இத்தன்மைகளே உரைநடையின் சிறப்பியல்புகளாகும். உரைநடை நினைந்து நினைந்து திட்டமிடப்பட்ட நிலையிலேயே எழுதப்படுகிறது. எனவே இதனைத் 'திட்டமிட்ட வெளிப்பாடு' எனவும் கூறலாம்.

நடை

நடை இயல் என்பதை ஆங்கிலத்தில் Stylistics என வழங்குகின்றனர். 'நடை' குறித்து அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விளக்கம் கிடைக்கவில்லை. எனினும் 'கரு-உரு' ஆகியவற்றுக்கிடையே காணப்படும் உறவு எத்தகைய உத்திகளால் பின்னப்படுகிறதோ அவ்வுத்திகளின் ஒட்டுமொத்தத்தை நடைக் கூறுகளாக ஏற்றுக்கொள்ளலாம்.[1]

படைப்பாளன் எதை உணர்த்த வேண்டுமென்று நினைக்கின்றானோ அது படிப்பவரின் மனத்தில் ஆழமாகப் பதிவதற்கு உதவுவது நடை. நடை என்பது ஆசிரியர் ஒருவரின் தனிப்பட்ட சிந்தனை என்று ஜே. எம். முர்ரியும் பொருத்தமான இடங்களில் பொருத்தமான சொற்கள் அமைவது எனச் சுவிப்ட்டும் கூறுகின்றனர்.[2] ஆசிரியரின் தனித்தன்மையால் விளையும் வேறுபட்ட கருத்து வெளிப்பாடே நடையென வால்டேர் குறிப்பிடுகிறார்.[3] ஆசிரியரின்

---

1. சு. சக்திவேல், **நூறாண்டு தமிழ் உரைநடை**, ப.13.
2. **மேலது**, ப.14.
3. **மேலது**, ப.14.

ஆளுமையைக் காட்டுவது (Personality) நடையென ஹட்சன் குறிப்பிடுகிறார்.[4] ஆசிரியரின் நடையே அவருடைய இயல்பைக் காட்டும் உரைகல்லாகும்.[5]

மேற்காட்டிய விளக்கங்களின் பின்புலத்திலிருந்து வீரமாமுனிவரின் நூல்களில் காணப்பெறும் நடையின் தன்மைகளை ஆராய்வது பயனுடையதாகும். செய்யுள் வழக்குச் செல்வாக்குப் பெற்றிருந்த ஒருகாலச் சூழலில் வெளிநாட்டிலிருந்து சமயப் பணிக்காகத் தமிழ்நாடு வந்த ஒருவர் தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்து - பேசி - எழுத முற்படும்போது காணப்பெறும் எந்தக் குறைபாடும் வீரமாமுனிவரின் உரைநடையில் காணப்பெறவில்லை. அதுமட்டுமல்லாது தமிழ் மொழியின் மரபுவழிப்பட்ட இலக்கணக் கூறுகள் அனைத்தும் உரைநடையில் புதுப்பொலிவு பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அந்த வகையில் அவர் எழுதிய நூல்களின் அமைப்பையும் உத்திகளையும் இவ்வியல் ஆராய்கின்றது. இவ்வியல் மா. இராமலிங்கம் எழுதிய 'புதிய உரைநடை' எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு ஆராய முற்படுகிறது.

வேத விளக்கம் - பாயிரத்தின் சிறப்பு

பாயிரம் பற்றி நன்னூலார்,

"நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்"[6]

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆயஎண் பொருளும்
வாய்மைக் காட்டல் பாயிரத் தியல்பே"[7]

---

4. ச. வே. சுப்பிரமணியன், ச. சிவகாமி (ப. ஆர்.), **தமிழ் இலக்கியக் கொள்கை**, ப. 13.
5. **மேலது**, ப. 13.
6. பவணந்தி முனிவர், **நன்னூல்**, நூ. 3.
7. **மேலது**, நூ. 47.

என விளக்குவார். பாயிரம் இல்லாது நூல் அமையக் கூடாது என்பது நன்னூலாரின் கருத்து மட்டுமின்றித் தமிழ் மரபின் இலக்கணமாகவும் அமைந்துள்ளது என்பதைத் தொல்காப்பியம், திருக்குறள் முதலான நூல்களின் வாயிலாகவும் அறியலாம். இந்த இலக்கணம், கிறித்தவ சமயத்தைப் பற்றி விளக்கும் வேதவிளக்கத்தில் அதுவும் வெளிநாட்டிலிருந்து வந்து தாம் சார்ந்த சமயத்தைப் பரப்பும் நோக்கில் ஒரு பாதிரியார் எழுதிய நூலில் - பின்பற்றப்பட்டுள்ளது தமிழ் இலக்கண மரபின் சிறப்பிற்குச் சிறந்த சான்றாகும்.

லுத்தரன் சபையின்மீது ஆறாத சினமும் கத்தோலிக்கத் திருச்சபையின்மீது மாறாத பற்றும் கொண்டுள்ள வீரமாமுனிவரின் உணர்வுகள் அவருடைய பாயிரத்தில் முழுமையாக எதிரொலிக்கின்றன. கத்தோலிக்கத் திருச்சபையை வைரத்துக்கும் லுத்தரன் திருச்சபையைக் கண்ணாடி வளையலுக்கும் ஒப்பிட்டு அவர் குறிப்பது வருமாறு :

> "வச்சிரமணியும் வளையலோடு ஒன்றிற்கொன்றை யெதிர்பட வைத்துப் பார்த்த அளவிலே சொல்வாருமின்றி வேற்றுமை தோன்றுமென்றாலும் பிரித்துத் தனியே பார்க்குமிடத்துச் சிலர் மயங்குவாரென்றஞ்சி மெய்யான வேதக்குணமும் முறையும் விளங்கச் சிறிது நியாயங்களை இங்கே சொல்லிக் காட்டுவோம்"[8]

என்று வேத விளக்கத்தில் தாம் கூறப்போகும் கருத்தைப் பாயிரத்திலேயே விளக்குகின்றார்.

பாயிரத்தில் அறியலாகும் வரலாற்றுச் செய்தி

இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவராக விளங்கியவர் தாமஸ் ஆவார். இவரைத் தமிழ் மரபுப்படித் தோமையார் என்பர். இயேசுவின் மறைவை ஒட்டி அவர் சீடர்கள் பலரும் பல நாடுகளுக்கும் சென்றுள்ளனர். அந்த வகையில் தோமையார் தமிழ் நாட்டிலுள்ளதும் இன்றைய சென்னை மாநகரின் ஒருபகுதியாக விளங்குவதுமான மைலாப்பூரில் தங்கிச் சமயப் பரப்பலை

---

8. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, பாயிரம், ப. 1.

மேற்கொண்டார் என்பது வரலாற்றுண்மையாகும். அவருடைய நினைவாகவே மைலாப்பூரிலும் பறங்கிமலையிலும் நினைவிடங்கள் உள்ளன.

இவரைத் தொடர்ந்து கத்தோலிக்கத் திருச்சபையினர் பலர் அயல்நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்துள்ளனர். ஆயினும் தமிழ் நாட்டுக் கிறித்தவ சமய வரலாற்றில் தாமசைப் போலச் சிறப்பிடம் பெற்றவர் சேவியர் எனப்படும் சவேரியார் ஆவார். இவ்விருவரும் வீரமாமுனிவருக்கு முன்னோடிகளாக மட்டுமல்லாமல் அவரால் போற்றத்தக்க சிறப்புக்குரிய வழிகாட்டிகளாகவும் திகழ்ந்துள்ளனர். இவர்கள் வளர்த்த திருச்சபையே ஆதித் திருச்சபை என்பதாகும். இயேசுவின் மறைவை ஒட்டிய காலத்திலிருந்தே தமிழகத்தில் நிலைத்து வளர்ந்து வந்த திருச்சபை என்பதையும், தற்போதும் வளர்ந்து வருகிற திருச்சபை என்பதையும், லுத்தரன் சபை தற்காலத்தில் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து பிரிந்து தமிழகத்திற்கு வந்த சபை என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளுமாறு அமைத்துள்ள விதம் சிறப்பிற்குரியது. இவ்வளவு சிறப்புப் பெற்ற வீரமாமுனிவரின் உரைநடை நூல்களின் அமைப்பு முறை எப்படி அமைந்திருக்கிறது, அவற்றுள் பொதிந்துள்ள அணிநலன்களின் தன்மைகள் எப்படியுள்ளன என்பதையும் காண்பது பொருத்தமாகும்.

உரைநடையின் அணிநலன்கள்

எழுதுவோன் தன் எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும். தாய் தன் குழந்தைக்குத் தலைவாரி விடுகிறாள்; பூச்சூடுகிறாள்; முகச்சுண்ணம் பூசித் திலகம் இடுகிறாள்; தைத்து வைத்திருக்கும் விதவிதமான சட்டைகளைப் போட்டும் அழகு பார்க்கிறாள். அதைப்போலவே எழுதுவோனும் அணிநலன்களால் தன் கருத்துகளை அலங்கரிப்பதும் இதுபோன்றதேயாகும். அணிநலன்கள் செய்யுளுக்கு மட்டுமே உரியன என்றும் உரைநடைக்கு அவற்றுடன் தொடர்பில்லை என்றும் எண்ணுதல் தவறு. மனித மனத்தில் கணந்தோறும் ஊற்றெடுக்கும் பலவிதமான உணர்ச்சிகளை எழுத்து வடிவில் காட்ட அணிநயம் கொண்ட மொழிநடையே ஏற்ற கருவியாகும்.[9]

---

9. மா. இராமலிங்கம், **புதிய உரைநடை**, ப. 88.

இக்கால உரைநடை அணிகளை இது கவிதைக்குரியது என்று ஒதுக்கிவிடவில்லை. முடிந்ததை உண்டு செரித்துத் தன்மயமாக்கிக் கொள்ளும் குடல் போல, உரைநடையும் சில அணிகளைத் தன்மயமாக்கிக் கொண்டிருக்கிறது. 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும் ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும் போல்' உரைநடையின் அழகுக்கு அணிகள் மேலும் அழகூட்டுகின்றன.[10] உண்மையைத் துலக்கிக் காட்டும்போதும், தேவையான உணர்ச்சிகளை அளவோடு தூண்டும்போதும், மேலும் மேலும் அழகூட்டுகின்றன. பயன்படுத்துவோரின் நோக்கத்திற்கு ஏற்பவே அணிகள் வரவேற்கப்படுகின்றன. அல்லது ஒதுக்கப்படுகின்றன. பொருள்களின் இயல்பான தன்மையை அறிந்து தெளிதற்கு உவமைகள் உதவுகின்றன.

உவமை (Simile)

'கண் பார்த்தால் கை செய்யும்' எனும் முதுமொழிக்கேற்ப ஒன்றைப் பார்த்தால் அதனைப் போலச் செய்யும் இயல்பும், பொருள்களை ஒப்பிட்டுப் பார்த்து உள்ளத்தில் அமைத்துக் கொள்ளும் தன்மையும் மானிட உயிரின் சிறப்பியல்புகளாகும். தெரிவிக்க விரும்பும் பொருளைத் தெரிந்த பழைய பொருளோடு போல, புரைய என்பன போன்ற இணைப்புச் சொற்களால் ஒப்பிட்டு விளக்குவதே உவமையாகும்.[11] இதனால் பயன் என்ன எனின் 'புலன் அல்லாத புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்' ஆகும் என்பார் இளம்பூரணர்.[12]

உண்மையை உணர்த்தவும் உணரவும் உவமை ஒரு சிறந்த கருவியாகும். அறியாதவற்றை அறிவிக்கவும் அறிந்தவற்றைத் தெளிவாக்கவும் அறிவார்ந்த சான்றோர் உவமை நெறியை மேற்கொள்வர். மெய்யறிவு (நிகழ்ச்சிகளை)க் கருத்துகளைத் தெளிவாகப் புலப்படுத்த உலகியல் சார்ந்த நிகழ்ச்சிகளை ஒப்பிட்டு உணர்த்துவர். அவ்வாறே வீரமாமுனிவரும் உணர்த்துகின்றார்.

---

10. மா. இராமலிங்கம், **புதிய உரைநடை**, ப. 89.
11. சிங்கார வடிவேலன், **சங்க இலக்கிய உவமைகள்**, ப. 29.
12. இளம்பூரணர் உரை, **தொல்காப்பியம் பொருளதிகாரம்** உவமையியல்.

ஐம்பூதங்களின் உவமை

வெறுமையாய் இருந்த பகுதியை உலகமாக மாற்றினார் இறைவன்.[13] அதில் விண், மண், தீ, காற்று, நீர் ஆகிய ஐம்பூதங்களுக்கு முதன்மையிடத்தை அளித்தார். இவற்றுள் தீ, காற்று, நீர் ஆகியவை மக்களுக்கு உதவுவதுடன் மற்றப் பொருள்களை அழிக்கும் தன்மையையும் பெற்றிருந்தன. ஆனால் அப்பொருள்களாலும் அழிக்கமுடியாத தங்கம், மலை, சூரியன் முதலான பொருள்கள் உலகில் இருக்கின்றன. தீயினால் தங்கம் ஒளி பெறும்; மேகத்தால் மாசடைந்த பரிதி மாசு நீங்கியவுடன் ஒளி மிகுதியாகி வெப்பமும் அதிகமாகும். அதுபோலத் தீயாகிய லுத்தரன் சபையார் தங்கமாகிய கத்தோலிக்கத் திருச்சபை பற்றிய குறைபாடுகளைக் கூறும் தீயினால் தங்கத்தில் இருந்த மாசு நீங்கி ஒளி பெறுவது போலக் கத்தோலிக்கத் திருச்சபையில் சீர்திருத்தம் ஏற்பட்டுத் திருச்சபை ஒளி பெறுகிறது. பரிதியைச் சூழ்ந்திருந்த மேகம் கலைந்தவுடன் அதனுடைய ஒளியும் வெப்பமும் அதிகமாவது போலக் கத்தோலிக்கத் திருச்சபையில் சீர்திருத்தம் எற்பட்டவுடன் அதன் புகழும் செயல்முறைகளும் வலுப்பெறுகின்றதை,

> **தீயின் முகத்து அழியாத தங்கத்தைப் போல**
>
> **காற்றின் முகத்து அசையாத வைரமலையைப் போல**
>
> **மேகத்து அழுக்கடையாத சூரியனைப் போல**[14]

என்னும் உவமைகள் விளக்குகின்றன.

இவ்வுவமையின் வாயிலாகக் கத்தோலிக்கத் திருச்சபையானது எவ்விதக் குற்றச்சாட்டுகளாலும் பாதிக்கப்படாது என்பதை உறுதிப்படுத்தக் காணலாம்.

இலக்கிய உவமை

மனிதன் மனம் நிலையற்றது. வாழ்கின்ற மனிதன் காலத்திற்கேற்பக் கருத்துகளை மாற்றிக் கொள்கிறான். அவற்றுள் சில கருத்துகள் பதிந்த சுவடு

---

13. **விவிலியம் பழைய ஏற்பாடு**, *ஆதியாகமம் 1 : 1.*
14. *வீரமாமுனிவர்*, **வேத விளக்கம்**, *ப. 18.*

தெரியாமல் அழிந்து விடுகின்றன. சான்றாக "உருவ வழிபாடு' நடத்தலாம் நடத்தக்கூடாது என்ற கருத்து காலந்தோறும் மாறிக்கொண்டே இருக்கிறது. இதற்கு உவமை கூறவந்த வீரமாமுனிவர்,

நீர்மேல் குமிழி போல
ஒளிமுன் இரவு போல
மெய்முன் பொய்மொழி போல[15]

மறைந்து விடுகிறது என்கிறார். இந்த உருவ வழிபாட்டின் சிறப்பை அறியாதவர்களைப் பற்றிக் கூறும்போது 'நாய் பெற்ற தெங்கம்பழம்' எனும் கருத்தைத் தழுவி,

முழுத்தேங்காயைக் கடித்தது போல[16]

எனும் உவமையை எடுத்தாள்கிறார்.

விலங்குகள் உவமை

மனித சமுதாயம் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த நிலையாக ஓரிடத்தில் வாழத் தொடங்கியபோது சிறந்த சமுதாயத்தை உருவாக்க ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்டு வாழ்ந்தனர். அப்போது தங்களை நெறிப்படுத்த ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்து வாழ்ந்தனர். அவ்வாறே கிறித்தவ சமுதாயமும் ஒழுக்கத்தையும் கட்டுப்பாடுகளையும் கொண்டு தங்களை நெறிப்படுத்த ஒரு தலைவரையும் கொண்டு சிறப்பாக இயங்கி வந்தது. அவ்வாறு வாழ்ந்த சமுதாயத்திலிருந்து பிரிந்து சென்ற லுத்தர் சபையினர் ஒழுங்கும் கட்டுப்பாடும் அற்றுத் தலைவருமின்றி மனம் போன போக்கில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வாழ்க்கை கட்டுப்பாடற்றது எனக் கருதும் வீரமாமுனிவர்,

பாகனை இழந்த மதயானை போலவும்
கடிவாளம் இழந்த குதிரை போலவும்

---

15. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 76.
16. **மேலது**, ப. 25.

சுக்கான் கழன்ற மரக்கலம் போலவும்

மதிகெட்ட பித்தரைப் போலவும்[17]

எனும் உவமையின் வாயிலாக விளக்குகின்றார்.

விவிலிய உவமை

விவிலியத்தை அவரவர் படித்து அவரவர் அறிவுக்கேற்பப் பொருள் கொள்ளலாம் என்று லுத்தரன் திருச்சபை கூறக் கத்தோலிக்கத் திருச்சபையோ விவிலியத்தை நன்கு கற்று அறிந்தவர்களே பொருள் கூறவேண்டும் என்கிறது. இதற்கு உவமை கூற வந்த வீரமாமுனிவர் விவிலியப்பகுதியாகிய,

"கூர்த்த முனையுள்ள கத்தியைக் கொடுக்க மாட்டாத தோப்பனாரைப் போல"[18]

எனும் கருத்தை உவமையாக்கிக் காட்டுகிறார்.

உடல் நோயுற்றவருக்கு மருந்து அமிழ்தாகி உடலைக் காப்பது போல மனத்துயரத்தால் வாடுபவர்களுக்குத் துயர் போக்கி உயிர் தரும் அமிழ்தமாக நற்செய்தி விளங்குகிறது. இந்த நற்செய்தியை லுத்தரன் சபையார் தமிழில் மொழி பெயர்த்தபோது சிறுசிறு தவறுகள் நிகழ்ந்தன. இந்தத் தவறுகள் உயிரைக் காக்கும் அமிழ்தமாகிய மருந்துடன் கலந்து நஞ்சாகி உயிரைக் கொல்கிறது என்பதை,

"இனிய அமுதிலே நஞ்சினைக் கலந்தது போல"[19]

என்ற உவமை விளக்குகிறது.

---

17. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 84.
18. **மேலது**, ப. 233.
19. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 233.

உவமைகளை வினாக்களாக்கும் முறை

வேதியர் தொழிலுக்கு வேதியர்கள் தங்களை நன்கு ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதற்காக உவமைகளை வினாக்களாக்குகிறார்.

எவ்வித மரமும் எவ்வகைப் புல்லும் முளைத்துப்

பக்குவமாகு முன்னே சிறுமையில் காய்ப்பதுண்டோ?

இறகு முளைத்துப் பருவமுற்றா முன்னே

இளம்பறவை கூட்டைவிட்டுப் பறக்கத் துணியுமோ?

பறந்தாலும் பருந்துக்கு இரையாகுமொழிய

அதில் ஒன்றாகிலும் பிழைத்துப் பறக்குமோ?

சூல்நாள் முடியுமுன்னே பிறந்த பிள்ளை

பெரியதாவது காண்பாருண்டோ?

ஈரச்சுவர்மேல் சுவர்வைத்தால் வீடு உயருமோ?[20]

இப்படியெல்லாம் பருவத்திலாக வேண்டும் என்றிருக்க இந்தத் தேவதொழிலிலே மாத்திரம் பருவமும் ஆயத்தமும் தேவையில்லை என்று நினைப்பார்களா என்ன? மேலும் வேதியர் தன் வாழ்க்கையில் வழுவாமல் நடக்க வேண்டும்; தானே வழுவினவளவில் வழுக்குகிறவர்களைத் தாங்க இயலுமோ என்பதை,

உளுத்த கொம்பு முட்டுக் காலாகுமோ?

வற்றின குளம் வயலுக்குத் தண்ணீர்

தந்து செந்நெல் விளைவிக்கக் கூடுமோ?

நெய்யும் திரியுமின்றி அவிந்த தீபம் புறத்து

ஒளிதந்து பிரகாசிப்ப தெப்படி?[21]

என்று உவமையை வினாவாக்கி வேதியர்களின் ஒழுக்க வாழ்க்கையை வலியுறுத்துகிறார்.

---

20. வீரமாமுனிவர், வேதியர் ஒழுக்கம், ப. 28.
21. மேலது, ப. 43.

ஒருவமையில் குறை கண்டு பிறிதொரு உவமையால் விளக்குதல்

வேதியர்கள் பிறருக்கு உதவும்போது தன்னைக் காக்க வேண்டும் என்பதற்காக,

> "தான்கெட்டழிந்து மற்றோர்க்கு ஒளிதரும் விளக்கைப் போல் இராமல், தனக்கு ஒரு கேடுமின்றி உலகெல்லாம் விளங்கும் சூரியன் கதிரைப் போலிருக்கவும்
>
> எவர்க்குந் தெண்ணீர் தந்து தனக்குச் சேறுந் தூர்வையும் வைத்துக் கொள்ளும் கிணறு போல் ஆகாமல் குறையாததுந் தெளிவு மாறாததுமாகிய தண்ணீருள்ள சுனை ஆறு குளங்கள் போலவும்"[22]

வாழ்ந்து தன் ஆத்துமத்து ஒரு குறையும் வராமல் மற்றவர்களைக் காக்க வேண்டும்.

ஒரு பொருளை விளக்கப் பல உவமைகளைக் கூறல்

கல்வியறிவில்லாத உபதேசிக்கு,

> "உழவறியாத குடியானவனும் ஆயுதம் பிடிக்கத் தெரியாத சேவகனும் கண் தெரியாத சித்திரக்காரனும் கை வழங்காத சிலம்பக்காரனும் சப்பாணிக் கூத்தரும் ஊமைத்தூதரும்"[23]

ஒப்பாகுவர் என்கிறார்.

உவமையணியைப் போலவே முற்றுருவக அணியையும் வஞ்சப்புகழ்ச்சி அணியையும் வீரமாமுனிவர் எடுத்தாள்கிறார். 'லுத்தேரினத்தார் இயல்பு' எனும் நூலில் கையாளப்பெற்ற இவ்விரண்டு அணிகளைப் பற்றியும் 'தமிழ் உரைநடை வரலாற்றில் வீரமாமுனிவரின் இடம்' எனும் இயலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அணிகளைக் கூறி உரைநடையை அழகுபடுத்தியது

---

22. வீரமாமுனிவர், வேதியர் ஒழுக்கம், ப. 34.
23. மேலது, ப. 30-31.

போலவே அணியியல் (Rhetoric) என்னும் உத்தியைப் பயன்படுத்தி மேலும் அழகூட்டுகிறார். அவ்வுத்தியை நூலில் பயன்படுத்துவது பற்றிப் பூரணச்சந்திரன்,

> "அணியியல் (rhetoric) என்பது கருத்தேற்பு உத்திகளைச் சொல்லித் தருவது. அணியியலின் ஒருபகுதியாகவே நடையியலிலும் கருதப் படுகிறது"[24]

எனக் கூறுகிறார்.

தம் கருத்துகளைப் பிறர் ஏற்குமாறு எழுதப் புகுந்த வீரமாமுனிவர் தம் நூல்களில் அணியியல் உத்தியைக் கையாண்ட முறை சிறப்பானதாகும். சொற்பொழிவுத் தன்மைகளாக வரையறுக்கப்பட்ட மேடைப் பேச்சு சட்டப் பேச்சு, புகழ்தல் / இகழ்தல் ஆகிய மூன்று தன்மைகளும் அணியியல் உத்தியை முழுமையாக ஏற்கின்றன.[25] சொற்பொழிவில் பயன்படுத்தும் தொடக்கம், வரிசைப்படுத்தி அமைத்தல், நடைவளம் ஆகியவை உரைநடை நூலுக்கும் பொருந்தும் என்று பூரணச்சந்திரன் குறிப்பிடுகிறார்.[26] அந்த உத்திகளையும் வீரமாமுனிவரின் உரைநடை நூல்களில் காணலாம்.

வருணனை நடை

வருணனை என்பது புலன்களால் உணர்வனவற்றை அல்லது புலன்களின் வாயிலாக உணரும் புறக்காட்சிகளைச் சொற்களில் மொழி பெயர்த்துக் காட்டுவதேயாகும்.[27] வீரமாமுனிவர் ஒருவருக்கு உடலெங்கும் கொப்புளம் உள்ளதைப் பார்த்தார். அக்காட்சியை,

> "ஒருவன் யாரும் அறியாத பிணியைக் கொண்டு தலைநிங்கலாக உடலில் எங்கும் ஒருமைக் கொப்புளம் புறப்பட்டு நாவற்பழங்களைப் போல எங்கும் தொங்கி ஆடாநிற்க மிளகு போலவும் பாக்குப் போலவும் எலுமிச்சங்காய் போலவும் விளங்காய் போலவும் பற்பல பருமத்துத்

---

24. க. பூரணச்சந்திரன், பத்திரிகை, தலையங்கம், கருத்துரைப்பு, ப. 214.
25. **மேலது**, ப. 214.
26. **மேலது**, ப. 214.
27. மா. இராமலிங்கம், **புதிய உரைநடை**, ப. 116.

தோன்றினதாம். அதுகளில் சில கொப்புளங்களைக் கீறினவிடத்துத் திரளாயிரத்தமும் சலமும் சாமையரிசி போலவும் புறப்பட்டதாம்"[28]

என விவரிக்கின்றார். இவ்வருணனை கற்பனையான ஒன்றே. எனினும் சொல்லும் உத்தியால் படிப்பவர் ஒவ்வொருவரின் மனத்திலும் அந்த நோயாளியின் காட்சியைப் பதிய வைக்கும் திறம் எண்ணத்தக்கதாக அமைந்துள்ளது.

நாடக நடை / உரையாடல் நடை

ஒரு செய்தியை அல்லது பொருளைக் குறித்து இருவர் உரையாடும்போது அச்செய்தி - பொருள் - முழு விளக்கம் பெறும். நாடகத்தின் வெற்றிக்கு இவ்வுத்தி மிகவும் அடிப்படையாகும். இறையனார் களவியலும் இவ்வுத்தியை மாணவர் - ஆசிரியர்கட்கு இடையே நடக்கும் உரையாடல் போல் அஃதாவது வினா விடை வடிவில் பின்பற்றியுள்ளது. அதே உத்தியை வீரமாமுனிவரும் வாமன் சரித்திரம் எனும் நூலில் பின்பற்றியுள்ளதைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

வாமன் - பற்றிய காமத்தீயை அவிப்பது எனக்கு அரிதையா.

முனிவர் - அரிதென்றால் அனுதினம் அருகருகு அணுகிச் சேர்வானேன். நித்தம் மேன் மேலும் ஆசை என்கிற விறகுகளைக் குவித்து வேகும் தீயைத் தூண்டித் தூண்டிக் கிளப்புவானேன்.

வாமன் - பெண்ணினத்தாருக்கு ஆண்டவர் மலர்ந்த முகத்தில் எழுதின அழகு மிகுதியால் அதைக் கண்டபோது ஆசை வெறுப்பது அரிதையா.

முனிவர் - காஞ்சிரம்பழம் மிகச்சிவந்த அழகானாலும் உண்பாயோ என்ன.

வாமன் - நெடுநாள் வேர்க்கொண்ட ஆசையுடனே பிடுங்கி எறிகிறது எளிதோ[29]

---

28. வீரமாமுனிவர், **வேத. விளக்கம்**, ப. 246.
29. **மேலது**, ப. 26.

உருவகம்

உவமை அணியில் உவமான உவமேயங்கள் வேறு வேறானவை என்ற எண்ணம் அகல்வதில்லை. உருவகத்தில் இரண்டும் ஒன்றே என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. எனவே உவமையின் செறிவார்ந்த வடிவமே உருவகம் ஆகும்.

உவமையும் பொருளும் வேற்றுமை ஒழுவித்து
ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்[30]

என்பது தண்டியாசிரியர் கூற்று. 'நிலவு முகம்' என்பதைச் சற்றே மாற்றி 'முகநிலவு' என்று கூறுவதால் புதிய அழகு தோன்றுகிறது. 'நிலவுமுகம்' என்று கூறும்போது இரண்டு சொற்களாக விட்டிசைப்பதையும் 'முகநிலவு' என்னும்போது ஒரு சொல்லாகி இரண்டினைச் சார்ந்த தனித்தனி உணர்ச்சிகளும் ஒருங்கிணைந்து ஆற்றல் மிக்க உணர்ச்சியாய் வளர்கின்றன. உவமைகளைவிட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றன.[31] இவ்வாறு கூறப்பெறும் உருவக அணியை வீரமாமுனிவர் பரவலாகக் கையாண்டுள்ளார். சான்றாக,

> "மீத்திசை நின்று கீழ் வீழ்ந்த ஒளிமீன் - என்பது ஆசையென்னும் மாசுள்ள பூவுலகின் மேல் எழுந்து வானத்து இலங்கிய மீனைப் போல ஒளி பெற்றவனாய் இடறிக் கீழே இழிவுற விழுந்தவன் லுத்தேர்தானல்லோ"[32]

> "லுத்தேர் திறந்த நரகக்குழியினின்று எழுந்து மண்டின இருட்புகைப் பிறப்பாய் எண்ணிறந்த அடர்ந்து மொய்த்த பதங்கமாகிய விட்டில் பறவைகளாவது ஏதெனில் சொன்ன லுத்தர் தன் வாய்திறந்து போதித்த இருள்சேர் மதத்தில் உட்பட முளைத்த லுத்தேரானிகள் என்பது நிச்சயந்தானே"[33]

---

30. தண்டியலங்காரம்.
31. மா. இராமலிங்கம், புதிய உரைநடை, ப. 92.
32. வீரமாமுனிவர், லுத்தேர் இனத்து இயல்பு, ப. 9.
33. மேலது, ப. 13.

என்னும் பகுதியைக் காட்டலாம்.

செந்தமிழ் நடை

கற்றோர்களே புரிந்து கொள்ளக்கூடிய நடை செந்தமிழ் நடையாகும். இந்நடை ஆசிரியரின் மொழியறிவைப் புலப்படுத்தும் சான்றாகவும் விளங்குகிறது.

> "ஊரண்டையிலிருக்குஞ் சுடுகாட்டுக்குப் போய் அங்கே உருண்டு உருள எறிந்த காபலங்களை உற்றுப்பார்க்க - உன்னை மயக்குவிக்கும் முகம் அதுவே பவளத்துறையில் கோத்த முத்துவடம் போல் செவ்விதட்டுள்ளே நிரையாய்த் தோன்றின பல்லும் அதுவே - வான்மீன் போல் விளங்கி எறிவேல் போலே சினந்து உன் நெஞ்சு உள்ளூறுவித் தைத்த இருகண் இருந்த இடம் இதோ. அருவருப்புள்ள கிடங்கு பள்ளம் அதுவே. நீயபேட்சித்த வில்லென வளைத்த புருவமும் பிறையென ஒளிர்ந்த நுதலும் செந்தாமரை என மலர்ந்த வாயும் இது எல்லாம் எங்கே இந்த முகத்திலேதான் இருந்ததன்றோ - நீயபேட்சிக்கும் அழகிய முகமும் இத்தன்மைத்தாவது நிச்சயமாகி இதற்கு ஓர் உயிர் கெடப் பொருள் அற மானங் குறைய மிருகத்தோடு ஒத்த இன்பத்துக்கு ஆசைப்படுகிறாய். இதற்கு ஓர் உபாயம் பாராமல் கல்வி உணராமல் உறுதி கொள்ளாமல் ஒரு துணையின்றி மயங்கிக் கிடக்கின்றாய்"[34]

என்னும் வாமன் சரித்திரக் கூற்று செந்தமிழ் படிக்கும் மாணவர்களுக்குப் பாடப்பகுதியாக எழுதப்பெற்றதாகும்.

கொடுந்தமிழ் நடை (பேச்சுமொழி நடை)

பரமார்த்த குருவின் சீடர்கள் பூசணிக்காயைக் குதிரை முட்டை என்று வாங்கித் தலையில் தூக்கிக்கொண்டு,

> "வெகுதூரம் நடந்த பின்பு, சாய்ந்து தொங்கின மரத்தின் கொம்பு குறுக்கே பட்டு விழுந்தாட்டின காய் கீழே கொத்துக் கொத்தாய்ப் பரந்த சிறு

---

34. வீரமாமுனிவர், **வாமன் சரித்திரம்**, ப. 27.

செடியின் மேலே விசைபட விழுந்து தகர்ந் துடைந்தது. அப்போது அந்தப் பூண்டிலே பதுங்கியிருந்த முசல் பயந்தெழுந் தோடிப் போச்சுது. இதோ கூட்டிலிருந்த குதிரை மறி ஓடுதென்று அபயமிட்டு இருவரும் அதைப்பற்றிப் பிடிக்கத் தொடர்ந்தார்கள். மேடும் பள்ளமும் காடும் வெளியும் பாராமல் ஓடவே, உடுத்த சீலைகள் முட்செடியிலே மாட்டிக் கிழிந்தது பாதி, பிடிபட்டது பாதி. மிதித்த கட்டை சதையைக் கீறித் தைத்த முள்ளால் இரத்தம் பாய, உடம்பெல்லாம் வேர்வை வடிய, நெஞ்சம் பதைக்க, இரு காதடைக்க, இளைத்திரைக்கக் குடலே தெறிக்க ஓடி ஓடினும் முசல் பிடிபடாமல் இருவருந் தளித்துத் திகைத்து விழுந்தார்கள்"[35]

எனும் பகுதியில் இடம்பெறும் முசல், போச்சுது ஆகிய சொற்கள் பேச்சு நடைக்குச் சான்றாக அமைகின்றன.

எளிய நடை

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி உரைநடை என்பது செய்யுளுக்குரிய சீர் இல்லாமல் பேசப்பெறும் அல்லது எழுதப்பெறும் மொழியின் அமைப்பாகும்; உள்ளதை உள்ளவாறு கூறுந்தன்மையுடையது எனக் குறிக்கும்.[36] இத்தன்மைக்கேற்ப வீரமாமுனிவர் 'வேதியர் ஒழுக்கம்' என்னும் நூல் முழுவதையும் உள்ளதை உள்ளவாறு சொல்லிச் செல்லும் பாங்கில் அமைத்துள்ளார். மிகைப்படுத்தியோ கற்பனை கலந்தோ உருவகப்படுத்தியோ இல்லாமல் வேதியர்கள் செய்யும் தொழில் பற்றி எளிமையான நடையில் விளக்கிச் செல்கிறார்.

"ஆண்டவர் பரமநீதிபரனாகையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிலைக் கட்டளையிடுகிறபோது அததற்குரிய உதவியும் வல்லமையுந் தருவார். இல்லாவிட்டால் நம்மால் ஒன்றும் ஆகாது என்று தாம் அறிந்திருக்கையால் வேண்டிய உதவியை அவர் செய்யாமல் நம்மை ஏவினாராகில் அவருக்கு நீதியாகுமோ? நம்மால் கருமம் முடியுமோ?

---

35. *வீரமாமுனிவர்*, **பரமார்த்த குருவின் கதை**, *ப. 23.*
36. **The Concise Oxford Dictionary**, 5th edition, p. 962.

ஆகையால் வெவ்வேறே தொழிலுக்கு வெவ்வேறே உதவி அததற்குரிய முறையால் ஆண்டவர் செய்வது நிச்சயந்தானே"[37]

"ஒருவன் விசுவாசத்தில் தளர்ந்த நினைவு கொண்டதை அறிந்தவுடனே அவனைக் கரையேற்ற ஆசையுள்ள உபதேசி மற்றதெல்லாத்தையும் விட்டு அவனவனைக்குப் போய் நாலு வார்த்தை உறுதியாகத் தேற்றிச் சொன்னால் அவனும் எளிதாய நிலை நிற்பான்"[38]

இப்பகுதி தன்முன் நிற்கும் ஒருவரிடம் நேருக்கு நேர் பேசும் பான்மையில் அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வுத்தி கருத்துப் புலப்பாட்டுத் தன்மைக்குப் பெரிதும் துணையாகும். படிப்பவர் - அல்லது தன் பேச்சைக் கேட்பவர் ஆகியோருடன் இரண்டறக் கலந்துவிடும் தன்மை இவ்'வுத்தி' உருவாக்கும்.

கடுநடை

பிறர் மீதிருந்த வெகுளியை எழுத்தில் வெளிக்காட்டும் முறை. வீரமாமுனிவர் லூத்தர் மீதிருந்த கோபத்தை,

"இந்நாளிலே சர்வேசுரனுடைய வேதமென்னும் வேஷத்தைப் போர்த்துக் கொண்ட கீழ்த்திசையார் சொல்லுஞ் சமயம் ஏதெனில் - இருநூறு வருஷத்துக்கு முன்னே ஆண்டவருக்கு மனம் பொருந்திக் கொடுத்த மூன்று வார்த்தைப்பாடுகளை மிதித்து நிந்தித்து ஆங்காரத்தினாலேயுஞ் சாராயம் நிறையக் குடித்த மயத்தினாலேயும் பழி வாங்க நினைத்த கோபத்தினாலேயும் மதிகெட்டவன் ஒருவன் பிதற்றின ஒன்றோடொன்று ஒவ்வாத தப்பறைகளாக்குமந்த மதத்தார் சர்வேசுரனுடைய வேதமென்று வெட்கமில்லாமல் சொல்லுகிறார்கள் என்று அறியக் கடவீர்கள். செத்த நாய் புழுத்து நாறி முளைத்த புழுவோ உலகம் யாவையும் விளக்குஞ் சூரியனென்று நினைக்கினும் சகல பாவங்களிலே பிறந்து முளைத்த தப்பறை ஈடேற்றத்துக்குரிய வேதமென்று கருதவுந் தகுமோ"[39]

---

37. வீரமாமுனிவர், **வேதியர் ஒழுக்கம்**, ப. 52.
38. **மேலது**, ப.128.
39. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 6.

எனவும்,

> "ஆண்டவருக்குத் தந்த வார்த்தைப்பாடுகளை மிதித்தவனாய்ப் பசாசைக் குருவாகக் கொண்டவனாய்ச் சகல பாவங்களை ஊன்றின உணர்வினனாய் மதிகெட்ட லுத்தேரும் இவனோடு ஒத்த அக்கிரமத்தழிந்த கல்வீனுஞ் சற்றுங் கூசாமல் பிதற்றிச் சொல்லத் துணிந்தார்"[40]

எனவும் கூறும் கூற்றுகளிலிருந்து அறியமுடிகிறது. மேற்கூறிய கூற்றில் உள்ள உணர்வு நிலை கொள்கை அடிப்படையில் உருவான ஒன்றாகும். இவ்வுணர்வு எதிரியின்மீது நிரந்தரமான சினத்தைத் தோற்றுவிக்க வல்லதாகும்.

ஏளனம் செய்யும் நடை

பரமார்த்த குருவின் கதையில் யாரையும் புண்படுத்தாத நகைச்சுவை உணர்வு மேலோங்கி நிற்கிறது. கூர்ந்து நோக்கினால் ஒழிய அதன் உருவகம் பிறருக்குப் புலப்படாது. ஆனால் வேதவிளக்கத்திலோ பிறரை ஏளனம் செய்யும் எள்ளல் சொற்கள் அந்நடைக்குச் சூடேற்றுகின்றன.

> "திருத்தமுறைக் கிறித்தவர்கள் தங்களைச் 'சுவிசேஷகர்' என்றழைத்துக் கொள்கிறார்கள். அதுவும் பொருந்தும். எப்படியெனில் உரோமப் படையில் ஆப்பிரிக்காவை அழித்த தலைவன் ஆப்பிரிக்கன் என்றும், ஜெர்மனியை அழித்தவன் ஜெர்மன் என்றும், ஆசியாவை அழித்தவன் ஆசியாட்டிக் என்றும் அழைக்கப்படுவது போல சுவிசேஷத்தைப் பிழைபட மொழி பெயர்த்து மக்கள் தவறுகளை ஏற்றுக்கொள்ளச் செய்து, சுவிசேஷத்தை அழித்தவர்கள் சுவிசேஷகர் என்று அழைக்கப்படுவது பொருத்தமே"[41]

---

40. **மேலது**, ப. 85.
41. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப.

எடுத்துரை உரைநடை

இக்காலத் தமிழ் உரைநடையில் பேரளவாகத் திகழ்வது எடுத்துரை உரைநடையே. புனைகதைகள், வாழ்க்கை வரலாறு, நாட்டு வரலாறு போன்ற இவ்வகையில் அடங்கும். இந்நடையை,

> "ஒரு செயல் பற்றியோ, வாழ்வின் இயக்கம் பற்றியோ விவரிப்பது எடுத்துரை உரைநடை. 'என்ன நடந்தது?' என்னும் வினாவுக்கு இது விடை தரும். மற்றோர் வகையாகப் பகுத்துக் கூறினால் எடுத்துரை உரைநடை என்பது கதை கூறும் உரைநடையே"[42]

என்று மா. இராமலிங்கம் கூறுவார். எடுத்துரை சிறு நிகழ்ச்சியாகவும் இருக்கலாம். பெரிய கதையாகவும் இருக்கலாம். கதையைப் பற்றிச் சொல்வதன்று; கதையையே சொல்வது. கன்னிமரியைப் புகழ்ந்து வாழ்பவரைவிடத் தேவ வாக்கியங்களைக் கேட்டு வாழ்பவர்கள் புகழப்படுவது நியாயம் என்பதை விளக்க வந்த வீரமாமுனிவர் பின்வரும் கதையைக் கூறுகிறார். அக்கதை வருமாறு :

> "ஆயுதமின்றி நின்ற ஒருவன் பகைவர் தன்னை வெட்ட வருவதைக் கண்ட அளவில் அருகே நின்ற கோட்டையினுழைய ஓடிப்போகாமல் ஐயோ தம் பகைவர் கையில் அகப்படாமல் பறவைகளாய் ஆகாயத்தில் பறக்கும் விசையைப்பார். அதுகளே பாக்கியமுள்ளதுகள் என்றான். அதனைக் கேட்டு மதிவல்லோன் ஒருவன் விசையோடாகாயத்தில் பறக்கும் பறவையினும் நீ ஓடிக் கோட்டையில் நுழைந்து தன்னுயிரைக் காத்தால் - நீயே பாக்கியமுள்ளவன் என்றான். என்றாலும் பறவை பறக்கும் விசையிலும் இவனோடு ஓட்டத்தையும் உயர்த்தினால் என்ன என்று எண்ணலாமோ இல்லையே, அவர் சொன்னற்கு அர்த்தம் ஏதெனில் பறவை பறக்கும் விசை அதிகந்தானேயாகிலும் அதனால் உனக்கு

---

42. மா. இராமலிங்கம், புதிய உரைநடை, ப. 107.

ஆவதென்ன. நீ பறக்கக் கூடாமையில் அதிலேயும் உனக்கு உன் கால் ஒட்டமே நல்லது. என்பதாமே."[43]

என்பதாகும். இக்கதையின்வழி ஓர் உண்மையையும் உணர்த்தி விடுகிறார்.

"உரோமன் திருச்சபைக்கு உட்பட்டிருந்த ஊர் உத்தியோகத்தில் உயர்ந்தவன். ஒருவன் மட்டும் பதிதன். அவனை ஊரிலிருந்து விலக்கி வைத்தனர். (உண்ணல் பேசல் இல்லை) சிறுவர்கள் தெருவில் பூம் பந்து விளையாடிய சமயத்தில் பதிதன் குதிரையில் போக இப்பந்து அக்குதிரைக் குளம்பில் பட்டுவிட்டது. உடனே சிறுவர்கள் ஒன்றுகூடி விறகை ஒன்றாய்ப் போட்டு நெருப்புமூட்டி கனகனவென்றிருந்த தணலில் பெரிய குறட்டால் பந்தை எடுத்து அதில் போட்டு எரித்தனர்"[44]

இக்கதையிலிருந்து வீரமாமுனிவர் திருச்சபையை விட்டுப் பிரிந்த பதிதனை நாமும் விட்டுப் பிரிய வேண்டும். இது தன்னைக் காக்க வேண்டிய முறைதானே ஒழியப் பதிதர் மேல் வைத்த பகையல்ல என்று நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

வினையெச்சங்களை முடிவில் கொண்டவை

"செர்மானிய தேசத்தில் பிறந்த லூத்தேர் என்பவன் சத்திய வேதத்தைப் பாலோடு உண்டு வளர்ந்து, பூவுலகுள்ள பொய்யான வாழ்வுகளை வெறுத்து, வாலசந்நியாசம் பண்ணி, அர்ச், அகுஸ்தீனுடைய சபையுட்பட்டு மனம் பொருந்தி ஆசையோடே ஆண்டவர் பாதத்தில் எல்லோரும் அறிய மூன்று வார்த்தைப்பாடுகளைத் தந்து, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை வெறுத்து மரண பரியந்தம் விரத்தனாகவும் தரித்திரனாகவும் சேஷ்டர் சொற்படி கேட்பவனாகவும் துணிந்தான்"[45]

---

43. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, பக். 38-39.
44. **மேலது**, ப. 202.
45. **மேலது**, ப. 7.

மேலே காட்டிய எடுத்துக்காட்டில் ஒவ்வொரு தொடரும் முற்றுப் பெறாமல் அதேநேரத்தில் வினையெச்ச முடிபுகளைக் கொண்டு நீண்ட தொடராக அமைந்துள்ளது. எனினும் நீண்ட தொடரைப் படிக்கும் உணர்வை உண்டாக்காமல் படிப்போருக்கு எளிதில் பொருள் புரியுமாறு அவ்வினை எச்சத்தொடர்கள் துணைபுரிகின்றன.

நீண்ட சொற்றொடர்

வீரமாமுனிவர் தம் நூல்களில் பலவிடங்களில் நீண்ட சொற்றொடர்களையே பயன்படுத்துகின்றார். சான்றாக,

> *"இது எல்லாமாகிக் கொண்டு வருகையில் காலிய ராச்சியத்தில் பிறந்த கல்வீன் என்பவன் தன்னூர்ப் பாவிகளுக்குள்ளே பெரும்பாவியாக விளங்கச் செய்த துரோகங்களால் தள்ளுண்டு ஓடிப்போய் லுத்தரோடே கூடி அவனை ஆண்டவரால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலன் என்று புகழ்ந்து சிலநாள் பின்தொடர்ந்த பின்பு தனக்கும் பேராகும்படிக்கு அவனை விட்டுப் பிரிந்து விரோதமாய்ச் சிலதுகளை உணர்த்தி லுத்தேர் என்கிறவனை அக்கியானி என்றும், மதி கெட்டவன் என்றும் இகழ்ந்து கூடின நாய்கள் தம்மைக் கடித்தது போல இருவரும் கூடியும் பிரிந்தும் ஒரு கருத்தோடு வேதத்தைக் கெடுக்க வருந்தினார்கள்"*[46]

எனும் இப்பகுதியைக் காணலாம். நீண்ட சொற்றொடராக இருப்பதால் பொருள் விளங்கிக் கொள்வதில் இடர்ப்பாடு ஏற்படுவதை உணரமுடிகிறது.

சிறிய சொற்றொடர்

சிறிய சொற்றொடராக அமைத்துப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளது என்பதற்கு,

> *"மனிதனாகிய கடவுளைச் சுமந்த உதரமேவாழ கன்னிமலர் கெடாக் கனியைத் தந்த உதரமே வாழ உயிர்க்கெலாமுணர்வினைத் தந்தவர்க்கமுது*

---

46. *வீரமாமுனிவர்*, **வேதவிளக்கம்**, *ப.17.*

ஊட்டிய கொங்கைகளே வாழ எம் கண் மகிழ அருட்பியானவரை உருவாக்கினவளே வாழ நம்மை இரட்சிக்கச் சிந்தின குருதியைத் தந்தவளே வாழ வானோர்க்கரசியே வாழ ஈனோர்க்கு உறுதியே வாழ. வானுலகழகே வாழ. பூவுலகுயிரே வாழ. தீயுல கதிர்வே வாழ. வேதம் விளக்கும் சுடரே வாழ. நோய்தீர அமிழ்தே மருள்தீர் ஒளியே துயர்தீர் மகிழ்வே கதிர் கரையே புவித்துணையே கருணாகரியே உயிரே அமுதே அருளே வாழ. பதிதர் அஞ்சும் திறத்தியே வாழ. பதிதர் பகைக்கும் செல்வியே வாழ. பதிதரைக் கெடுக்கும் அரசியே வாழ வாழ"[47]

என்னும் பகுதி சான்றாக அமைந்துள்ளது. வாழ்க எனும் வியங்கோள் வினைமுற்று "வாழ" என எச்சப்பொருளில் அமைந்து உரைநடைக்குப் புதிய பொலிவினை ஊட்டுகிறது.

ஒலிநயம்

சாதாரண உரைநடைக்கும் மிகவுயர்ந்த உரைநடைக்கும் உள்ள வேறுபாடு இனிய ஒலிநயமேயாகும்.

"கலைத்துறையில் ஒத்திசைவு நயத்தை 'ரிதம்' என்று கூறுவர். ரிதம் ஓவியத்தில் உண்டு; இசையில் உண்டு; பாட்டில் உண்டு; உரைநடையிலும் உண்டு. ஓவியம் வரைவோன் சில வண்ணங்களைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும்போது காண்போரின் கட்புலனில், அவை ஏதோ ஒருவகையான ஒத்திசைவு நயத்தை உருவாக்குகிறது ..... இதேபோல் உரைநடையிலும் ஒலிக்கூறுகள் அளவாக மாறிமாறியமைந்து ஒருவகையான ஒத்திசைவு நயத்தை - ஒலிநயத்தைத் தோற்றுவிக்கிறது. பாட்டிலுள்ள ஒலிநயம் மிகத் தெளிவாகப் புலப்படும்; உரைநடையில் உள்ள ஒலிநயமோ படித்துப் படித்துப் பழகிப்போன நுட்பமான அகச்செவி உடையார்க்கே புலப்படும் பாட்டில் ஒலிநயம் பொங்கி வழியும்; உரைநடையில் ஒலிநயமோ பொசிந்து வெளிப்படும்"[48]

---

47. வீரமாமுனிவர், **வேத. விளக்கம்**, ப. 41.
48. மா. இராமலிங்கம், **புதிய உரைநடை**, பக். 47-48.

என்று விளக்குகிறார். வீரமாமுனிவரின் உரைநடையில் ஒலிநயம் பொசிந்து வெளிப்படுகிறது. இதனை,

> "ஏகக்கடவுள் அற்புதத் திரித்துவ மறுக்கவுஞ் சேசு கிறிஸ்துவுக்குத் தேவத்துவம் பறிக்கவும் அர்ச்சியஷ்டர்களுக்குப் பேரின்ப மொழிக்கவும் வானோர்க்கெல்லாம் வணக்கமளிக்கவும் .... நொந்தார்க்காறுதல் மெலிந்தார்க்குறுதி யிறப்பார்க் குரித்துணையாக நிற்குஞ் சிலுவை மரக்கறையுண்ட கருத்தருருவமும் பாம தேவதாயி னடைக்கல வுதவியு மற்றைவானோர் துணையாதரவு மெழுதப்பட்ட தேவவாக்கிய வுரிமையு மெழுதப்படாத தேவவாக்கியப் பரம்பரவழக்கமுந் தேவத்திரவிய - அனுமானங்களுங் காரணக் குருக்க ளொழுங்குந் தேவபூசையுதவியு நெறியினிறுத்தி யாளுந் தலைமையுஞ் சந்நியாசத் துறவுங் கன்னிமை விளக்கமு நீதிமுறை கற்பனைகளும் பூரண பலன்களும் வேண்டுதனேர்ச்சியு மந்திரத் தொகுதியும் புதுமை நிலையும்......"[49]

என்னும் பகுதியால் உணரலாம். மேலும் கீழ்வரும் பகுதியும் ஒலிநயத்திற்குத் தக்க சான்றாக அமைகிறது.

> "புனித மரியாள் என்பவளை வணங்கவும் அவளை இருண்ட அக்கியானத்து ஒளியும் பகைத்த பசாசின் போரில் வெற்றியும் அணைந்த துன்பத்துக்கு ஆதரவும் வந்த நோய்க்கு ஆரோக்கியமும் அழுவாருக்கு ஆறுதலும் மெலிந்தாருக்கு உறுதியும் கல்லாருக்கு உணர்ச்சியும் எவருக்கும் கிருபை தயாபரமும் தாயுமாக எண்ணி மன்றாடவும்"[50]

பத்தி அமைப்பு

கடினமான உழைப்பால் களைத்துப் போகின்றவர்கள் அவ்வப்போது ஓய்வை விரும்புவது போல், படிக்கும் கண்களும் இடையிடையே ஓய்வை விரும்புகின்றன.. இரு பத்திகளுக்கிடையே உள்ள இடைவெளி, கண்களுக்கு

---

49. வீரமாமுனிவர், **லூத்தேர் இனத்து இயல்பு**, ப. 29.
50. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 37.

ஓய்வுபெறும் உணர்வை உண்டாக்குகிறது. இடைவெளியே இல்லாமல் பக்கம் பக்கமாக நீண்டு செல்லும் பத்திகள் கற்போர் மனத்தில் மருட்சியையும் தயக்கத்தையுமே உண்டாக்கும்.[51]

பத்தி என்று பொதுப்படக் கூறினால் எழுதப்பட்ட ஒரு கட்டுரையின் உட்பிரிவே அது எனலாம். சற்று நுட்பமாக வரையறுத்துக் கூறினால், பத்தி என்பது ஒருங்கிணைந்து ஒருருவாய் நிற்கும் எண்ணங்களின் தொகுதி என விளக்கலாம். உரைநடையில் அமையும் பத்திப் பிரிவுகள் படிப்போர்க்கு 'இது தனி முழுமை கொண்ட எண்ணங்களின் தொகுதி' என்னும் உணர்வை உண்டாக்க வேண்டும். இவை எண்ணங்களின் கூட்டொருமையாக மட்டுமின்றி, எழுதுவோனின் எண்ணப் போக்கினையும் கற்போரின் கட்புலனுக்குத் தெற்றெனப் புலப்படுத்துகிறது.[52]

> "அவனவன் தன்மேல் வைக்கத்தகும் பட்சமே பிறர் ஈடேற்ற ஆசையைப் பற்றுவிக்கப் பேதுமென்று ஒப்புவிக்கக் கடவோம். ஆண்டவர் நமக்குச் செய்த நன்மையும் அவருக்கு நாம் செய்த குறையும் இவ்விரண்டும் நமக்குண்டாகிய இருவகைக் கடன்தானே. சாகிற காலத்தில் அவரே நம்மை இதற்குக் கணக்குக் கேட்டுத் தாம் செய்திருந்த நன்மைக்குக் கைம்மாறாக நாம் செய்த புண்ணியமேதென்றும், நாமே முன்செய்த பாவக்கடனைத் தீர்க்கப் பின்பு செய்த தவமேதென்றுங் கேட்டுத் தீர்வை இடுவாரல்லோ? அக்கணக்கு ஒப்பியாமையால் ஆக்கினைக்குட் படாதபடிக்கு தன்மேல் மெய்யான பட்சமுள்ளவன் சொன்ன இருவகைக் கடன்களை இப்போது தீர்க்க ஆசை வைக்கக்கடவான்"[53]

மேற்கண்ட பத்தியில் தன்மீது பற்றுக்கொண்டவன்தான் பிறர் ஈடேற்றத்திற்கு ஆசை கொள்ள முடியும் என்னும் கருத்தைக் கூறி முடிக்கிறார்.

---

51. மா. இராமலிங்கம், **புதிய உரைநடை**, ப. 35.
52. **மேலது**, ப. 36.
53. வீரமாமுனிவர், **வேதியர் ஒழுக்கம்**, ப. 89.

தொடை

அடிகள் இரண்டு இயைந்த வழித் தொடையாகும். இதனை,

தொடையே அடியிரண் டியையத் தோன்றும்[54]

என யாப்பருங்கல விருத்தி உரைக்கும். தொடையின் விகற்பமாக மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை ஆகிய எட்டனை யாப்பருங்கலக்காரிகை கூறும். வீரமாமுனிவர்,

> "மனிதனாய்ப் பிறந்து தரித்திரனாய வளர்ந்து எளியவனாய்த் திரிந்து நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் திருவுளம் பற்றின வேதமோ அல்ல.
>
> அவர்தாம் தெரிந்து கொண்ட சீடராகிய - அப்போஸ்தலர் மாருலகமெங்கும் பரப்பின வேதமோ அல்ல.
>
> சேசுநாதர் தமது தானத்திலே அர்ச் இராயப்பரை வைத்துப் பசாசுகளால் அசைப்படாத செங்கோன்மை கொடுத்த முறையோடு இராயப்பர் துவக்கி இந்நாள் வரைக்கும் வழுவாமல் உரோமாபுரியின் திருச்சபைக்குத் தலைவராக நின்ற அர்ச். பாப்புகள் வெளிப்படுத்தின வேதமோ அல்ல.
>
> 1720 வருடமட்டுங் குறையாமலு மிகாமலும் வேறுபடாமலும் ஒருமுகமாய்ப் பூவுலகெங்கும் பரம்பின வேதமோ அல்ல"[55]

எனும் இப்பகுதியில் வாக்கியத்தின் இறுதிச் சொல்லை அல்ல என்று கூறி இயைபுத் தொடையாக ஆக்கியுள்ளார்.

வேற்றுமை மயக்கம்

கள்ளுண்ட வெறியின் மயங்கிப் பிதற்றின அபத்தங்களை, கள்ளுண்ட வெறியினால் என்று மூன்றாம் வேற்றுமையாகிய 'ஆல்' இருக்க வேண்டிய இடத்தில், ஐந்தாம் வேற்றுமை உருபாகிய 'இன்' இடம்பெற்றுள்ளது.

---

54. **யாப்பருங்கலவிருத்தி.**
55. வீரமாமுனிவர், **வேத விளக்கம்**, ப. 5.

உரைநடையிலும் உருபு மயக்கத்தைக் கையாளும் வீரமாமுனிவரின் இந்த உத்தி பாராட்டத்க்கதேயாகும்.

> "உருவின வாளை ஏந்தித் தன் மேல் எதிர்த்தவன் பகையை விலகிக் காத்தல் எளிதே"[56]

தன்னை எதிர்த்தவன் என்று எழுதாமல் தன் மேல் என்று எழுதியதால் (உ-ம்) வேற்றுமை உருபு இருக்க வேண்டிய இடத்தில் 7ஆம் வேற்றுமை உருபைப் பயன்படுத்தியுள்ளார்.

இப்படிப் பல எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம். இவ்வாறு அவர் கையாளும் உருபுமயக்க நடை பேச்சுத் தமிழின் தாக்கமாக இருக்கவும் வாய்ப்புள்ளது எனலாம்.

உரோமான் திருச்சபையார் எல்லோரையும் உளப்படுத்தி எழுதும் முறை

> ஒன்றில் சேசுநாதர் சொன்னது பொய்யாக வேண்டும். ஒன்றில் அப்போஸ்தலர் நற்கருணை உட்கொள்ளா முன்னும் அப்பத்தின் குணங்களுக்குள்ளே அவர் இரத்தமும் இருந்ததென்று சொல்லக் கடவோம்.

ஒன்றில் மற்றொன்றில் என்று சொல்லாமல் இரண்டையும் ஒன்றில் ஒன்றில் என்றே கூறுகிறார். இது அக்கால உரைநடையின் தன்மையாக இருக்குமோ என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது.

உம் சேர்த்து எழுதுதல்

அப்படியே கல்வீனுக்கும் லுத்தேருக்கும் விரோதமும் பகையும் மட்டியின்றி வளர்ந்து வருகையில் . . . . .இங்கு இரண்டு இடங்களிலும் உம் சேர்த்து உம்மைத் தொடராக அமைத்துள்ளார்.

---

56. மேலது, ப. 9.

பொருள் மயக்கம் தருதல்

ஒநாய் செத்துத் தப்பிப் பிழைத்த ஆட்டுக்குட்டியைப் போல லூத்தர் செத்தவுடன் அவனுடைய சீடர்களில் ஒருவன் உரோமான் திருச்சபையை அடைந்து நன்னெறி வழுவாமல் நடந்தான்.

இங்கு ஓநாய் செத்தவுடன் தப்பிப் பிழைத்த ஆட்டுக்குட்டி என்று ஆசிரியர் கூறாததால் பொருள் மயக்கம் ஏற்படுகிறது.

சொற் பயன்பாடு

திரிதல் என்ற சொல் இப்போது தாழ்ந்த பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வீரமாமுனிவர் உயர்ந்த பொருளிலும் தாழ்ந்த பொருளிலும் பயன்படுத்துகின்றார்.

உயர்ந்த பொருள்

பாடுபட்ட கத்தர் சுருபத்தைக் கண்ட அளவில் பரலோகத்தையும் பூலோகத்தையும் உளவாக்கின சுவாமி எம்மேலிரங்கி மனிதனாகப் பிறந்து எளியனாய்த் திரிந்து நம்மை இரட்சித்தார்.

தாழ்ந்த பொருள்

மற்ற வான்மீன்களைத் தீண்டாத கரியதோர் பாம்பு முழுதும் ஒளிவிளங்கின பூரணமதியை விழுங்க வரும் என்று இந்நாட்டில் வழங்கின கதை மெய்யானாற் போலப் பதிதரனைவரும் மற்ற மோட்சவாசிகளைப் பகைத்தாலும் எவ்வுலகனைத்தும் விளங்கின குளிந்த கதிரை வீசும் தயையுள்ள பரமதேவதாயை விசேசமாய்ப் பகைத்து முழுதும் அவளை விழுங்க ஊத்தையும் அழலும் ஒழுகி நாறும் தமது நரக வாயைத் திறந்து துஷணங்களைக் கக்கிக் கொண்டு திரிகிறார்கள்.

இவ்வாறு அவருடைய உரைநடை, பல்வேறு அணிநலன்களைக் கொண்டும், தொகை மரபைத் தழுவியும் செந்தமிழ் நடையோடும், பேச்சு வழக்கோடும் இணைந்து வேண்டிய இடத்தில் வேண்டியவாறு சொல்லாக்கம் அமைய அமைந்துள்ளது. தமிழில் உரைநடையின் வளர்ச்சிக்கு வித்திட்ட வீரமாமுனிவரின் தொண்டு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

முடிவுரை

முடிவுரை

துறவுக்கும் இலக்கணம் வகுத்தவர் வள்ளுவர். கூடா ஒழுக்கமும், புலால் மறுத்தலும் கள்ளுண்ணாமையும் துறவிகளுக்கான அடிப்படை இலக்கணங்கள்.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்[1]

என வரும் குறளும் துறவுக்கான எதிர்மறை இலக்கணமாகும். இவ்வாறு துறவும் - துறவிகளும் போற்றப்படுவதற்கு அவர்களின் அருட்பண்பே காரணமாகும். 'அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை' எனக்கூறும் வள்ளுவர், அதற்கான காரணமாக அவர்தம் அருட்பண்புகளே அவர்களைக் காப்பன எனவும் விடை தருவார்.

இவ்வாறு தூய நெறி நின்று வாழும் துறவியர் அவர் எந்தச் சமயத்தவராக இருப்பினும் மக்கள் நெஞ்சின் மலிவுப்பதிப்பாகப் பதிந்தனர்; உயர்ந்தனர். தமிழ் நாட்டு மக்களின் இவ் எதிர்பார்ப்பு, தொடக்கத்தில் கிறித்துவச் சமயப் பணியை ஆற்றவந்த துறவிகள் அறியாத ஒன்றாகும். இதனால் இவர்கள் எதிர்கொண்ட சிக்கல்கள் மிகுதி. ஐரோப்பியப் பண்பாட்டில் சமயத்துறவிகளாக இருந்தாலும் அவர்கள் மது, புலால் இவற்றை அருந்தத் தடையேதும் இல்லை. சமயப்பணியாற்றிய துறவிகள் தமிழகத்திலும் அப்படியே ஒழுக முற்பட்டதால், கிறித்துவ மதப்பரவல் பெரிதும் இடர்ப்பாட்டிற்கு உள்ளாயிற்று. இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டதற்குப் பின்னரே கிறித்துவச் சமயம் தமிழகத்தில் பரவலாயிற்று. இதனால் சமயப்பணியாற்றுவோர், தாங்கள் பணிபுரியும் நாட்டின் பழக்க வழக்கங்கள் மக்களின் எதிர்பார்ப்புகள் இவற்றை முழுமையாகப் புரிந்து கொண்டால்தான் தங்கள் பணியில் வெற்றி பெறமுடியும்

1. திருக்குறள் 271.

என்பது கிறித்துவத் துறவிகளின் சமயப்பணியின் வாயிலாகப் பெறும் உண்மையாகும்.

காணார் கேளார் கால்முடப்பட்டோர், யாருமற்ற ஏதிலிகள் ஆகிய அனைவரையும் அழைத்து அவர்களின் பசிப்பிணியைப் போக்கிப் பாதுகாப்பு இல்லங்களை வழங்கிய மணிமேகலையைப் போலத் தரங்கம்பாடியார் ஏதிலிகளுக்குக் கருணை இல்லங்களைத் தொடங்கியுள்ளனர். இவ்வுயரிய மனிதநேயச் செயற்பாடுகள்கூட மதமாச்சரியங்களால் கண்டனத்திற்கு உள்ளாயின.

கிறித்துவச் சமயத்துறவிகள் பார்ப்பனர்களைத் தங்கள் சமயத்தில் சேர்த்துவிடப் பெரிதும் முயன்றனர். அதற்காக அவர்களுள் ஒருபிரிவினர் பார்ப்பனர்களைப் போலப் பூணூல் அணிந்தும், உச்சிக்குடுமி வைத்தும் பாதக்குறடு அணிந்தும் காவியுடுத்தியும் தங்களை 'அய்யர்' என அழைத்துக் கொண்டும் சமற்கிருத மொழியைக் கற்றும் அவர்களிடம் பணியாற்றியும்கூடக் கிறித்தவப் பாதிரிமார்கள் தங்கள் முயற்சியில் வெற்றி பெறவில்லை.

சமயப்பரப்பலில் ஈடுபடும் பணியாளர் அந்தந்த மக்களின் தாய்மொழியின் வழியாக அம்மக்களைத் தொடர்பு கொண்டால் அப்பணி எளிதாகும் என்பதைக் கிறித்துவப் பாதிரியார்களின் பணிகள் உணர்த்துகின்றன.

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்[2]

எனும் குறளின் இலக்கணமாகத் திகழ்பவர் வீரமாமுனிவர். சமயப் பரப்பலுக்காகத் தமிழகம் வந்த அவர் அக்காரணத்திற்காகவே தமிழையும் கற்றார். ஆயினும் அவருக்கு முன்னரும் பின்னரும் எவ்வளவோ பாதிரியார்கள் தமிழைக் கற்றுத் தமிழாய்வு நடத்தினாலும் வீரமாமுனிவரைப் போலத் தமிழ்ப் புலவராய் விளங்கியவர்கள் ஒருவரும் இலர்.

---

2. **திருக்குறள்**, 373.

வீரமாமுனிவர் தமிழுக்குக் கிறித்துவத் தமிழ் இலக்கியங்களை வழங்கியவர். காப்பிய வரிசையில் தேம்பாவணியும், சிற்றிலக்கிய வரிசையில் அம்மானை, கலம்பகம் முதலான இலக்கியங்களையும் படைத்தளித்தவர். ஆயினும் தற்காலத் தமிழ் இலக்கியப் பரப்பில் உரைநடை பெற்ற சிறப்பிற்கெல்லாம் முன்னோடியாக விளங்கியவர் வீரமாமுனிவர் ஆவார். அதைப்போலவே நாட்டார் வழக்காற்றியல் துறைக்கும் அவர் பதிப்பித்த பரமார்த்தகுருவின் கதை ஒரு முன்னோடி எனலாம்.

வாய்மொழி இலக்கிய வகைக்கு அவர் வழங்கிய கொடையாகத் திகழும் இக்கதை தமிழ்நாட்டில் வழங்கிய கதை என அவரே குறிப்பிட்டுள்ளார். எனினும் அக்கதையில் இடம்பெறும் ‘மோளைமாடு’ தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் அதிலும் குறிப்பாகத் திருத்துறைப்பூண்டி மன்னார்குடிப் பகுதிகளில் காணப்படும் கொம்புகள் இல்லாத காளையாகும்.

அந்தப் பகுதியிலுள்ள நிலங்கள் சேற்றுத்தன்மை கொண்டவை. அதனை ‘வதி’ என்றும் கூறுவர். உழும்போது மாடுகளின் கால்கள் வதியில் அழுந்துவதால் நடப்பது மிகவும் கடினமாகும். எனவே இப்பகுதிகளில் உழவுத்தொழிலுக்காக மற்றக் காளைகளைப் பயன்படுத்தாது மோளைக்காளைகளையே பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர். இதற்காகக் கன்றுப் பருவத்திலேயே தீயினால் அதன் கொம்புப் பகுதியை நன்கு தீய்த்து விடுவர். அதனால் கொம்புகள் வளர்வதில்லை. இவ்வாறு கொம்புகள் தீய்க்கப்பட்டு விடுவதால் காளை நன்கு வலிவோடும் உடல்கட்டோடும் வளர்வதாகவும் அதனால் அச்சேற்றுப்பகுதியில் இடர்ப்பாடின்றி வேலை செய்வதாகவும் கூறுகின்றனர்.[3]

இவ்வாறு தமிழ் நாட்டின் ஒருபகுதியில் இன்றும் காணப்படும் இம் ‘மோளை’க் காளையைப் பற்றிய குறிப்பு பரமார்த்தகுருவின் கதையில் வருவதால் இக்கதை தமிழ் நாட்டில் வழங்கியதே என்பது உறுதியாகின்றது.

மேலும், அக்கதையில் பஞ்சாயத்தார் முன் தீர்ப்புச் சொல்லும் பாத்திரம் படையாச்சிச் சமூகத்தைச் சேர்ந்த ஒன்றாகும். வன்னியர் - படையாச்சி என்பன

---

3. ஆய்வாளர் நேரில் சென்று தகவல் பெற்றது. தகவலாளர் அ. புலியரசு, மன்னார்குடி, 5-5-99.

ஒருபொருள் பல சொற்கள். 'மோளை மாடு'கள் நிறைந்துள்ள கீழைத் தஞ்சை மாவட்டத்தில் படையாச்சிச் சமூகத்தவரும் பெரும்பான்மையாக உள்ளனர். ஆக இவ்விரு அகக்காரணங்களாலும் அக்கதை தமிழ் நாட்டிலேயே வழங்கியிருக்க வேண்டுமென்பது உறுதி.

வழிபாடும் விழாவும்

தமிழ் நாட்டில் வழங்கும் தெய்வ வழிபாடு இருவகைப்பட்டது. ஒன்று சிவன் திருமால் ஆகியோரை வணங்கிய பெருந்தெய்வ வழிபாடு. மற்றது கிராம தேவதைகள் என அழைக்கப்பெறும் மாரியம்மன், ஐயனார், கருப்பு முதலான சிறுதெய்வ வழிபாடு. ~~முருக வழிபாடு தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்ற ஒன்றாயினும் இதுவும் சிறுதெய்வ வழிபாட்டைச் சார்ந்ததே எனலாம்.~~ இவ்விருவகை வழிபாட்டு முறைகளில், வீரமாமுனிவர் மக்கள் வழக்காற்றில் செல்வாக்குப் பெற்றுள்ள சிறுதெய்வ வழிபாட்டு முறைகளால் ஈர்க்கப் பெற்றுள்ளார். இதன் காரணத்தாலேயே வீரமாமுனிவர் ஏசுவின் அன்னையாகிய கன்னிமரிக்குச் சிறப்பிடம் தந்து ஏலாக்குறிச்சியில் மாதாகோயில் ஒன்று கட்டினார் என்பதும், அத்தெய்வத்திற்குத் தமிழ் நாட்டில் நடைபெறும் தமிழர் விழாக்களைப் போலவே திருவிழாக்களையும் உருவாக்கியுள்ளார் என்பதும் ஆய்வின் முடிவுகள். அத்துடன் கன்னிமரியையும்கூட யூதப்பண்பாட்டிலிருந்து மாறுபட்டுத் தமிழ்ப் பெண்ணைப் போலச் சித்திரித்துள்ளதும், அப்பெண் தெய்வத்தின்மீது பாடப்பெற்ற திருக்காவலூர்க் கலம்பகமும், தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான கலம்பக வகையைச் சார்ந்ததாக இருப்பதும் எண்ணத்தகும். இவ்வாறு பண்பாட்டு அடிப்படையிலும், இலக்கிய மரபின் அடிப்படையிலும் அவர் தமிழ் மரபை முழுமையாகப் பின்பற்றியுள்ளார். இதனால், தமிழ் மொழி - இலக்கியமரபு - மக்கள் வழக்காற்று மரபு ஆகியவற்றின் முழுமையான தாக்கத்திற்கு உள்ளானவர் வீரமாமுனிவர் என்பது உறுதியாகின்றது.

அகத்தியம், தொல்காப்பியம், நன்னூல், இருபொருள் காரிகை, அலங்காரம் முதலான மற்ற இலக்கண நூல்களும், உட்சமயம், புறச்சமயம், 18 புராணங்கள், தலபுராணங்கள், 64 கலைஞானத் தத்துவங்கள், 96 பிரபந்தங்கள், ஈரடிப்பயன், நாலடிப்பயன், சிந்தாமணி, சிலப்பதிகாரம், பாரதம், இராமாயணம் மற்ற

இலக்கியங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் பார்த்தார்களா? என்று வீரமாமுனிவர் தரங்கம்பாடியாரைக் கேட்கிறார். அதனால் அவர் இந்நூல்களை எல்லாம் நன்கு கற்றுள்ளார் என்பது தெளிவாகின்றது.

இந்தப் பட்டியலைக் கொடுப்பதன் வாயிலாக அந்நூல்களில் அவர் பெற்றிருந்த புலமை வெளிப்படுகிறது. சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான காப்பியங்களை நன்கு கற்றதன் காரணமாகவே வீரமாமுனிவருக்குத் 'தேம்பாவணி' எனும் காப்பியம் படைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். மேலும் திருக்குறளை, ஈரடிப்பயன் என்றும் நாலடியாரை, நாலடிப்பயன் என்றும் இவர் குறித்துள்ளதால் இவ்விரு நூல்களும் தமிழகத்தில் பெற்றிருந்த செல்வாக்கைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதைப் போலவே இருபொருள் என அவர் குறிப்பது நம்பியகப்பொருளையும் புறப்பொருள் வெண்பாமாலையையும் ஆகலாம்.

மேலே காட்டிய நூல்களில் இடம்பெறாதவை அளவையியல். ஆனாலும் இவர் எழுதிய வேத விளக்கம் எனும் நூல் தருக்க முறையில் அமைந்துள்ளதால் இவர் தருக்க நூலில் பெற்றிருந்த புலமையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. பாவாணர் தம் 'ஒப்பியன் மொழி நூலில்' "அகத்தியர் தருக்க நூற்பா' எனும் நூலைப் பற்றிக் குறிப்பிட்டு அந்நூல் இருபது நூற்பாக்களைக் கொண்டது என்று எடுத்துக்காட்டுத் தருகிறார்.

தேவநேயப் பாவாணர் இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். அவர் எடுத்துக்காட்டும் இந்த அகத்திய தருக்க நூற்பாவே வீரமாமுனிவர் குறிப்பிடும் அகத்தியம் ஆகலாம். வடிவேலு செட்டியார் எழுதிய குறிப்புரையுடன் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பதிப்பிக்கப்பட்ட 'தருக்க பரிபாஷை' என்னும் நூல் பாவாணர் எடுத்துக்காட்டிய இருபது நூற்பாக்களுக்குரிய விளக்க உரையாக அமைந்துள்ளது.[4] எனவே வீரமாமுனிவர் குறிப்பிடும் அகத்தியம் என்பது தருக்கவியல் நூலாகவே இருக்க வேண்டும்.

---

4. க. நெடுஞ்செழியன், **உலகத் தோற்றமும் தமிழர் கோட்பாடும்**, ப.157.

இவ்வாறு அனைத்து நிலைகளிலும் தமிழ் மரபைப் பின்பற்றியவராக வாழ்ந்த வீரமாமுனிவர் பிற்காலத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் நாட்டார் வழக்காற்றுக் கதைகளைப் பதிப்பிப்பதற்கும் முன்னோடியாக விளங்கியவர் என்பதுடன் கிறித்துவத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் முன்னோடியாகத் திகழ்கிறார்.

துணைநூற்பட்டியல்

துணைநூற்பட்டியல்

தமிழ் நூல்கள்

அந்தோணி குருசு, அ. — **கன்னி சங்கு.**
தொன்போசுகோ அச்சகம்,
தஞ்சாவூர்,
1981.

அமிதசாகரர் — **யாப்பருங்கலக்காரிகை மூலமும் குணசாகரர் இயற்றிய உரையும்.**
கழக வெளியீடு,
சென்னை,
1988.

அமுதன் அடிகள் — **இத்தாலி நாட்டு வித்தகர்.**
தமிழ் இலக்கியக் கழகம்,
திருச்சி,
1997.

அலெக்சாந்தர், ஜே. பா. — **வரலாற்றில் இறை மக்கள்.**
தமிழ்நாடு இறையியல் கல்லூரி,
மதுரை,
1979.

அறவாணன், க. ப. — **தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்.**
தமிழ்க் கோட்டம்,
சென்னை,
1987.

அன்றீக்கு அன்றீக்கெஸ் (மொ. பெ.) — **கிரிசித்தியானி வணக்கம்.**
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி,
1963.

இசுரேல் செல்வநாயகம் — **விவிலிய இறையியல் செஞ்சொல் கட்டுரைக் கோவை.**
தமிழ் இறையியல் நூலோர் குழு,
மதுரை,
1993.

இராமச்சந்திரன், சீனு. — **அறிஞர்களின் வாழ்வும் வாக்கும்,**
முத்துப் பதிப்பகம்,
விழுப்புரம்,
1987.

இராசமாணிக்கம், சே. சு. — **அடியார் வரலாறு,**
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி,
1967.

இராசமாணிக்கனார், மா. — **இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி,**
பாரி நிலையம்,
சென்னை,
1978.

இராசமாணிக்கனார், மா. — **மேனாட்டுத் தமிழறிஞர்,**
எம்பாத்தாழ்வார் அப்பாத்துரை அண்டு கம்பெனி,
சென்னை,
1950.

இராசமாணிக்கம், சே. ச. — **வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்,**
தே நொபிலி ஆராய்ச்சி நிலையம்,
இலயோலாக் கல்லூரி,
சென்னை,
1969.

இராமலிங்கம், மா. — **புதிய உரைநடை பண்பும் பயனும்,**
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு 1980.

இராயார் — **வீரமாமுனிவரின் இன்னிசைப்பா,**
இலக்கிய நூலகம்,
கட்டனூர்,
1975.

இறையரசன், பா. — **தமிழர் நாகரிக வரலாறு,**
பூம்புகார்ப் பதிப்பகம்,
சென்னை,
1993.

இறையரசன், பா. — **தமிழ் இலக்கிய வரலாறு.** பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1997.

இன்னாசி, சூ. — **கிறித்தவ இலக்கியச் சிந்தனைகள்.** வளனார் வெளியீடு, சென்னை, 1994.

இன்னாசி, சூ. — **கிறித்தவமும் தமிழும்.** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1990.

இன்னாசி, சூ. — **சதுரகராதி ஆராய்ச்சி.** மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1976.

இன்னாசி, சூ. (பதி.) — **வீரமாமுனிவர் அருளிய சதுரகராதி.** வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம், பாளையங்கோட்டை, 1979.

ஏசுதாசன், ப. ச. — **தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் சைவ வைணவ இலக்கியத் தாக்கம்.** சுதா பதிப்பகம், திருச்சி, 1991.

ஓடிலோ மரிய லூர்க்காஸ் (விளக்கவுரை) — **புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்.** அருள் வாக்கு மன்றம், திருச்சி, 1984.

கம்பர் மாணிக்கம், தானியேல் மனோகர் (தொ. ஆர்.) — **மார்ட்டின் லூத்தரின் படைப்புகளில் சில தொகுதி 2,** தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை, 1994.

கிரேஸ் செல்வராஜ் — **வளரும் கிறிஸ்தவத்தில் மலரும் தமிழ்,** *கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1985.*

குழந்தைவேலு, இர. — **திரு. வி. க. கருத்துகளின் வளர்ச்சியும் நடையின் மலர்ச்சியும்,** *சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1973.*

சக்குபாய், இரா: — **பாரதிதாசன் படைப்புகளில் மனிதநேயம்,** *மனிதம் பதிப்பகம், திருச்சி, 1990.*

சக்திவேல், சு. — **நூறாண்டுத் தமிழ் உரைநடை,** *மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987.*

சஞ்சீவி, ந. — **ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதல் தொகுதி,** *பாரி நிலையம், சென்னை, 1970.*

சபாபதிக் குலேந்திரன் — **தமிழ் வேதாகமத்தின் வரலாறு,** Bible Society of India, Bangalore, *1967.*

சம்பந்தன், மா. சு. — **அச்சும் பதிப்பும்,** *தமிழர் பதிப்பகம், சென்னை, ஆ. இ.*

சரோஜினி பாக்கியமுத்து — **விவிலியமும் தமிழும்,** *குருக்கல் லூத்தரன் தியாலாஜிக்கல் கல்லூரி, சென்னை, 1990.*

சாமிமுத்து, ச. — **சின்ன சவேரியார் ஆக்கிய தமிழ் உரைநடை நூல்கள் ஓராய்வு,** *சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1985.*

சாரதா நம்பியாரூரன் — **தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்,**
சேக்கிழார் பதிப்பகம்,
சென்னை,
1994.

சிங்கார வடிவேலன், அர. — **சங்க இலக்கிய உவமைகள்,**
பழநியப்பன் பதிப்பகம்,
தேவகோட்டை,
1986.

சிரில் புரூஸ்பெர்த் — **இந்தியத் திருச்சபை,**
வரலாற்றில் கிறிஸ்தவம் தொகுதி – 5
தமிழ் இறையியல் நூலோர் ஒரு
மதுரை 1996

சிவத்தம்பி, கா. — **தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்,**
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை,
1983.

சீனிவாசன், ரா. — **சங்க இலக்கியத்தில் உவமைகள்,**
அணியகம்,
சென்னை,
1973.

சுத்தானந்த பாரதியார் — **ஆனந்தரங்கப்பிள்ளை,**
பாரத சக்தி நிலையம்,
புதுவை,
1946.

சுந்தர சண்முகனார் — **தமிழ் இலத்தின் பாலம்,**
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி,
1970.

சுந்தரமூர்த்தி, இ. — **நடையியல் அறிமுகம்,**
அன்பு நூலகம்,
சென்னை,
1978.

சுந்தரம், ஜே. ஜி. — **தமிழ்த் தொண்டர்,**
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி,
1950.

சுவாமி, சி. கே.

ஓரி

ஏரியூர் ஒளிவிளக்கு.
வீரமா முனிவர் கழக வெளியீடு
திருச்சி
1984

சேதுப்பிள்ளை, ரா. பி.

கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள்.
எஸ். ஆர். பப்ளிக் சர்வீஸ்,
திருநெல்வேலி,
1956.

சுப்பிரமணியன், ச. வே.
சிவகாமி, ச. (ப. ஆர்.)

தமிழ் இலக்கியக் கொள்கை *- 9,*
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
1984.

சுப்புரெட்டியார், ந.

அறிவுக்கு விருந்து.
கழக வெளியீடு,
சென்னை,
1962.

சேதுப்பிள்ளை, இரா. பி.

திருக்காவலூர்க் கோவில்.
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி,
மூன்றாம் பதிப்பு 1952.

சேதுப்பிள்ளை, இரா. பி.

வீரமாமுனிவர் கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்.
எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை,
திருநெல்வேலி,
மூன்றாம் பதிப்பு 1956.

சோசபு சுந்தரராசு, கு.

உரைநடைத் திறன்.
எழிலரசுப் பதிப்பகம்,
பாளையங்கோட்டை,
1973.

சோமலெ

தஞ்சாவூர் மாவட்டம்.
பாரி நிலையம்,
சென்னை,
1961.

சோமலெ

வளரும் தமிழ்.
வானதி பதிப்பகம்,
சென்னை,
1988.

ஞான இராபின்சன் — **தமிழ்க் கிறிஸ்தவ மரபு,**
தமிழ்நாடு இறையியல் கல்லூரி,
மதுரை,
1985.

ஞானசம்பந்தன், அ. ச. — **இலக்கியக்கலை,**
கழக வெளியீடு,
சென்னை,
1953.

ஞானசேகரன், ஆ. — **தமிழகமும் ஜெர்மானியரும்.**
ஜெர்மானிய மொழிக்குழு,
காரைக்குடி,
1981.

ஞானப்பிரகாசம், வி. மி. — **பரமார்த்தகுருவின் கதை.**
வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம்,
கரும்மாத்தூர்,
1975.

ஞானப்பிரகாசம், வி. மி. — **வீரமாமுனிவர் அருளிய திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பு (ஐந்து அதிகாரங்கள்),**
வீரமாமுனிவர் மூன்றாவது நூற்றாண்டு விழா நினைவுக்குழு,
பாளையங்கோட்டை,
1977.

ஞானப்பிரகாசம், வி. மி. — **வீரமாமுனிவரின் இலத்தீன் நூல்கள்.**
அச்சுப்பிரதி,
1996.

ஞானப்பிரகாசம், வி. மி. — **வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள் அறிமுகம்.**
அச்சுப்பிரதி.
1996.

ஞானப்பிரகாசம், வி. மி. — **வீரமாமுனிவரின் வேதவிளக்கம் சில மதிப்பீடுகள்,**
அச்சுப்பிரதி,
1996.

ஞானப்பிரகாசம், வி. மி.
அறவாணன், க. ப. (ப. ஆர்.) — **வீரமாமுனிவம்.**
The Academy of Tamil Culture,
1985.

டேவிட், சி. ஆர். டபிள்யு. (ப. ஆ.)
திருப்பசை அமைப்பு ஆளுகை.
தமிழ்நாடு இறையியல் கல்லூரி,
மதுரை,
1995.

தண்டியாசிரியர்
தண்டியலங்காரம்.
கழக வெளியீடு,
சென்னை,
1984.

தத்துவப்போதகர்
ஞான • பதேசம் 2ம் பிரசங்கங்கள்.
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி.
1971

தத்துவப்போதகர்
தூஷணத்திக்காரம்.
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி.
1971

தத்துவப்போதகர்
புனர் ஜென்ம ஆட்சேபம்.
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி.
1971

தமிழண்ணல்
குழந்தைநாதன் (ப. ஆர்.)
உலகத்தமிழ்.
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை,
1981.

தயானந்தன் பிரான்சிஸ், தி
கிறிஸ்து நெறிப்பார்வைகள்.
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை,
1987.

தயானந்தன் பிரான்சிஸ், தி.
தமிழ்ச் சைவம்.
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை,
1972.

தயானந்தன் பிரான்சிஸ், தி.
யாமறிந்த நூல்களிலே.
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை,
1996.

தனபாண்டியன், டி. ஏ.
தமிழ் வளர்த்த கிறிஸ்தவப் பெரியார்கள்.
லாலி எலக்ட்ரிக் பிரிண்டிங் பிரஸ்,
தஞ்சாவூர்,
1970.

தனிஸ்லாஸ் மேரி
தமிழ்த் தந்தை தத்துவபோதகர்,
மதுரை அமல உற்பவ மாதா கன்னியர் சபை வெளியீடு,
மதுரை,
1987.

தாஸ், பி. ஜே.
பார் புகழும் புனித சவேரியார்,
நாஞ்சில் புக் ஸ்டால்,
நாகர்கோவில்,
1980.

தியாகு
விவிலியக் களஞ்சியம் 5 தொகுதிகள்,
தியான ஆசிரமம்,
சென்னை,
1991, 1992, 1993, 1992, 1996.

தியாகு
விவிலியத்தின் ஞான நூல்கள் விவிலிய அறிமுகம் 5,
தமிழோசை அச்சகம்,
சென்னை,
1967.

தியாகு
விவிலியக் களஞ்சியம் விவிலிய அறிமுகம்,
தியான ஆசிரமம்,
சென்னை,
1995.

திருத்தக்கதேவர்
சீவக சிந்தாமணி,
தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு,
தஞ்சாவூர்,
1986.

திருவள்ளுவர்
திருக்குறள் பரிமேலழகர் உரை,
(ப.ஆ.) புலியூர்க்கேசிகன்,
பூம்புகார்ப் பதிப்பகம்,
சென்னை,
நான்காம் பதிப்பு 1986.

தெய்வநாயகம், மு.
விவிலியம் - திருக்குறள் - சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை
1985

தேவகடாட்சம், ஜி.
வரலாற்றில் கிறிஸ்தவம் தொகுதி 2,
தமிழ்நாடு இறையியல் கல்லூரி,
மதுரை,
1995.

தொல்காப்பியர்
தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியர் உரை,
கழக வெளியீடு,
சென்னை,
1966.

நாராயணன், க.
ஆய்வு எது? ஏன்? எப்படி?
மாரி பதிப்பகம்
புதுச்சேரி — 8
1987

நீதிவாணன், ஜே.
நடையியல்,
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம்,
ஆ. இ.

நெடுஞ்செழியன், க.
உலகத் தோற்றமும் தமிழர் கோட்பாடும்,
மனிதம் பதிப்பகம்,
திருச்சி,
1997.

நெடுஞ்செழியன், க.
தமிழ் இலக்கியத்தில் உலகாயதம்,
பாரி நிலையம்,
சென்னை,
1990.

நெடுஞ்செழியன், க.
மெய்க்கீர்த்திகள் அமைப்பும் நோக்கும்,
பாவைப் பதிப்பகம்,
ஆம்பூர்,
1991.

பண்டாரம் நம்பியார், ஈ.
தமிழ் வளர்த்த தைரியநாதர்,
ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்,
நாகர்கோவில்,
மூன்றாம் பதிப்பு 1970.

பரந்தாமனார், அ. கி.
மதுரை நாயக்கர் வரலாறு,
பாரி நிலையம்,
சென்னை.
1987

பரமசிவானந்தம், அ. மு.
சமயமும் சமூகமும்,
தமிழ்க்கலைப் பதிப்பகம்,
சென்னை,
1982.

பரமசிவானந்தம், அ. மு.
தமிழக வரலாறு.
தமிழ்க்கலைப் பதிப்பகம்,
சென்னை,
மூன்றாம் பதிப்பு 1971.

பரமசிவானந்தம், அ. மு.
தமிழ் உரைநடை,
தமிழ்க்கலைப் பதிப்பகம்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு 1967.

பரமசிவானந்தம், அ. மு.
பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி,
தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்,
சென்னை,
1966.

பவணந்தி முனிவர்
நன்னூல் (காண்டிகையுரை),
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்,
1984.

பாய்ட், ஆர். ஹெச். எஸ்.
ஜி. வில்சன் (தமி.)
இந்தியக் கிறிஸ்தவ இறையியல்,
தமிழ்நாடு இறையியல் கல்லூரி,
மதுரை,
இரண்டாம் பதிப்பு 1994.

பாரதிதாசன்
பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி,
பாரி நிலையம்,
சென்னை,
1980.

பிள்ளை, கே. கே.
தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை,
1981.

பிள்ளை, கே. கே.
தென்னிந்திய வரலாறு இரு பாகங்கள்,
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை,
1961

பூரணச்சந்திரன், க.
பத்திரிகை தலையங்கம் கருத்துரை,
தமிழ் இலக்கியக் கழகம்,
திருச்சி,
1998.

பெஞ்சமின், அ. (விளக்கவுரை)
புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகங்கள்,
அருள்வாக்கு மன்றம்,
திருச்சி,
1982.

மகாலிங்கம், தே. வே.
விஜயநகரப் பேரரசில் நிலைபெற்றிருந்த பொருளாதார வாழ்க்கை வரலாறு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை,
1990.

மனுவேல் அண்டிறீக்கு (மொ. பெ.)
வணக்கம்,
தமிழ் இலக்கியக் கழகம்,
தூத்துக்குடி,
1963.

மனோகரன், த.
முன் தமிழ்ப் பேராசிரியர்,
போப் கல்லூரி,
சாயர்புரம்,
1993.

மாரியப்பன், சு.
இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் உவமைகள்,
நிர்மலா பதிப்பகம்,
செங்கல்பட்டு.

முத்துசாமிபிள்ளை, கோ. மு.
தமிழ் உரைநடை வரலாறும் நெறிமுறைகளும்,
சால்பகம்,
தஞ்சாவூர்,
1988.

மோகன், இரா.
பண்டிதமணியின் நடை நயம்,
சன்மார்க்க சபை,
மேலைச்சிவபுரி,
1982.

ரம்போலா மாஸ்கரேனஸ்
கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள்,
தமிழ் இலக்கியக் கழகம்,
திருச்சி,
1970.

ராஜய்யன், கு.
தமிழக வரலாறு (1565 - 1967),
மதுரை தமிழாலஜி பப்ளிஷர்ஸ்,
மதுரை, 1980.

ராஜா முகமது, ஜெ.
புதுக்கோட்டை மாவட்ட வரலாறு.
அரசு அருங்காட்சியகம்,
புதுக்கோட்டை,
1992.

லெபீவர், எச். சி.
திருச்சபைச் சீர்திருத்த வரலாறு.
தமிழ்நாடு இறையியல் கல்லூரி,
மதுரை,
ஆ. இ.

வரதராசன், மு.
இலக்கியத் திறன்.
பாரி நிலையம்,
சென்னை,
1965.

வரதராசன், மு.
தமிழ் இலக்கிய வரலாறு.
சாகித்திய அக்காதெமி,
புதுதில்லி,
எட்டாம் பதிப்பு 1992.

வளனரசு, பா.
தேம்பாவணித் திறன்.
கதிரவன் பதிப்பகம்,
பாளையங்கோட்டை,
1988.

வளனரசு, பா.
வீரமாமுனிவர் ஒரு விளக்கம்.
நோபிலி வெளியீட்டகம்,
மதுரை,
1982.

விநாயகம், க.
சிவஞான முனிவர் உரைத்திறன்.
ஸ்ரீ அன்னை நூலகம்,
மயிலம்,
1991.

விமலா மனுவேல்
இந்தியத் திருச்சபைத் தொண்டர் முதல் பாகம்.
தமிழ் தியாலாஜிக்கல் சர்வீஸ்,
மதுரை,
1962.

வீரமாமுனிவர்
திருக்காவலூர்க் கலம்பகம்.
தமிழ் இலக்கியக் கழகம்,
திருச்சி,
1987.

வீரமாமுனிவர்

தேம்பாவணி,
வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம்,
தூய சவேரியார் கல்லூரி,
பாளையங்கோட்டை,
1982.

வீரமாமுனிவர்

ளி
பரமார்த்தகுருவின் கஜத,
வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம்,
அருளானந்தர் கல்லூரி,
மதுரை,
1986.

வீரமாமுனிவர்

பேதகமறுத்தல்,
புதுவையில் சென்ம இராக்கினி மாதா
கோவிலைச் சேர்ந்த அச்சுக்கூடம்,
3ஆவது பதிப்பு,
1868.

வீரமாமுனிவர்

பொது நிருபம்,
கையெழுத்துப்பிரதி.

வீரமாமுனிவர்

லுத்தேரினத்தியல்பு,
புதுவையிற் சென்ம இராக்கினி மாதாக்
கோவிலைச் சேர்ந்த அச்சுக்கூடம்,
3ஆவது பதிப்பு,
1868.

வீரமாமுனிவர்

வாமன் சரித்திரம்,
புதுவையிற் சென்ம இராக்கினி மாதாக்
கோவிலைச் சேர்ந்த அச்சுக்கூடம்,
1843.

வீரமாமுனிவர்

**வீரமாமுனிவர் பதிதர் பேரில்
திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு
எழுதின கடிதம்,**
கையெழுத்துப்பிரதி.

வீரமாமுனிவர்

வேத விளக்கம்,
புதுவையில் சென்ம இராக்தினி மாதா
கோவிலைச் சேர்ந்த அச்சுக்கூடம்,
3ஆவது பதிப்பு,
1868.

வீரமாமுனிவர்
வேதியர் ஒழுக்கம்,
மிசன் அச்சகம்,
புதுவை,
ஏழாம் பதிப்பு 1961.

வீராசாமி செட்டியார்
விநோதரச மஞ்சரி,
பி. இரத்தினநாயகர் அண்ட் சன்ஸ்,
சென்னை,
1969.

வேங்கடசாமி, மயிலை சீனி.
கிறிஸ்தவமும் தமிழும்,
கழக வெளியீடு,
சென்னை,
1948.

வேங்கடராமையா, கே. எம்.
தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்,
1989.

வேங்கடராமையா, கே. எம். (ப. ஆ.)
தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்,
1989.

ஜான் குழந்தை, எ. (விளக்கவுரை)
புனித யாகப்பர், அருளப்பர் I, II, III திருமுகங்கள்,
அருள்வாக்கு மன்றம்,
திருச்சி,
1981.

ஜெகநாத சுவாமி
திருச்சபை வரலாறு,
தமிழ் இலக்கியக் கழகம்
தூத்துக்குடி - 1
1963

ஜேசுதாஸ் தங்கசாமி, எம். எஸ்.
திருச்சபை வரலாறு,
நாஞ்சில் புக் ஸ்டால்,
நாகர்கோவில்,
1993.

ஜோசபின் டோரதி
தேம்பாவணி இரட்சணிய யாத்திரிகம் - ஓர் ஒப்பாய்வு,
சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு,
1997.

ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம்
திருச்சபைச் சீர்திருத்தம் - வரலாற்றில் கிறித்தவம் தொகுதி 3,

ஜோசப் ராயர்
தேம்பாவணி வசனம்,
புதுவை மாநிலத் தமிழ் எழுத்தாளர் பேரவை வெளியீடு,
1980.

ஹெர்பர்ட் ஸேர்ன்
லூத்தர் சாஸ்திரியார் இயற்றிய சிறிய ஞானோபதேச நூலை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவக் கொள்ளை எடுத்துரைக்கப்படும் நூல்,
கன்கார்டியா இறையியல் கல்லூரி,
நாகர்கோவில்,
1971.

- - - - - - - - - - - - -
இரண்டாம் வத்திகான் சங்க ஏடுகள்,
TNBCLC,
திண்டிவனம்,
இந்தியா,
1995.

- - - - - - - - - - - - -
களவியல் என்ற இறையனார் அகப்பொருள்,
கழக வெளியீடு,
சென்னை,
1976.

- - - - - - - - - - - - - -
திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு),
TNBCLC,
திண்டிவனம்,
இந்தியா,
1995.

- - - - - - - - - - - - - - -
புறநானூறு,
மர்ரே அண்ட் கம்பெனி வெளியீடு,
சென்னை,
1954.

- - - - - - - - - - - - -
வீரமாமுனிவர் அவரது தமிழ் மருத்துவ இலக்கியம்,
வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம், கொடைக்கானலில் நடத்திய கருத்தரங்கில் வெளியிட்ட அச்சுப்பிரதி, 1994.

ஆங்கில நூல்கள்

Agesthialingam — **Extension Lecture on 'Pandithamani Style',** Madurai Kamaraj University, Madurai, 1984.

Arno Lehmann, E. — **It Began at Tranquebar,** The Christian Literature Society, Madras, 1956.

Bernett, L. D. — **A Catalogue of the Tamil Books in the library of the British Museum 2 Volumes,** Asian Educational Services, New Delhi, 1909.

Besse, L. — **Chanda Sahib and Beschi,** St. Joseph's Industrial School Press, Tiruchi, 1909.

Besse, L. — **Tembavani Father Beschi S. J. His Times and His Writings,** Tiruchi, 1918.

Besse, L. — **Father Beschi of the society of Jesus,** Tiruchi, 1918.

Narayanan Maligavittul, A. — **Father Beschi and his contribution to Tamil literature,** Pondicherry, 1980.

Houpert, J. C. — **Father C. J. Beschi S. J. Missioner and scholar 1680 - 1747,** Indian Catholic Truth Society, Trichy, 1925.

James Hastings, D. D. (Ed.) — **Dictionary of the Bible special illustrated edition,**
London,
1910.

Jesudasan, C. & Hephzibah Jesudasan — **A History of Tamil Literature,**
Y.M.C.A. Publishing House,
Calcutta,
1961.

Mahalingam, T. V. — **Administration and Social Life under Vijayanagar Part II Social life,**
University of Madras,
Madras,
1975.

Muthusamy, A. — **A Brief sketch of the life and writings of Rev. C. J. Beschi,**
Madras,
1840.

Pillai, K. K. — **A Social history of Tamil Part I,**
University of Madras,
Madras,
1969.

Rajamanickam, S. — **The first oriental scholar,**
De Nobili research scholar. Institute
St. Xavier's college
Tirunelveli 1972

Rajamanickam, S. — **Madurai and Tranquebar,**
Loyola College,
Chennai.

Sathyanataha Aiyer, R. — **History of the Nayaks of Madura,**
Humphrey Milford,
Oxford University Press,
1924.

Sathiyanathaier, R. — **A Political and cultural history of India Vol. III,**
S. Viswanathan PNT. Ltd.,
Madras,
1972.

Vengatarama Ayyar, K. R. — **A Manual of the Pudukkottai State, Vol. I,** Pudukkottai Museum, Revised edition 1938.

Ignatius Hirudayam — **Christianity and Tamil Culture,** University of Madras, Madras, 1977.

கட்டுரைகள்

சண்முகனார், 'வீரமாமுனிவரும் எழுத்துச் சீர்திருத்தமும், கத்தோலிக்கச் சேவை எண் 3 மலர் 51, மார்ச் 1994.

சோமசுந்தரன், அரு., 'தேம்பாவணியில் கற்பனைச் சித்திரம்', தீந்தமிழ் இலக்கியத்தேன், சவுந்தரம் பதிப்பகம், சென்னை, 1965.

ஞானப்பிரகாசம், வி. மி., தோழன், 1980.

ஞானப்பிரகாசம், வி. மி., 'வீரமாமுனிவர்ங, பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ் நூல், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, ஆ. இ.

நெடுஞ்செழியன், க., தமிழ் நாட்டுப் பஞ்சங்கள், ஆய்வுக் கட்டுரை, 1999.

நெடுஞ்செழியன், க., நாட்டார் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரை, 1999.

பாக்கியமுத்து, 'Early Prose Translation in Tamil', *ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், மதுரை, 1981.*

மீனாட்சிசுந்தரம், 'தமிழ்ப் பணியாற்றிய வெளிநாட்டறிஞர்கள்', கையேடு, இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு, சென்னை, 1968.

வளனரசு, பா., 'வீரமாமுனிவரது வண்டமிழ்த் தொண்டு, தோழன், மலர் 21, இதழ் 2, பெப்ருவரி 1980.

வளனரசு, பா., 'வீரமாமுனிவரும் வேதியரும்', தோழன், மலர் 21, இதழ் 6, சூலை 1980.

ஆய்வேடுகள்

ரோசல்லா, ஜே, தேவசகாயம்பிள்ளை வாசகப்பா, முனைவர் பட்ட ஆய்வேடு, கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, டிசம்பர் 1996.

வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள் (1981 - 1990), முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், சூன் 1995.

Gnanapragasam, V. M., Poetry I - Tembavani, contribution of Father Beschi to Tamil, Unpublished Ph.D. Thesis, University of Madras, Madras, 1965.

Meenakshi Sundaram, K., The Contribution of European Scholars to Tamil, Ph. D. Thesis, University of Madras, Madras, 1974.

ஆய்வுக்கோவை, இதழ்கள், மலர்கள்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக்கோவைகள் :

6	ஆவது கருத்தரங்கு	-	1974
13	ஆவது கருத்தரங்கு	-	1981
14	ஆவது கருத்தரங்கு	-	1982
17	ஆவது கருத்தரங்கு	-	1985
18	ஆவது கருத்தரங்கு	-	1986
20	ஆவது கருத்தரங்கு	-	1988

அன்னையின் அருட்சுடர், கதிர் 14, சுடர் 5, 6, மே, சூன் 1980, குடந்தை.

காரிதாஸ், இயேசு சபை இதழ், ஜூலை 1963.

தூய சவேரியார் கல்லூரி ஆண்டு மலர், பாளையங்கோட்டை, 1980.

அகராதிகள், கலைக்களஞ்சியங்கள்

கழகத் தமிழ் அகராதி, கழக வெளியீடு, சென்னை, ஒன்பதாம் பதிப்பு 1994.

வாழ்வியல் களஞ்சியம் 5, 8 தொகுதிகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

Encyclopaedia Americana, New York, 1969. Vol 14 Americana Corporation

Encyclopaedia Britannica, Vol. II. William Benton Publisher London 1969

Frolov(Editor)Dictionary of Philosophy. Progress Publisher Moscow 1984

Princeton Encyclopaedia of Poetry and Poetics.

Tamil Lexicon, Volume I.

The Concise Oxford Dictionary, 5th edition.

The Oxford Dictionary of World Religions, Edited by John Bowker, Oxford University Press, 1997.

தகவலாளர் : அ. புவியரசு, மன்னார்குடி, 5-5-1999.

தகவலாளர் : வி. மி. ஞானப்பிரகாசம், 27-4-1994இல் கொடைக்கானலில் நடைபெற்ற வீரமாமுனிவர் கருத்தரங்கில் கூறியது.

தகவலாளர் : க. ப. அறவாணன் 5-1-1994இல் திருச்சி தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரியில் வீரமாமுனிவர் கருத்தரங்கில் கூறியது.

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு எண் 1

கிறித்துவத் துறவிகளின் கடிதங்கள் காட்டும் தமிழகச்சூழல்

அருள்திரு பிரோயென்சா, திருச்சிராப்பள்ளியிலிருந்த நிக்கேல் பாதிரியாருக்கு 1659இல் எழுதிய கடிதம்

கோல்கொண்டா அரசர் தனது கௌரவத்தை நிலைநிறுத்த முடிவுசெய்து தனது படையை அதிகமாகத் திரட்டினார். நரசிங்கரைத் தாக்கினார். நரசிங்கரோ வெற்றி வாய்ப்பின்மையை உணர்ந்து மூன்று நாயக்கர்களது ஆதரவைத் திரட்டினார். அவர்களுக்குச் சாதகமான நிபந்தனைகளை அளித்தார். அவர்களோடு சேர்ந்து பாதுகாப்பு மற்றும் தாக்குதல் விஷயங்களில் மேம்பட்டிருந்தார். ஆனாலும் இந்தியக் குணம் வெளிப்பட்டது. நரசிங்கர் மூன்று நாயக்கர்களோடு கொண்டாட்டங்கள், விருந்துகள், கேளிக்கைகளில் ஓராண்டிற்கு மேலாக ஈடுபட்டார். இதற்கிடையில் முகமதியர்கள் அமைதியாக அந்தப் பகுதிகளைக் கைப்பற்றினர். இது பிளவுகளுக்கும் பொறாமைக்கும் வழி வகுத்தது. நரசிங்கர் நாயக்கர்களால் கைவிடப்பட்டார். இவர் தஞ்சைக்கு வடக்கே அமைந்துள்ள கள்ளர்களின் காட்டுப் பகுதியில் தனது அரசவையை நிறுவினார். அங்கு 4 மாதங்கள் அனைத்து இன்னல்களுக்கும் உள்ளானார். இந்தியாவின் செல்வமிக்க பேரரசர்களுள் ஒருவரான இவர் மைசூர் அரசரது உதவியை நாடினார். அவர் நரசிங்கர் தங்குவதற்கேற்ற இடமும் ஆதரவும் அளித்தார்.

மைசூர் அரசர் அனைத்துக் கைதிகளின் மூக்கைத் துண்டிக்கும்படி உத்தரவிட்டார். அவரது படை வீரர்கள் தங்களை வேறுபடுத்திக் காட்ட தங்கள் கையில் சிக்கிய ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் மூக்கையும் துண்டிக்கும் மிருகத்தனமான ஆணையைப் பிறப்பித்தார். துண்டிக்கப்பட்ட மூக்குகளைச் சாக்குகளில் கட்டி மைசூருக்கு அனுப்ப உத்தரவிட்டார். இதைக்கண்டு நாயக்கர் வெகுண்டார். அவரது படைகளை மைசூருக்கு அனுப்பினார். அவர்களோ எதிரிகளோடு சண்டையிடவில்லை. அவர்களது மூக்குகளை மட்டும்

துண்டித்தனர். இந்த இரக்கமற்ற செயலே 'மூக்கறுப்புப் போர்' என அழைக்கப்படலாயிற்று. இறுதியில் மூக்கறுப்பு செய்ய உத்தரவிட்ட மைசூர் அரசரே தனது மூக்கை இழந்தார். அவருக்குரிய தண்டனையை அவரே அனுபவித்தார்.

ஈடல்கான் தளபதிகள் சாகோசி மற்றும் மோலாவின் அறிவுரைப்படி முகமதியர்கள் செஞ்சி மற்றும் தஞ்சை ராஜ்யங்களைக் கைப்பற்றி 2 ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் தங்களது ஆக்ரமிப்பை நிலைநிறுத்துவதில் உறுதியாக இருந்தனர். மக்களோ தங்களது அடிமை நிலைமையை ஏற்றுக் கொண்டனர். கொடுமையும் அநீதியையும் அனுபவித்தனர். முகமதிய ஆட்சியாளர்கள் கிறிஸ்தவ மக்கள்மீது காட்டிய வெறுப்பு நம் மனதில் பெரிய சந்தேகங்களை எழுப்புகின்றன. இவ்வாறாக இறைவன் நம்மை அவர்களிடமிருந்து மீட்டார்.

பிரோயென்சா பால் ஒலிவா பாதிரியாருக்கு 1662இல் எழுதிய கடிதம்

போரின் குழப்பங்களும், நாசங்களும் வறுமையில் முடியும். நாட்டிலே வறுமை மோசமாக இருந்தது. மதுரை மற்றும் சத்யமங்கலம் பகுதிகளுக்கு மக்கள் திரும்பினர். நாசங்கள் சற்று பயங்கரமாக இருந்தன. முகமதியர்தான் இந்த அழிவுகளுக்கு காரணம். முதலில் பாதிக்கப்பட்டவர்களும் அவர்கள்தான். பஞ்சமானது குதிரைகளையும், மனிதர்களையும் அதிக எண்ணிக்கையில் பலி கொண்டது. இறந்தவர்களை எரிப்பதற்கோ புதைப்பதற்றோ நேரமில்லை. இறந்தவர்களின் சடலங்கள் குவிக்கப்பட்டன. இது பலவித வியாதிகளையும், இறப்பையும் ஏற்படுத்தியது.

சொக்கலிங்க நாயக்கர் மீது ஈடல்கான் படை தாக்குதல் நடத்தியது. கோட்டைகள் பலமுறை தாக்கப்பட்டன. ஆனால் கோட்டையின் உள்ளே இருந்த படையினரால் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. எனினும் ஈடல்கானின் படைகளால் தாக்குதலில் நகரையொட்டிய பகுதிகள் மற்றும் கிறிஸ்தவ ஆலயங்கள் அழிக்கப்பட்டன. மேலும் முற்றுகையாளர்கள் அறுவடையை நாசம் செய்தனர். கிராமங்களை எரித்தனர். அங்குள்ள மக்கள் கைது செய்யப்பட்டு அடிமைகளாக ஆக்கப்பட்டனர்.

அப்போது நடந்த கொடுமையான சம்பவங்களை விவரிக்க இயலாது. அநேக ஆண்கள் தங்களது மனைவிகள், பிள்ளைகளை வாளால் வெட்டிய பிறகு தங்கள் உடல்களில் வாளைப் பாய்ச்சி தங்களது மனைவிகள் பிள்ளைகளின் சடலங்களின் மேல் பிணங்களாக வீழ்ந்தனர். அநேக கிராமங்களில் மக்கள் தங்கள் வீடுகளில் கூட்டமாகத் திரண்டு வீடுகளுக்கு அவர்களே தீ மூட்டி நெருப்பில் இறந்தனர். ஒரு கிறிஸ்தவப் பெண் ஒரு பெரிய கட்டடத்தில் உயிரை மாய்க்க முற்பட்டபோது 400 பிணங்களுக்கு அடியிலிருந்து அந்தப் பெண் உயிரோடு மீட்கப்பட்டார்.

ஆண்டிரிப் பாதிரியார் பவுலுக்கு 1676இல் எழுதிய கடிதம்

மதுரை நாயக்கர் தஞ்சை ராஜ்யத்தைக் கைப்பற்றி அந்த அரசரின் தலையைத் துண்டித்தார். இதைக்கேட்ட ஈடல் கான் தளபதி ஈகோஜி தலைமையில் படையை அனுப்பினார். தோற்கடிக்கப்பட்ட மன்னரின் மகனை அரியணையில் அமர்த்துவதற்கு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் மதுரை நாயக்கர் கைப்பற்றப்பட்ட தஞ்சை ராஜ்யத்தை தனது மூத்த சகோதரர் அழகிரி நாயக்கர் பொறுப்பில் நிர்வகித்து வந்தார். தளபதி ஈகோஜி தஞ்சையின் எல்லைப்புறத்தில் இருந்தார். மதுரை நாயக்கருக்கும் அவரது மூத்த சகோதரர் அழகிரி நாயக்கருக்கும் இடையே ஏதாவது கருத்து வேறுபாடு வருமா என ஒரு வருட காலமாக காத்திருந்தார் தளபதி ஈகோஜி. அவர் எதிர்பார்த்தபடியே இரு சகோதரர்களுக்கும் இடையே பிரச்னை ஏற்பட்டது. உடனே தளபதி ஈகோஜி தனது படைகளோடு தஞ்சை நகருக்குள் தாக்குதல் தொடுத்து தஞ்சையைக் கைப்பற்றினார். இந்தப் போரின் இறுதியில் மதுரை மற்றும் மறவர்ப் பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டது. எங்கு பார்ப்பினும் நாசமும் இறப்புமே காட்சியளித்தன. மக்களோ பட்டினியில் வாடினர். சிலர் நாட்டைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றனர்.

சொக்கலிங்க நாயக்கர் தஞ்சையைக் கைப்பற்றும் முயற்சியில் தனது பகுதிகளை இழந்தார். மதுரை அரசர் எந்தவிதத் தாக்குதலும் இல்லாமல் இரண்டு கோட்டைகளைத் தன்வசமாக்கிக் கொண்டார். இதற்கிடையில் நாயக்கரின்

நடவடிக்கையில் வெறுப்படைந்த இரண்டு முக்கிய பிரபுக்கள் அவருக்கு எதிராக திட்டம் தீட்டி அவருக்கு பைத்தியம் எனச் சொல்லி சிறையில் அடைத்தனர். அவரது சகோதரர் முத்துலிங்க நாயக்கரைப் பதவியில் அமர்த்தினர். நாடெங்கும் புலம்பல்களும் சாபங்களும் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒலித்தன. நிலைமையை மோசமாக்கும் விதமாக, நாடெங்கும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சத்தியமங்கலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சை, செஞ்சிப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கானது. குடியிருந்த மக்களையும் பல கிராமங்களையும் அடித்து சென்றது. மேலும் பஞ்சம், கொள்ளைநோய், வழிப்பறிக் கொள்ளை அந்த ராஜ்யத்தை உலுக்கின. மதுரை தலைநகரானது பொலிவிழந்து அதன் அரண்மனைகள் அழியும் நிலையில் இருந்தன. மதுரை நகரானது திருடர்களின் குகையாகக் காட்சியளித்தது.

மார்ட்டின் பாதிரியார் 1713இல் வில்லட்டே பாதிரிக்கு எழுதியது

1709ஆம் ஆண்டில் வறட்சி மற்றும் அதிகமான வெயில் காரணமாக உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. மழையில்லாத காலத்தில் அரிசி மற்றும் உணவுப் பொருட்களின் விலை அதிகமானது.

பீட்டர் மார்டின் பாதிரியார் 1700இல் லீ கோபியன் பாதிரியாருக்கு எழுதிய கடிதம்

நாடே கலவரமாக இருந்ததால் எங்களில் யாராவது வெளியே சென்றால் அவர்கள் திருடப்படுவார்கள் அல்லது கொல்லப்படுவார்கள். பாதிரியார் பெர்னார்டு டி சா என்பவர் அங்குள்ள முக்கிய சாதியைச் சார்ந்த ஒருவரை கிறித்தவராக மாற்றினார். அந்த மக்கள் அந்தப் பாதிரியாரைப் பிடித்து, நீதிபதிகளிடம் இழுத்துச் சென்றனர். அவருடைய பற்களை உடைத்தனர். வேதியர்களுக்குக் கசையடி கொடுக்கப்பட்டது. பொதுவாக அந்த மக்கள் கிறித்தவர்களுக்கு எதிராக இருந்தனர்.

மார்டின் பாதிரியார் 1709இல் விலெட்டே பாதிரியாருக்கு எழுதிய கடிதம்

மதுரை மறைப்பரப்பு பணியில் ஈடுபட்டுள்ள பாதிரியார்களின் இரத்தத்தைச் சிந்திய ஒரே இளவரசர் மறவர் ராஜ்யத்தின் அரசர் ஆவார். இந்தக் காலகட்டத்தில் பஞ்சமும், வியாதியும் நாடெங்கும் பயங்கரமான நாசத்தை ஏற்படுத்தின. வியாதியில் பாதிக்கப்பட்டவர்கள் இறந்தவர்கள் எண்ணிக்கையும் அதிகமாகி இருந்தது.

கிறிஸ்தவ நம்பிக்கையைப் பரப்புவது என்பது வெறுக்கக்கூடிய பழக்கங்கள் நிலவுகின்ற நாட்டில் முடியாத காரியம். இருப்பினும் அங்குள்ள மக்களில், குறிப்பாக வேலூரில் கணிசமான மக்களை மதமாற்றமடையச் செய்துள்ளேன். இந்த ஒருசில ஆண்டுகளில் போர், பஞ்சம் மற்றும் நோய் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பயங்கர சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

பின்னிணைப்பு எண் 2

இயேசு சபைத் துறவிகளின் ஆண்டறிக்கைகள்

1728 ஜூலை 16ல் எழுதப்பட்ட அருட்திரு புரோலிப்பர் ஜூலியானியாஸ் கையொப்பமிட்ட 1727-ம் வருடத்திற்குரிய வருடாந்திரக் கடிதம் சொல்லும் செய்தி என்னவென்றால்

தஞ்சாவூர் பகுதி அருட்திரு. பெஸ்கியின் பொருப்பில் இருந்தது. அவர் அந்த ஆண்டில் 337 பெரியவர்களுக்கும், 1025 சிறியவர்களுக்கும் திருமுழுக்கு அளித்திருக்கிறார் இந்த வருடக் கடிதத்தில்தான் தரங்கம்பாடி பற்றிய செய்தி முதல் முதலாக இடம் பெற்றிருந்தது.

“தரங்கம்பாடியில் உள்ள டென்மார்க்கைச் சார்ந்த, கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்து சென்றவர்கள் (Danish hereties) மூலமாக நமக்கு ஏற்படும் கஷ்டங்கள் முறியடிக்கப்பட வேண்டும். தஞ்சாவூர் பகுதி கிறிஸ்தவர்களுக்குத் தொந்தரவு தரவும், குழப்பத்தை விளைவிக்கவும் அவர்களுடைய வேதியர்களை அதிகப் பணம் கொடுத்து இங்கு அனுப்பியிருக்கிறார்கள். திருச்சபையின் போதனைகளுக்குப் புறம்பான கருத்துக்களுடன் வேதாகமப் புத்தகங்களைத் தரங்கம்பாடியார் தவறான தமிழ் மொழிபெயர்ப்பில் வெளியிட்டுள்ளார்கள் போலும் அவற்றுக்கு அவர்கள் கொடுக்கும் விளக்கவுரைகள் வேதாகமத்தை மேலும் சீர்குலைக்கும் வகையில் உள்ளன. ஆனால் அவர்களின் அச்சு பெயர்ப்பு அருமையாக உள்ளது. அவை பல வடிவங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. பணத்திற்கு ஆசைப்பட்டு ஏற்கனவே சில கிறிஸ்தவர்கள் திருச்சபையிலிருந்து விலகி அவர்களுடன் சேர்ந்துள்ளனர். அப்படி விலகிச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகிறது. அவர்களின் ஒவ்வொரு புத்தகத்திற்கும் எதிர்ப்பு புத்தகங்கள் வெளியிட எங்களுக்கு ஆவலாக இருக்கிறது. ஆனால் வசதி இல்லை. அதாவது எங்களிடம் பதிப்பகம் (Press) இல்லை. ஆகவே ஆயிரக்கணக்கில் அவர்கள் வெளியிடும் புத்தகங்களுக்கு எதிர்ப்புப் புத்தகங்கள் வெளியிட சிரமமாக இருக்கிறது.

இதற்கிடையில், டேனிஷ் கிறிஸ்தவர்களால் திருச்சபைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தான சூழ்நிலையில் தமிஷீல் அதிகப் புலமைமிக்க அருட்திரு. பெஸ்கி, அவருடைய அதிபர் அருட்திரு. தோமினிக் மடேரியாவிடமிருந்து எதிர்ப்புப் புத்தகங்கள் வெளியிட ஆணை பெற்றுள்ளனார். (இந்தப் பரிந்துரையின் அடிப்படையிலேயே வேத விளக்கம் எழுதப்பட்டது.)

1730ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி எழுதப்பட்ட 1729-ம் வருடத்தின் வருடாந்திரக் கடிதம் - லுத்ரன் சபையினரைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கிறது.

இந்த ஆண்டு (1729) அதிகமான புதிய கிறிஸ்தவர்கள் (neophtes) பணத்தினால் கவரப்பட்டு டேனிஷ் கிறிஸ்தவ சபையில் சேர்ந்துள்ளனர். வறுமையின் கொடுமை தாளாமல் அரிசி மற்றும் வாழ்க்கைக்குரிய இதர அத்தியாவசிய பொருட்களைப் பெற, தங்கள் ஆத்மாக்களை அவர்களிடம் விற்றுள்ளார்கள். குறிப்பாக வடுகர் சமுதாயத்தைச் சேர்ந்த இருவர் எங்களுக்கு அதிகத் தொந்தரவை கொடுத்தாக்ள். அவர்களில் ஒருவன் இன்னாசி. இவன் எங்களிடம் சமையல் வேலை செய்தவன். மற்றவன் அவனுடைய சகோதரன் சருவன். இவன் எங்களிடம் வேதியராகப் பணிபுரிந்தவன். முதலாயவன் டேனிஷ் சபையில் வேதிய்ராக நியமிக்கப்பட்டான். அவன் தஞ்சாவூர் அரசிற்கு அடிக்கடி வந்தான். டேனீஷ் சபையில் பல தாழ்த்தப்பட்ட இனத்தினரைச் சேர்த்தான். அடுத்தவன் மேலும் மோசமான காரியத்தைச் செய்தான். இதுவரை கடற்கரை ஓரமாக மட்டுமே தங்கள் செயல்பாடுகளை நிகழ்த்திக் கொண்டிருந்த டேனிஷ் சபையினரை நாட்டின் உட்படுத்தி அழைத்து வந்து பலருக்கும் அவர்களை அறிமுகம் செய்து வைத்தான். இவ்வாறாக அவன் நமது திருச்சபையை அழிக்கும் நோக்கத்தில் மும்முரமாகச் செயல்பட்டான். இது தொடர்பாக அவன் டேனிஷ் சபையினருக்கு எழுதிய கடிதங்கள் சில நமக்கு கிடைத்தன. அதன் பேரில் அவன் நமக்குப் புரிந்த துரோகம் வெளிப்படுத்தப்பட்டது. அவன் பணியிலிருந்தும் திருச்சபையிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளான்.

இதன் பிறகு அருட்திரு. பெஸ்கி, தேவமாதாவின் மகிமையை சிறப்பிக்கும் பொருட்டு வருடாந்திர விழா ஒன்றை ஆரம்பித்து வைத்தார். அவருடைய திருப்பணியில் அவருக்குத் தரப்படும் இடர்ப்பாடுகளுக்கு மாதாவின் அறுதல் தேடும் பொருட்டு 'அடைக்கலமாதா' என்ற பெயரில் விழா கொண்டாடப்பட்டது. விழாவின்போது அருட்திரு பெஸ்கி தூரோசிகளின் ஈனச்செயல்கள் சாமர்த்தியமாக முறியடிக்கப்பட்டுள்ளன என்று பெருமையாக அறிவித்தார். 1729ஆம் ஆண்டு கடிதத்தில் அவர் எழுதுகையில் - பணத்தைக் காட்டி நமது கிறிஸ்தவர்களைக் கவர்ந்திழுத்த டேனிஷ் சபையினர் இனிமேல் இங்கிருக்கும் நமது கிறிஸ்தவர்களை, பணம் கொடுத்தோ அல்லது அவர்கள் தாமாகவே வந்தாலோ தங்கள் சபையில் சேர்ப்பதில்லை என்று சொல்கிறார்கள். நமது கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் அவி விசுவாசத்தை நன்கு உணர்ந்த அவர்கள் இனி இவர்களின் செயல்பாடுகளின் குறிக்கிடுவதில்லை என்று கூறுகிறார்கள் (91).

****

PRIVATE LETTERS

வருடாந்திர அறிக்கைகளைத் தவிர 'ஜெர்மான்' என்பவர் எழுதிய புத்தகத்தில் காணப்படும் மூன்று தனிப்பட்ட கடிதங்களையும் இங்கு குறிப்பிடுகிறோம்.

முதல் கடிதம் அருட்திரு. கால்மெட் என்பவரால் 1730ம் வருடம் செப்டம்பர் மாதம் 28-ம் தேதி சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் இருந்து எழுதப்பட்டது. சோழ மண்டல கடற்கரையில், தரங்கம்பாடியில் தங்கள் நிறுவனத்தைத் தொடங்கியிருந்த டேனிஷ் சபையினரிடம் லுத்தான் சபையைச் சார்ந்த போதகர்கள் இருந்தார்கள். அப்போதகர்கள் டென்மார்க் நாட்டு அரசரிடமிருந்து உதவிகள் பெறுபவர்கள். அவர்கள் நம்மிடமுள்ள புதிய கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை முற்றிலுமாக மாற்றுகின்ற எண்ணத்தோடு, அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அச்சு இயந்திரத்தின் உதவியால் புதிய ஏற்பாட்டு நூலை தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வினியோகம் செய்கிறார்கள். இத்துடன் அவர்களின் சொந்தப் படைப்புகளையும் சேர்த்து வெளியிட்டு வருகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் நமது போதகர் இவற்றிற்கெல்லாம் தக்க பதிலடி கொடுத்து வருகிறார்கள். அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களை திருச்சபையிலிருந்து விலக்கி வைத்துள்ளார்கள். அவர்களின் பெயர்கள் அடங்கிய தாள்களை தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்கள். கடந்த ஈஸ்டருக்கு முதல்நாள் இத்தாலியப் பாதிரியார் அருட்திரு. பெஸ்கி பத்தாயிரம் கிறிஸ்தவர்களை இவ்வாறு தண்டித்துள்ளார். மேலும் அவர் சிறந்த இறையியல் வல்லுநராக இருப்பதாலும், தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை உடையவராக இருப்பதாலும், டேனிஷ் சபையினரின் போதனைகளுக்கெல்லாம் எதிர்ப் பிரச்சாரம் செய்து வருகிறார். ஆனால் இவைகளை கையெழுத்துப் பிரதிகளாகவே நாங்கள் வெளியிட வேண்டியுள்ளது. ஏனென்றால் எங்களிடம் போதிய நிதி இல்லாததால், அச்சிட்டு வெளியிட முடியவில்லை.

டேனிஷ் சபையினர் பக்கம், பணத்திற்காகவோ அல்லது சொந்த விருப்பத்தின் பேரிலோ சென்றவர்களில் ஒருவன் தன் மனைவியுடன் ஒருநாள் தஞ்சாவூரில் பேய் ஓட்டும் நிகழ்ச்சி ஒன்றைக் காணச் சென்றிருந்தான். பேய் பிடித்தவனிடமிருந்து அந்தப் பேய் வெளியேறி, இவன் மனைவியைப் பற்றிக் கொண்டது. பேய் ஓட்டுபவர் மிகுந்த ஆச்சரியத்துடன்! இந்தப் பெண்ணிடம் வந்ததற்கான காரணத்தைக் கேட்டார். அதற்கு அந்தப் பேய் “இந்தப் பெண்ணும் எனக்குச் சொந்தமானவள்தான்” என்று கூறியது. அப்பதிலைக் கேட்டு அதிர்ந்து போன அம்மனிதன் மனம் வருந்தி, தன் மனைவியை அழைத்துக் கொண்டு ஏலாக்குறிச்சிக் கோவிலுக்கு வந்தான். அங்கே ஆலயத்தின் முன் முகம் குப்புற விழுந்து அவன் டேனிஷ் சபைக்குச் சென்ற தவற்றை மன்னிக்கும்படிக் கண்ணீர் வடித்து வேண்டினான். அவன் கண்ணீர் பட்ட இடத்தில் மண்ணைக் குழைத்து அவனுடைய மனைவியின் நெற்றியில் ஆழ்ந்த விசுவாசத்தோடு பூசினான். நடந்த அற்புதம் என்னவெனில் அந்தப் பெண்ணிடமிருந்து அந்தப் பேய் அவளைவிட்டு உடனே வெளியேறியது. அது மிகவும் பிரபலமான ஒரு உண்மைச் சம்பவம். ஏலாக்குறிச்சியிலிருந்து வந்த மறைபணியாளர் இந்தச் சம்பவத்தை எனக்குச் சொன்னார். இந்தச் சமயத்தில் திருச்சிராப்பள்ளியில் கிறிஸ்துவர்கள் கொடூரமாகத் தாக்கப்படும் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டதால் மதுரை மறைமாவட்டம் மிகுந்த ஆபத்தில் இருந்தது.

இரண்டாவது கடிதம் (பக்கம் 197)

"உண்மையான கடவுளைப் பற்றிய அறிவைச் சிலை வழிபாடு செய்வோரிடம் பரப்பும் பணியில் கத்தோலிக்கத் திருச்சபையினரிடம் எப்பொழுதும் நிறைந்திருந்த ஆர்வத்தை லுத்ரன் சபையினரும் பின்பற்ற ஆரம்பித்தனர். தரங்கம்பாடியில் இருந்த அச்சபையின் போதகர்களுக்கு டென்மார்க் அரசர் மிகுந்த பொருளுதவி செய்து வந்தார். அவர்களிடம் பணிபுரியும் வேதியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஊதியம் கொடுக்கவும் அவர்களின் சொந்தச் செலவுகளுக்கும், அச்சு இயந்திரம் வாங்கவும், புத்தகங்களை அச்சிடவும், சிறுவர்களை விலைக்கு வாங்கி அவர்களை லுத்ரன் சபைக்கு மாற்றவும் அந்தப் பணத்தைப் பயன்படுத்துகிறார்கள். பணத்தைக் காட்டி ஏறக்குறைய 500 பேரைத் தாங்கள் சபைக்குக் கவர்ந்திழுத்திருக்கிறார்கள்"

மூன்றாவது கடிதம்

இது அருட்திரு லேகேரான் என்பவரால் 1718இல் வரும் அக்டோபர் மாதம் 15-ம் தேதி பாண்டிச்சேரியிலிருந்து எழுதப்பட்டது.

"இங்கிருந்து நாங்கள் தரங்கம்பாடி சென்றோம். டென்மார்க் அரசர் தரங்கம்பாடியில் ஒரு அனாதை இல்லம் மற்றும் இறையியல் கல்லூரி ஆகியவைகளைக் கட்டியுள்ளார். இங்கு சிலை வழிபாடு செயப்வர்களின் குழந்தைகள் லுத்ரன் சபையின் ஒழுங்கு முறைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றனர். இவர்களின் பராமரிப்புச் செலவுக்கு அரசர் வருடம் தோறும் இரண்டாயிரம் க்ரௌன்கள் (crowns) தந்து வருகிறார். அனாதை இல்லத்தின் பொறுப்பாளர் இரண்டு வருடங்களுக்கு முன் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று, ஜெர்மனி, ஹாலந்து, மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இந்த இல்லத்திற்காகப் பொருளுதவி பெற்று வந்தார்.

சிறிது காலத்திற்கு முன் இவர் பார்ப்பனர்களை மதம் மற்றும் முயற்சியில் ஈடுபட்டார். ஒருமுறை இவர் நாட்டின் உட்புறமாகச் சென்று அங்கு ஆர்வத்தோடு கூடியிருந்த கூட்டத்தினருக்குச் சில அறிவுரைகளை வழங்கினார். இந்தியர்கள் போதை தரும் பானங்களை வெறுப்பவர்கள் என்பதை அவர் உணராதிருந்தனர். அவருடைய பேச்சின் இடையில் தாகம் கொண்டு ஒரு

உணராதிருந்தனர். அவருடைய பேச்சின் இடையில் தாகம் கொண்டு ஒரு பாட்டில் மதுரசத்தை எடுத்துப் பாதியைக் குடித்துவிட்டு மீதியை அவருடைய நண்பருக்குக் கொடுத்தார். இதைப் பார்த்துப் பார்ப்பினர்கள் வெறுப்படைந்து விட்டார்கள். உடனே அவ்விடத்தைவிட்டு வெளியேறி விட்டார்கள். அத்துடன் அவர்களைப் பற்றி அப்பகுதி முழுவதும் வெறுப்பாகப் பேசினார்கள். அந்தப் போதகர் மிகுந்த மனவருத்தத்துடன் அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளுடன் அங்கிருந்து அவருடைய இறையியல் கல்லூரிக்குச் சென்று விட்டார்கள்.

பின்னிணைப்பு எண் 3

பொருளட்டவணை

பாயிரத்திற்சொன்னபடி யிந்நூலிலுள்ள பிரதான பொருட்களை வேண்டுந்தன்மைத்துத் தடவாம லெவருமெடுத்துக் கொள்ளும்படிக்குக் கண்காட்டியாக - அகரமுதலெழுத் தொழுங்கோடு பொருளட்டவணை தந்தோம். இதிலே குறித்த முதலிலக்க நூற்று நாற்பது பிரிவுகளாக்கி யொவ்வொரு பிரிவின் முதலிலே வைத்த விலக்கமென்று மிரண்டாமிலக்கமோவெனி லெப்போது மந்தந்தப் பிரிவின் றுவக்கத்தைக் காட்டாமற் பொருளுள்ள பக்கமே காட்டுமென்று மறித்து வேண்டிய பொருளைத் தேடக்கடவீர்கள்.

பொருளட்டவணை வருமாறு

அதுகளைக் கொடுக்கத்தக்கவரார்	84	124
அதுகளுக் காயத்தமெது	85	125
இதிலே பதிதர்சொல்லு மபத்தங்கள்	86	126
அதுகளிலே விசுவாச மாயத்தமொழிய - இஷ்டப்பிரசாதத்தின் காரணமல்ல	86,87,88	126, 131,135
இதற்கு வேதவுதாரணங்கள்	87	131
இதிலே பதிதர் சொன்னதற்கு மறுவுத்தரம்	88	134
தேவத்திரவிய - அநுமானங்களில் - மூன்றுபதிக்கு ஞான அக்ஷரம்	98	160
தேவமாதாவை விசேஷமாய்ப் பதிதர் பகைத்ததென்ன	28	36
அவளை நான் வணங்கு முறைமை	29	36
அவளைப் புகழ்ந்த ஸ்திரீயானவளுக்குச் சேசுநாதர் சொன்ன மறுமொழியால் - தேவமாதா வணக்க மறுத்தவரல்ல	30	37
அப்பொழுதவர் சொன்னதற் கர்த்தம்	31, 32	38, 39
தேவமாதா வாழ்த்துதல்	33	40
கானவென்னுமூர்க் கலியாணத்திலுஞ் சேசுநாதர் சொன்னதைக் கொண்டு-அவள் வணக்கம் விலக்கப்பட்டதல்ல	34	41
தேவமாதா வணக்கந் திருச்சபைத் துவக்கத்திலே வழங்கினது	40, 41	48, 50